216653

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

ஏப்ரல் 9, 1997 தொகுதி-29

எண் 1.

D,
V211, 31'N97
N9·.29·1
·16653

வெளியீடு 16-4-98 Issued 16-4-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 9, 1997 – தொகுதி 29 – எண் 1

**Wednesday the 9th April, 1997 – Volume 29 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**...lative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

1163 / 98

D Y211, N67 N67.2 1. 216653

[Price Rs. 3.00

1163/98

09–04–1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. இரங்கல் குறிப்பு-- | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து | 1-2 |
| 2. வினாக்கள்-விடைகள்-- | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-44 |
| 3. கவன ஈர்ப்பு-- | |
| (அ) கரப்பூண்டி, தரணி சர்க்கரை ஆலையின் தற்போதைய நிலை | 44-49 |
| (ஆ) கால்நடை வதை தடுப்புச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாகக் கருதக் கோரல் | 49-53 |
| 4. அறிக்கைகள் அளித்தல்-- | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 53 |

| | பக்கங்கள் |
|---|---|
| *5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி* | |
| (அ) கோரிக்கை எண் 25--கைத்தறியும் துணித் தொழிலும் | 53-167 |
| (ஆ) கோரிக்கை எண் 52--சுற்றுச் சூழல் | |
| (இ) கோரிக்கை எண் 26--கதர் கிராமத் தொழில்கள் | |
| (ஈ) கோரிக்கை எண் 43--எழுது பொருள்-அச்சுத் துறை | |
| மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி | 54,57,60,77, 96-97,98-99, 140-160 |
| மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு | 60,63,65, 87,132-140 |
| *திரு. பா. வேல்துரை | 66-70 |
| *திரு. பி.என். சுப்பிரமணி | 70-75 |
| திரு. நா. பெரியசாமி | 75-80 |
| திருமதி வாசுகி முருகேசன் | 80-84 |
| *திரு. டி. மணி | 84-88 |
| திரு. பொ. முருகேசன் | 88-93 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 93,96,99-101 |
| திரு. ஆர். சிவானந்தம் | 101-105 |
| *திருமதி ஆன் டி' மான்டி | 105-106 |
| திரு. வி.பி. இராசன் | 106-109 |
| திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் | 110-113 |
| திரு. சி. வேலாயுதன் | 113-116 |
| திரு. சி. கோபு | 117-118 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 118-126 |
| திரு. என்.ஆர். அழகராஜா | 126-132 |
| *6.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 167 |


216653



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை: அமைச்சர் மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி, மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே.என். நேரு: உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்: பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா: சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்: பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

| | | |
|---|---|---|
| 20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.* |
| 21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: *இந்து சமய அறநிலையத் துறை.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் : *சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.* |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: *ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: *கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.* |
| 26. மீன்வளத் துறை அமைச்சர் | : | மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: *மீன்வளம் மற்றும் மீன் வளக் கழகம்.* |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports. |
| 2. **Minister for Education** | .. | **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. | **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue, Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. | **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation.** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies and Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkuna Pandian:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

| | | |
|---|---|---|
| 23. Minister for Adi-Dravidar and Tribal Welfare | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. Minister for Tourism | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. Minister for Khadi and Printing | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| 26. Minister for Fisheries | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

***மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. டாக்டர் இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

---

*25-1-1997 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அவையில் அறிவிக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு,<br>எம். ஏ. | .. இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன்,<br>டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின்<br>சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா,<br>பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம். | .. சார்புச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ. கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எட். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி; எஸ். .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
32. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்
42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம், பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. .. சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

65. கோபால், திரு. பா. .. மேட்டூர்
66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்
75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ். .. சமயநல்லூர் (செ.வ.)
78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
80. சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
90. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
91. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
99. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே.என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ,
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்



176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா.மு. .. கடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

| | | |
|---|---|---|
| 198. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 199. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 200. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 201. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 202. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 203. ரவி அருணன், திரு. கு. | .. | தென்காசி |
| 204. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 205. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 206. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 207. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 208. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 209. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 212. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 213. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 214. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 215. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 216. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 217. வீரப்பன், திரு. கோ.க. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |



| | | |
|---|---|---|
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 225. வேணு, திரு. கே. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

வெங்கடபதி, திரு. கோ.வி. .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 27, தாது — திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 9, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படி கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரி செய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்க துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

## 1. இரங்கல் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பி.பி.கே. இராஜா சிதம்பரம் ரெட்டியார் 6-12-1996 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இராஜா சிதம்பரம் ரெட்டியார் அவர்கள் 1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையிலே பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் பேரவை சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும்

[1997 ஏப்ரல் 9

வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண் 481, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**481—**

### உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்

***1540—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவைகுண்டம் தொகுதியில் உள்ள உமரிக்காடு அரசினர் உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை. அடுத்த ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்கப்படும்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் உள்ள உமரிக்காடு உயர்நிலைப் பள்ளி அருகில் மேல்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினால் அங்கேயுள்ள மாணவர்களெல்லாம் மேல்நிலைக் கல்விக்காக் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இந்தப் பள்ளியிலே 5 ஏக்கர் விளையாட்டு மைதானம், போதுமான கட்டிட வசதி, விஞ்ஞானக் கூடம் போன்றவை இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுடைய ஆக்கத்தால் புரவலர் திட்டத்தில்கூட இரண்டு இலட்சம் நிதி வைத்திருக்கின்றார்கள். மேல்நிலைப் பள்ளிக்காக ஒரு இலட்சம் ரூபாய் பணமும் கட்டியிருக்கிறார்கள். எனவே, நடப்பாண்டிலே இந்த உயர்நிலைப்



1997 ஏப்ரல் 9]

பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, எல்லாவிதமான அடிப்படைத் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டிருக்குமானால், அதுபோல வந்திருக்கின்ற மற்ற விண்ணப்பங்களோடு ஒப்புநோக்கி, முன்னுரிமை அடிப்படையில் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 482, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**482—**

### கலைக்கல்லூரியில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

***3807—திரு. ரா. சேதுநாதன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தென் ஆற்காடு—வள்ளலார் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக்கல்லூரியில் ஆசிரியர் காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், திண்டிவனம், ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் கடந்த கால ஆட்சியில் 50 சதவீத ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டு கல்வியின் தரம் குறைந்திருந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 90 சதவீதம் ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து, 10 சதவீதக் குறைவையும் நிறைவு செய்ய வேண்டும். மேலும், திண்டிவனம் கலைக் கல்லூரியில் கட்டிட வசதி அதிகமாக இருக்கிறது. போதிய இடமிருக்கின்ற காரணத்தினால் எம்.ஏ., எம்.காம்., எம்.எஸ்சி., ஆகிய மேற்படிப்புகளை துவக்க, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-35 [1997 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யும் வேலையை முதல் கடமையாக அரசு மேற்கொண்டிருக்கிறது. 11 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் இருந்தவற்றில், 8 பணியிடங்கள் கௌரவ ஆசிரியர்களால் நிவர்த்தி செய்யப்பட்டன. மிச்சமிருக்கிற 3 பணியிடங்களில், ஒன்று முறையாகத் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியரால் நிறைவு செய்யப்பட்டது; மிச்சம் உள்ள இரண்டு ஆசிரியர் பணியிடங்களும் நிறைவு செய்யப்படும். அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்ட பின்னால்தான், புதிய செலவிற்கு இடமில்லாத வகையில் மேற்படிப்புகள் துவக்கக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 483, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**483—**

**அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் நியமனம்**

***918—திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காலியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மொத்த மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 63-ல், 3 இடங்கள் காலியாக உள்ளன. இந்த மூன்று இடங்களும் விரைவில் நிரப்பப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 9]

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அச்செல்வத்தை அனைவரும், குறிப்பாக ஏழை, எளியவர்கள் விரைந்து பெறுகின்ற வகையில் காலியான இடங்களை நிரப்ப விரைந்து நடவடிக்கை எடுத்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, குறிப்பாக நரம்பியல் பிரிவில் மருத்துவர்கள் இல்லாத குறையைப் போக்க, விரைவில் நரம்பியல் மருத்துவர் நியமிக்கப்படுவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, நரம்பியல் பிரிவில் மருத்துவர்கள் தேவை என்ற கோரிக்கை வந்திருக்குமானால், அது பற்றி அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு கிராமப்புறங்களிலுள்ள மருத்துவமனைகளில், மருத்துவர்கள் நியமிக்கப்பட்டாலும், அவர்கள் பணிக்கு வந்து, உடனடியாக விடுமுறையில் சென்றுவிடுகிறார்கள். இதனால் அங்கு உள்ள நோயாளிகளுடைய நிலை பாதிக்கப்படுகிறது. எனவே, தொடர்ந்து, இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்ற அரசு மருத்துவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் விடுமுறையிலே செல்வது என்பது அவர்களுடைய உரிமை. அரசாங்கம் அவர்களை விடுமுறையிலே போகக்கூடாது என்று தடுக்கமுடியாது. ஆனால் அப்படி மருத்துவர்கள் விடுமுறையிலே போகின்ற நேரத்தில் மாற்று ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. அந்த அடிப்படையிலே எந்தெந்த மருத்துவமனைகளிலே இத்தகைய பிரச்சினைகள் இருக்கின்றனவோ, அவற்றை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் விடுமுறையில் போவது வேண்டுமானால் அவர்களுடைய உரிமையாகக்கூட இருக்கலாம். ஆனால், பொறுப்புக்கு வந்து, பணியில்

வந்து சேர்ந்த பின்னால் அவர்கள் பொறுப்புடன் செயல்படுகிறார்களா என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. எல்லா மருத்துவர்களையும் நான் சொல்லவில்லை. குறிப்பாக சிலரைப் பற்றித்தான் சொல்கிறேன். நேற்றுகூட, மயிலாடுதுறையிலே ஒரு பள்ளி மாணவனை, போக்குவரத்து விபத்திலே சிக்கியவனை, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, அவனை உடனடியாக மருத்துவர்கள் கவனிக்காத காரணத்தினாலே அவன் உயிரை இழந்திருக்கிறான். அவனை உரிய நேரத்தில், தஞ்சை மருத்துவமனைக்கு அவர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பவில்லை. இப்படி டாக்டர்கள் காலதாமதமாக வந்ததால், அவனுடைய உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. ஆதலால் அங்கிருக்கக்கூடிய மக்கள் எல்லாம் கொதிப்படைந்து, அந்த ஆஸ்பத்திரியையே சூறையாடியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மருத்துவர்களுக்கு கடுமையான உத்தரவுகளை இட்டு, அவர்கள் பணிக்கு வந்து உரிய நேரத்தில் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மயிலாடுதுறையிலே ஏற்பட்ட விபத்தில் சிக்கிய ஒரு மாணவனை அங்கேயிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கொண்டு சென்றபோது, அவனுடைய தலையிலே பலத்த காயம் ஏற்பட்டு இருந்ததனால்-தலையிலே ஏற்பட்ட காயத்தை உடனடியாக சிகிச்சை செய்வதற்கு வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே கிடையாது. எனவேதான், — அவர்கள் அவனை தஞ்சை மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். தஞ்சை மருத்துவமனைக்குப் போகின்ற வழியிலே அந்த மாணவன் இறந்துவிட்டிருக்கிறான். முதலுதவி போன்ற உதவிகளைத்தான் ஆரம்ப சுகாதார நிலையத்திலே செய்ய முடியுமே தவிர, தலையிலே படுகின்ற காயங்களுக்கு எல்லாம், எக்ஸ்-ரே எடுத்து அந்தக் காயம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து, அறுவைச் சிகிச்சை செய்வதற்கான வாய்ப்புகள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இல்லை. இருந்தாலும்கூட, அங்கிருந்த டாக்டர்கள் அவர்களுடைய கடமையை உணர்ந்து, தஞ்சை மருத்துவமனைக்கு அவனை அனுப்பியிருக்கிறார்கள். போகின்ற வழியிலே எதிர்பாராமல் அந்த மாணவன் இறந்து போயிருக்கிறான். அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பா.மு. முபாரக்.





முற்பகல் 9-40

**திரு. பா.மு. முபாரக் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 500-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற மருத்துவமனைகளில் 55% பணியிடங்கள் காலியாக இருப்பதாக நான் அந்தத் துறையினரோடு தொடர்பு கொண்டபோது எனக்குத் தெரிவிக்கப்பட்டது. பொதுவாக, அங்கே மருத்துவர்களை வேலைக்கு அமர்த்தினாலும், அவர்கள் ஏதாவது ஒரு வகையில், சிபாரிசின் அடிப்படையில் வெளி மாவட்டங்களுக்கு மாறுதல் கேட்டு பெற்றுச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே, இப்பொழுது நியமிக்கப்படுகின்ற மருத்துவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குக் கண்டிப்பாக அங்கே பணியாற்ற வேண்டும் என்ற உறுதியை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, மலைப் பிரதேசங்களில் புதிதாக மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலே பணியாற்றுவதற்குப் பெரும்பாலும் அனைத்து மருத்துவர்களும் முன்வருவதில்லை. ஏனென்றால், அது குளிர்பிரதேசமாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் முபாரக் போன்றவர்கள் அங்கேயே பிறந்து, வளர்ந்து இருக்கின்ற காரணத்தால் அந்த சீதோஷ்ண நிலைக்கு அவர்கள் பழகிவிடுகிறார்கள். எனவேதான் அங்கே நியமிக்கப்படுகின்ற மருத்துவர்கள் யாருமே அவர்களின் உடல்நலம் கருதி, ஆறு மாத காலமோ அல்லது ஒரு வருடமோ இருந்துவிட்டு வேறு இடங்களுக்கு மாறுதல் பெற்றுச் சென்றுவிட வேண்டுமென்று நினைக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் நேரிலே முறையிட்டபோதுகூட, "நீங்களாகப் பார்த்து உதகையிலே பணியாற்றுவதற்கு யாராவது தயாராக இருந்தால் சொல்லுங்கள். அந்த மருத்துவர்களை அங்கே நியமிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது" என்று சொன்னேன். இருந்தாலும், அவராலும் யாரையும் அழைத்து வர முடியவில்லை. எனவே அரசு இப்பொழுது என்ன செய்யவிருக்கிறது என்றால், தமிழ்நாட்டை ஒன்பது மண்டலங்களாகப் பிரித்து, மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்தந்த மண்டலங்களுக்குத்தான் விண்ணப்பங்களைப் போடவேண்டுமென்றும், அப்படி விண்ணப்பங்கள் போட்டவர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர்கள்

[1997 ஏப்ரல் 9

அந்த மண்டலத்திலே நியமிக்கப்படுவார்களானால், அவர்கள் குறைந்தது பத்து ஆண்டுக் காலமாவது அந்த மண்டலத்திலிருந்து வேறு இடத்திற்கு மாறுதல் பெற்றுச் செல்ல முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய வகையில் விதிமுறைகளை அரசு வகுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்ட தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 540 படுக்கைகள் உள்ளன. அங்கு 54 மருத்துவர்கள் இருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. நீண்ட நாட்களாக அந்த மருத்துவமனை சரியாகக் கண்காணிக்கப்படுவதில்லை. எனவே இந்தக் குறையை நிவர்த்தி செய்து, மேற்கொண்டு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தமாக 600 மருத்துவர் பணியிடங்கள் பற்றாக்குறை இருக்கிறது. நான் இந்த அவையிலேயே ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். தேர்வாணையம் மூலமாக மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது ; தேர்வும் முடிந்துவிட்டது. விரைவில் தேர்வாணையம் பட்டியலை அரசுக்கு அனுப்பினால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேங்காய்பட்டினம் அரசு மருத்துவமனையை கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையமாகக் குறைத்தார்கள். அதன் காரணமாக அங்கே மருத்துவர்கள் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. தற்போதுகூட அங்கே ஒரு மருத்துவர் இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, மீண்டும் அதை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாரத்திலுள்ள அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற முடியாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சியில் அப்படி நடைபெற்றதாகக்



1997 ஏப்ரல் 9]

குறிப்பிடுகிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலித்து, ஏற்கெனவே அந்த வட்டாரத்தில் அரசு மருத்துவமனையாக இயங்கியிருக்குமானால், அல்லது வேறு வட்டாரத்தில் அப்படி ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் குறைக்கப்பட்டிருக்குமானால், அந்த வட்டாரத்தில் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலைக் காயங்களைப் பார்ப்பதற்கு மருத்துவரும் இல்லை, அதற்குரிய எக்ஸ்-ரே மெஷினும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய கோபி மருத்துவமனை ஒரு வட்டாரத் தலைமை மருத்துவமனை. அங்கே எலும்பு முறிவைப் பார்ப்பதற்கு மருத்துவரும் இல்லை; எக்ஸ்-ரே கருவி இருந்தும், எக்ஸ்-ரே எடுப்பதற்கு பிலிமும் இல்லை. வெளியிலே போய் எக்ஸ்-ரே எடுத்து வருகிறோம் என்று சொன்னால் மருத்துவர்கள் மறுக்கிறார்கள். இந்தக் குறை தீர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே பிலிம் பற்றாக்குறை இருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் இல்லாமல் இருக்கிறது. அவைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டிடங்கள் இல்லாமல் இருந்தன. அந்த நிலையினை மாற்றத்தான்

[1997 ஏப்ரல் 9

நம்முடைய தமிழக முதல்வர் கிட்டத்தட்ட 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பணத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு சுற்றுச் சுவர் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கக்கூடிய அரசு இராசாசி மருத்துவமனை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தொகுதியில் இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடியாக என்று சொன்னாலும்கூட, சென்னை அரசு பொது மருத்துவமனையைக் காட்டிலும், அதிகமான வெளிநோயாளிகள், சுமார் 10,000 பேர் இராசாசி மருத்துவமனைக்கு வருகிறார்கள். அங்கே கழிவுகள் அதிகமான அளவிலே குவிந்து கிடக்கின்றன. நான் மற்றும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அங்கே அடிக்கடி சென்று பார்க்கும்போது, அந்த இடத்திலுள்ள பிண அறுவைக் கொட்டகைக்கு அருகே செல்ல முடியாத நிலையிருக்கிறது. அந்தக் கழிவுகளை எரிக்கக்கூடிய, 'இன்சினரேட்டர்' என்று சொல்லக்கூடிய கருவியை உடனடியாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கக்கூடிய அரசு இராசாசி மருத்துவமனை பற்றி தாங்களே ஒரு விழாவிலே என்னுடைய முன்னிலையிலே பேசினீர்கள். அப்பொழுதே நான் வாக்குறுதி தந்திருக்கிறேன். அந்த அடிப்படையில் இராசாசி மருத்துவமனையை மேம்படுத்தவும், நல்ல முறையில் பராமரிக்கவும், சுத்தமாக வைத்திருக்கவும் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேரன்மகாதேவி தொகுதி, பத்தன்மடையிலே உள்ள மேல்நிலை ஆரம்ப சுகாதார நிலையத்திலே எக்ஸ்-ரே கருவி இருக்கிறது. ஆனால் அதற்குத் தேவையான பிலிம் வழங்கப்படவில்லை; அதற்குரிய இரசாயன பொருட்கள் வழங்கப்படவில்லை. ஆகவே அந்தப் பொருட்களை உடனடியாக இந்த மருத்துவமனைக்கு வழங்கி, எக்ஸ்-ரே கருவி இயங்குவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். எக்ஸ்-ரே பிலிம் பற்றாக்குறை இருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் கடந்த ஒரு வார காலமாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. நிச்சயமாக இன்னும் 10 நாட்களுக்குள்ளாக தமிழ்நாட்டிலே உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு எக்ஸ்-ரே பிலிம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 484, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**484—**

### ஆவுடையனூரில் ஆரம்ப சுகாதார நிலையம்

*** 2380—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, ஆவுடையனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, ஆவுடையனூரில் தற்சமயம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 9

**திரு. கு. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், 1992-ஆம் ஆண்டு அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதி மக்கள் 10,000 ரூபாயையும், 5 ஏக்கர் நிலத்தையும் அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குவதைவிட, ஏற்கெனவே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருந்தாலும், இதுபோன்று பொது மக்களிடம் பணம் வசூல் செய்யும் இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,37,000. மத்திய அரசாங்கம் நமக்குக் கொடுத்திருக்கின்ற திட்டத்தின்படி, அங்கே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். பாவூர்சத்திரம், அரியப்பபுரம், வீர கேரளம்புதூர் மற்றும் சுரண்டை ஆகிய 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் 10,000 ரூபாயும், 5 ஏக்கர் நிலமும் அந்தக் கிராமத்து மக்கள் அரசுக்கு வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார்கள். இப்படி நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களிலே பணத்தையும் கொடுத்து, நிலத்தையும் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடங்களிலெல்லாம் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பதற்கு கொள்கைக் குறிப்பு அரசிடம் எதுவும் இல்லை.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு.சி. ஞானசேகரன் அவர்கள், மயிலாடுதுறையில், மாணவன் ஒருவன் விபத்தில் சிக்கி, அதன்பின்பு இறந்துபோன குறிப்புகளை யெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நெடுஞ்சாலைகளிலே ஏற்படுகின்ற விபத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கு 'மொபைல் வேன்'-களை ஆங்காங்கே நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். காஞ்சிபுரம் பக்கத்தில், இராஜகுளம் என்ற இடத்தில் இராஜஸ்தானைச் சேர்ந்த தொண்டு நிறுவனத்தினர்



1997 ஏப்ரல் 9]

இதுபோன்ற ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, அரசு தனியார் தொண்டு நிறுவனங்களை அணுகி, நெடுஞ்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்கு இதுபோன்ற எல்லா வசதிகளையும் கொண்ட 'மொபைல் வேன்களை' நிறுத்திட நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்கள் நெடுஞ்சாலைகளில், ரூ.25 இலட்சம் செலவில் இப்படிப்பட்ட ஆம்புலன்ஸ் வண்டிகளை ஏற்பாடு செய்யவேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாவிட்டாலும், பாதிக்கப்படுகின்றவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக, 100 கிலோமீட்டருக்கு ஒரு இடத்தில், விபத்து சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்கி அங்கே எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் துணை வினா கேட்கும்போது, மூல வினாவிற்குத் தொடர்புடையவற்றைக் கேட்க வேண்டும். சென்ற மூலக் கேள்விக்கும், இந்த மூலக் கேள்விக்கும் துணை வினாக்கள் கேட்க வாய்ப்பு வேண்டி திரு. செங்கை சிவம் கையைத் தூக்கிக் கொண்டிருந்தார். அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவர் கேட்ட துணை வினாவிற்கும், மூல வினாவிற்கும் தொடர்பே இல்லை. அடுத்து, திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இருக்கின்ற தலைமை மருத்துவமனை, மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாகும். இங்கு, தீக்காயங்கள் ஏற்பட்டு அனுமதிக்கப்படக்கூடியவர்கள், குளிர்சாதனத்துடன் கூடிய கட்டிடம் இல்லாத காரணத்தால், மரணம் அடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதேபோன்று, விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டவர்கள் சிகிச்சைக்காக மதுரையை நோக்கித்தான் செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, மாவட்டத் தலைமை மருத்துவமனையான,

[1997 ஏப்ரல் 9

திண்டுக்கல் தலைமை மருத்துவமனையில் இந்த இரண்டு வசதிகளையும் செய்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடன், மாவட்டத்தில் இருக்கின்ற தலைமை மருத்துவமனைகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இது குறித்துப் பேசி, இலாக்காவிற்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். நிதிப் பற்றாக்குறை காரணமாக எல்லா மருத்துவமனைகளிலும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குறையைப் போக்குவதற்கு, எல்லா வசதிகளையும் செய்து தருவதற்கு அடுத்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக்காலத்தில், 76 ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை அது செயல்படுத்தப்படவில்லை. எனவே, கழக அரசு, அந்த 76 ஊராட்சி மன்ற மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே 76 ஊராட்சி மன்ற மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு எப்படி வாக்குறுதி தந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு எந்தத் திட்டமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, நூற்றுக்கணக்கான இடங்களில் 10,000 ரூபாய் பணம் கொடுத்து, 5 ஏக்கர் நிலம் வழங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தரவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன; ஆனால், அவற்றை அமைப்பதற்கு இப்போது செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே இருந்த அரசு உத்தரவாதம் சொல்லித்தான், கிராமத்து மக்கள் பணம் கட்டியிருக்கிறார்கள்; நிலமும் வழங்கியிருக்கிறார்கள். நம்முடைய அரசு, இப்போது செயற்குறிப்பு இல்லை; புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்க முடியாது என்று சொன்னால், மக்களிடத்திலே ஒரு அதிருப்தி வருகிறது. அதுவும் அடிக்கடி 'பஸ் மறியல்' போன்ற போராட்டங்களிலே, திடீர் திடீரென்று கிராம மக்கள் உற்சாகமாக ஈடுபடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு, நிதிநிலைமையைப் பொறுத்து வருகிற காலத்தில் இது பரிசீலிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தால், கிராம மக்களுக்குக் கொஞ்சம் நல்லதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அப்படி, எதிர்காலத்திலாவது, நம்முடைய அரசு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு உத்தரவாதம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 9]

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில் இருந்தவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு, இந்த அரசாங்கம் பொறுப்பல்ல. இரண்டாவது, ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதிலே, நிதி முக்கியமல்ல, கொள்கை முக்கியம். 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம். அந்த அடிப்படையிலே, தமிழகத்திலே இப்போது 14, 19 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பித்து விட்டோம். அதற்குமேல் ஆரம்பிப்பதற்கு கொள்கைப்படி முடியாது. எனவே, கொள்கையின் அடிப்படையிலே முடியாமல் இருக்கிறதே தவிர, நிதி முக்கியமல்ல. எனவே, இந்தக் கொள்கை முடிவு, அகில இந்தியாவிற்கும், மத்தியிலே மாற்றப்படுமானால், அப்போது தமிழகத்திலேயும் அந்த மாற்றம் வரும். அப்போது, மாண்புமிகு உறுப்பினருடைய பிரச்சினை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

[1997 ஏப்ரல் 9

**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரமாவது ஆண்டுக்குள், தமிழக மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதி வழங்க வேண்டும் என்பது நம்முடைய அரசின் உயர்ந்த நோக்கம். அந்த அடிப்படையில், 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலையைத் தளர்த்தி, 25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்ற கொள்கையை, மத்திய அரசிடம் வலியுறுத்தி, அந்த நிலையை உருவாக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதியாண்டிலாவது ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் மக்கள் தொகை என்பதை, 25 ஆயிரம் என்று ஆக்குவதற்கு மத்திய அரசாங்கத்தினை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா என்று உறுப்பினர் கேட்கிறார். இந்த அரசு, 15 ஆயிரம் மக்களுக்கு ஒரு மருத்துவமனை வேண்டும் என்றுகூட வற்புறுத்துவதற்குத் தயாராக இருக்கிறது. ஏனென்றால், 25 ஆயிரம் மக்களுக்குப் பரிந்துரை செய்தால், 20 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பகுதியில், அவர்களும் இப்படிப்பட்ட கோரிக்கையை வைக்கக்கூடும். ஆனால், நாம் என்ன கோரிக்கை வைத்தாலும், முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசாங்கம். எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இப்போது 5 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய ஒரு பகுதிக்கு, 'பேசிக் ஹெல்த் ஒர்க்கர்' என்ற அடிப்படையிலே ஒருவரை நியமித்து, அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய மக்களுடைய துயர்களையெல்லாம் அவர் பதிவு செய்து, அவர்களுக்கு என்னென்ன நோய்கள் இருக்கின்றன என்று கண்டறிந்து, அவர்களை நோயற்ற சமுதாயமாக உருவாக்குவதற்கு, அவர்களுக்கு உதவி புரிவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நமது அரசு, கிராமப்புறங்களிலே வைத்திய வசதியை மேம்படுத்த வேண்டுமென்று, 24 மணி நேர மருத்துவ சேவை செய்யப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படும்போது, அங்கே தங்குவதற்கு வசதியாக, மருத்துவர்களுக்கோ, மற்ற ஊழியர்களுக்கோ வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. அதனால், கிராமங்களிலே அவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கிற நேரத்திலே, அவர்களுக்கு வீட்டு வசதியும் செய்து தர அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1419 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 385 ஆரம்ப சுகாதார நிலையங்களை, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற இருக்கிறோம். இதிலே கடந்த ஆண்டு, 124 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, இப்போது செம்மையாக நடந்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு டாக்டராவது அங்கே தங்கி இருந்தால்தான் நோயாளிகளுக்கு முழு வசதி கிடைக்கும் என்று இந்த அரசு கருதுகிற காரணத்தினால், அந்த 385 மருத்துவமனைகளிலும் டாக்டர் குடியிருப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக மருத்துவமனை துவங்குவதற்காக, பல கிராமங்களிலே இருந்து ரூபாய்களை அரசாங்கம் பெற்றிருக்கிறது. ஒன்று, தகுதி வாய்ந்த கிராமங்களிலே இருந்து, அந்தப் பணத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், இப்போது எல்லாக் கிராமங்களிலும் பணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். ஒன்று, தகுதி வாய்ந்த கிராமங்களுக்கு நீங்கள் மருத்துவமனை கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் அந்தப் பணத்தையாவது திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மிக நல்ல யோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் பணத்தைக் கட்டுங்கள், நாங்கள் மருத்துவமனை கொடுக்கிறோம் என்று யாருக்கும் கடிதமும் அனுப்பவில்லை, உத்தரவும்

பிறப்பிக்கவில்லை. கடந்தகால ஆட்சியில் சில வாக்குறுதிகள் பெறப்பட்டு சில இடங்களில் அப்படி பணம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல யார் யார் அப்படி பணத்தைச் செலுத்தியிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் மத்திய சர்க்கார் இந்த ஆண்டு இத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்திய காரணத்தினால் ஏற்கெனவே ஜில்லா போர்டு காலத்தில் அரசு மருத்துவமனைகளாகத் துவங்கப்பட்டு செயல்பட்டு வந்த மருத்துவமனைகளை—ஜில்லா போர்டைக் கலைத்துவிட்டு கணக்கு காட்டுவதற்காக அந்த மருத்துவமனைகளை—ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் வினாவுக்கு வாருங்கள்.

**திரு. சுப. தங்கவேலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே மீண்டும் அவற்றை அரசு மருத்துவமனைகளாக மாற்றி அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்க மருத்துவமனையாக இருந்தால் அதை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு வாய்ப்பு கிடையாது. அப்படி எங்காவது மாற்றியிருப்பார்களேயானால் அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அது அரசு மருத்துவமனையாக இயங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 485. திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



**485—**

## புயல் பாதுகாப்பு மையம் கட்டுதல்

***4236—திரு. எஸ்.கே. வேதரத்தினம் :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடற்கரையோரங்களில் எல்லாக் கிராமங்களிலும் புயல் பாதுகாப்பு மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கடற்கரையோரக் கிராமங்களில் சுமார் 123 புயல் பாதுகாப்பு மையங்கள் ஏற்கெனவே பல்வேறு நிதி நிறுவனங்களின் உதவியுடன் கட்டப்பட்டுள்ளன. தற்போது மேலும் 120 இடங்களில் புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டலாம் என முடிவு செய்யப்பட்டு நிதியுதவி அளிக்கும் வெளிநாட்டு நிறுவனம் பற்றி மைய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டு நிறுவனத்தாரிடமிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் புயல் பாதுகாப்பு மையக் கட்டுமானப்பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரக் கிராமங்கள் இயற்கைச் சீற்றத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. எனது வேதாரண்யம் தொகுதி சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மக்களெல்லாம் பெரும் அவதிக்குள்ளானார்கள். அது மட்டுமல்லாமல் எனது வேதாரண்யம் தொகுதி இரண்டு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களே 120 புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே எனது தொகுதிக்குக் கூடுதலாக புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேதரத்தினம் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 486, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**486—**

**தெளிப்பு நீர்ப்பாசனம்**

*** 1001—திரு. வீ. தமிழ்மணி :**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தெளிப்பு நீர்ப்பாசனம் செய்ய வழங்கப்படும் மானியத்திலிருந்து அதற்கான உபகரணங்களை வாங்கிக் கொள்ள அரசு அனுமதியளிக்குமா ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தெளிப்பு நீர்ப் பாசனத்திற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கும், அமைப்பதற்கும் மத்திய அரசு சார்புத் திட்டங்கள் மூலம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. உதிரி பாகங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுவதில்லை.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிப்பு நீர்ப்பாசனத்திற்குக் கருவி மட்டும் வாங்குவதற்கு மானியம் வழங்கிவிட்டு உதிரி பாகங்கள் வாங்க மானியம் வழங்காத காரணத்தினால் உதிரி பாகங்கள் இல்லாமல் அதைப் பயன்படுத்த விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இதைக் கருத்தில்கொண்டு வழங்கப்படுகிற அந்தப் பொருட்களையும் உபயோகப்படுத்துவதற்குண்டான அத்தனை உபகரணங்களையும் மானியத்துடன் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஸ்பிரிங்க்ளர்' போட்டுத் தருகிறபோது எல்லாவிதமான தேவையான உதிரிபாகங்களையும் சேர்த்துத்தான் நாங்கள் அதை அமைத்துக் கொடுக்கிறோம். ஆகவே தனியாக உதிரி பாகங்கள் வாங்கவேண்டிய அவசியம் இல்லை. ஒருவேளை 'ஸ்பிரிங்க்ளர்' போட்டுத் தரும்போது ஏதாவது தவறுகள் நடந்து இருக்குமானால், அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம். இப்போது நாம் 'ஸ்பிரிங்க்ளர்' தெளிப்பு பாசன முறையை அமைத்துக் கொடுக்கிறபோதே அதை முழுமையாக அமைத்துக் கொடுத்து, அதற்குரிய மானியம் வழங்குகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெளிப்பு நீர்ப் பாசனத் திட்டம் என்பது வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறதா? அனேகமாக எனக்குத் தெரிந்தவரையில் இது ஒரு தேவையற்ற நிலையில்தான் இருக்கிறது. இது விவசாயிகளுக்கு உறுதுணையாக அமையவில்லை. இன்னும் சொல்லப்போனால், தெளிப்பு நீர்ப்பாசனம் என்பது புல் தரைகளுக்கு மட்டும் பயன்படக்கூடியதாகவும், விவசாயத்திற்கு முற்றிலும் பயன்படாத நிலையிலும் இருக்கிறது. இத்திட்டத்திற்காக அரசு வருடத்திற்கு எத்தனை லட்சம் ரூபாயை செலவு செய்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ல் மத்திய அரசாங்கத்தின் மூலம் இந்தத் தெளிப்பு நீர்ப்பாசன முறைக்கு மானியம் கொடுக்கப்படுவது அறிவிக்கப்பட்டது. 1995-96-ல் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரூ. 210.50 இலட்சத்தை நாம் மானியமாக வழங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல் இதை தேவை இல்லாத திட்டம் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால், நீர்ப் பற்றாக்குறை நம்முடைய மாநிலத்திலே இருக்கிறது. ஆகவே சிக்கனமான சொட்டுநீர்ப் பாசன, தெளிப்பு நீர்ப்பாசன முறையைக் கொண்டுவருவதன் மூலமாகத்தான் அதிக அளவு விவசாயிகள் பயன்படக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த முடியும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே தென்னை மரங்களை வைத்திருக்கிறார்கள். தென்னை மரத்திற்கு அதிகமான தண்ணீர் தேவைப்படுகிறது. அங்கே கிணறுகளில் தண்ணீர் இல்லை. அதனால் சொட்டுநீர்ப் பாசன முறையைப் பயன்படுத்துகிறார்கள். நிறைய விவசாயிகள் விண்ணப்பங்கள் செய்து, நாங்கள் அங்கே சீனியாரிட்டி அடிப்படையில் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதேபோல் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைப் பயிர் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. தேயிலைக்கு தெளிப்பு நீர்ப்பாசன முறையைக் கட்டாயம் செய்து தரலாம். கடந்த காலத்தில் அரசாங்கம் இதைப்பற்றி கவனம் செலுத்தவில்லை. நான் அங்கே சென்றபோது, அந்தப் பகுதி விவசாயிகளை எல்லாம் அழைத்துப் பேசியபோது, மானியத்துடன் கூடிய இப்படிப்பட்ட தெளிப்பு பாசன முறையை நீங்கள் எங்களுக்கு அமைத்துக் கொடுத்தால் எங்களுடைய

வாழ்க்கைத் தரம் உயரும் என்று ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தார்கள். 50 சென்ட் நிலம், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்கூட இதிலே ஆர்வம் காட்டினார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1996-97 ஆம் ஆண்டில் 90 சதவீதம் மானியம் தருகிறோம். அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 90 சதவீதம் ஆகும். அதிகபட்சமாக ஒரு நபருக்கு ரூ. 25 ஆயிரம் நாம் மானியமாகத் தருகிறோம். ஆகவே இது ஒரு பயனுள்ள திட்டம்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, drip irrigation and sprinkler irrigation are much useful to the ryots. I am using sprinkler irrigation for nurseries. Drip irrigation is also mostly useful in areas where there is drought condition. Many people are interested in these. May I know from the Hon. Minister whether there is any acreage restriction for providing this drip irrigation connection. A lot of people are interested in this because the Government of India is giving 90% subsidy to drip irrigation. I request the Hon. Minister to see that drip irrigation and sprinkler irrigation are given more priority. There should not be any restriction of acreage.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ல் நிதி குறைவாகக் கொடுக்கப்பட்ட காரணத்தால், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் நாம் விவசாயிகளுக்குச் செய்ய முடிந்தது. அந்த அடிப்படையில் நாம் அப்போது செய்தோம். இப்போது 1996-97 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கமானது 'டிரிப் இரிகேஷன்', 'ஸ்பிரிங்க்ளர்' சொட்டுநீர்ப் பாசனம் போன்றவற்றை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறீர்களோ அந்த அளவுக்கு நிதி தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் விவசாயிகள் எவ்வளவு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதில்லை. எவ்வளவு ஏக்கர் நிலம் அவர்களுக்கு இருந்தாலும், அவர்கள் இதுபோன்ற தெளிப்பு நீர்ப்பாசன முறையை அமைத்துக்கொள்ள, சொட்டுநீர்ப் பாசன முறையை அமைத்துக்கொள்ள முன்வருவார்களானால் அவர்களுக்கு மானியத்துடன் நாம் செய்து தரலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. நடராஜன்.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகளைக் கேட்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதானே பதில் சொன்னார்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் தற்போது பதில் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனத்தால் அதிகமாகப் பயனடைவது எங்கள் மாவட்டம்தான். மாவட்ட வாரியாக இதற்கு என்று ஏதாவது பணம் ஒதுக்கீடு அரசால் செய்யப்படுகிறதா அல்லது அந்தப் பணத்தைப் பயன்படுத்தாத மாவட்டங்களுக்கு இருக்கின்ற அந்த நிதியை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் துணை வினா கேட்பதற்குமுன் முதல் வினாவுக்கு என்ன பதில் என்பதை நன்கு கவனிக்க வேண்டும். எவ்வளவு பேர் கேட்டாலும் கொடுப்பதற்கு மைய அரசு அனுமதி கொடுத்தாகிவிட்டது என்று அமைச்சர் சொன்னதற்குப் பிறகு மாவட்ட வாரியாகப் பணம் கொடுக்கிறார்களா என்று கேட்டால் என்ன அர்த்தம்? நீங்கள் உட்காருங்கள்.

வினா எண் 487, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**487—**

**வேளாண்மையை தொழிலாக அறிவித்தல்**

***2861—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மையை ஒரு தொழிலாக அறிவிக்க இதுவரை அரசு எடுத்துள்ள முயற்சிகள் பற்றிய விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மையை ஒரு தொழிலாக மைய அரசுதான் அறிவிக்க வேண்டும். எனவே, வேளாண்மைக் கொள்கையில், வேளாண்மையை ஒரு தொழிலாக அறிவிக்க மைய அரசுதான் முன்வரவேண்டும். அப்படி மைய அரசு முன்வருமேயானால், தமிழக அரசுக்கு ஆட்சேபனை இருக்க இயலாது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர்கள் என்பவர்கள் பொங்கல் தினத்தன்று மட்டும் எழுத்தாளர்களால் நினைவு கூறக்கூடிய அப்பாவிகள். அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு அவர்களாலே விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை. இதனை இடைத்தரகர்கள் பயன்படுத்திக் கொண்டு அவர்கள்தான் இன்றைக்கு பணக்காரர்களாக மாறி வருகின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஏனைய தொழில்களுக்கு பாதுகாப்பு, கடன், இன்ஷூரன்ஸ் போன்ற வசதிகளை அளிப்பதுபோல விவசாயிகளுக்கும் அளித்தால்தான், விவசாயத்தைச் சிறப்பாக நடத்த முடியும். எனவே, விவசாயத்தை மற்ற தொழிலைப் போலவே ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமென்று மைய அரசிற்கு, தமிழக அரசு பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பல்வேறு பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதை, மைய அரசுதான் செய்ய இயலும். மாநில அரசு செய்ய இயலாது. ஆனால், மைய அரசு இதுபோன்ற கருத்துக்களை ஒவ்வொரு ஆண்டும் கேட்கின்றபோது, மாநில அரசினுடைய பரிந்துரைகளை நாம் அனுப்புகிறோம். ஆனால், இறுதி முடிவு செய்வது மைய அரசுதான். மைய அரசுதான் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை, அதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கின்றதா என்ற இன்னொரு கேள்வியை எழுப்பினார்கள். அதற்காகத்தான், மாவட்ட அளவில் அல்லது மாவட்டத்திலே வட்ட அளவில் நாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை வைத்திருக்கின்றோம். விவசாயிகள், உற்பத்தியாகக்கூடிய



1997 ஏப்ரல் 9]

பொருட்களை அங்கே கொண்டு வந்தால், அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் இடைத்தரகர்கள் அவர்கள் இஷ்டத்திற்கு விலையை நிர்ணயம் செய்து வாங்கிக் கொள்வதற்கு பதிலாகத்தான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் நல்ல விலை கிடைக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையை இப்போது தமிழகத்திலே நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது விவசாயிகள் பெரும்பாலும் ஆர்வத்தோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விளைபொருட்களைக் கொண்டு வருகிறார்கள். அதனை இன்னும் செம்மையாக, சிறப்பாக எப்படி நடத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போல அனுபவம் உள்ள மற்ற உறுப்பினர்களும் கருத்துக்களைச் சொல்வார்களேயானால் இந்த அரசாங்கம் அதனை ஏற்றுச் செயல்படுத்தும். ஆனால் வேளாண்மையை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமானால், அதனை மைய அரசுதான் செய்ய வேண்டுமே தவிர, மாநில அரசு செய்ய இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 488, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**488—**

## மொழிப்போர் தியாகிகளுக்கு தாமிரப்பட்டயம்

***4391—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ல் மொழிப்போர் தியாகிகளுக்கு தாமிரப்பட்டயம் வழங்க அறிவிக்கப்பட்டு இன்னும் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 20-10-1974 வரை மொழிப்போர்க் காவலர்களாகிய 1,494 பேருக்குத் தாமிரப்பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைக் காக்க, தமிழின் தனித் தன்மையைக் காக்க, தமிழர்களின் உரிமையைக் காக்க, இந்தி ஆட்சி மொழியை எதிர்த்துப் போராடியதற்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவினைக் கூட நீங்கள் எழுதிப் படிக்க வேண்டுமா? பேப்பர் இல்லாமல் கேளுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினின்றும் 11 உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்தார்கள். அப்படி பதவி நீக்கம் செய்யப்பட்ட 11 உறுப்பினர்களையும் மொழிப்போர் தியாகிகளாகக் கருதி, அவர்களுக்கும் தாமிரப்பட்டயம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மொழிப்போர் தியாகிகள் அனைவரும் வயதில் முதியோர்களாக இருப்பதால், அவர்களெல்லாம் புகைவண்டியில் பயணம் செய்யக்கூடிய அளவுக்கு பயணச்சீட்டுப் பெற்றுத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் பொறுப்பில் இருப்பவை பேருந்துகள் மட்டுமே. புகைவண்டி என்பது மைய அரசு தொடர்பானது. எனவே, மாநில அரசு தன்னுடைய பொறுப்புக்கு உட்பட்டிருக்கிற பேருந்துகளில் மட்டுமே அவர்கள் இலவசமாகப் பயணம் செய்வதற்கான வாய்ப்பை அளித்திருக்கிறது. மைய அரசு இந்த வாய்ப்பை வழங்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது, அது நம்முடைய பொறுப்பில் இல்லாத காரணத்தால். எனவே, இப்போது தருகிற சலுகை மட்டுமே நீடிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 489, திரு. கு. மனோகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**489—**

**தருமபுரி ஒன்றியப் பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குதல்**

***1214—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியப் பகுதிகளுக்கு தருமபுரி நகரில் வழங்குவது போல் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி, மாவட்டத் தலைநகர் என்பதால் அப்பகுதியில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதே விகிதத்தில் தர்மபுரி ஒன்றியப் பகுதியில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்க போதுமான மத்திய அரசு ஒதுக்கீடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி நகரில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் தர்மபுரி நகரில் தங்க இடமில்லாததால் தர்மபுரி நகரையொட்டிய ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள தர்மபுரி ஒன்றியப் பகுதியில் அரசு அலுவலர்கள் குடியிருப்பில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அரசு ஊழியர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு, மீண்டும் அவர்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க ஆவன செய்யுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் என்பது மத்திய அரசினுடைய ஒதுக்கீடு. அதை மானியத்திலே நமக்குத் தருகிறார்கள். நாம் இப்போது 1½ கோடி குடும்ப அட்டைகளுக்கு வழங்குகின்ற அளவின் பிரகாரம் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்றால் 81,095 கிலோ லிட்டர்

நமக்கு ஒவ்வொரு மாதமும் வேண்டும். ஆனால், மத்திய அரசு ஒதுக்கீட்டின் மூலம் நமக்கு 73,035 கிலோ லிட்டர்தான் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. இதை 10 சதவிகிதம் உயர்த்தித் தாருங்கள் என்று கேட்டபோது, மத்திய அரசு மறுத்துவிட்டது. தற்போது அவர்கள் தருகின்ற மண்ணெண்ணையைக் கொண்டு, மாவட்டத் தலைநகரம் என்றால் 10 லிட்டர் என்றும், இதர நகராட்சிப் பகுதிகளுக்கு 6 லிட்டர் என்றும், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கு 5 லிட்டர் என்றும், கிராமப் பகுதிகளுக்கு 3 லிட்டர் என்றும், நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் நகர்ப் பகுதியிலே 15 லிட்டர் என்றும் மாவட்ட நகரியப் பகுதிகளிலே 10 லிட்டர் என்றும், மாவட்ட கிராமப் பகுதிகளிலே 5 லிட்டர் என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பல சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது, உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே வெற்றிபெற்ற தலைவர்கள்கூட மண்ணெண்ணெயை பல பகுதிகளிலே குறைத்துத் தருகிறார்கள் என்று மனுவாகத் தந்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடு காரணமாகத்தான் ஒருசில நேரங்களிலே ஒருசில பகுதிகளில் மண்ணெண்ணெயைக் குறைத்துத் தரவேண்டிய சூழ்நிலை இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசை அணுகி, கடந்த பிப்ரவரி மாதம், 5,000 டன் (6,425 கிலோ லிட்டர்) மண்ணெண்ணெயைப் பெற்று விநியோகித்திருக்கிறோம். புதிய குடும்ப அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டால் அப்போது மத்திய அரசின் ஒதுக்கீட்டைத் தவிர, மாநில அரசும் அதற்கு நிதி ஒதுக்கி மண்ணெண்ணெயை முழுமையாக வழங்குவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற ஒரு கொள்கை ரீதியான முடிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வருங்காலத்திலே அது சரிசெய்யப்படும். தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே வழங்கியதைப்போல இப்போதும் அவர்களுக்கு பத்து லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க இயலாது. இருப்பதை வைத்துக் கொண்டுதான் நாம் பங்கிட்டுக் கொண்டாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 490, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



**490—**

## கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை பிரித்தல்

***2490—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை போச்சம்பள்ளி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலிருந்து பிரித்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-20

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

என்பது வள்ளுவர் வாக்கு. அதுபோல அனைத்துத் தகுதிகளைப் பெற்றிருக்கின்ற கிருஷ்ணகிரி, அனைத்து ஊர்களுக்கும் நடுவாக, மாவட்டத்தினுடைய மைய ஊராக இருக்கின்ற கிருஷ்ணகிரி, அந்த ஊரிலே வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்று தலைமையிடமாக இருந்து கொண்டு செயல்பட வேண்டுமென்ற ஒரு குறிக்கோளின் காரணமாகத்தான், இந்த வினாவைத் தொடுத்தேன். 1963-ஆம் ஆண்டு இந்தக் கிளை தொடங்கப்பட்டது. அது கிருஷ்ணகிரியிலிருந்து 30 கிலோ மீட்டர் தள்ளியிருக்கின்ற போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் பலமுறை இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டதைப் போல எண் 7, எண் 46 ஆகிய இரண்டு தேசியப் பெருவழித் தடங்கள் என்னுடைய ஊர் வழியாகச் செல்கின்றன.

[1997 ஏப்ரல் 9

இந்த விற்பனைச் சங்க வளாகத்திற்கான ஏலக்கூடம் அமைப்பதற்குத் தேவையான இடம், விற்பனை சேமிப்புக் கிடங்கு, விவசாயப் பொருட்கள் எல்லாம் கிருஷ்ணகிரியில் இருக்கின்றன. இருந்தும், கேள்விக்கு இடமில்லை என்று நிர்தாட்சண்யமான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்—இவ்வாறு சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக, அனைத்துத் தகுதிகளையும் பெற்ற என்னுடைய கிருஷ்ணகிரியில், ஒரு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைமையிடத்தை உருவாக்கித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *125*-க்கும் மேற்பட்ட விற்பனைச் சங்கங்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும், *35* சங்கங்கள்தான் லாபகரமாக இயங்குகின்றன. மற்றச் சங்கங்கள் எல்லாம் சம்பளம் தருவதற்குக்கூட முடியாமல் சரியான நிலையில் இல்லாத அளவிலே இருந்து கொண்டிருக்கின்றன. போச்சம்பள்ளி சங்கத்தைப் பொறுத்தவரையில், மொத்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை *8,537*; கிருஷ்ணகிரியில் *7,627*; அதிலே வேளாண் விளைபொருட்கள் என்ற அளவில், கிருஷ்ணகிரி பகுதிக்கு *1,65,000* டன் அளவும், போச்சம்பள்ளி பகுதிக்கு *1,41,000* டன் அளவும் தற்போது கொள்முதல் செய்து, விற்பனை செய்கின்ற சங்கமாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் ஆதங்கப்பட்டு, கிருஷ்ணகிரி தலைநகராக இருந்தும், அந்த வாய்ப்பு இல்லையா என்று கேட்டார்கள். விற்பனைச் சங்கத்தை அங்கே ஆரம்பிப்பதற்குரிய அனைத்து வசதிகளையும், தகுதிகளையும் ஏற்படுத்துவார்களேயானால், புதிதாக கிருஷ்ணகிரியில் விற்பனைச் சங்கம் தொடங்குவதற்கு உரிய முயற்சியை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *491*, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 9]

**491—**

**ஆரணியில் பால் குளிரூட்டு நிலையம் ஏற்படுத்துதல்**

***4685—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் சுமார் *5000* லிட்டர் உபரி பால் தினமும் உற்பத்தியாகிறது. கடந்த கால ஜெயலலிதா ஆட்சியின் சீர்கேட்டால், உபரி பால் உற்பத்தி *3000* லிட்டராகக் குறைந்திருக்கிறது. இதைச் சீர்படுத்தி, அதிக பால் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும், மேலும், ஆரணி மற்றும் அருகிலுள்ள களம்பூர் ஆகிய ஊர்களில் உற்பத்தியாகின்ற பால், குளிரூட்டும் நிலையம் இல்லாததால் கெட்டுவிடுகிறது. இதைத் தடுக்க ஆரணியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியைச் சுற்றியுள்ள *83* கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக *26,000* லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தப் பால், பக்கத்திலுள்ள அனக்காவூரில் உள்ள பால் குளிரூட்டு நிலையத்திற்கும், வேலூர் குளிரூட்டு நிலையத்திற்கும் அனுப்பப்படுகின்றது. ஆகவே, புதிய பால் குளிரூட்டு நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் தொடங்கப்பட்டு *7* ஆண்டுகள் ஆகியும், இன்னும் வேலூரையே தலைமையிடமாகக் கொண்டு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்கள் மாவட்டத்தில் அதிகமாகப் பால் உற்பத்தியாகிறது. குறிப்பாக, செய்யார் கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும்

[1997 ஏப்ரல் 9

ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. ஆகவே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு என்று திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒன்றியத்தில் 1,80,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், அங்கு 1,90,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிரூட்டு நிலையம் உள்ளது. அதேபோன்று, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே 80,000 லிட்டர் பால்தான் வருகிறது. இருந்தாலும் மொத்தக் கொள்ளளவு 3,40,000 லிட்டர் திறன் கொண்டிருந்தாலும், இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, 2,38,000 லிட்டர் பால்தான் வருகிறது. ஆகவே, புதிய ஒன்றியத்தை உருவாக்கினால், நிர்வாகச் செலவு ஏற்பட்டு, அதனுடைய இணையத்திற்கு நட்டம் ஏற்படும். ஆகவே, புதிய ஒன்றியம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 492, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர்.

**492—**

**கணக்குச் சீட்டை முறையாக வழங்குதல்**

***1941—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிராவிடண்ட் ஃபண்ட் அலுவலகம் அதன் உறுப்பினர்களான தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வழங்குகிற கணக்குச் சீட்டை முறையாக வழங்குவதில்லை என்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர்நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 9]

(அ) பிராவிடண்ட் ஃபண்ட் அலுவலகம் அதன் உறுப்பினர்களான தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வழங்குகிற கணக்குச் சீட்டை முறையாக வழங்குவதில்லை என்று அரசுக்குப் புகார் எதுவும் வரவில்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் வராததினாலே அந்தப் பிரச்சினை நடைபெறவில்லை என்பது இல்லை. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களுடைய இறுதி நம்பிக்கையான வைப்பு நிதியை முதலாளிகள் கட்டுவதே இல்லை. தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணத்தையும் கட்டுவதில்லை. அதே அளவுக்கு நிர்வாகம் செலுத்த வேண்டிய பணத்தையும் கட்டுவதில்லை. இது ஒரு மோசடி ஆகும். இத்தகைய மோசடியைச் செய்திருக்கிற நபர்கள் எவ்வளவு பேர் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது? தொழிலாளர்களும், நிர்வாகமும் கட்டாமல் வைத்து இருக்கிற வைப்பு நிதியினுடைய மொத்தத் தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் சில ஷரத்துகளை மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. தொழிலாளர்களுக்கு அக்கவுண்ட் கொடுத்தாக வேண்டும்; அக்கவுண்ட் சீட்டு கொடுத்து ஆகவேண்டும்; பாஸ் புக் கொடுத்தாக வேண்டும். அதைப்போலவே, எம்ப்ளாயர் கான்ட்ரிபியூஷன் கார்டு தயார் செய்து கமிஷனருக்கு அனுப்ப வேண்டும். இவைகளை மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அரசுக்கு புகார் ஏதுவும் குறிப்பிட்டு வருமேயானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு என்று ஒரு பட்டியல் கேட்டார். 1995-96-க்கு 32 லட்சத்து 9 ஆயிரம் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட வேண்டும். ஆனால், இவற்றில் 19 லட்சத்து 7 ஆயிரம் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. மீதி 13 லட்சத்து 2 ஆயிரம் கணக்குச் சீட்டுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைப்பு நிதியில் திருமணக் கடன், மேல் படிப்பு, மருத்துவச் சிகிச்சை போன்ற கடன்களுக்கு விண்ணப்பித்தால், அது குறித்த நேரத்தில்

வருவதில்லை. உதாரணத்திற்கு, திருமணம் நடைபெறுவதற்கு முன்பாக, 2 மாதங்களுக்கு முன்பாக விண்ணப்பித்தால்கூட, 2 மாதங்கள் கழித்துத்தான் கொடுக்கப்படும் என்ற ஒரு நிலை இருக்கிறது. உடனடியாக அதைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சுட்டிக்காட்டுகிற காலதாமதம் தவிர்க்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், பிரச்சினை என்ன என்று கேட்டால், செலுத்தவேண்டிய மொத்தத் தொகைக்கும், தொழிலாளர்களுடைய கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய தொகைக்கும் இடையே வித்தியாசம் ஏற்படுகிறபோது, அது குறித்து விளக்கம் கேட்க வேண்டியிருக்கிறது. ஆண்டு இறுதியிலே அனுப்ப வேண்டிய படிவங்களை நிர்வாகம் அனுப்பாமல் இருக்கிறது. தொழிலாளர்களுடைய வருங்கால வைப்பு நிதியை வருங்கால வைப்பு நிதி அலுவகத்திலே நிர்வாகத்தினர் உரிய காலத்திலே அனுப்பாமல் இருக்கிறார்கள். இதனால்தான் இந்தச் சிக்கல். இருந்தாலும், தாமதத்தைக் களைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்தியாவிலே மிகப் பிரசித்தி பெற்ற மில் மேட்டூர் டெக்ஸ்டைல் மில் என்பது நாடறிந்த உண்மை. அந்த மில் மூடப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக தொழிலாளர்கள் அவதிப்படுகின்ற நேரத்திலே, குடும்பத்தை நடத்துவதற்கு வழி இல்லை; அதனால் பிராவிடண்ட் ஃபண்டை திரும்பத் தர வேண்டும் என்று தொழிலாளர்கள் முன்வந்து கோரிய நேரத்திலே, கடந்த ஆட்சியாளர்கள் நிர்வாகத்துக்குத் துணை போய், தொழிலாளர்களுக்கு பல்வேறு தொல்லைகளைக் கொடுத்ததோடு, மில் திறக்கப்பட வேண்டும் என்று சாத்வீக முறையிலே போராடிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பிராவிடண்ட் ஃபண்டுக்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அண்ணா தி.மு.க. தவிர, அனைத்துக் கட்சி தொழிற்சங்கங்களின் மீது பொய் வழக்கு போட்டு, இன்றும் வழக்கு மன்றத்திற்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர் பிரச்சினையிலே அக்கறை கொண்ட நம்முடைய அரசு அவர்களுக்கு பிராவிடண்ட் ஃபண்ட் தொகையை வழங்குவதோடு, இந்த வழக்குகள்



எல்லாம் திரும்பப் பெறப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராவிடண்ட் ஃபண்ட் கொடுக்கப்படவில்லை என்பது சம்பந்தமாக டிஸ்பியூட் எதுவும் இருக்குமானால், அதுகுறித்து துறை ஆராயும். வழக்குகள் குறித்தும் அரசு பரிசீலித்து, அவைகள் திரும்பப் பெறக்கூடிய வழக்குகள்தானா, இல்லையா என்பதைப் பற்றியும் ஆராயும்.

*முற்பகல் 10.30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களிடத்திலிருந்து வைப்பு நிதிக்காகப் பிடித்தம் செய்யப்பட்டு, வைப்பு நிதி அலுவலகத்தில் செலுத்தாமல் உள்ள தொகை எவ்வளவு? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *493*, திரு. கே. வேணு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**493—**

### தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்

***6325—திரு. கே. வேணு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி, எல்லாபுரம், சோழவரம், பூண்டி முதலான ஒன்றியத் தலைநகர்களில் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 9

(அ) மற்றும் (ஆ) : ஏற்கெனவே கும்மிடிப்பூண்டியில் பாலாஜி தொழிற் பயிற்சி நிலையமும், பூண்டி ஊராட்சி ஒன்றியம் பாலவாக்கத்தில் ஸ்ரீ பெருமாள் தொழிற் பயிற்சி நிலையமும் உள்ளன. 19-9-1996-ஆம் நாளிட்ட அரசாணையின்படி, முதற்கட்டமாகத் தற்போது தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லாத 124 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வரவேற்கப்பட்ட விண்ணப்பங்களில், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஐந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் மூன்று விண்ணப்பங்கள், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு, ஆகஸ்ட் 1997 முதல் தொழிற் பயிற்சி நிலையம் துவக்க தற்காலிகமாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய, எல்லாபுரம் ஒன்றியத்தில், 1998-ல் இரண்டாவது கட்டமாகத் துவங்க விளம்பரம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 494 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 495, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**495—**

**சௌராட்டிரா சமுதாயத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்**

***2824—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சௌராட்டிரா சமுதாயத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சௌராட்டிரா சமூகத்தை மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அவ்வாணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றபின், அரசு அதனை பரிசீலனை செய்து ஆவன செய்யும்.



1997 ஏப்ரல் 9]

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சௌராட்டிரா சமுதாயத்தைப் பொறுத்தவரையில் எண்ணிக்கையில் இவர்கள் மிகவும் குறைந்தவர்கள். மதுரையிலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தொகுதியான கும்பகோணத்திலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தொகுதியான சேலத்திலும், பரமக்குடி போன்ற இப்படிப்பட்ட ஒரு சில நகரங்களிலும் மாத்திரம்தான் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமும் இவர்கள் சம்பந்தமான கோரிக்கைகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன என்று அறிகிறேன். ஆகவே, எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற இவர்கள், கல்வியாலும், பொருளாதாரத்தாலும், சமூகத்தாலும் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பதோடு, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவு கூட இல்லாமல் அலைந்து கொண்டு இருக்கக்கூடியவர்களான இந்தச் சமுதாய மக்களை, மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க உடனடியாக நடவடிக்கை எடுத்து, மிகவும் பின்தங்கியோர் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சௌராட்டிரா வகுப்பினரின் வேண்டுகோளை ஏற்று, அவர்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதாரத் தன்மைகளைக் கண்டறிவதற்காக, தற்சமயம் தமிழ்நாடு பிற்பட்டோர் நல ஆணையம் பரிசீலித்து வருகிறது. ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப் பெற்ற பின்னர், அரசு அதனை பரிசீலனை செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 496, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**496—**

**அம்பத்தூரில் கால்நடை மருத்துவமனை**

***3499—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அம்பத்தூரில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

[1997 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 497, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**497—**

**கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் அமைத்தல்**

***4822—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை தொகுதியை மையப்படுத்தி கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் கால்நடைகள் என்பது சிறப்புப் பெற்றவை. தற்போது அங்கே கோழி வளர்ப்பும் பிரதானத் தொழிலாக முன்னேறியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, அங்கே கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்காவிட்டாலும்கூட, கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றையாவது துவக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலும் நாமக்கல்லிலும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இந்த இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் முறையே, 146 மற்றும் 80, ஆக



1997 ஏப்ரல் 9]

மொத்தம் 226 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்படுகிறார்கள். தற்போது 600-க்கும் மேற்பட்ட கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கவேண்டுமானால், 500-லிருந்து 1000 ஏக்கர் நிலமும், மூலதனச் செலவு ரூபாய் 50 கோடியும் செலவாகும். எனவே, பெரியார் மாவட்டம், பெருந்துறை தொகுதியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் ஏதும் இப்போது அரசிடம் இல்லை.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 498, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**498—**

**கோவில் நிலங்களை குத்தகைக்கு விடுதல்**

*** 1958—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில் நிலங்களை அதில் நேரிடையாகவே உழைப்பவர்களுக்கே குத்தகைக்கு விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பெரும்பாலான குத்தகைதாரர்கள் பதிவு உரிமம் பெற்று, திருக்கோயில் நிலங்களைத் தொடர்ந்து சாகுபடி செய்து வருகின்றனர். குத்தகைதாரர் பதிவு உரிமம் பெறாத திருக்கோயில்களின் இதர நிலங்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைச் சட்டம் பிரிவு 116 (2) (13)-ன்கீழ், ஆண்டிற்கு ஒரு முறையோ, மூன்று

ஆண்டுகளுக்கு ஒரு முறையோ பொது ஏலத்தின் மூலமாகக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றது. இவ்வாறு திருக்கோயில் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருவதால், கோயில் நிலங்களை அதில் நேரிடையாக உழைப்பவர்களுக்கே குத்தகைக்கு விடுதல் என்ற நிலை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, வியாபாரத் தொழிலிலேதான் இடைத்தரகர்கள் இருப்பார்கள். ஆனால், இன்றைக்கு இந்தக் கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுக்கின்ற முறைகளிலேயும் இடைத்தரகர்கள்போல வந்துவிட்டார்கள். அதாவது, சிலபேர்கள் குத்தகைக்கு எடுத்ததை மறு குத்தகைக்கு விடுகின்ற ஒரு முறை இருக்கிறது. ஏற்கெனவெ பழைய 'சொசைட்டி' முறை இருந்தபோது அப்படித்தான் அதைச் செய்து வந்தார்கள். இன்றைக்கும் சில இடங்களிலே அத்தகைய 'சொசைட்டி' முறைப்படி இருக்கின்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, மறு குத்தகை விட்டு அதிலே சிலபேர் இலாபம் அடைந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்தப் பொது ஏலம் விடுகின்ற முறையிலேகூட சில இடங்களிலே முறைகேடு நடைபெறுகிறது. பல ஆண்டு காலமாக அந்த நிலங்களை குத்தகைக்குப் பயிரிட்டு வந்தவர்களை அப்புறப்படுத்திவிடுகிறார்கள். புதிதாக அரசியல் தலையீடு அல்லது சில காரணங்களினாலே அப்படிப்பட்ட தலையீடுகள் இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் களைய அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 36,253 திருக்கோயில்கள் உள்ளன. அவைகளில் 34,054 கோயில்களுக்கு 4.991 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலங்களின் மொத்த குத்தகைதாரர்கள் 1,06,807 பேர்கள். குத்தகைதாரர்களாகப் பதிவு உரிமம் பெற்றவர்களும், ஒன்று அல்லது மூன்று ஆண்டுகளுக்கென்று பதிவு ஏலத்தில் எடுத்து சாகுபடி செய்பவர்களும் நீண்ட காலமாக நிலக் குத்தகை எடுத்து பாக்கி வைத்திருக்கும் தொகை ரூபாய் 58 கோடியே 78 இலட்சத்து 99 ஆயிரம். 1406-ஆம் பசலி, அதாவது 1-7-1996-லிருந்து 30-6-1997 ஆம்



ஆண்டு வரை கேட்புத் தொகை ரூபாய் 10 கோடியே 88 இலட்சத்து 69 ஆயிரம். 28-2-1997 முடிய வசூலான தொகை — பழைய பாக்கியாக ரூபாய் 2 கோடியே 32 இலட்சத்து 34 ஆயிரம்; நடப்பு ஆண்டிற்காக ரூபாய் 2 கோடியே 82 இலட்சத்து 74 ஆயிரம் — இதுவரையிலும் மொத்த நிலுவைத் தொகை 64 கோடி ரூபாய். ஒவ்வோராண்டும் 30 அல்லது 40 விழுக்காடுகள்தான் வசூலாகின்றன. ஆலய ஊழியர்கள் சுமார் 50,000 பேர்கள் பணி புரிகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், கோயில்களில் எண்ணெய் ஊற்றி விளக்கு எரிக்கவும், தின பூசை நடத்தவும், கோயில்களுக்கு உண்டான முக்கிய விழாக்கள் நடத்தவும் ஆண்டுக்கு ஆண்டு குத்தகை பாக்கி நிலுவையில் இருப்பதால், இயலாத நிலை இருக்கிறது. இந்த நிலையில், நீண்டகாலமாக குத்தகைப்பதிவு உரிமம் பெற்றவர்களில், உண்மையிலேயே நிலமற்ற ஏழைகளும் இருக்கிறார்கள் ; பெரும் நிலக்கிழார்களும் இருக்கிறார்கள். ஏழை குத்தகைதாரர்களின் நிலங்களை வசதி வாய்ப்புள்ளவர்கள் பணம் கொடுத்தும் இன்னபிற செல்வாக்கினாலும் தாங்கள் உள்குத்தகை கொடுத்து பினாமியாக அனுபவித்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது. அப்படிக் கண்டறியப்படும் நிலங்கள் பொது ஏலத்தின் மூலம்தான் குத்தகைக்கு விடப்படும். உள்குத்தகை எடுத்தவருக்கோ அல்லது நிலத்தில் நேரடியாக உழைப்பவருக்கோ குத்தகை விடப்பட்டால் மேலும் பல சிக்கல்கள் உருவாகும் சூழ்நிலை ஏற்படும். இப்போது நீண்டகாலமாக குத்தகை உரிமம் பெற்றுச் சாகுபடி செய்பவர்கள் முறையாக குத்தகை பாக்கி செலுத்தவில்லை. இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால், ஆலய நிர்வாகங்களைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே, கோயில் நிலங்களை, குத்தகைதாரர்களாகப் பதிவு செய்தவர்களில் உண்மையான சாகுபடியாளர்கள் மட்டும், பொது ஏலங்களில் குத்தகை எடுத்தவர்கள் தவிர, மற்றவர்களுக்குக் குத்தகை விடுவதற்குச் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 499, திரு. உ. திசைவீரன் மற்றும் திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 9

**499—**

**மாணவ, மாணவிகளுக்கு பராமரிப்புத் தொகையை அதிகரித்தல்**

*** 2116—திரு. உ. திசைவீரன் :**

*திருமதி ஆர். சரஸ்வதி :*

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில் தங்கிப் படிக்கும், மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் பராமரிப்புத் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. உ. திசைவீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் சென்ற ஆண்டு எழுதிக் கொடுத்தது. அரசு 180 ரூபாய் அனுமதித்திருக்கிறது. அந்த 180 ரூபாய்கூட மாணவ மாணவியர்களுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில்லை. அதற்குக் காரணம், விடுதிக் காப்பாளர்கள். விடுதிக் காப்பாளர்கள் ஒழுங்காகச் செயல்படாததன் காரணத்தினாலேயே மாணவர்களுக்கு ஒழுங்காகச் சாப்பாடு மற்றும் காய்கறிகள் கிடைப்பதில்லை. எனவே, ஒவ்வொரு விடுதியிலும் அரசின் சார்பாக என்னென்ன உணவு முறைகள் வழங்கப்படுகின்றன என்பதையும், மற்ற பிற சலுகைகள் என்னென்ன வழங்கப்படுகின்றன என்பதையும் ஒரு விளம்பரப் பலகையின் மூலமாக எழுதி வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 138 ரூபாய் 75 பைசா உணவுக் கட்டணமாக வழங்கப்பட்டு வந்தது. நமது கழக அரசு பொறுப்பேற்றவுடன் ரூ.138.75-லிருந்து ரூ.180/- ஆக உயர்த்திக் கொடுத்துள்ளது. மாணவர்களுடைய உணவினுடைய தரத்தை உயர்த்துவதற்காகத்தான் உணவுக் கட்டணம் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சில வார்டன்கள் தவறு செய்வதாகவும், மாணவர்களுக்கு ஒழுங்காக போய்ச்சேரவில்லை என்றும்



1997 ஏப்ரல் 9]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கண்காணிப்பதற்காக தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வார்டன்களைப் பொறுத்தவரையில் யார் தவறு செய்தாலும் அதை உடனடியாகக் கண்டித்து அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மாணவர்களுக்கு வேண்டிய உணவைத் தரமாகக் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே இருந்த கடந்த அரசை விட இந்த அரசு பராமரிப்புக்காக கூடுதலாகப் பணம் ஒதுக்கித் தந்திருக்கிறது என்ற விவரத்தையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி ஆர். சரஸ்வதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கவிருந்த கேள்விகளுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்ட காரணத்தால் துணைக் கேள்வி எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 500, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**500—**

**தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோவிலைச் சுற்றுலா மையமாக்குதல்**

*** 2897—திருமதி ஏ.ஆர். வேடம்மாள் :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் பகுதியிலுள்ள தீர்த்தமலை, தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோவிலைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ.4.00 இலட்சம் செலவில் தீர்த்தமலையில் தங்கும் விடுதி கட்டப்பட்டு, தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ரூ.2.00 இலட்சம் செலவில் தீர்த்தமலையில் உடை மாற்றும் அறை, ஓய்வுக்கூடம் மற்றும் உணவு விடுதி முதலியன கட்டப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 9

**திருமதி ஏ. ஆர். வேடம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் விடுதியை சுற்றுலாத் துறை மூலம் நடத்த அரசு முன்வருமா ? மேலும் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால் இந்த விடுதியில் இன்னும் கூடுதலாக அறைகள் கட்டித்தரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் **உடுக்குறி** (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. கவன ஈர்ப்பு

### (அ) கரப்பூண்டி, தரணி சர்க்கரை ஆலையின் தற்போதைய நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. பேரவை விதி 55-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம் மற்றும் ஏ. ராசேந்திரன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஆளுக்கு இரண்டு நிமிடங்கள்தான் பேச வேண்டும். இதுபற்றி பலதடவை பேசியாகிவிட்டது. ஆகவே, இரண்டு நிமிடங்கள்தான் கொடுப்பேன். இல்லையென்றால் நீங்கள் வெறும் தீர்மானத்தைத்தான் படிக்க விடுவேன். திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கரப்பூண்டியில் உள்ள தரணி சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு கரும்புக்கான பணம்



1997 ஏப்ரல் 9] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

தராமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்-போளூர் பகுதியில் உள்ள கரப்பூண்டி கிராமத்தில் அமைந்துள்ள தரணி சர்க்கரை ஆலை, 1995-96-ஆம் ஆண்டு, நாளொன்றுக்கு 2,500 டன்கள் கரும்பு அரவைத் திறனுடன் அமைக்கப்பட்ட புதிய சர்க்கரை ஆலை ஆகும். இப்புதிய ஆலைக்குத் தேவையான கரும்பு பயிரிடும் பரப்பளவு சுமார் 15,000 ஏக்கர் ஆகும். ஆண்டொன்றுக்கு, இவ்வாலைக்கு மொத்தம் 4,30,000 டன்கள் கரும்பு அரவைக்குத் தேவைப்படுகிறது. இவ்வாலை 1995-96-ஆம் ஆண்டிலேயே தனது அரவையைத் துவங்க எதிர்பார்த்து, அப்பகுதியில் விவசாயிகளிடம் கரும்பு பதிவு செய்திருந்தது. எனினும், இவ்வாலை அமைப்பதற்கான இயந்திரத் தளவாடங்கள் பெறுவதிலும் அதனைப் பொருத்துவதிலும் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் காரணமாக கடந்த 1995-96-ஆம் ஆண்டு சுமார் 14,200 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டிருந்தாலும், முதல் அரவைப்பணி துவங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு, 14-7-1996 அன்றுதான், தனது முதல் கரும்பு அரவைப் பணியினைத் துவக்கி 28-12-1996 வரை அரைவை செய்தது.

இவ்வாலை கடந்த 1995-96-ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு விவசாயிகளுக்குக் கரும்பு நிலுவைத் தொகையாக ரூ.398 இலட்சம் பாக்கி வைத்திருப்பதாக அறிவித்தது. (மைய அரசு விலை பாக்கி ரூ.65 இலட்சம் (+) மாநில அரசு விலை (-) மைய அரசு விலை வித்தியாசம் ரூ.333.00 இலட்சம் = ரூ.398.00 இலட்சம்)

இந்த நிலுவைத் தொகையினை முழுமையாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்க கரும்புக் கட்டுப்பாடு ஆணை 1966-ன் விதிகளின் படியும், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் படியும், இவ்வாலை மீது நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டது. 1996-97-ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு தரணி சர்க்கரை ஆலை மொத்தம் 13,000 ஏக்கர் கரும்பு பதிவு செய்து, அதிலிருந்து சுமார் 3.90 இலட்சம் டன்கள் கரும்பு

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1997 ஏப்ரல் 9

மகசூல் கிடைக்கும் என தனது அரவைக்கு திட்டமிட்டு இருந்தது. இந்நிலையில் சென்ற ஆண்டிற்கான கரும்பு விலை பாக்கித் தொகை முழுவதும் வழங்காததினால் விவசாயிகளிடையே ஏற்பட்ட அதிருப்தி காரணமாக 28-12-96 அன்று கரும்பு அரவைப் பணி நிறுத்தப்பட்டது.

கடந்த 8-1-1997 அன்று அரசு செய்திக் குறிப்பின்படி கரும்பு பாக்கித் தொகையை முழுவதுமாக விவசாயிகளுக்குக் கொடுத்து முடிக்காத ஆலைகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவ்வாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் ரத்து செய்யப்படும் என்றும் எச்சரித்திருந்ததன் காரணமாக, தரணி சர்க்கரை ஆலை 1995-96 ஆம் ஆண்டிற்கு வைத்திருந்த கரும்பு விலை பாக்கியினை 4-3-1997 மற்றும் 5-3-1997 ஆம் தேதிகளில் நிலுவை ஏதுமின்றி விவசாயிகளுக்கு வழங்கிவிட்டது. எனினும், இக்கரும்புத் தொகை முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டாகிவிட்டதா என அறியும் பொருட்டு 7-3-1997 அன்று ஒரு குழுவினை அனுப்பி, கரும்புத் தொகை பட்டுவாடா கணக்குகள், போளூர் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட தேசிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கரும்புத் தொகையாக வழங்கிய கணக்கு சரிபார்க்கப்பட்டு 1995-96 ஆம் ஆண்டிற்கான கரும்புத் தொகை முழுவதுமாக கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்ட விவரம் தெரியவந்துள்ளது :

| கரும்பின்விலை | மைய அரசு விலை பாக்கி | மாநில அரசு விலை (—) மைய அரசு விலை பாக்கி | மொத்த பாக்கி |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கொடுக்க வேண்டியது | 1472.15 | 467.35 | 1939.50 |
| கொடுத்தது | 1472.15 | 467.35 | 1939.50 |
| பாக்கி | இல்லை | இல்லை | இல்லை |

தரணி ஆலைப்பகுதி விவசாயிகளுக்கு 1995-96 ஆம் ஆண்டிற்கான கரும்புத் தொகை முழுவதும் வழங்கப்பட்டுவிட்டதனால், கரும்பு விவசாயிகள், தரணி ஆலைக்கு 6-3-1997-லிருந்து மீண்டும் கரும்பு சப்ளை செய்து வருகின்றனர். இதன்னால் தரணி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவைப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே இப்பகுதியில் தற்போது விவசாயிகளிடையே சுமுக நிலை ஏற்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 9]

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அறிக்கையைப் படித்தேன். ஏற்கெனவே 14-7-1996-ல் ஆலை தொடங்கப்பட்டு 28-12-1996 வரை அந்த ஆலை கரும்பை அரவை செய்திருக்கிறது. அப்போது நாங்கள் அங்கே ஒரு பஞ்சாயத்தில் கலந்துகொண்டபோது 8 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று நிர்வாகம் சொன்னது. ஆனால் இந்த அறிக்கையில் சுமார் 4 கோடி ரூபாய்தான் பாக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தமும் வழங்கப்பட்டு விட்டதாகவும் அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். வழங்கப்பட்டிருந்தால் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் கரும்புப் பணம் வழங்குகிறபோது (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து விட்டு, பணம் பூராவும் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடாது. உண்டா, இல்லையா என்றுதான் நீங்கள் கேட்க வேண்டும். அதுக்கூடத்தெரியாமல் ஏன் தீர்மானம் கொடுக்கிறீர்கள் ?

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** கொடுத்துவிட்டதாக அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பணம் பூராவும் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அது சரியா ?

**திரு.பெ. சு. திருவேங்கடம் :** அதை கேட்டுத்தான் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாரிடம் கேட்கப் போகிறீர்கள் ?

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** அமைச்சரிடம்தான் கேட்கப் போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் அறிக்கையாக வைத்திருக்கிறார்களே ?

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** அதிலே இருக்கிற சந்தேகத்தைத்தான் இப்போது சொல்கிறோம். வேறு ஒன்றுமில்லை. அறிக்கையிலே கொடுத்து இருக்கிறார்கள். எங்களுக்கு நிர்வாகத்தினர் பாக்கி 8 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். இந்த அறிக்கையில் 4 கோடி ரூபாய் என்று இருக்கிறது. அதனால்தான் இந்த சந்தேகத்தைக் கேட்கிறோம். வேறு ஒன்றுமில்லை. அதேநேரத்தில் எல்லாப் பணமும் கொடுத்து விட்டோம்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1997 ஏப்ரல் 9

என்று இப்போது அறிக்கையில் வந்திருக்கிறது. ஆனால் எங்களுக்குத் தெரிந்தவரையில் விவசாயிகள் மத்தியில் மாநில அரசு அறிவித்த தொகை வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதனால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையெடுத்து விவசாயிகளுக்கு பாக்கி இருக்குமானால் அந்தத் தொகை கிடைக்கவும், அதைப்போல விவசாயிகளுடைய பணம் காலத்தில் மொத்தமாகக் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. ராசேந்திரன், இரண்டு பேரும் சொன்னதற்குப் பிறகு இருவருக்குமே சேர்த்து அமைச்சர் பதில் சொல்லிவிடலாம்.

**திரு. ஏ. ராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கொடுத்தாகி விட்டது என்று குறிப்பிலே இருக்கிறது. அதேபோல இப்போது அரவை ஆரம்பித்த கரும்புக்கெல்லாம்கூட 2 மாதங்கள், 1 மாதம் பொறுத்துத்தான் பணத்தைத் தருகிறார்கள். விவசாயிகள் கடனை வாங்கிவிட்டு, 20, 22 மாதங்கள் பொறுத்து பணத்தை வங்கியில் தந்தால் அபராத வட்டி அவர்களுக்கு விதிக்கப்படுகிறது. இந்த அபராத வட்டியைத் தரவேண்டுமென்ற காரணத்தால் போளூர் பகுதியில் இருக்கிற மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இனி வருங்காலத்தில் உடனுக்குடன் பணம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1995-96-வது ஆண்டுக்கான, விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு பணம் கொடுக்காமல் அவர்கள் காலம் கடத்திவிட்டது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தது. அவர்களை எல்லாம் அழைத்து—அந்த ஆலை நிர்வாகத்தை அழைத்து — உடனடியாக விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் உரிய காலத்தில் அவர்களுக்கு வழங்கவில்லையென்ற காரணத்தால் கரும்புக் கட்டுப்பாடு ஆணை, 1966-ன் விதிகளின்படியும், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன் படியும் இவ்வாலை மீது நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டது. அதற்குப் பின்னால் இப்போது, 4-3-1997, 5-3-1997-ல் 1995-96-வது ஆண்டுக்கான கரும்புக்கு, விவசாயிகளுக்குத் தரவேண்டிய அந்தத் தொகை முழுவதையும் வழங்கிய



1997 ஏப்ரல் 9] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பின்னர்தான் ஆலையைத் திறப்பதற்கு விவசாயிகள் இசைவு தந்தார்கள். அதுவரை ஆலை மூடப்பட்டிருந்தது. ஆகவே அந்தப் பணம் முழுவதையும் கொடுத்துவிட்ட பிறகு, இப்போது அந்த ஆலை அரவையை நடத்திக் கொண்டிருக்கிறது. வேறு ஒன்றும் அரசாங்கத்திற்கு புகார் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) கால்நடை வதை தடுப்புச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாகக் கருதக் கோரல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கொண்டு வருவார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "கால்நடை வதைத் தடுப்புச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக கருத வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

கால்நடை வதைத் தடுப்புச் சங்கங்கள், கூட்டுறவு சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றவைகளாகும். இச்சங்கங்களில் பணிபுரியும் 62 நபர்களும் வெவ்வேறு பணித்தரத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர் (Category). இச்சங்கங்கள் சென்னையைத் தவிர வேலூர், கோவை, சேலம், ஈரோடு, புதுக்கோட்டை மற்றும் தஞ்சை மாவட்டங்களில்தான் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தொகுப்பூதியமே வழங்கப்படுகிறது. அவர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளிலிருந்தே

[திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி] [1997 ஏப்ரல் 9

வழங்கப்படுகிறது. சங்கங்களுக்குப் பிடித்தமானவர்களை அவர்களாகவே பணியமர்த்துகின்றனர். பணியமர்த்தல் குறித்து பெற்றிருக்கவேண்டிய கல்வித்தகுதி, வயது ஆகியவை பற்றி எந்தவித விதிகளும் கிடையாது.

2. மேற்படி சங்கப் பணியாளர்களுக்கான பணியமர்த்தல் விதிகள், பணிவரன்முறைகள் ஆகியவை, அரசு ஊழியர்களுக்கான விதிமுறைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. இச்சங்கங்களில் கீழ்க்கண்ட 11 பணித்தரத்தில் (Category) அலுவலர்கள் உள்ளனர்.

| வரிசை எண். (1) | பதவியின் பெயர். (2) | பதவி எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. | செயல்முறை செயலாளர் | 1 |
| 2. | கணக்கர் | 1 |
| 3. | எழுத்தர் மற்றும் தட்டச்சர் | 2 |
| 4. | எழுத்தர் | 1 |
| 5. | கால்நடை உதவி மருத்துவர் | 1 |
| 6. | முதன்மை ஆய்வாளர் | 4 |
| 7. | கூடுதல் முதன்மை ஆய்வாளர் | 2 |
| 8. | ஆய்வாளர் | 41 |
| 9. | உதவி ஆய்வாளர் | 5 |
| 10. | ஓட்டுநர் | 1 |
| 11. | அட்டெண்டர் | 3 |
| | மொத்தம் | *62 |

* இவர்களை அரசு ஊழியர்களாக்கினால், அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படவேண்டும்.



1997 ஏப்ரல் 9] [திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி]

(1) தற்பொழுது எந்த மாநிலத்திலும் இத்தகைய பணியாளர்கள், அரசு அலுவலர்களாக அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. குறிப்பிட்டுள்ள 62 நபர்களை அரசு அலுவலர்களாக அங்கீகாரம் அளித்தால் பணி அடிப்படையில் கீழ்க்கண்ட சங்கடங்கள் எழும் :

(2) அவர்களை எந்த பணிப்பதவியில் அமர்த்துவது. அவர்கள் கல்வித்தகுதி, வயது வரம்பு முதலிய தகுதிகள் அடிப்படையில் பணி அமர்த்தப்படாததால், அவர்களை இணையான அரசுப் பதவிகளில் பணி அமர்த்துவது இயலாத காரியமாகும்.

(3) அரசு அலுவலர்களாக அங்கீகாரம் அளித்தால் அரசு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.27,50,000/- சம்பளமாக, கூடுதல் செலவினமாக ஏற்க வேண்டிவரும் (இதர சலுகைகள் தவிர்த்து).

(4) இதுவரை எந்த மாநிலமும், இவர்களை அரசு அலுவலர்களாக அங்கீகாரம் அளிக்காததாலும், கூடுதல் செலவினத்தைக் கருத்தில் கொண்டும், மற்றும் பணியமர்த்தலில் ஏற்படும் சிக்கல்களை கருத்தில் கொண்டும் இவர்களை அரசு அலுவலர்களாக அங்கீகாரம் அளிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

(5) அரசு இப்பொழுதும், இத்தகைய சங்கங்களுக்கு மான்யம் வழங்கி வருகிறது. அரசாணை எண் (டி) 30, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 29-1-97-ல் சென்னையில் உள்ள சங்கத்திற்கு சங்கப் பணிகளுக்காக ரூ.2 இலட்சம் 1996-97-க்கான மான்யமாக வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. ஆகவே இம்மாதிரி சங்கங்களுக்கு மான்யம் வழங்குவதை தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற பதிலில், இதிலே பணிபுரியக்கூடிய 62 பேர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இது தனிச் சங்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்லியும் இவர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 27,50,000 ரூபாய் அரசுக்கு செலவழியும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலேயும் இதுபோன்ற கால்நடையை வதை செய்கின்ற தடுப்பு ஊழியர்கள் இல்லை. தமிழ்நாட்டிலே மட்டும்தான் இருப்பதாகச்

[திரு. ஜி. பழனிசாமி] [1997 ஏப்ரல் 9

சொல்கிறார்கள். ஆரம்பத்திலே 100-க்கும் மேற்பட்டவர்கள் இதில் பணிபுரிந்து, படிப்படியாக இன்றைக்கு 62 பேர்களாகக் குறைந்திருக்கிறார்கள். காவல் துறையில் இருக்கிற அதிகாரங்கள் இவர்களுக்கு இருக்கின்றன. பிராணிகளை வதை செய்யக்கூடியவர்களை தண்டிக்கின்ற வகையில், காவல்துறை முதலில் போடக்கூடிய எப்.ஐ.ஆர்கள், கேஸ்கள் எப்படி போடுகிறார்களோ அதைப்போல் அத்தனை அதிகாரமும் இவர்களுக்கும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள்.

இவர்களுக்கு கல்வித் தகுதி போதுமானது அல்ல; விருப்பத்தின் பேரிலே இவர்கள் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் கல்லூரியில் படித்த பெரும்பாலோர் அங்கே ஊழியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வருவது என்பது, இந்தச் சங்கத்தின் மூலமாக பணிபுரியக்கூடியவர்கள் 62 பேர்களாக இருந்தாலும், தமிழ்நாட்டில் இதற்காக இருக்கக்கூடிய சொத்து என்பது 60 கோடி ரூபாயாகவும், சென்னை மற்றும் பிற நகரங்களில் 40 கோடி ரூபாய்க்கும் சொத்து இருக்கிறது. அரசுக்கு எந்தவொரு இழப்பும் வருவதற்கு வாய்ப்பே கிடையாது. தனியாக ஒரு சொசைட்டி என்ற அடிப்படையில் கோர்ட்டிலே கொண்டு போய் பிராணிகளை வதை செய்கின்றவர்களை தண்டிக்கின்ற ஊழியர்களாக இன்றையதினம் பணிபுரிகின்ற காரணத்தால் இந்த 60 கோடி ரூபாய் சொத்தையும் தனியாக ஒரு டிரஸ்ட் என்று வைத்துக்கொண்டு யார் யாரோ அரசாங்கத்தினுடைய சொத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் அரசு இரண்டு இலட்சம் ரூபாயை இவர்களுக்கு மானியமாக வழங்குகிறது. இரண்டு லட்ச ரூபாயை மானியமாக வழங்கக்கூடிய நமது அரசு ஏன் இதைக் கண்காணிக்கக்கூடாது? இந்த 62 பேர்களையும் அரசு ஊழியர்களாக எடுத்து, கால்நடைத்துறை இல்லை என்றால், மீன்வளத்துறையிலேயாவது அவர்களை இணைத்து, அந்தச் சொத்துக்களையும் பாதுகாத்தால், அரசுக்கு எந்த ஒரு பைசாவும் நஷ்டம் வராது; லாபம் வரும்; மோசடியிலிருந்து அந்தச் சொத்துக்களை பாதுகாக்க முடியும். எனவே அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 9]

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிராணி வதை தடுப்புச் சங்கங்கள் கேரள மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் இருக்கின்றன. அங்கும் இதுபோல அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கொடுக்கப்படாமல் மானியமாக தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, தனியாக பல்வேறு தொண்டு நிறுவனங்கள் இப்போது அந்தப் பணியை ஆற்றிக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அவர்களிடமிருக்கும் மிகப் பெரிய சொத்துக்களை கையகப்படுத்த வருங்காலத்திலே அரசு முயற்சி எடுக்கும். அந்தச் சமயத்தில் இவர்களையும் சேர்த்து எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் சார்பாக 11 மற்றும் 12-வது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித்தொழிலும்

(ஆ) கோரிக்கை எண் 52 - சுற்றுச்சூழல்

(இ) கோரிக்கை எண் 26 - கதர், கிராமத் தொழில்கள்

(ஈ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் அச்சுத் துறை

**(அ) கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *1997-98 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 138,26,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2293, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை உடனே திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித்தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 138,26,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2300, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் துணிகள் விற்பனையில் மானியம் வழங்கும் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 138,26,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2298, திரு. கே. சுப்பராயன்.



*** திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி விற்பனைக்கு வழங்கி வந்த மானியத்திற்கு நிர்ணயித்துள்ள உச்சவரம்பை நீக்கவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 138,26,34,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2282, திரு. நா. பெரியசாமி.

*** திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்ப கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு தள்ளுபடி மானியம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 138,26,34,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2281, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளுவர் மாவட்டம், செந்துரை ஒன்றியம் பொன்பரப்பி கிராமத்துக்கு விசைத்தறி பணி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 138,26,34,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2292, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதியில் இடங்கரை சாலை, இடைப்பாடி நகரம் ஆகிய பகுதிகளில் உள்ள நெசாவாளர்களுக்கு

[திரு. இ. கணேசன்] [1997 ஏப்ரல் 9

மானிய விலையில் போதிய நூல் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.138,26,34,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2303, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் மானிய விலையில் நூல் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.138,26,34,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2307, திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.138,26,34,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1895, திரு. பி. வெங்கடசாமி.

" **Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, `To discuss the need to start an export centre to export Handloom clothes to other States and foreign countries from Chennimalai and Karur',

I move — ``that the allocation of Rs.138,26,34,000/- under Demand No.25 - Handlooms and Textiles, be reduced by Rs.100/."



1997 ஏப்ரல் 9]

## (ஆ) கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச் சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.11,99,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2747, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர், திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2746, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2739, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2757, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கடலூர் சிப்காட் பகுதியில் சில இரசாயன தொழிற்சாலைக் கழிவுகளால் நிலம், நீர் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு உரிய ஈட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2755, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இடைப்பாடி சுற்று வட்டாரத்தில் ஏராளமாக உள்ள விசைத்தறிகளால் ஏற்படும் மாசு மனித உடல்நிலை பாதிப்பிற்குள்ளாவதால் அதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1534, திரு. ஜி.கே. மணி.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட பாகல அள்ளி ஊராட்சி சபுளூர் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2751, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருந்தகங்களிலிருந்து மற்றும் மருந்தகங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் சுற்றுச் சூழல் கெடாத வண்ணம் அழிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2740, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாகனங்கள் வெளியிடும் மாசுபடிந்த புகையை கட்டுப்படுத்த வாகனங்களை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்பதை கட்டாயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,99,54,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2744, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் சாலை, பள்ளிகள் உள்ள இடங்களில் தெரு ஓரங்கள், கழிப்பிடங்களாக உபயோகப்படுத்தி சுற்றுப்புறங்களை

மாசுபடச் செய்வதிலிருந்து தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.11,99,54,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் மற்றும் சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள@ கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

### (இ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள், மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.12,99,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 169-217-ஆம் பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2324, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் கிடைக்கும் ஜவ்வாது மலை சந்தனத்தைக் கொண்டு சந்தன சோப், சந்தன பவுடர், சந்தன ஊதுவத்தி, சந்தன பொம்மைகள் தயாரிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2327, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2322, திரு. கே. சுப்பராயன்.

**திரு. திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2338, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம், பவானிசாகர்-கதர் சாயக் கலவை மற்றும்

அச்சு அலகு முழு உற்பத்தித் திறனையும் கொண்டு இயங்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2335, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதால் அங்கு கதர் கிராமத் தொழில்கள் உருவாக்கி வேலைவாய்ப்பளிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2318, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம இடைப்பாடி ஒன்றியத்தில் விவசாயம் பொய்த்துவிட்ட காரணத்தினால் அங்கு கதர் கிராமத் தொழில்கள் தொடங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2339, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,99,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 43, எழுதுபொருள் அச்சுத் துறை. மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள் அச்சுத் துறை பற்றிய 43-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.49,38,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2663, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் போதுமான அளவு எழுதுபொருள் உபகரணங்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,38,46,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2667, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,38,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2666*, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *49,38,46,000*-ல் ரூ. *100* குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2657*, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *49,38,46,000*-ல் ரூ. *100* குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2654*, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் அரசு அச்சகங்கள் அமைத்து பாடப் புத்தகங்களை அச்சடித்து மாணவ மாணவியருக்கு உரிய காலத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *49,38,46,000*-ல் ரூ. *100* குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2658*, திரு.. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும், தமிழிலும்,



ஆங்கிலத்திலும் தனித் தனியே அச்சிட்டு இரண்டு மொழிகளிலும் அறிக்கைகள் வழங்கி இரட்டிப்புச் செலவு ஏற்படுவதைத் தடுக்க சம்பந்தப்பட்ட நபர் இரண்டு மொழிகளில் எதில் அறிக்கை கேட்கிறாரோ, அதில் வழங்கி செலவை சிக்கனப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *49,38,46,000*-ல் ரூ. *100* குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2660*, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் துறையில் உள்ள பழைய தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்களை உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள் ஆகியோருக்கு இலவசமாகவோ, குறைந்த விலையிலோ கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *49,38,46,000*-ல் ரூ. *100* குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில்கள் மற்றும் எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும், அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள (@) கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப்

@ 217-256-ஆம் பக்கங்களில் இனைப்பு III மற்றும் IVஆக அச்சிடப் பெற்றுள்ளன.

பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. 12-க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். ஆகவே ஆளுக்கு 7 நிமிடத்திற்கு மேல் பேசக் கூடாது என்ற அன்பான வேண்டுகோளை வைத்து, விவாதத்தைத் துவக்குமாறு திரு. பா. வேல்துரை அவர்களை அழைக்கிறேன்.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் கதர்த் துறையினுடைய மானியக் கோரிக்கைகள் மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது கருத்துக்களை நான் இந்தச் சபையில் வைக்கின்றேன்.

தமிழகத்திலே இன்றைக்கு தனியார் நூற்பாலைகள் எல்லாம் சிறந்த லாபத்திலே இயங்கி வருகின்றன. அதே சமயத்தில் தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்தும் நட்டத்தில் இயங்குவது மிகுந்த வேதனைக்குரிய விஷயம். அதுவும் கடந்த காலத்திலே பஞ்சு வியாபாரத்திலே சுமார் 9 கோடி ரூபாய் பாக்கி வைத்திருப்பதாக இன்றைக்கு பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக பஞ்சு வியாபாரத்திலே வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்காத காரணத்தினால் வியாபாரிகள், விவசாயிகளுக்கு அந்தப் பாக்கித் தற்போது தொகையைக் கொடுக்காத நிலைமையில் வியாபாரிகளும், விவசாயிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டு, தெருவிலே நிற்கின்ற மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். நமது ஆட்சி வந்தபிறகும், நமது முதல்வர் அவர்கள் இந்தப் பணம் உடனடியாக வழங்கப்படும் என்று சொல்லியும், கடந்த ஓராண்டுக்காலமாக வழங்கப்படாததன் காரணமாக இன்னமும் விவசாயிகளும், வியாபாரிகளும் மோசமான நிலையிலிருந்து விடுபட முடியாத நிலையில் இருக்கின்றார்கள். எனவே அரசு இதனை கவனத்தில்கொண்டு, இந்த நிலுவைத் தொகையினை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

குறிப்பாக கைத்தறித் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கு எல்லாம் 20 சதவீதம் ரிபேட்டை அரசு கொடுத்து வந்தது. தற்போது இந்த ரிபேட் தொகையைப் பொறுத்தவரையில் 1992-93-லே வழங்கிய ரிபேட் மட்டுமே இப்போது நடக்கின்ற வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்போது நடந்த வியாபாரத்தைவிட இன்றைக்கு 1992-93-க்குப் பின்னால் குறைந்தது மூன்றிலிருந்து ஐந்து மடங்கு அதிகமாக வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது அந்தத் தொகைதான் ரிபேட்டாகக் கொடுக்கப்படும் என்று சொன்னதினால் தற்போது நெசவாளர்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மக்கள் தலைவர் காமராசர் அவர்களால் சுமார் 36 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டு சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால், கடந்த காலத்திலே ஏற்படுத்தப்பட்ட புதிய சட்டத்தின் காரணமாக இப்போது பெருமளவிலே நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். எனவே, 20 சதவிகித ரிபேட்டை உடனடியாக அமலுக்குக் கொண்டு வந்து, அவர்கள் எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்கின்றார்களோ அவ்வளவு தொகைக்கும் அந்த ரிபேட்டை முழுமையாக வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

*முற்பகல் 11-00*

அதேபோன்று, நெசவாளர்களுக்கு 22 ரகம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இப்போது புதியதாக வந்த மத்திய அரசு அதை 11 ரகமாகக் குறைத்துள்ளது. 11 ரகமாகக் குறைத்த 11 ரகத்தையாவது முழுமையாக போதும், அந்த நடைமுறைப்படுத்துகின்றார்களா என்று சொன்னால், அதுவும் இல்லை என்று கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த வருத்தத்தோடு சொல்கின்றார்கள். அதனையும் அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு, அந்த 11 ரகத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதோடு, கடந்த காலத்தில் சொன்ன அந்த 22 ரகத்தையும் அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிட்டா நூல் மீதான வரியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அதேபோன்று, பாவு நூல், சிட்டா நூல் இவைகளெல்லாம் நெசவாளர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நூல் விலையைக்

[திரு. பா. வேல்துரை] [1997 ஏப்ரல் 9

கட்டுப்படுத்தியாக வேண்டும். நூல் விலையேற்றத்தால், நெசவாளர்கள் பெருமளவு பாதிப்பு அடைந்துள்ளனர். நெசவாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஏழை நெசவாளர்கள் மிகுந்த கஷ்டத்திலே இருக்கின்றார்கள். என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலே வீரவநல்லூர், புதுக்குடி, இடைகால், அம்பாசமுத்திரம் தொகுதியைச் சார்ந்த வெள்ளங்குழி போன்ற ஊர்களிலே எல்லாம் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், நெசவாளர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்றால், அவர்கள் அன்றாடம் குடிக்கிற கஞ்சிக்கே மிகவும் கஷ்டப்படுகின்ற அளவுக்கு மிகுந்த இழி நிலையிலே இருக்கின்றார்கள். பலதரப்பட்ட மக்களுக்கும் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றீர்கள். அதுபோல, கண்டிப்பாக நெசவாளர்களுக்கும் இலவசமாக வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அதுபோன்று, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கு குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தை கட்டாயமாக ஆக்கி. அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு பாதுகாப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரிபேட் ஒழுங்காகக் கிடைக்காததனால், அநேக கூட்டுறவுச் சங்கங்களிலே துணிகள் அதிகமாக தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே உள்ள வீரவநல்லூரிலே அதிகமான சங்கங்களில் சரக்குகள் தேக்கம் அடைந்திருக்கின்றன. அந்தச் சங்கங்களிலே துணிகள் அதிகமாக தேக்கம் அடைந்திருப்பதால், அந்த மக்கள் ரூ. 10,000, ரூ. 5,000 என்று பணதலை மொத்தமாக வாங்கிக் கொண்டு வேறு மாநிலங்களுக்கும் மாவட்டங்களுக்கும் குடும்பமாக குடிபெயர்ந்து சென்று, கொத்தடிமைகள் போன்று வாழ்கின்ற ஒரு மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். எனவே, தேக்கம் அடைந்துள்ள அந்தத் துணிகளை ஒட்டுமொத்தமாக அரசு கொள்முதல் செய்து, அந்தப் பணத்தை உடனடியாக பட்டுவாடா செய்கின்ற நிலையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அரசு ஊழியர்களுக்கு விழாக்காலக் கடன் வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு விழாக்காலக் கடன் வழங்கப்பட்ட பிறகும், அவர்கள் கூட்டுறவுத் துறையிலே, கோ-ஆப்டெக்சிலே துணிகள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, கோ-ஆப்டெக்சிலும் கடன் வாங்குகின்றார்கள். இதைச் சம்பளத்திலே பிடித்துக் கொடுக்கின்ற வசதி இல்லாத



1997 ஏப்ரல் 9] [திரு. பா. வேல்துரை]

காரணத்தினால், கோ-ஆப்டெக்சிலே வாங்குகின்ற கடனை அரசு ஊழியர்கள் திருப்பிக் கொடுக்காத காரணத்தினால், நலிவுற்றிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு. கோ-ஆப்டெக்சின் கடன் தொகையும் திருப்பி வழங்கப்படாததினால், அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதுவும் பல கோடி ரூபாய்கள் கோ-ஆப்டெக்சிலே கடன் பாக்கி இருப்பதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். ஆகவே, அரசு ஊழியர்களுக்கு விழாக்கால கடன் வழங்குகிறபோது, கோ-ஆப்டெக்சிலே அவர்கள் எவ்வளவு பணம் கடன் வாங்குகின்றார்களோ, அதையும் சேர்த்து, எந்தத் துறையில் அவர்கள் பணிபுரிகின்றார்களோ, அந்தத் துறையிலேயே, கோ-ஆப்டெக்சுக்கான பணத்தையும் உடனடியாக பிடித்தம் செய்து கொடுத்துவிட்டால், எந்தக் கஷ்டமும் இருக்காது. அதேசமயத்தில் அரசு ஊழியர்களிடம் அந்தப் பணத்தை ரெக்கவரி செய்வதற்கும் எந்தவிதமான தடையும் இருக்காது. எனவே, கோ-ஆப்டெக்சிலே கடன் வாங்குகின்ற முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

அதேபோன்று கதருக்குள்ள ரிபேட்டை மிகவும் குறைத்திருக்கிறார்கள். கதர் இப்போது உண்மையிலேயே சுகாதாரமான ஆடை என்று கருதப்பட்டு, இப்போது அனைவரும் அதை விரும்பி அணிகின்றனர். எனவே, கதருக்கான ரிபேட்டை மீண்டும் முழுமையாக - அது முன்னால் எப்படி வழங்கப்பட்டதோ அதேபோன்று இப்போதும் கதருக்கான ரிபேட் முழுமையாக - வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே உள்ள பத்தமடையிலே உள்ள பாய் உலகப் புகழ் பெற்ற பாய். இன்றைக்கு பிளாஸ்டிக் பாய் எல்லாம் வந்ததன் காரணமாக உடலுக்குச் சுகாதாரமான கோரைப் பாயினுடைய மதிப்பு மக்கள் மத்தியிலே குறைந்து வருகிறது. அதன் காரணமாக பத்தமடை பாய்த் தொழில் மிகவும் நசிந்து, பத்தமடை பாய்த் தொழிலாளர்கள் எல்லாம் தற்போது மிகவும் வறுமைக்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே பத்தமடை பாய்த் தொழிலாளர்களுக்காக அந்த பாய்த் தொழிலையே அரசு தத்து எடுத்து, அரசாங்கமே அவர்களுக்கு முழு உதவி செய்து உலகப் புகழ் வாய்ந்த பத்தமடை பாய்த் தொழில் நசிந்துவிடாமல் இருக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பா. வேல்துரை] [1997 ஏப்ரல் 9

எனது தொகுதி சேரன்மகாதேவியிலே காருக்குறிச்சி, புதுக்குடி, கூனியூர், பத்தமடை, பாப்பாகுடி போன்ற ஊர்களிலே மண்பாண்ட சொசைட்டிகள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக அங்கே மண்பாண்ட தொழில் செய்வோர் மிகுந்த சிறப்பான மண்பாண்டங்களை எல்லாம் செய்கிறார்கள். இங்கே பிரிட்ஜ் வைத்து தண்ணீர் குடிக்கின்றோம். காருக்குறிச்சியிலே பிரிட்ஜ் போன்ற ஒரு தனி மண்பாண்டம் செய்கிறார்கள். காருக்குறிச்சியிலே செய்கின்ற மண்பாண்டத்தை - எப்படி பிரிட்ஜிலே தண்ணீர் குளிர்ந்த தன்மை உடையதாக இருக்கிறதோ அதேபோன்ற தன்மையுடைய மண்பாண்டத்தை ஆர்டர் போட்டு வாங்கி அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் விநியோகம் செய்வீர்களானால் அந்த மண்பாண்டத் தொழிலுக்கு பேருதவியாக இருக்கும்.

அதேபோன்று காருக்குறிச்சியிலே மண்பாண்ட சொசைட்டி இருக்கிறது. அந்த மண்பாண்ட சொசைட்டியிலே கடந்தகால ஆட்சியிலே ஏகப்பட்ட தில்லுமுல்லுகள், ஏகப்பட்ட குழப்பங்கள் செய்து அந்த மண்பாண்ட சொசைட்டி மிகவும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த சொசைட்டிக்கு நான் சென்றிருந்தபோது அவர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக கண்ணீர் வடித்து நாங்கள் மிகுந்த வறுமையில் இருக்கிறோம்; பழைய அக்கவுண்ட்ஸ்களையெல்லாம் ஒழுங்கான முறையில் ஆடிட் செய்தால் அதில் நடந்திருக்கின்ற ஊழல்கள் தெரியும்; யார் அந்த ஊழலுக்கு உட்பட்டிருக்கிறார்கள்; யார் அந்தப் பணத்தைக் கையாடல் செய்திருக்கிறார்கள் என்பது தெரியும் என்றார்கள். எனவே, அந்தப் பணத்தை மீண்டும் அந்த சொசைட்டிக்கு கொண்டுவருவீர்களானால் மண்பாண்ட சொசைட்டி லாபத்தில் இயங்குகின்ற ஒரு நல்ல நிலை ஏற்படும் என்று சொல்லி இந்த அருமையான வாய்ப்பைக் கொடுத்த நமது சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

***திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கைத்தறி மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றான் பாரதி. 'செய்யும் தொழில் அனைத்தும் சீர்தூக்கி பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை' என்று சொன்னார் வள்ளுவர். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இந்த



1997 ஏப்ரல் 9] [திரு. பி.என். சுப்பிரமணி.]

மூன்றும் அடிப்படைத் தேவைகள். உணவு குறைவாக இருக்கலாம்; இருக்க இடம் குறைவாக இருக்கலாம்; ஆனால் மானத்தோடு வாழ வேண்டுமானால் நிறைவான உடை தேவை. அந்த உடையைத் தயாரிக்கும் ஏழை நெசவாளிக்கு வயிறார உண்ண உணவும் தொழிலுக்குப் பாதுகாப்பும் தேவை. இவைகளைச் செய்து தருவது நம் அரசின் கடமை.

கைத்தறி நெசவுத் தொழில், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும், தனியார் துறை மூலமாகவும் தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறது. கைத்தறித் துணியைத் தயாரிக்கும் சிட்டா நூலுக்குத் தமிழக அரசின் சார்பில் 2 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் சிட்டா நூலுக்கு அறவே வரியில்லை. இந்தியத் திருநாட்டில் உள்ள 1,027 ஜவுளி நூற்பாலைகளில் 550 நூற்பாலைகள் தமிழகத்தில் இருக்கின்றன என்பது நல்லதொரு எடுத்துக்காட்டாகும். ஆனால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் நூல் வெளி மாநிலங்களில் வரியில்லாமல் விற்பனை செய்கிறார்கள். அதே நூலை தமிழகத்தில் விற்பனை செய்தால் 2 சதவீதம் வரி விதிக்கிறார்கள். இதனால் வெளி மாநிலங்களோடு போட்டி போட்டு விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு கைத்தறித் துணி தேங்கும் நிலை ஏற்படுகிறது. கைத்தறித் தொழிலில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பாடுபட்ட மறைந்த திரு. பிரவிட கோட்டையா, எம்.பி. போன்றவர்கள்கூட இந்த வரி விதிப்பினை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரியுள்ளனர் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கைத்தறித் துணி தேங்கியிருந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், கழகத்தின் முன்னோடிகளும் தோளில் சுமந்து வீதிதோறும் விற்று கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைத்தார்கள். கைத்தறி நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையான சிட்டா நூலுக்கு விதிக்கப்படும் 2 சதவீதம் வரியை தாயுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் அறவே நீக்க வேண்டும் என பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டில் வெளிநாடுகளுக்கு நூல் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வதற்குண்டான வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமாய் கோருகிறேன். இந்தியாவிற்கு பக்கத்தில் உள்ள மியான்மர் நாட்டின் தேசிய உடை லுங்கி ஆகும். எனவே இந்தத் துணியை அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய தமிழக அரசின் சார்பில் முயற்சிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

முற்பகல் 11-10

கரும்பு ஆலைகள் இருக்கின்ற இடங்களில் கரும்பு சாகுபடிக்குக் கடனும், மானியமும் தந்து ஊக்கம் தருவது போல் நூற்பாலைகள் இருக்கிற இடங்களில் பருத்தி சாகுபடிக்கான கடனும், மானியமும் தந்து பருத்தி சாகுபடியின் தரத்தை கோம்பூநூல் தயாரிக்கின்ற அளவுக்கு உயர்த்தி பருத்தித் தட்டுப்பாட்டினைப் போக்கவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தி உற்பத்தியாகும் பகுதிகளில் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்தை வேளாண்மைத் துறையின் மூலம் செயற்படுத்த தீவிர திட்டம் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பிரதி மாதம் 6 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை விற்பனைக்கு தள்ளுபடி அளிக்கப்படுகிறது. தற்போது அளிக்கப்படுகின்ற ரிபேட் தொகை மிகவும் சொற்பமானதாக இருக்கிறது. 1992-ல் என்ன ரிபேட் கொடுக்கப்பட்டதோ அதே நிலைதான் இன்றும் நிலவுகிறது. 1992 ஆம் ஆண்டுக்குப் பிறகு துணி விலை 2 மடங்கு உயர்ந்துள்ளது. இருப்பினும் ரிபேட் தொகை உயர்த்தப்படவில்லை. எனவே துணி விலையின் உயர்வுக்குத் தக்கவாறு தள்ளுபடி உயர்த்தப்பட வேண்டுமென்று கோருகிறேன். அல்லது 1992-க்கு முன்பு உள்ளதுபோல் மொத்த உற்பத்திக்கு ரிபேட் அளிக்கும் முறையை மீண்டும் கொண்டு வரலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 12½ சதவீதம் வட்டி விகிதத்திலே வட்டியை முன்கூட்டியே செலுத்திய பிறகு கடன் அளிக்கப்படுகிறது. இந்த வட்டியில் நபார்டு வங்கி 3½ சதவீதம் மானியமாக திருப்பி அளிக்கிறது. இந்த 3½ சதவீத மானியம் பெறுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. முன் வட்டி செலுத்தி கடன் பெறுவதால் கூட்டுறவுச் சங்கங்களின் பணம் வருடக் கணக்கில் முடங்கி நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இதற்கு முன்பு 12½ சதவீதத்தில் 3½ சதவீதத்தை நபார்டு வங்கி கழித்து 9 சதவீத வட்டிதான் செலுத்தப்பட்டு வந்தது. எனவே பழைய நிலை கடைப்பிடிக்கப்பட ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

எடுத்துக்காட்டாக, குடியாத்தம் நகரில் 25 நெசவாளர் சங்கங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டிய மானியம் 1.36 கோடி ரூபாய் ஆகும். இந்தப் பெரும் தொகை முடங்கி இருப்பதால்



சங்கங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிதி நெருக்கடி ஏற்படாத வகையில் கடன் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி அபிவிருத்திக் கழகம் எல்லா கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதி உதவி செய்து வெளிச் சந்தையில் நூல் வாங்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருசில சங்கங்களில் மட்டும் வெளிச் சந்தையில் நூல் வாங்க அனுமதித்துவிட்டு மற்றவைகளுக்கு அனுமதி இல்லை என்று சொல்லும் இரட்டை நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெளிச் சந்தையுடன் போட்டிபோடும் அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தரமான நூலை உற்பத்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய சங்க உறுப்பினர்களுக்கு வெளிச் சந்தை நூலும், பழைய சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு ஆலை தயாரிக்கும் நூலும் வழங்கப்படுகிறது. இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்திக்க வேண்டும் என்றும் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு வெள்ள நிவாரணம் அளிப்பதிலே கூட பாரபட்சம் காட்டப்படுகிறது. கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு மட்டுமே அண்மையில் வெள்ள நிவாரணம் அளிக்கப்பட்டது. தனியாக ஒன்றிரண்டு தறி வைத்துள்ள நெசவாளர்களுக்கு வெள்ள நிவாரணம் அளிக்கப்படவில்லை. எனது ஆற்காடு தொகுதியில் சுமார் 2 ஆயிரம் நெசவாளர்கள் வெள்ள நிவாரணத்திற்காக மனு செய்திருக்கிறார்கள். கைத்தறி உதவி இயக்குநர் (வேலூர்) அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) பரிந்துரை செய்தும் கூட யாருக்கும் நிவாரணம் அளிக்கவில்லை. நிவாரணத்திற்காக காத்துக் கிடக்கும் எனது தொகுதி நெசவாளர்களுக்கு வெள்ள நிவாரண நிதியை உடன் வழங்க ஆணையிடுமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

விசைத் தறியில் தயாரிக்கும் சரக்குகளுக்கு கைத்தறி என முத்திரையிட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக பல புகார்கள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இதனால் உண்மையான கைத்தறி ஆடையின் மதிப்பும், உழைப்பும் வெளி உலகால் மதிக்கப்படவில்லை. இந்தநிலை மாற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் அதிகப்படியாக வாழும் ஊர்ப் பள்ளிகளில் நெசவுத் தொழில் பற்றிய பாடத் திட்டத்தை பிளஸ் 2 வகுப்பில் துவங்குமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் எனது தொகுதியில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி என்ற டிப்ளமோ படிப்பினைப் பயில தனியாக தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அரசு சார்பில் நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கைத்தறி, விசைத்தறி, மில் துணி இவைகளின் உற்பத்தி வளர்ச்சிக்குப் புதிய ஜவுளிக் கொள்கை உருவாக இருக்கிறது என்ற அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. அரசு அறிவிக்கும் ஜவுளிக் கொள்கை நெசவாளர் நலன், தொழில் முனைப்பு, ஏற்றுமதி, உற்பத்தி, விற்பனைச் சந்தை, பயன்பெறுவோர் நலன் யாவும் சிறந்து விளங்கும் கொள்கையாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

கைத்தறிக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட ரகங்களை விசைத் தறியில் (மணியடிக்கப்பெற்றது) உற்பத்தி செய்யாமல் கண்காணிக்கும் பொருட்டு அமலாக்கப் பிரிவு ஒன்றை ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்தது. இதற்கு ஆகும் செலவினை முதல் 5 ஆண்டுகளுக்கு முழுமையாகவும், அடுத்த 5 ஆண்டுகளுக்கு 100 சதவீதம், 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம், 20 சதவீதம் என இறங்குமுகமான அடிப்படையில் மத்திய அரசு ஏற்கும் எனவும், 16-வது ஆண்டிலிருந்து சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே முழுமையாக ஏற்க வேண்டுமெனவும், மத்திய அரசு கூறியது. இதனைத் தொடர்ந்து அன்டை மாநிலங்கள் அனைத்திலும் இத்தகைய அமலாக்கப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழக அரசும் தேர்தல் அறிவிப்பில், கைத்தறிக்கென இரக ஒதுக்கீடு சட்டத்தினை அமலாக்கம் செய்வதில் முனைப்புடன் செயல்படும் என அறிவித்துள்ளதற்கிணங்க ஏற்கெனவே பிரத்தியேகமாகத் தனிப் பிரிவுகள் அமைக்கத் துறையினால் முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நலனைப் பாதுகாக்க இப்பிரிவினை அமைக்கக் கோரி துறை அனுப்பிய முன்மொழிவு அரசால் இதுவரை ஏற்கப்படவில்லை. இதனால் மைய அரசிடமிருந்து நியாயமாக கிடைக்க வேண்டிய நிதியும் இம்மாநிலத்திற்கு கிடைக்கப் பெறவில்லை. எனவே, கடந்த 5 ஆண்டுகளாக முந்தைய அரசில் கிடப்பில் போடப்பட்ட இந்த அமலாக்கப் பிரிவினை அமைக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழக முதல்வரை நான் கேட்டுக் கொள்கிறேன்.



முற்பகல் 11-15

ஆற்காடு தொகுதியில் கைத்தறி நெசவு செய்யும் தொழிலாளர்களின் சிறுவர் சிறுமியர்கள் சிலம்பாட்டப் போட்டியில் நேஷனல் - அதாவது இந்திய அளவில்—சிறுவர்கள் 2 பேர் இரண்டாவது இடத்திலும், சிறுமியர்கள் முதல் இடத்திலும் 1997 பிப்ரவரி மாதத்தில் ஆந்திராவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றார்கள். வட ஆற்காடு மாவட்டத்தின் சிலம்பாட்ட நிர்வாகிகளையும், வீரர்களையும் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*சின்னச் சின்ன இழை*
*பின்னிப் பின்னி வர*
*சித்திரக் கைத்தறிச் சேலையடி என்றும் நம்*
*தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் சேலையடி*

என்ற பட்டுக்கோட்டையார் பாட்டு இந்த மாமன்றத்தில் எத்தனையோ முறை ஒலித்து விட்டது. சின்ன இழைகள் பின்னிக் கொண்டதால் ஏற்பட்ட சிக்கல்கள், சிக்கலாகவே நிலைத்து விட்டன. அருமைத் தலைவர் தனது காலத்திலாவது சிக்கல்களைத் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையுடன் எனது உரையினை நன்றிப் பெருக்குடன் நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும், சுற்றுச் சூழல், கதர்-கிராமத் தொழில்கள் மற்றும் எழுதுபொருள்-அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள அனுமதி வழங்கியதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒரு கடுமையான நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் அறிவித்து ஒரு ஜனநாயகப் பூர்வமான செயல்பாட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் மற்ற அமைப்புகளிலும் ஏற்படுத்தியிருக்கிற இந்த நேரத்தில், புதிதாகப் பொறுப்பேற்றுக்

கொண்டிருக்கிற, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதிநிதிகள் தங்களுடைய கூட்டுறவு அமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை விற்பனை செய்ய முடியாத ஒரு கடுமையான நெருக்கடிக்கு இன்றைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள்.

நான் ஒரு விவரத்தைச் சேகரிக்கின்றபொழுது - பெரியார் மாவட்டம் சென்னிமலை கைத்தறிக்குப் பெயர் பெற்ற இடம் - அந்தச் சென்னிமலையிலே 24 கூட்டுறவுச் சங்கங்களின் விவரத்தைச் சேகரித்தபொழுது—கோவாப்டெக்ஸினுடைய நிலுவை மாத்திரம் ரூபாய் 950 இலட்சம் பாக்கியிருக்கிறது; தள்ளுபடி மானிய வகையிலே ரூபாய் 824 இலட்சம் பாக்கியிருக்கிறது. ஜவுளி பண மதிப்பில் ரூபாய் 10 கோடியே 29 இலட்சத்திற்குத் தேக்கம் அடைந்திருக்கிறது. இதுபோல, பரமக்குடியிலும், பெரியார் மாவட்டத்திலே காஞ்சிக்கோவில், விஜயமங்கலம், கள்ளியம்புதூர், வெள்ளிரவெளி போன்ற பகுதிகளிலும், தமிழ்நாடு முழுவதிலும் 138 கோடி ரூபாய்க்கான ஜவுளித் தேக்கம் அடைந்திருக்கிறது. இப்படித் தேக்கம் அடைந்த ஜவுளியைத் தேக்கமின்றி விற்பனை செய்வதற்கு, உச்சவரம்பின்றி மானியம் வழங்கப்பட வேண்டியது மிகமிக அவசியம்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், மானியம் வழங்கியதிலே ஏராளமான முறைகேடுகள், கடந்த ஆட்சியிலே பல கோடி ரூபாய் அளவிற்கு நடந்திருக்கிறது என்பதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லி, அந்த மானியமே ஏதோ தவறான வழிமுறைக்கு மட்டுமே பயன்படுவது போல ஒரு கருத்து நிலைக்கு நாம் வருகிறபொழுது, தவறுகள் களையப்படுவதோ, தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை கொடுப்பதிலோ எந்தவிதமான மாற்றுக் கருத்து யாருக்கும் இருந்திட முடியாது.

ஆனால், இன்றைக்கு முழுஅளவில் தள்ளுபடி மானியம் இல்லாத சூழ்நிலையில், கைத்தறி விற்பனை தேங்கியிருக்கிற சூழ்நிலையில், அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கும், தவறுகளைக் களைவதற்கும், தொழிலைப் பாதுகாப்பதற்கும் இரண்டுக்கும் இணைப்பு இருப்பதாக நாங்கள் கருதுவதில்லை.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உரையிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். தள்ளுபடி மானியம் இல்லையென்ற ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார்கள். தள்ளுபடி மானியம் 47 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அதற்கு மேலும் முதலமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாயை இப்போது அனுமதித்துள்ளார்கள் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தள்ளுபடி மானியம் அறவே இல்லை என்பதல்ல நெசவாளர்களுடைய கோரிக்கை. ஏற்கெனவே, வழங்கி வந்த 20 சதவீத தள்ளுபடி மானியம் என்பது ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் எவ்வளவு விற்பனை செய்யப்படுகிறதோ அதன் முழு அளவிற்கும் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது 1992-93 ஆம் ஆண்டை வரையறுத்து அந்த ஆண்டிலே வழங்கப்பட்ட தள்ளுபடி மானியத்திலேயும் 75 சதவீதம்தான், வரக்கூடிய காலத்திலே வழங்கப்படும் என்று ஒரு புதிய கொள்கை நிலை எடுத்ததுதான் இன்றைக்கு பாதிப்பாக வந்திருக்கிறது. அந்த பாதிப்பை உணர்ந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இரண்டு கோடி ரூபாயை கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இன்றைக்குத் தேவை 60 கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது, எந்த அளவிற்கு விற்பனை செய்யப்படுகிறதோ அந்த அளவிற்குத் தள்ளுபடி மானியம் வழங்க வேண்டும். இந்தக் கைத்தறித் துறைக்கு என்று 22 ரகம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த 22 ரக ஒதுக்கீடு எந்த வகையிலும் அமல்படுத்தப்படவில்லை. கீழ் நீதிமன்றங்களிலிருந்து, உச்சநீதிமன்றம் வரை பயணம் செய்து, பிறகு முத்தரப்புக் கூட்டத்தைப் போட்டு 11 ரகம் என்று சுருக்கிவிட்ட நிலையிலும் அந்த 11 ரகத்தையும் உறுதிப்படுத்திக் கொடுக்க இன்றைக்குத் தயாராக இல்லை. எனவே, கைத்தறித் துறையைப் பாதுகாக்கின்ற ஒரே நடவடிக்கை உச்சவரம்பற்ற, விற்பனை அளவிற்கே மானியம் வழங்குவது ஒன்றுதான். அதிலே எந்தவிதமான உச்சவரம்பும் இல்லாமல் மானியம் வழங்க வேண்டும் என்பதற்காக எழுச்சி மிக்க பேரணிகள், மாவட்டத் தலைநகரங்களிலே மறியல் போராட்டங்கள் நடந்து கொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. நா. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

அதுபோல, இந்தக் கைத்தறித் துறையில், ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தில், பெருந்துறை தொகுதியில், ஊத்துக்குளி ஒன்றியம் சருக்குப்பாளையம் தெரிவு செய்யப்பட்டு மூன்று ஆண்டு காலத்திற்கு மேலாகிறது. அதற்கு மத்திய அரசுகூட 9 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால், இன்னும் அங்கே பணி தொடங்கியதற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஒரு சொசைட்டி பொறுப்பெடுத்துக் கொண்டும், அது ஏன் இப்படிக் கிடப்பிலே கிடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விசைத் தறிகளைப் பொறுத்தவரையில், பதிவு பெற்ற, பதிவு பெறாத விசைத் தறிகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டாகிவிட்டது. ஆனால் எந்த வரையறையுமின்றி விசைத் தறிகளை குடியிருப்புகளுக்கு மத்தியிலே அமைத்ததால், அவைகள் சப்தத்தை எழுப்புகின்றன. சப்தமும் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தக் கூடியது. இப்படி சூழலை-கெடுக்கக்கூடிய சூழ்நிலையிருப்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் விசைத்தறிக் கூடங்களை அமைப்பதற்கு வேண்டுமானால் அரசு இடம் ஒதுக்கிக் கொடுப்பதற்கு முன்முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்து விசைத் தறித் தொழிலாளர்களுக்கு கடுமையான நெருக்கடியிருக்கிறது. கடந்த காலத்திலே தங்களுடைய சிறுநீரகத்தை விற்றுப் பிழைத்த செய்திகளையெல்லாம் தமிழகத்திலே நாம் பார்த்தோம். அதிலே, மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வகையிலே விசைத் தறிக் காப்பீட்டுத் திட்டம் என்று ஒன்று அறிவிக்கப்பட்டது. ஆனால், விசைத்தறிக் காப்பீட்டுத் திட்டத்தை எந்த ஒரு விசைத்தறித் தொழிலாளியும் அறிந்திருக்கமாட்டார். அதைத் தெளிவுபடுத்துவதற்கு, பிரச்சாரம் செய்வதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம். இதற்கு ரூபாய் 700 மாதச் சம்பளம் என்று வரையறை செய்திருக்கிறார்கள். 700 என்றால் உயர்வாகவா அல்லது குறைவாகவா என்ற விவரம் இல்லை. குறைந்தபட்ச ஊதியம்கூட 1500 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அந்த 1500 ரூபாய் அளவிற்காவது அதை உயர்த்தி, அந்த விசைத்தறி காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்முயற்சிகள் எடுக்க வேண்டும்.

கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் ஒரு தவறான நிர்வாகத்தால் உதிரிபாகங்கள் வாங்கிய ஊழல்களால், பல காரணங்களால் அதுபெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.



1997 ஏப்ரல் 9] [திரு. நா. பெரியசாமி]

சென்ற மானியக் கோரிக்கையின்போது, அடுத்துவரும் இந்த மானியக் கோரிக்கைக்குள்ளாக எல்லா நூற்பாலைகளையும் ஓட்ட முடியும் என்ற நம்பிக்கையை நாம் வைத்திருந்தோம். ஆனால், இன்றைக்கும் நான்கு கூட்டுறவு நூற்பாலைகளும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகிற ஆலையும் திறக்கப்படாத சூழ்நிலை நீடிக்கிறது. அப்படி நீடிக்கக்கூடிய நேரத்தில் அதில் இருக்கின்ற உண்மையான காரண காரியங்களைக் கண்டுபிடித்து, தொழிலாளர்களையும் அதனோடு இணைத்துக் கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் நஷ்டம் இல்லாமல் லாபகரமாக இயக்குவதற்கு முன்முயற்சி எடுக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 3 கோடியே 7 இலட்சம் ரூபாய் வழங்கியும், இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படவில்லை என்று இந்திய தணிக்கைத் துறை தலைமை அதிகாரியே குறிப்பிட்டிருக்கிறார். இதுபற்றியெல்லாம் அரசு கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருசில நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கைத்தறி நெசவாளர் சங்கங்கள் சேர்ந்து விரிவான கோரிக்கை மனுவை விண்ணப்பித்திருந்தன. அதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 11-25*

அடுத்து, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் மூன்றே மூன்று ஆலைகளைப் பார்ப்பதற்கு மாத்திரம் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலேயிருக்கின்ற நிர்வாகச் செலவைத் தவிர்ப்பதற்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தையே மூடிவிட்டு, அதை வேறு வகையிலே நிர்வாகம் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றேயொன்று. கதர் கிராமத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு மகிழ்ச்சியான செய்தியை பெருந்துறை மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் 12½ இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாம்கோலா தயாரிப்பதிலும், பனை தூரிகைத் தயாரிப்பதிலும் குன்னத்தூர் பகுதியிலே முதலீடு செய்திருப்பதற்கு அந்தத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. நா. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

ஒன்றேயொன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அரசு அச்சகத் துறையில் பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகள் மற்றும் கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சிடப்படுகின்றன. அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற செய்திகள் எல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒரு நாளிதழில் வந்திருக்கின்றன. அவைகள் அனாமதேயமாகத்தான் வந்திருக்கின்றன. அதுபோன்ற விவரங்கள் எல்லாம் எப்படி வந்தன என்றும் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வெளியான காரணத்தைக் கொண்டு தொழிலாளர்களைத் தண்டிக்கிற போக்கு அதிகாரிகளிடையே, அந்தத் துறையிலே இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, மேல்மட்ட அதிகாரிகள் இதிலே உரிய கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, தொழிலாளிகளைப் பழிவாங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக என் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதுபோன்று இன்னும் பல விவரங்கள் இருக்கின்றன. இருப்பினும் நான்கு மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில நிமிட நேரத்திலே பேசுவது என்பது ஒவ்வொரு உறுப்பினருக்கும் இயலாத காரியமாக இருக்கிறது என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்குச் சென்று வந்திருக்கிறீர்கள். நீண்ட ஆயுளுடனும், நல்ல ஆரோக்கியத்தோடும் வாழ வேண்டும் என்ற வாழ்த்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்து, மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான கைத்தறித்துறை மற்றும் கதர்த்துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**'செய்யும் தொழில் அனைத்தையும் சீர்தூக்கிப்**
**பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'**

என்பார்கள். அத்தகைய நெசவுத் தொழிலாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகையை ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 25,000 ஆக உயர்த்திய



1997 ஏப்ரல் 9] [திருமதி வாசுகி முருகேசன்]

உங்கள் கருணை நெஞ்சத்திற்குக் கரூர் தொகுதி நெசவாளர்கள் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி, விசைத்தறி, மில் துணி இவைகளின் உற்பத்திக்கு மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் வளர்ச்சிக்காக தமிழகத்தில் முதல் தடவையாக ஜவுளிக் கொள்கையை அறிமுகப்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கரூர் கைத்தறியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில், நலிவுற்ற சங்கங்களுக்கு, தறிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு தவணைக் கடன் வழங்கி, தறிகளை நம்பியுள்ள குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுகிறேன். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின்போது, கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற ஊழல்கள் மற்றும் மோசமான நிர்வாகம் ஆகியவற்றின் காரணமாக பெரும்பாலான சங்கங்களை இழுத்து மூடும் அபாயம் ஏற்பட்ட நிலையில், நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்களை நடத்தியது. புதிதாக தலைவர்களும் இயக்குநர்களும் பொறுப்புக்கு வந்துள்ளார்கள். முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழல் நிர்வாகத்தின் காரணமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு உற்பத்தி செய்து அனுப்பிய ஜவுளிக்கான பணத்தை அப்படியே மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் பிடித்தம் செய்துகொள்கின்றன. இது எந்த வகையில் நியாயம்? அ.தி.மு.க. ஆட்சியில் அதிகாரிகள் ஆண்டுதோறும் இந்தக் கடன்களை வசூலிக்காமல், இருந்துவிட்டபின், இப்போது பொறுப்புக்கு வந்துள்ள நிர்வாகிகள் மிகவும் சிரமப்பட்டு உற்பத்தி செய்த பொருட்களுக்குப் பணம் கொடுக்காமல் பிடித்தம் செய்தால் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நல்லமுறையில் இயங்க முடியும்? எனவே, பழைய கடன்களுக்குக் காரணமானவர்கள் தொடர்புடைய அதிகாரிகள்தானே தவிர, புதிதாக வந்த நிர்வாகம் அல்ல. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களும் இந்த முறையை மாற்றி மத்திய கூட்டுறவு வங்கிகள் பழைய கடன்களுக்காகப் புதிய நிர்வாகத்தைப் பழிவாங்காமல் இருக்க அன்போடு வேண்டுகிறேன். இல்லையானால், மீண்டும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் முடக்கப்பட்டு இலட்சக்கணக்கான நெசவாளர் குடும்பங்கள் வீதிக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். கரூருக்கு கைத்தறி, துணிநூல் துணை இயக்குநர் அலுவலகம் - ஏ.டி.எச். அவசியம் உடனே தேவை. ஏனென்றால், எங்கள் மாவட்டத்தில் கரூர் பகுதியில்தான் கைத்தறி

உற்பத்தி மிகவும் அதிகமாக இருக்கின்றது. எனது கரூர் தொகுதியில் மட்டும் ஏறத்தாழ 40 ஆயிரம் கைத்தறித் தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

*முற்பகல் 11-30*

நெசவாளர் சங்கங்களுக்கு ஆங்காங்குள்ள கூட்டுறவு நூற்பாலையிலிருந்து நேரடியாக நூல் வழங்கிட வேண்டுகிறேன். ஏனென்றால், அவர்கள் கோ-ஆப்டெக்சுக்குச் சென்று வாங்கும்போது, 15 சதவீதம் அல்லது 20 சதவீதம் இலாபம் வைத்துத்தான் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தினர் கொடுக்கின்றனர். இது வெளி மார்க்கெட் விலையைவிடக் கூடுதலாக இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருடத்திற்கு 100 நாட்களுக்கு அந்தந்த சங்கங்கள் செய்யக்கூடிய உற்பத்தியின் அளவுக்கும், விற்பனையின் அளவுக்கும் ஏற்றவாறு 20% தள்ளுபடி வழங்கிட வேண்டுகிறேன். அப்படி வழங்கும்போது 1992 ஆம் ஆண்டு இதற்காக ஒரு அளவைக் குறிப்பிட்டு 'சீலிங்' வைத்தார்கள். அந்த சீலிங்-கை கைவிடவேண்டும்.

அடுத்து 'சிட்டா' நூலுக்குள்ள வரியை இரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன். கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களின் கோரிக்கையான—'இன்சென்டிவ்' - ஊக்குவிப்புத் தொகை மீதான வரியையும் இரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். திருப்பூர் பனியனுக்கு முழு வரிவிலக்கு அளித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இந்த வேளையில், கரூர் கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமே சுமையாக இருந்து வருகின்ற ஊக்குவிப்புத் தொகை மீதான வரியை இரத்து செய்ய உத்தரவிட வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன். கைத்தறி நெசவாளர்களின் பாதுகாவலர்களாக உள்ள அரசு—ஏற்றுமதியாளர்களின் தலைச் சுமையான இந்த வரியினை தோளில் சுமந்து, கைத்தறித் துணிகளை விற்று இந்தத் துறையை ஏற்றம் பெறச் செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்றுமதியாளர்களின் தலைச் சுமையை இறக்கி வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதுபோன்று, சாயம் மற்றும் சலவை மீதான வரியையும் இரத்து செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். ஏனென்றால், கைத்தறித் துணி உற்பத்திக்கு இவை முதுகெலும்பாக இருந்து வருகின்றன. ஆகவே, தயவுசெய்து இதனையும் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



கதர்த் தொழிலைப் பொறுத்தவரையில், கரூர் தொகுதிக்கு கதர் நூற்பாலை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அன்புக்குரிய அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு விழாக் காலங்களிலும் கதர் மற்றும் பட்டு இரகங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்ற சிறப்புத் தள்ளுபடியை 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் ஆக அதிகரித்துத்தர வேண்டுகிறேன். வருடத்திற்கு 90 நாட்களுக்குக் கொடுக்கப்படும் இந்தத் தள்ளுபடியை 100 நாட்கள் என்று அதிகரித்துத்தர வேண்டுகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கரூர் தொகுதிக்கென்று கைத்தறித் துணிகளுக்காக Computer Aided Design Centre ஒன்றை வழங்கிட வேண்டுகிறேன். அதுபோன்று, Powerloom Service Centre ஒன்றையும் ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈரோட்டை மட்டும் பார்க்காமல், பக்கத்திலுள்ள கரூரையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

பனை மரங்கள் அதிகமுள்ள எனது கரூர் தொகுதிக்கென்று பனஞ்சீனி ஆலை ஒன்றை நிறுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது கரூர்-தீரன் சின்னமலை மாவட்டத்தில், பரமத்தி ஒன்றியம் மற்றும் சின்னதாராபுரத்தில் உள்ளதுபோன்று, பனையிலிருந்து கிடைக்கக்கூடிய பனை நார் மற்றும் ஓலையிலிருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை எனது தொகுதியில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சுத் துறையைப் பொறுத்தவரையில், கல்வித்துறைக்கான பாடப் புத்தகங்கள் அனைத்தும் தனியார் அச்சகத்திலிருந்து அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. அதனை மாற்றி அரசு அச்சகத்திலேயே அச்சிட்டு புத்தகங்கள் வழங்கி, இதன் மூலம் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* கொஞ்சம் கொஞ்சமாக நசிந்துவரும் ஆறரை இலட்சம் கைத்தறியாளர் குடும்பங்களைக் காப்பாற்ற தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசுக்கு ஏற்படும் இழப்புகளை ஏற்று, கைத்தறித் தொழிலாளர்கள் அதுவும் எனது கரூர் தொகுதி பெருமளவு நெசவாளர்களைக் கொண்டுள்ள பகுதி என்பதால், என்னுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது நெஞ்சக் கருத்துக்களை அஞ்சுகச் செல்வரின் அரிய கருணைக்கும், உரிய கவனத்திற்கும் கொண்டு வந்து, தாங்கள் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையால் தொகுதி மக்கள் மத்தியில்

[திருமதி வாசுகி முருகேசன்] [1997 ஏப்ரல் 9

நெஞ்சம் நிமிர்ந்து நடைபோட வைத்த உங்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் உரித்தாக்கி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் கதர்த்துறை மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக சில விவரங்களைக் கூற விழைகின்றேன். கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ரிபேட் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பல்வேறு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களிலே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் விற்கப்படாமல் தேங்கியுள்ளன. எனவே, அந்த ரிபேட்டை சற்று அதிகரித்துத் தருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதுபோன்று தள்ளுபடி என்று சொல்லக்கூடிய அந்த மானியத்திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, காமராசர் மாவட்டத்தில், நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களில் ஏறத்தாழ 33 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ள அந்தப் பகுதியில் இந்த ரிபேட்டில் உள்ள நிபந்தனையின் காரணமாக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் தேக்கமடைந்துள்ளன. இராஜபாளையம், சத்திரப்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் 71 இலட்ச ரூபாய் ரிபேட் பாக்கியுள்ளது. அங்கே 75 இலட்ச ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கியுள்ளன. ஆகவே இதிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகின்றபோது, ஜனதா ரக ஜவுளிகளை அதிகப்படியாக உற்பத்தி செய்து, விற்பனை செய்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். அதற்காக இருக்கின்ற 9½ சதவீத லாபத்தை இன்னும் அதிகப்படுத்தும் ஒரு வழிமுறையைக் கையாள வேண்டும்.

முற்பகல் 11-35

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஏற்கெனவே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்திலே ஓடுகின்றன. மேலும் சங்கங்களுக்கு தனி அதிகாரிகள் என்று வரும்போது, அதிகப்படியான செலவினம் ஏற்பட்டு, லாபத்தை ஈட்ட முடியாமல் போகின்றது. ஆகவே இந்த தனி அதிகாரிகள் சம்பிரதாயத்தை மாற்ற வேண்டும்.

கூட்டுறவு நூற்பாலைகள் பல மூடப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பாலைகளின் இழப்பை சரிக்கட்டுவதற்கு, தரமான பருத்தியை வாங்கி அதிகப்படியான நூலை உற்பத்தி செய்வதன் மூலமாக, அந்த



1997 ஏப்ரல் 9] [திரு. டி. மணி]

நூலை கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் கொடுப்பதன் மூலமாக, லாபகரமாக இயக்க முடியும். அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளச் சட்டம் முழுமையாக அமல்படுத்த வேண்டும். அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தில் வயது வரம்பை வைத்திருக்கிறார்கள். 58 வயது என்று சொல்கிறார்கள். வயதைப் பார்க்காமல் அனைவரும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 60 வயதான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கதர் கிராம வாரியம், கை முறை காகித ஆலைத் தொழிலாளர்களுக்கு மினிமம் கூலி இன்னும் கொடுக்கப்படவில்லை. இதிலே மாற்றம் வேண்டும். 5-2-1992 முதல் இது நிலுவையிலுள்ளது. அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கதர்த் துணியைப் பொறுத்தமட்டில் தரமான ரகத் துணிகளாக உற்பத்தி செய்ய வேண்டும். சமீபத்தில் கதர்த் துணிக்கான ரிபேட் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள் எந்த அளவுக்கு அது சரி என்று தெரியவில்லை. குறைந்தபட்சம் 10 சதவீத ரிபேட் வழங்கினால்தான் இந்தக் கதர்த் தொழிலிலே உள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்களைப் பாதுகாக்கவும், நிரந்தரமாக வேலை கொடுக்கவும் முடியும். இந்தத் துணியில் தரம் இருக்கிறதா என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அதனுடைய தரம் நன்றாக இருந்தது, தற்போது மோசமாக உள்ளது. ஆகவே, துணியினுடைய தரத்தை உயர்த்த வேண்டும். தரத்தை உயர்த்தினால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவு உயரும். கைத்தறி வேஷ்டியை எடுத்துக்கொண்டால் 100/100 என்ற அளவிலே 52 இன்ச் அளவுள்ள வேஷ்டியை நாம் உற்பத்தி செய்தால் அதிகப்படியான வருவாய் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். தரமான நூலை வைத்துக்கொண்டு, கதர்த் துணிகளை உற்பத்தி செய்தால் அதிகப்படியான வருவாய் கிடைக்கச் செய்யலாம். இந்த இரண்டு துணி ரகங்களையும் அதிகப்படியாக விளம்பரம் செய்தால் நம்முடைய நாட்டிலேயே விற்கலாம். கைத்தறியானாலும் சரி, கதரானாலும் சரி, விளம்பரம் இருந்தால் அதிகப்படியாக விற்பதற்கு ஏதுவாகும்.

பனைபொருளைப் பொறுத்தமட்டில், வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு, பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் 6 மாதத்திற்குரிய சம்பளத்தை வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தக் குறைபாடு இருக்குமானால் அதைக் களைய வேண்டும். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பனைவெல்ல சம்மேளனத்திலிருந்து தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது எனக்கு நேரிடையாகத் தெரிந்த விஷயம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து அவர்களுக்குரிய சம்பளத்தை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அடுத்து தேன் உற்பத்தி. தேன் உற்பத்தி செய்கின்ற பெரிய கூட்டுறவுச் சங்கம் கன்னியாகுமரியிலே இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே அதிகமாக தேன் உற்பத்தி செய்கின்ற ஒரு கூட்டுறவுச் சங்கம் மார்த்தாண்டத்தில் இருக்கிறது.

முற்பகல் 11.40

இந்த சீசனிலே, ஏறத்தாழ 1½ இலட்சம் கிலோவிற்கும் அதிகமான தேனை அவர்கள் உற்பத்தி செய்கின்றார்கள். ஆனால், இந்தத் துறை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு என்றால், ரூ. 23 இலட்சம். இதனை அவர்களுக்குக் கொடுத்தால், இந்த சீசனிலே அதிகப்படியான தேனை அவர்கள் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால், அதற்கு அருகிலே, திருத்துவபுரம் என்ற இடத்தில், 'பேக்கிங் சென்டர்' ஒன்று இருக்கின்றது. அந்த 'பேக்கிங் சென்டரி'-ல் தேனை வாங்குவதற்கு எப்படி அனுமதித்தார்கள் என்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. ஏனென்றால், அதிகப்படியாக தேன் கிடைக்கின்ற இந்த நேரத்தில், குறைந்தபட்ச விலை என்று, ஒரு கிலோ தேனை ரூ. 30, ரூ. 35-க்குக் கொள்முதல் செய்கிறார்கள். ஆனால், அதை விற்கின்றபோது, ரூ. 60-க்கு விற்கின்றார்கள். இந்த 'பேக்கிங் சென்டர்' தேனை வாங்குவதற்கு எப்படி, யார் மூலமாக அனுமதித்தார்கள் என்பது தெரியவில்லை. இதன் காரணமாக ஒரு கூட்டுறவு ஸ்தாபனமே அழிந்து போகக்கூடிய துர்பாக்கியமான நிலைமை இருக்கின்றது. ஆகவே, இதனைச் சீர்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே கமிஷன் ஏற்பாடு அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. ஆகவே, இதனைக் கண்காணித்து, இந்தக் கூட்டுறவுத் துறை வளர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தேன் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையான



ரூ. 23 இலட்சத்தினை அவர்களுக்குக் கொடுத்திடவும், அதற்கு மேல், மூலதனச் செலவிற்கென ரூ. 20 இலட்சம் ஒதுக்கித் தரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கமானது, 1400 ஊழியர்களைக் கொண்ட, 5,000 குடும்பங்களுக்கு வாழ்வளிக்கக்கூடியது. அச்சங்கம் வளர்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோலத்தான், கதர் கிராமத்துறை உற்பத்தி செய்கின்ற சோப்பு.

இன்னும் ஒன்று, தும்பு. கன்னியாகுமரி மாவட்டத்திலே, குளச்சலில் ஒரு தும்பு பேக்டரி இருக்கின்றது. அது அரசினுடையது. அந்த பேக்டரி, பல வருடங்களாக, படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருக்கின்றது. கடந்த ஐந்தாண்டு காலத்தில், அதனை யாரும் என்னவென்று தீண்டவில்லை. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றது. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற தும்பை, கப்பலில் ஏற்றி படகிலே ஏற்றிச் சென்று, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். ஆகவே, அந்தத் தும்பு உற்பத்தித் தொழிலை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று, இந்த வாரியத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற சோப்பு, பிரஷ் மற்றும் பனை நாரிலேயிருந்து, பனை ஓலையிலேயிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்துப் பொருட்களின் உற்பத்தியையும் பெருக்கி, அதனை விற்பனை செய்வதன் மூலம், இந்தத் துறை இன்னும் அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகள் பெருகும். அதைப்போல,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் இயங்குகின்ற தும்பு ஏற்றுமதி நிறுவனத்தினை நானே நேரடியாகச் சென்று பார்த்தேன். அங்கே இருந்த குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு, தற்போது அந்த ஏற்றுமதி நிறுவனம் நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த விவரங்களுக்கு நன்றி. இருந்தாலும்கூட, அந்த நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கின்ற கட்டிடத்தின் ஒரு பகுதி

உடைந்திருக்கின்றது. ஆகவேதான், அதனை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அந்த பேக்டரி பாதுகாக்கப்பட வேண்டும். இந்த சீசனிலே. அதாவது ஆனி, ஆடி மாதங்களிலே அதிகப்படியாக தும்பு கிடைக்கின்றது. இந்தத் தும்பு உற்பத்தியை அபிவிருத்தி செய்வதன் மூலம், அந்தப் பிரதேச மக்களுடைய வருவாய் சௌகரியங்களை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்த முடியும்.

அதேபோன்று, பனை மரம் ஏறும் தொழிலாளர்கள். இன்று, மரம் ஏறுவதற்கு ஆளில்லை என்ற பொதுவான நிலைமை உருவாகியிருக்கின்றது. காரணம், அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய உரிய வருவாய் இல்லை. அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில், அவர்களுக்குக் குடிமனைப்பட்டா கேட்கிறார்கள். பல்வேறு பகுதிகளிலே, பல்வேறு தாப்பினர்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளை இந்த அரசு கட்டிக் கொடுத்து வருகின்றது. அதைப்போல, இவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோன்று, மாநில அளவில் இருக்கின்ற இந்த வாரியத்தின் கீழ் இவர்களையும் கொண்டு வந்து, இவர்கள் உற்பத்தி செய்கின்ற பதநீரானாலும் சரி, கற்கண்டானாலும் சரி, பனை ஓலையானாலும் சரி, நாரானாலும் சரி, இவற்றின் உற்பத்தியினை அதிகரித்து, இத்தொழிலையே நம்பி வாழ்கின்ற இம்மக்களுக்கு உதவுகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். பனை மரம் ஏறுகின்ற தொழிலாளர்கள் அதிகப்படியான அளவில் தங்களுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகையில், இந்த வாரியம் இவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, தன்னுடைய பணியினை ஆற்றுமானால், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற கைத்தறி மற்றும் சுற்றுச்சூழல் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்காக, தங்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*1989-91* ஆண்டுகளில் நடைபெற்ற கழக ஆட்சியில், கைத்தறியும், அதிலே ஈடுபடுகின்ற நெசவுத் தொழிலாளர்களும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, அன்றைக்கு பல சலுகைகளைக் கழக அரசு அளித்து வந்தது. ஆனால், இடையிலே வந்த அரசு, அந்தச் சலுகைகளையெல்லாம் நீக்கிவிட்டது. எனவே, அதைத் திரும்பவும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, கைத்தறித் துணிகள் தேக்கமின்றி விற்பனை செய்வதற்கு, கழக அரசு *1990*-ஆம் ஆண்டு, ஒரு ஆண்டுக்கு *100* நாட்களுக்குத் தள்ளுபடி மானியம் வழங்கி உத்தரவிட்டது. இதனால், நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், துணிகளை ஆண்டு முழுவதும் தேக்கம் அடையாமல் வியாபாரம் செய்து வந்தன. சமீபகாலத்தில் இந்தத் தள்ளுபடி வழங்குவதில், பட்டு இரகங்களைப் பொறுத்தவரையில், உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும், பட்டு இரகங்களைப் பொறுத்தவரையில், அரசு சிறப்புத் தள்ளுபடி இல்லை என்கிற நிலைமை ஏற்படும் என்பது தெரியவருவதாலும், வரும் ஆண்டுகளில், *1992-93*ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அளவிற்குத்தான் அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும் என்ற நிலை உள்ளதாலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் பாதிக்கப்படும் என்பதால், நெசவாளர் நலன் கருதி, ஆண்டுக்கு *100* நாட்களுக்கு அரசு தள்ளுபடி வழங்க அனுமதி வழங்க வேண்டும் என நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், தற்போது ரூ.*4,000* மதிப்புக்குப் பட்டாடை உட்பட்ட சேலைகளுக்கு மட்டுமே அரசு சிறப்புத் தள்ளுபடியாகவும், அதற்கு மேல் மதிப்புள்ள சேலைகளுக்கு சங்க சிறப்புத் தள்ளுபடியாகவும் வழங்கபபட்டு வருகிறது. இந்த மதிப்பீடு நீக்கப்பட்டு, அனைத்து இரக பட்டுச் சேலைகளுக்கும் அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

ஏழையெளிய மக்களுக்கு வேட்டி சேலை வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தடங்கலின்றி தொழில் வருவாயும் கிடைக்கும் என்ற உன்னத நோக்கோடு, கழக அரசு *1989*-ஆம் ஆண்டில். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள், மாதத்திற்கு இரண்டு மாவட்டங்களில் இலவசமாக வழங்கப்பட்டது. இதனால், நெசவாளர் கூட்டுறவுச்

[திரு. பொ. முருகேசன்] [1997 ஏப்ரல் 9

சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகள், மாதா மாதம், மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டதால், கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியான துணிகள், தேக்கமின்றி விற்பனையானதுடன், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைத்தன. ஆனால், பின்னர் வந்த அரசு, சுய இலாப நோக்கத்தோடு, தேவையான வேட்டி, சேலைகளை டி.ஏ.டி.சி. மூலமாகவும் மற்றும் தனியார்களிடத்திலும் தரக் குறைவான துணிகளை வாங்கியது. மிகக் குறைந்த வேட்டி, சேலைகள்தான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே அன்றைக்கு வாங்கியது. இத்தகைய செயலால், நெசவாளர்கள், வேலைவாய்ப்பு இழந்ததோடு, ஏழையெளிய மக்களுக்கும் தரமான, சரியான அளவுள்ள வேட்டி, சேலைகள் கிடைக்காமல் போனது. ஆகவே, இன்றைக்குத் தேவைப்படும் வேட்டி சேலைகளை, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து, பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், அண்ணல் காந்தியடிகள் ஆகியோர் பிறந்த நாட்களிலும், தைத் திங்கள், தீபாவளி, புத்தாண்டுப் பிறப்பு ஆகிய நாட்களிலும், தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்டங்களுக்குப் பிரித்து அளிப்பதன் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகள் தேங்காமலும், கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பும், வருவாயும் கிடைக்கச் செய்ய முடியும். பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற சிறுவர், சிறுமியருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைக்காகத் தேவைப்படும் துணிகள், 1989-இல், கழக அரசில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தீவிர கைத்தறி உற்பத்திச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டது. ஆனால், முந்தைய அரசு, சுய இலாபத்திற்காக, தனியார் ஆலைகளிலிருந்து துணிகளைக் கொள்முதல் செய்தது. இதனால், இத்தொழிலை நம்பியிருந்த நெசவாளர்கள், வேலையிழப்புக்கு ஆளானார்கள். ஆகவே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தீவிர கைத்தறி உற்பத்தித் திட்டங்கள் மற்றும் விசைத்தறி சங்கங்கள் வாயிலாக உற்பத்தி செய்து, அவற்றை வழங்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கழக அரசு, மருத்துவமனை, சிறைச்சாலை, போக்குவரத்து மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தேவையான சீருடைகளில், 50 சதவிகிதம், கைத்தறித் துணிகளை வாங்க வேண்டுமென ஆணையிட்டிருந்தது. இந்த வரம்பு, முந்தைய ஆட்சியாளர்களால் மாற்றப்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் அரசுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் 50 சதவிகிதம் கைத்தறித்



1997 ஏப்ரல் 9] [திரு. பொ. முருகேசன்]

துணிகளை உபயோகிக்க வேண்டுமென ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களுக்குத் தேவையான 'கோரா'வை, 'டான்சில்க்' மூலமாக வாங்க வேண்டுமென்று உத்தரவு வந்துள்ளது. கர்நாடக பட்டுக்குச் சற்று குறைந்த, தமிழக 'கோரா' பட்டை, அதிக விலைக்குக் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. இதனால், பட்டுச் சேலைகளின் விலைகள் அதிகமாகி உள்ளது. எனவே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களே, அண்ணா பட்டு பரிமாற்றம் மற்றும் கர்நாடக போர்டிலே, தரமான 'கோரா'வைக் கொள்முதல் செய்துகொள்ள உத்தரவு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

தமிழ்நாட்டில் தற்போதுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 11 ஆலைகள் மட்டுமே நல்லமுறையில் இயங்குவதாகவும், 7 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காமல் பெருத்த நஷ்டத்தில் உள்ளதாகவும் தெரிகிறது. அந்த 11 கூட்டுறவு நூற்பாலைகளில் ஒரேயொரு கூட்டுறவு நூற்பாலை மட்டும் இலாபத்தில் இயங்குவதாகவும் மற்ற 10 ஆலைகள் நஷ்டத்தில் இயங்குவதாகவும் தெரிகிறது. இந்த நிலை கடந்த கால ஆட்சியில் தரமில்லாத பஞ்சு வாங்கியதாலும் மற்றும் நிர்வாகக் காரணங்களாலும் ஏற்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) இதனை மாற்றி தரமான பஞ்சு மற்றும் தூய்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தி எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளையும் நல்லமுறையில் செயல்படுத்தி சங்கங்களுக்குச் சீரான, தரமுள்ள நூலை சப்ளை செய்வதோடு ஆலைப் பணியாளர்களுக்கும் தொடர்ந்து வேலை கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திரா போன்ற மாநிலங்களில் இந்த நூலுக்கு விற்பனை வரி இல்லை என்று தெரிகிறது. எனவே, தமிழக அரசும் 2 சதவிகித விற்பனை வரியை நீக்கிட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் 1,400-க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கென அரசு முதலீட்டில் துவக்கப்பட்ட மாநிலச் சங்கம் இருக்கிறது. அது சமீப காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்வதை வெகுவாகக் குறைத்துள்ளது.

அதிலும் குறிப்பாக காஞ்சிபுரத்திலுள்ள காஞ்சிபுரம் பட்டு மார்க்கெட்டிங் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கிருஷ்ணா மார்க்கெட்டிங் கூட்டுறவுச் சங்கம் ஆகிய கூட்டுறவுச் சங்கங்களில் பட்டுச் சேலைகள் கொள்முதல் செய்யப்படுவதில்லை. இதனால் கிட்டத்தட்ட 2 சங்கங்களிலும் 1 கோடி ரூபாய்க்கு மேல் பட்டுச் சேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் நெசவாளர்களுக்கு மிகுந்த தொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே கோ-ஆப்-டெக்ஸ் ஆரம்ப நெசவாளர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. எனவே, எனக்குக் கூடுதலாக 2 நிமிடங்கள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையில் பேரவைத் தலைவர் சொல்லிவிட்டுப் போனது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அவருடைய உத்தரவை மீறி நான் எதுவும் செய்ய முடியாது. 7 நிமிடங்கள் தான்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்-டெக்ஸ், ஆரம்ப நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் கொள்முதல் செய்வதன் மூலமாக வேலைவாய்ப்பை உருவாக்கிட வேண்டுகிறேன். பட்டு நெசவுக்குப் பெயர் பெற்றிருக்கிற காஞ்சிபுரத்தில் நெசவாளர்களின் பிள்ளைகள் பயன்பெறும் வகையில் அங்கே நெசவுத் தொழில் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். அங்கு நவீன முறைகளைப் பயன்படுத்தி துணிகளை உற்பத்தி செய்வதற்கு என பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் துணிகளை மாநில அரசு மத்திய அரசு மூலம் ஏற்றுமதி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டு மற்றும் உற்பத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சிப்பந்திகளுக்கு 1991-ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். சங்கங்களின் நிதிநிலைக்கேற்ப அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களே சிப்பந்திகளுக்கு





சம்பளம் நிர்ணயம் செய்துகொள்ள அனுமதி அளிக்க வேண்டும். இவ்வாறு வழங்குவதால் அரசாங்கத்துக்கு எந்தவிதமான இழப்பும் இல்லை. சிப்பந்திகளுக்கு சம்பளம், அகவிலைப்படி மற்றும் வீட்டு வாடகைப் படி முதலியவைகளை அவ்வப்போது அரசினால் உயர்த்தப்படும்போது அதே விகிதத்தில் அவைகளை உயர்த்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்கூறி, இந்த மானியத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சூழல், கைத்தறி நெசவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச அனுமதி தந்த உங்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு தங்களுடைய தலைமையின் கீழ் என்னைப் பேச அனுமதித்தற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தாங்கள் உடல்நலம் இல்லாது இருந்தீர்கள் என்று கேள்விப்பட்டேன். தற்போது உடல்நலம் பெற்று இங்கே வந்து அமர்ந்திருக்கிறீர்கள். பலரும் இங்கே உங்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதேபோல நானும் தங்களின் உடல்நலம் வேண்டி நான் வணங்கும் பன்னாரி அம்மனை வேண்டி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். முதலாவதாக இந்தச் சுற்றுச் சூழல் பற்றிய . . (மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் எந்த அம்மனை வேண்டிக்கொள்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் மீது இருக்கிற அக்கறையின் காரணமாக அவர் பூரண நலமடைய வேண்டுமென்று நான் பன்னாரி அம்மனை வேண்டிக்கொள்கிறேன்.

சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 7-லே ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே 'தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டுத் தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையம் அமைக்கும் தீவிரமான திட்டத்தில், வாரியம் முக்கியமான பங்கினை வகிக்கிறது' என்று ஒருசில கருத்துக்களை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-55*

அமைச்சர் அவர்கள் இங்கே வளாகத்தில் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் சொல்வதை காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். சேலம், ராஜாஜி மாவட்டங்களில் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய சேலம் மாவட்டத்திற்கு அருகிலே இருக்கின்ற பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இந்த ஜவ்வரிசி ஆலைகள் குறித்து விளக்கமாகத் தெரியும் என்று நினைக்கின்றேன். அங்கெல்லாம் லட்சக்கணக்கான விவசாயிகள் குச்சிக் கிழங்கு பயிர் செய்து கொணடிருக்கிறார்கள். கிடடத்தட்ட 600-லிருந்து 700 தொழிற்சாலைகள் வரை அங்கே இருக்கின்றன. இந்த ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது எந்தவிதமான தீங்கும் அற்றதாக உள்ளதால் அதை அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு புதிய ஜவ்வரிசி ஆலையை அமைக்க வேண்டுமென்றால் அதனுடைய முதலீட்டுக்கு கிட்டத்தட்ட 5 லட்ச ரூபாயிலிருந்து 10 லட்ச ரூபாய் வரை தேவைப்படுகிறது. இந்த ஜவ்வரிசி ஆலைகள் எல்லாம் சிறு தொழில்கள் என்று பதியப்பட்டு இருக்கின்றன. அப்படி இருக்கும்போது அரசாங்கம் கூறுகின்ற கண்டிசனபடி சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க வேண்டுமென்றால், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கூறுகின்ற நிபந்தனையின்படி செயய வேண்டுமென்றால், அதற்காக கிட்டத்தட்ட 10 லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இதன் காரணமாக 200 தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. மீதம் இருக்கின்ற 500 தொழிற்சாலைகள் இந்தக் கழிவுநீரை வெளியேற்றும்போது, இரண்டாவது தொட்டியிலிருந்து 3-வது தொட்டிக்குவிட்டு அதற்குப்பிறகு அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அதிலே எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. இருந்தபோதிலும், இந்த ஜவ்வரிசி ஆலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீரானது எந்தவித குந்தகத்தையும் விளைவிக்காத காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொள்ள வேண்டும். வேண்டுமென்றால், மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் எங்களது சேலம் மாவட்டத்திற்கு வரலாம். சேலம் மாவட்டத்திற்கு அவர்கள் வந்து, ஜவ்வரிசி ஆலை அதிபர்களை எல்லாம் அழைத்து ஒரு கருத்தரங்கினை நடத்தி, அதில் உள்ள சாதக பாதகங்களை எல்லாம் அவர்கள் பார்ப்பார்களானால் இதற்கு ஒரு விதிவிலக்கு கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பல்வேறு தொழில்களுக்கு, கிட்டத்தட்ட 28 முதல் 30 திட்டங்கள்வரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜவ்வரிசி தொழிலுக்கு ஒரே ஒரு திட்டத்தை மட்டும்தான் அமுலாக்கி இருக்கிறீர்கள். இந்த ஜவ்வரிசி ஆலைகளை எல்லாம் உயர் அதிகாரிகள் பார்த்தார்கள். அப்படி, அவர்கள் சேலத்திற்கு வந்து பார்த்தபோது 3, 4 ஜவ்வரிசி ஆலைகள் ஒன்றாகச் சேர்ந்தால் நாங்கள் மானியம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி 3, 4 ஜவ்வரிசி ஆலைகள் ஒன்றாகச் சேர்ந்து 'டிரீட்மென்ட் பிளான்ட்' கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் அங்கே இல்லை காரணம் வெவ்வேறு இடங்களில் தொழிற்சாலைகள் அமைந்து இருக்கின்றன. தனியாக 'டிரீட்மென்ட் பிளான்ட்' கட்டுவோருக்கு 20 சதவீத மானியம் தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, தனிப்பட்ட தொழிற்சாலை அதிபர்களுக்கும் இந்த மானியத்தைக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ 41 கோடி என்பது 1992-93-ல் அரசு நிர்ணயித்த தொகையாகும். அமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசியபோது இந்த மானியத் தொகை உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் நிறுத்தப்பட்டது என்று கூறினார்கள். நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 41 கோடி ரூபாய் என்பது 1992—93-ல் ஒதுக்கப்பட்டதற்கு ஏற்ப இருந்தாலும், தற்போதைய நூலின் விலை, நெசவாளர் கூலி ஆகியவற்றைப் பார்க்குமபோது இந்த 41 கோடி ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களது கேள்விக்கு பதில் சொல்லும்போது, இந்த அரசு 41 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்றும் இரண்டு கோடி ரூபாயை அதிகமாக உயர்த்தி இருக்கிறது என்றும் கூறினார்கள். தற்போது நூலின் விலை எந்த அளவுக்கு இருக்கிறது, நெசவாளர்களின் கூலி எவ்வளவு உயர்ந்து இருக்கிறது, மெஷினரீஸ் விலை எந்த

அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது உயர்த்தப்பட்ட இந்த இரண்டு கோடி ரூபாய் என்பது மிகமிகக் குறைவான தொகையாகும். எனக்கு முன்னால் பேசிய 5, 6 உறுப்பினர்கள் இதைக் குறித்துப் பேசியிருக்கிறார்கள். இந்த உச்ச வரம்பைப் பொறுத்தவரையில் 41 கோடி ரூபாய் என்பது மிகமிகக் குறைவானதாகும். இதை நீங்கள் தளர்த்த வேண்டும். ஒரு வருடத்தில் 100 நாட்கள் உற்பத்தி செய்யும் ஜவுளி ஆலைகளுக்கெல்லாம் உச்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டுமென்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அனைத்து உறுப்பினர்களும் இது குறித்துப் பேசியிருக்கிறார்கள். எனவே இந்த உச்சவரம்பினை நீங்கள் உயர்த்த வேண்டும். இதற்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அடுத்தபடியாக இங்கு 22 ரகத்தைப் பற்றிக் கூறினார்கள், அவற்றில் 11 சரியாகச் செயல்படவில்லை என்று கூறினார்கள். அந்த ரகத்தைப் பொறுத்தவரையிலும் இது என்னுடைய கருத்து என்றார்கள். பாராளுமன்றம் என்றார்கள், சட்டமன்றம் என்றார்கள். ஆக ஒரு குளறுபடி நிலைதான் தற்போது இருக்கின்றது. எனவே, அந்தக் குளறுபடிகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

அடுத்தபடியாக, தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், நாங்கள் பதவிக்கு வந்தவுடன் முதல் வேலை இந்த 18 நூற்பாலைகளைத் திறப்பதுதான், அதனைத்தான் முதலில் செய்வோம் என்றெல்லாம் கூறினார்கள். அதுபோல பேரணிக்குக்கூட வந்திருக்கிறார்கள். ஆனால், எந்த நூற்பாலையும் திறக்கப்படவில்லை, மூடித்தான் கிடக்கிறது. குறிப்பாக, அறந்தாங்கி, தென்னாற்காடு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த நூற்பாலையும் திறக்கப்படவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். கடந்த மானியக் கோரிக்கையில் பேசியதற்குப் பின்பு 17 ஆலைகளைத் திறந்து, உற்பத்தியைத் துவக்கி நடைபெற்று வந்தன என்பது உண்மை. இடையிலே ஏற்பட்ட ஒரு சின்னக் கோளாறினாலே 6 ஆலைகள் மூடப்பட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்பது உண்மை. அந்த நிர்பந்தம் களையப்பட்டு இப்போது மூன்று ஆலைகள்





ஓட்டப்படுகின்ற நிலைமை உருவாகியிருப்பதும் உண்மை. இரண்டு ஆலைகளுக்கு அடுத்த வாரம் இயங்குவதற்குரிய ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பதும் உண்மை. சாரம் ஆலையிலும், புதுக்கோட்டை நூற்பாலையிலும் சட்ட ரீதியிலான பிரச்சினைகள் காரணமாகத்தான் இந்த இரண்டு ஆலைகள் ஓடுவதற்கு சற்று காலதாமதம் ஏற்படும் என்ற ஒரு நிலை இன்று உருவாகி இருக்கிறது. (குறுக்கீடு) இந்த இரண்டு ஆலைகள் மட்டும் சட்ட ரீதியிலான சில பிரச்சினைகள் காரணமாகவும், தொழிலாளர்களுடன் போடப்பட வேண்டிய ஒப்பந்தங்கள் இடையூராக இருக்கின்ற காரணமாகவும், இந்த இரண்டு ஆலைகள் மட்டும் ஓடுவதில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கியில் அமைந்திருக்கும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் பணியாற்றுகின்ற தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள், அ.தி.மு.க., தி.மு.க., கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என்று இருப்பவர்கள் எல்லாம் நீங்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டாலும் அவர்கள் ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வேண்டுமானாலும் உங்களுக்குத் துணையாக இருந்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கத் தயாராக இருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த ஆலையைத் திறக்க நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 18 ஆலைகளையும் ஓட்டுவது என்ற அடிப்படையிலேதான் நிதானமாக முடிவுகள் எடுக்கின்ற காரணத்தினால்தான் காலதாமதமேயொழிய வேறு காரணங்கள் இதிலே இல்லையென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நிச்சயமாக புதுக்கோட்டை ஆலையும் அது போல தென்னாற்காடு, சாரம் ஆலையும் கூடிய விரைவிலே தங்களுடைய உதவியோடு நிச்சயம் திறக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. இன்னும் நிறைய பேர் பேசவேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அறந்தாங்கி ஆலைக்கும் அது போல சாரம் ஆலைக்கும் வாக்குறுதி தந்திருக்கின்றார்கள். எங்களுடைய, வடஆற்காட்டில் இருக்கக்கூடிய அரியூர் நூற்பாலை கடந்த டிசம்பர் 6-ஆம் தேதியிலிருந்து மூடிக் கிடக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போன ஆண்டு பட்ஜெட்டிலே நலிந்த ஆலைகளுக்கு ரூ. 15 கோடியை ஒதுக்கியும் கூட, இதுவரை எங்களுடைய ஆலைக்கு அந்தப் பணம் ஒதுக்கப்படாத காரணத்தினால் மூடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு வார காலத்திலே அரியூர் கூட்டுறவு நூற்பாலையினைத் திறக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையிலே நான் விளக்கமாகச் சொல்வது என்ற முடிவோடுதான் இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அணைக்கட்டு கோபு அவர்களும் அரியூர் ஆலையைத் திறக்க வேண்டுமென்பதிலே எந்த அளவுக்கு ஈடுபாடோடு இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால், தீபாவளி நேரத்தில் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்திலே இழப்பு ஒன்று ஏற்பட்டது.

17 ஆலைகள் திறக்கப்பட்டு பஞ்சுக் கடன் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை, மூன்று கோடி ரூபாய் அளவிலே போனஸ் கொடுத்ததால் 6 ஆலைகளை மீண்டும் இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் இன்று வரை ஓடுகின்ற 11 ஆலைகளில் 8 ஆலைகள் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்போது ஏற்பட்டுள்ள நிலை பஞ்சுக்கடனோடு பழைய பாக்கி 10 சதவிகிதத்தை எந்த ஆலைகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறதோ, அந்த ஆலைகளில் இருக்கின்ற தொழிலாளர்களோடு, அவர்களுடைய ஊதிய விகிதத்தை அந்த அளவிற்கு குறைத்துக்கொண்டு எதிர்காலத்திலே இலாபம் பெறும்போது, அந்த ஊதியத்தை திரும்பப் பெற்றுக்கொள்கின்ற விதத்திலே போடப்பட்ட ஒப்பந்தத்திலேதான் இன்று காஞ்சிபுரம் ஆலையும், கரூர் ஆலையும், மிசேரியர் ஆலையும் கடந்த 15 தினங்களுக்கு முன்பு உற்பத்தியைத் துவக்கிவிட்டன.

அரியூர் ஆலை, மேலூர் ஆலை, இரண்டையும், அந்த ஒப்பந்தம் முழுமையாக முடியாவிட்டாலும், ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுத்துத் துவக்க உள்ளோம். இங்கே



ஏற்கெனவே எடுத்துச் சொன்னதைப்போல, அறந்தாங்கியிலே இருக்கின்ற ஆலையிலும், சாரத்திலே இருக்கின்ற ஆலையிலும், உச்ச நீதி மன்றம், உயர்நீதி மன்றம் ஆகியவற்றினுடைய தீர்ப்பின் காரணமாக, தொழிலாளர்கள் பிரச்சினை இருப்பதன் காரணமாக சற்றுக் காலதாமதம் ஆகிறதேயொழிய, திரு. ஞானசேகரன் கேட்டுக்கொண்டபடி அரியூர் ஆலை முறையாக ஓடும் என்ற உறுதிமொழியை அளிக்கிற அதேநேரத்தில் அதிலே நடந்திருக்கிற பல தவறுகளையும் என்னுடைய பதிலுரையின்போது சுட்டிக்காட்ட இருக்கிறேன் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தப்பித் தவறி நான் பேசினால், அப்போதுதான் உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லாம் குறுக்கிட்டுப் பேசி, என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். என்னுடைய கருத்தை இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அவை அனைத்திற்கும் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. அந்தத் தேர்தல்கள் எல்லாம் நியாயமாக நடந்தனவா, முறைகேடாக நடந்தனவா என்பதைப்பற்றி எல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. எப்படியோ தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. சங்க நிர்வாகிகள் எல்லாம் பதவியேற்று விட்டார்கள். தற்போது அங்கே தனி அலுவலர் பதவி என்பது தேவையா? அப்படி அந்தத் தனி அலுவலர் பதவி இருக்கும்போது, அவர்களுக்குச் சங்கம்தான் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. சங்கங்கள் எல்லாம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அரசே அவர்களுக்கான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் அல்லது அந்தத் தனி அலுவலர் பதவியை எடுத்துவிட வேண்டும்.

அதேபோல, நூல்களை வாங்கும்போது தரமான நூல் எங்கு கிடைக்கிறதோ, எங்கு குறைந்த விலையில் கிடைக்கிறதோ அதை வாங்குவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்.....

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தரமற்ற நூலாக இருந்தால்

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

திருப்பிக் கொடுத்து விடுகிற நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இப்போது வியாபார ரீதியாகக் கருதித்தான் இந்தத் துறை செயல்படுகிறது என்பதையும் தெரிவித்து, தரமற்ற நூல், தரமில்லாத நூல் என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு, தரமில்லாத நூலாக இருந்தால் திருப்பி அனுப்பிவிடக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுத்து, இப்போது நூலின் தரம் நன்றாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலின் தாம் நல்ல முறையில் இருந்தால், நீங்கள் நினைத்தபடி கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்துமே இன்னும் ஓராண்டு காலத்திற்குள் இலாபத்தை ஈட்டமுடியும் என்று நான் நினைக்கிறேன்.

சங்கங்கள் நூல் வாங்குவதற்கு மத்திய கூட்டுறவு வங்கியிலே கடன் வாங்கும்போது அவர்களிடம் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்தச் சங்கங்களிலிருந்து தயாரிக்கும் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வாங்கும்போது, சங்கத்திற்கு 6 மாத காலம், 1 வருட காலம் பணத்தைக் கொடுக்காத காரணத்தால் அவர்களுக்கு வட்டி இழப்பு ஏற்படுகிறது. சங்கமானது அவர்கள் சம்பாதிக்கிற பணத்தினுடைய ஒரு பகுதியை வட்டிக்காகவே கொடுக்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே துணிகளைக் கொள்முதல் செய்கிற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 6 மாத காலம், 1 வருட காலம் என்று பணத்தைக் கொடுக்க தாமதம் செய்யாமல், 30 நாட்களில் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி நட்டம் ஏற்படாது. (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக, கதர்த் துறையைப் பொறுத்தவரையில் நான் நிறைய பேசவேண்டியிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களிடம் மனுவைக் கொடுத்து விடுகிறேன். என்னுடைய ராசிபுரம் பகுதியைப் பொறுத்தவரை அது பிற்படுத்தப்பட்ட பகுதியாக உள்ளது. அங்கே நிறைய பனையேறும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இப்போது அவர்கள் எல்லாம் அந்தத் தொழிலை விட்டுவிட்டுப் போகக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். பனையேறும் தொழிலாளி ஒருவர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 50 ஆயிரம் மானியமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது பனைபொருட்கள் உற்பத்தி செய்யும் சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிவாரணம் கிடைக்கச் செய்யவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபோது, நூற்பாலைகள் எல்லாம் தற்போது



1997 ஏப்ரல் 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

இலாபத்திலே இயங்குகின்றன என்று சொன்னார்கள். தற்போது நீங்கள் நட்டத்தை எல்லாம் இலாபமாகக் காட்டிவிட்டீர்கள். ஆகவே, ராசிபுரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையைத் துவங்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஆரம்பத்திலே கூறியபடி, முக்கியமான பிரச்சினை, சேலம் மாவட்டத்தில் நீண்டகாலமாக உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலை பிரச்சினை. அதிலே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விதித்துள்ள விதிகளை நீங்கள் சற்றுத் தளர்த்த வேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு தேதியை குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், நாங்களே அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று அந்த பேக்டரியைக் காட்டுகிறோம். அங்கே 'ட்ரீட்மென்ட் பிளான்ட்' போடவேண்டுமென்று மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சொல்வதைத் தவிர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

*பிற்பகல் 12-10*

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். 1997-98-ஆம் ஆண்டிற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை அளித்திட்ட தானைத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட விவசாயப் பெருமக்களின் நீண்டகால கோரிக்கையான, சுமார் 15,000 ஏக்கர் நீர்ப் பாசனத்திற்கு வகை செய்யும் திட்டங்களான செண்பகத்தோப்பு அணைத் திட்டத்தையும், குப்பநத்தம் அணைத் திட்டத்தையும் வழங்கிய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், இந்தத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், எங்கள் மாவட்ட அமைச்சரான வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களையும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும், எங்கள் மாவட்ட மக்களின் சார்பாகவும் பெரிதும் போற்றி வணங்குகிறேன்.

D
216653 V2H, 31'N97
N97.29.1

அதேபோன்று, ஆரணியைச் சுற்றி இருக்கின்ற செய்யார், போளூர், ஆற்காடு ஆகிய தொகுதி மக்களுடைய நலனைக் கருதி ஆரணி அரசுப் பொது மருத்துவமனைக்கு மேலும் 36 படுக்கைகளை வழங்கி, மருத்துவமனையின் தரத்தை உயர்த்தித்தந்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் தொகுதி மக்களின் சார்பாகப் போற்றி வணங்குகிறேன்.

சமீப காலமாகப் பெய்த மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்தோருக்கும், வீடு இழந்தவர்களுக்கும், விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்கிய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை இந்த நாடே போற்றுகின்றது. அதேபோன்று என் தொகுதி மக்களும் வெகுவாகப் பாராட்டிப் போற்றுகின்றனர்.

அதேபோன்று, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளப் பெருமக்களில், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாத, நிவாரணம் வழங்கப்படாத நெசவாளர்கள், என்னுடைய தொகுதியையும் சேர்த்து 5,300 நெசவாளர்களுடைய கோரிக்கை மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு இன்று சென்னை சி.ஆர்.ஏ., அலுவலகத்தில் நிலுவையில் உள்ளன. இந்த பாரபட்சத்தினைப் போக்கிட வேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க உத்தரவினை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கைத்தறி நெசவாளர்களின் தொழில் பாதுகாப்பிற்காகவும், கைத்தறித் துணிகளைத் தேக்கமின்றி விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்து 1990-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியின் போது ஆண்டிற்கு 100 நாட்கள் தள்ளுபடி வழங்குவது என்றும், அதே நேரத்தில் மத்திய அரசினால் வழங்கப்படும் தள்ளுபடி தொகையினைவிடக் கூடுதலாகும் தொகையினை தமிழக அரசே ஏற்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு வந்த, நெசவாளப் பெருமக்களின்மீது சிறிதும் அக்கறை இல்லாத ஜெயலலிதா ஆட்சியில் மத்திய அரசின் பங்காகக் கிடைக்கும் ரூபாய் 13 கோடி மானியம் போக 28 கோடி ரூபாய் தமிழக அரசின் மானியம் மட்டுமே வழங்க விதிக்கப்பட்ட உச்ச வரம்பால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாய் தொகை, கொடுக்கப்பட வேண்டிய தொகையாகவே இருந்து வருகிறது. இந்த





நிலைமை மாற்றி நெசவாளர்களின் பாதுகாப்பு அரணாக விளங்கும் கலைஞர் அவர்கள், கைத்தறித் துணிகளை தனியாரோடு போட்டியிட்டு விற்பனை செய்ய முடியாமல் அவை தேக்க நிலையில் உள்ளதை நீக்கி, தேவையான தள்ளுபடி மானியத்தை வழங்கி நெசவாளர்களைப் பாதுகாப்பதோடு, கைத்தறித் துணிகளைத் தேக்கமின்றி விற்பனை செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களில் முத்தான திட்டம் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும். அந்தத் திட்டத்திற்கு 'ஹட்கோ'வால் அளிக்கப்படுகின்ற கடனுடன் அரசு மானியமாக ரூ.5,000 வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை ரூ. 10,000 ஆக உயர்த்தி, நெசவாளர்களுக்கு வீடுகளைக் கட்டி, அவர்கள் வாழ்வுக்கு வழிவகை செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் பட்டு கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை விற்பனை செய்கின்ற வகையிலே, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக முழுமையாக அரசு கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பட்டு கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படுகின்ற கச்சாப் பட்டு, டான்சில்க், நிர்ணயிக்கின்ற விலைக்குக் கூடுதலாகாமல் தரமான பட்டை சங்கங்களே கொள்முதல் செய்துகொள்ள உத்தரவு வழங்க வேண்டுமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கு வட்டியாக 12.5 சதவிகிதம் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்துகின்றன. இதில், 3 சதவிகிதம் வட்டியை அரசு வழங்குகிறது. இதை 6 சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு உயர்த்தித்தந்து நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைக் காப்பாற்ற வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஜரிகை ஒதுக்கீட்டுக் கமிட்டியில் தற்போது அரசுத் தரப்பு அதிகாரிகள் மட்டுமே உள்ளார்கள். அந்த ஜரிகை ஒதுக்கீட்டுக் கமிட்டியில், தரமான ஜரிகையை கொள்முதல் செய்வதற்காகவும், முறையாகச் சீர்படுத்துவதற்காகவும், நெசவாளர் சங்கங்களில் உள்ளவர்களை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சிவானந்தம்.] [1997 ஏப்ரல் 9

*பிற்பகல் 12-15*

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தில் 58 வயதுக்கு மேற்பட்டவர்கள் இறந்துவிடுவார்களே யானால், (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதியாக 250 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. அதேபோன்று முதிர்ந்த வயதடைந்த நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட முடியாமல் இன்னல்படுகிறவர்களுக்கும் மாதம் ரூபாய் 250 பாதுகாப்புத் தொகை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே தமிழகத்தில் மட்டும் சிட்டா நூலுக்கு 2% வரி விதித்து இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் பாதுகாப்புக்காக அந்த வரியை ரத்து செய்யுமாறு நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கூட்டுறவு நூற்பாலையிலே உற்பத்தி செய்யக்கூடிய சிட்டா நூலுக்கு கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வந்தது. இது 1992ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் தனியார் நூற்பாலைகளோடு போட்டியிட முடியாமல் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு மானியம் 20 ரூபாயை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே பட்டுத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற நெசவாளர்களுக்கும் கிலோ ஒன்றுக்கு 100 ரூபாய் பட்டுக்கு மானியமாக வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி 35 ஆயிரம் நெசவாளர்கள் வாழ்கிற பகுதியாக இருப்பதால், கச்சாப் பட்டு உற்பத்தி செய்கின்ற வகையிலே பட்டுப்பூச்சி வளர்ப்பு மையம் ஒன்றை ஆரணியிலே ஏற்படுத்தித் தருமாறு நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

எங்கள் தொகுதியில் 35 ஆயிரம் நெசவாளர்கள் வாழ்கிறார்கள். தனியார் பட்டுமனைகள் இருக்கின்ற காரணத்தினால், தேவையான ஜரிகை உற்பத்தி செய்வதற்காக ஜரிகை தொழிற்சாலையையும், சாயத் தொழிற்சாலையையும் அமைத்துத் தருமாறு மிகப் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நூதனமாக பட்டு டிசைனை உற்பத்தி செய்ய வேண்டி இருக்கின்ற காரணத்தினால், அதைத் தனியாரும் கூட்டுறவுச் சங்கங்களும் தனித்தனியாகச் செய்ய முடியாத காரணத்தினால் அவர்களுக்கு ஒரு கம்ப்யூட்டர் டிசைன் சென்டரை ஆரணியில்



1997 ஏப்ரல் 9] [திரு. ஆர். சிவானந்தம்]

அமைத்து நெசவாளப் பெருமக்களுக்கு உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்; நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆன் டி'மான்டி.

* **Tmt. ANNE D' MONTE:** Hon Speaker Sir, let me first commend the policy on Environment. I am aware that it is extremely difficult to implement the policy. On the one hand, we have diseases, poverty and drought which are some of the consequences caused by man-made activities. But at the sametime, developmental activities and environment must work together to improve human life. We have the environmental impact assessment not only for industrial development but more important, where our natural resources are depleted. In this connection, I would like to make a special reference to the Adyar Park area which is part of Adyar estuary. Already buildings are going on despite the coastal zone protection. Laws being breached. This is a sanctuary to which, we are all aware, bird life flock from all over the world as far from Siberia, in the winter season.

Even as the man developing parks is in progress with picnic sites, boating, water sports, food stalls, parking lots and public transport terminal, one can imagine what this could do to the bird life frequenting this particular area. Few cities in India have such natural resources like Adyar Estuary and its park land. Much we ruin it as in the case of Marina which has also been badly affected. Surely this is another case of environmental impact assessment. Will the Government please look into this matter? This is a call for protection of the city's natural resources and its man-made heritage.

Another disturbing matter we have in hand is the vehicle pollution which is threat to Chennai. It is time for the Government to take short-term and long-term measures to check this alarming state of affairs. I would like to suggest that the life of a vehicle should be fixed at between 10 or 15 years and not more. The life of the heavier vehicle should not be more than 10 or 15 years and such vehicles should be debarred from plying on the roads. The smoke emission levels of vehicles should be closely monitored and a special cell of the Police should be deployed for this.

[Tmt. Anne D' Monte] [1997 ஏப்ரல் 9

பிற்பகல் 12-20

Quality of petrol should be monitored as well to reduce pollution. This should also happen in diesel engine vehicles where fuel injection system needs servicing. While diesel is less harmful than petrol in terms of emission, automobile technology for the future depends on cars and bikes with low emission capability. For the time being, the energy density of petrol is unmatched. But petrol results in harmful exhaust emissions which are a source of concern for all.

My last point, I would like to bring to the notice of the Government is in regard to an Anglo-Indian School which has been established about 18 years ago in the heart of the city. Unfortunately, the school has 350 children. Adjoining the school, two years ago a chemical factory was set up. Noxious fumes and vapours from the factory have caused lot of health hazards to the children studying in the school. Complaints have been taken up to the Pollution Control Board, but to no avail. The letter which was dated the 4th of November 1995 by the Pollution Control Board, asked to remove the factory within 60 days. The position remains. I have tried to pursue this matter, without any success. This indeed is a grave matter, where Pollution Control Board have proved to be helpless. There are children involved. I would again like to plead to the Government to look into this matter. Thank you.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்த மாமன்றத்தில் கைத்தறி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கின்ற நம் கோபாலபுரத்துக் கொலுமண்டபத்தில் குடியிருக்கின்ற கொற்றவர், நமக்கு உற்றவர், ஏழைகளின் நன்மதிப்பைப் பெற்றவராம், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கைத்தறி மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்காக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசிய அதே கருத்தைத்தான் இப்போதும் நான் வலியுறுத்த



1997 ஏப்ரல் 9] [திரு. வி.பி. இராசன்]

விரும்புகிறேன். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரின் கீழ் நாடெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தாலும், அதிலே இரண்டு சங்கங்கள், குறிப்பாகப் பரமக்குடி எமனேஸ்வரத்திலும், ராஜபாளையம் சத்திரப்பட்டியிலும் இருக்கின்ற சங்கங்கள் சவலைப் பிள்ளைகளாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். குறிப்பாக, சத்திரப்பட்டியில் 4 சங்கங்கள் இருக்கின்றன. அந்த நான்கு சங்கங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட சீசன் மடி துண்டுகள் கொள்முதல் செய்யப்படாமல், ரிபேட் தொகை வரும் என்ற நம்பிக்கையில் உற்பத்தி செய்யப்பட்டு, இன்றைக்கு ரூ.1,13,37,000 பெறுமான சீசன் மடித் துண்டுகள் இந்தப் பகுதியில் ஸ்டாக் இருக்கின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் தேவைப்படுகிறபோது, மத்திய வங்கியின் மூலம் 1 கோடியே 62 லட்சத்துக்கு மேல் ரூபாய் கிடைத்தும், அந்தப் பணம் முற்றாகத் தீர்ந்துவிட்டபிறகு, இப்போது பணமும் இல்லாமல் அந்தச் சங்கங்கள் நலிவடைந்த சூழ்நிலையில் தொடர்ந்து செயல்பட வாய்ப்பில்லாமல், இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் வட்டியாக 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை வங்கிக்குச் செலுத்தமுடியாமல், அந்தச் சங்கங்கள் மேலும் தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆக இப்படிப்பட்ட காலகட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் பலமுறை எடுத்துச் சொல்லி,- அவர்களும் அந்தப் பகுதிக்கு வருகை தந்து,-கடந்த 19-2-1997-ல் அவர்கள் வருகை தந்தபோது, அந்தச் சங்கங்களுக்கு எல்லாம் நேரில் நாங்கள் அழைத்துப் போய் அங்கே தேங்கிக் கிடக்கிற, மலைபோல் தேங்கிக் கிடக்கிற அந்தத் துண்டுகளை அவர்களிடம் காட்டியும், மரியாதைக்குரிய அதிகாரி பெருமக்கள் எல்லாமும் வந்து பார்வையிட்டு இன்றைக்கு 60 நாட்களுக்கு மேலாகியும் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் இல்லையென்று சொன்னால், அந்தப் பகுதி மக்கள் மத்தியில் நாங்கள் எப்படிச் சேவை செய்யமுடியும்? இன்னும் சொல்லப்போனால், அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குதான் இதற்குக் காரணம் என்று அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் சொல்கிற்ர்கள். என்னதான் பாம்பாட்டிகள் நல்ல மகுடி கொண்டு ஊதினாலும் அதைப்பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படாமல் கேளாக் காதாய்ப் படுத்துறங்கும் செவிட்டு வீரியனைப் போல அதிகாரிகள் இருக்கிறவரையில், இந்தக் காரியங்கள் நடைபெறாத வரையில், அங்கே என்னைப் போன்ற அரசியல்வாதிகள் நடமாட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. என் வீட்டைச் சுற்றியே நான்கு சங்கங்கள். அதிலும் குறிப்பாக நெசவாளர் பிரச்சினை மட்டுமல்லாமல் குடிநீர்ப் பிரச்சினையும் தலை தூக்கியிருக்கிறது. ஆக, என் வீட்டைச் சுற்றி உள்ள குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்க்க

[திரு. வி.பி. இராசன்] [1997 ஏப்ரல் 9

முடியாமல், அந்த நெசவாளர் பிரச்சினையையும் தீர்க்க முடியாமல் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் அதிலும் குறிப்பாக எதிரணியைச் சேர்ந்தவர்கள் மேடைகளில் பேசுகின்றபோது, இராஜபாளையம் தொகுதிக்கு ஒரு இடைத் தேர்தல் வராதா என்று பேசுகின்றபோது உள்ளபடியே நான் வேதனைப்படுகின்றேன். இடைத் தேர்தல் வந்தால்தான் இதைத் தீர்க்க முடியும் என்று நம்புகின்ற ஒரு சூழல் வந்துவிட்ட பிறகு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.....

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசன் அவர்கள் மிகுந்த மனவேதனையோடு சொல்கிறார்கள். அவர்கள் நூறாண்டு காலம் வாழ வேண்டும். இடைத் தேர்தல் வரக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. வி.பி. இராசன்:** மிக்க நன்றி. ஆக, அந்த அளவுக்கு அந்தச் சங்கங்களில் தேங்கி இருக்கிற துணிகளுக்கு ஒரு முடிவு காணுங்கள். ஒன்று, கொள்முதல் செய்யுங்கள். கொள்முதல் செய்வதற்கென்று அதிகாரிகள் வருகிறார்கள்; கொள்முதல் செய்வோம் என்று சொல்லிவிட்டுச் சென்று கொண்டேயிருக்கிறார்கள். கொள்முதல் செய்யாவிட்டால், 'ரிபேட்' இவ்வளவுதான் என்று ஒரு வரைமுறை செய்யுங்கள். ஒன்றும் இல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கக் கூடியவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நீங்கள் இதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, இன்றைக்கு நீங்கள் தருகின்ற பதிலுரையில் ஒரு நல்ல பதிலைத் தருவீர்கள் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலுரையைத் தரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாக எடுத்துச் சொல்லி குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் பல வறட்சிப் பணிகளைப் பார்க்க



1997 ஏப்ரல் 9] [திரு. வி.பி. இராசன்]

அங்கு வருகை தந்தபோது-அங்கே சத்திரப்பட்டிக்கு வருகை தந்து-அவர்களே உத்தரவிட்ட பிறகும் இன்றைக்கும் அந்தக் குடிநீர்த் திட்டப் பணிகள், ரூபாய் 32 இலட்சத்திற்கு டெண்டர்கள் விட்டபிறகும் இன்னும் வேலை தொடங்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதுவும் என் வீட்டைச் சுற்றியிருக்கிற சத்திரப்பட்டியில்தான். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு பிரச்சினைகளிலும் அக்கறை செலுத்தி, இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி எமனேஸ்வரத்தில் இருக்கிற கைத்தறி நெசவாளர் சங்கங்களில் 6 கோடி ரூபாய் வரைக்கும் துணிகள் தேங்கி இருக்கின்றன. அந்தக் கைத்தறி நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் வருகை தந்திருக்கிறார்கள். ஆக இந்த இரண்டு பிரச்சினைகளிலும் நீங்கள் அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த இரண்டு சவலைப் பிள்ளைகளுக்கும் ஊட்டச்சத்தாக நீங்கள் 'ரிபேட்' வழங்கினால்தான் அவற்றைக் காக்க முடியும். இல்லை, ரிபேட் வழங்குவதற்கு வழியில்லை என்று சொன்னால் நல்ல மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதைப்போல, எங்கள் ஊரைச் சுற்றியிருக்கிற சங்கங்களுக்கும் எமனேஸ்வரம் சங்கங்களுக்கும், நீங்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்து, நல்ல பதிலுரையை வழங்கி, எங்கள் பகுதியிலே நாங்கள் நெஞ்சை நிமிர்த்தி அரசியல் நடத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். பல்வேறு நல்ல காரியங்கள் செய்திருந்தும் கூட இந்த ஒருசில பிரச்சினைகளால் எங்களுக்கு நடமாட முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை மாற்றி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பதிலுரையை வழங்க வேண்டுமென்று கேட்டு, **நான் மறுபடியும் சொல்லி, எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் நீங்கள் எங்களுக்கு கைத்தறித் துறையில் நல்ல முறையில் சேவை செய்ய வேண்டுமென்றும், இதனால் உங்களுக்கு எங்கள் பகுதியிலேயும் இந்த மாமன்றத்திலேயும் நல்ல பெயர் கிடைக்கும் என்பதைச் சொல்லி வணங்கி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **என்பதை நீக்க வேண்டும். அது தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **அவர்கள் குறிப்பிட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** **இங்கே அது தேவையில்லை. நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** **இங்கே தேவையில்லை என்று சொல்கிறார்கள். சரி. மொத்தமாக எல்லாவற்றையும் நீக்கலாம். திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் கைத்தறித் துறைக்கான மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்காக தங்களுக்கும், நான் போற்றி வணங்கும் எங்கள் அருமைத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கும் காங்கேயம் தொகுதி மக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய காங்கேயம் தொகுதியில் மட்டும் 50-க்கும் மேலான பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள சாதாரண குடும்பங்கள், விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். இந்தத் தொழிலில் நெய்தல் தவிர, தார் சுற்றுதல், வார்ப்புப் பாவு ஓட்டுதல், பாவு பிணைத்தல், ஊடுநூல் ஓட்டுதல், சாயம் இடுதல் போன்ற எல்லா வேலைகளையும் நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த மனைவி மக்களே உபதொழிலாகக் கொண்டு செய்துவரும் ஒரு தொழில்தான் கைத்தறித் தொழில். இந்த அடிப்படையில்தான் கைத்தறித் தொழிலில் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என்ற எண்ணத்தில் இந்தச் சபை முன் தலைவர் கலைஞர் அவர்களுடைய முன்னிலையில் என்னுடைய 12 கோரிக்கைகளை வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



தள்ளுபடி மானியம் என்பது கைத்தறித் தொழிலில் எதிர்நோக்கியிருக்கும் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வரையிலாவது கண்டிப்பாகத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட தொகை என்று இல்லாமல் முன்புபோல ஒரு குறிப்பிட்ட விழுக்காடு என்று கொடுத்து, வருடத்திற்கு 100 நாட்கள் என்று இருப்பதை எல்லா நாட்களும் என்று நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

இரண்டாவதாக, கைத்தறி ரகத்திற்கு ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த 11 ரக ஒதுக்கீட்டைக்கூட அரசு அமல்படுத்த இயலாத நிலைதான் இப்போது உள்ளது. கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கும் இந்தச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இதைச் செய்ய முடியாத நிலை தொடருமேயானால் இதைச் சீர்படுத்தும் வரை தள்ளுபடி மானியத்தை கைத்தறிகளுக்கு தொடர்ந்து கொடுக்க வேண்டும். மேலும் முன்பு ஒரு காலத்தில் நூற்பாலைகளுக்கு கைத்தறி செஸ் விதித்ததைப் போல-இதை அமல்படுத்த முடியவில்லை என்றால்-விசைத் தறிகள் மீது செஸ் விதிக்கச் செய்து, அதன்மூலம் வரும் வருமானத்தை கைத்தறிகளுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய இரண்டாவது கோரிக்கை.

நூற்பாலைகள் மீது விதிக்கப்பட்ட மேற்சொன்ன செஸ் ஜூன் 1990 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் டி.சி.செஸ் என்று தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி அளவில் வசூலிக்கப்பட்டாலும் அது நமது அரசுக்கு வந்து சேர்வதில்லை. இதை மத்திய அரசிடமிருந்து பெற்று கைத்தறி நெசவாளர்கள் மேம்பாட்டிற்குச் செலவிட வேண்டும் என்பது என்னுடைய மூன்றாவது கோரிக்கை.

எப்போது பார்த்தாலும் போலிச் சங்கங்கள் இருக்கின்றன என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தப் போலிச் சங்கங்களை அறவே நீக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். தவறு செய்கிற சங்கங்களைக் களையெடுக்கிற வகையில் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் போர்க்கால அடிப்படையில் வேறு மாவட்டங்களிலிருந்து அதிகாரிகளை அனுப்பி மாநிலம் தழுவிய ஒரு ஆய்வை உடனடியாக எடுக்கச்

[திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்] [1997 ஏப்ரல் 9

செய்து, இந்த ஆய்வில் கணக்கை சரக்குடனும், உறுப்பினர்கள் பட்டியலை தறிகளுடனும் ஒப்பிட்டுப் பார்த்து தவறுகள் தெரிய வந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் மீது மிகக் கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான்காவது கோரிக்கையாக நான் வைக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு நூற்பாலைகள் தயாரிக்கும் நூலைத் தான் வாங்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் சங்கங்களுக்குத் தரமான சிட்டா நூலை தேவைக்கேற்ப வெளிச்சந்தை விலைக்குக் கொடுக்க முன்வரவில்லை என்றால் கடும் போட்டி நிலவும் இன்றைய வியாபாரச் சூழ்நிலையைக் கருதி தேசியக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக சாய மருந்துகள் வாங்குவதைப்போல நூலையும் வெளிச் சந்தையிலிருந்து வாங்க சங்கங்களுக்கு அரசு அனுமதியளிக்க வேண்டும். கடந்த 20 நாட்களாக நூல் தேவைப்படும் அளவுக்கு கிடைப்பதில்லை என்ற நிலை இருப்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நமது மாநிலத்தில் மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. அதிலே எல்லா கூட்டுறவு நூற்பாலைகளும் சரிவர நடப்பதில்லை. இந்த நிலைமையைச் சரிசெய்யும் விதத்தில் 20 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைப்போல பஞ்சு கொள்முதல் செய்யவும், உற்பத்தியாகும் நூலின் தரத்தையும், அதன் விலையை நிர்ணயிக்கவும் ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலும் கூட்டுறவாளர்கள் அடங்கிய ஒரு தனிக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

நமது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதம வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற இந்தச் சங்கங்களில் அயல்பணி, அயலறிக்கை பணிக்காக அமர்த்தப்பட்ட அரசு அதிகாரிகளின் சம்பளமும் இதரப் படிகளையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. நமது கைத்தறிச் சங்கங்களுடைய இந்தச் செலவை சங்கங்களே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. பெரும்பாலான நெசவாளர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். தனியாரிடமிருந்து மற்றும் அவர்கள் வேலை பார்க்கும் முதலாளிகளிடம் அதிக வட்டிக்கு கடன்களைப் பெற்று, இந்தக் கடன்களை அடைக்க முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டு, நடைமுறையில் நமது ஆட்சியில் முத்தமிழ் அறிஞர் அவர்களுடைய உருவத்தில் இறைவனைக் காணும் ஒரு கொத்தடிமை போல



1997 ஏப்ரல் 9] [திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்]

ஆகிவிடுகிறார்கள். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் இந்த ஏழை நெசவாளர் குடும்பங்களில் விளக்கேற்றி வைக்க, நெசவாளர்கள் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்து இந்தக் கடன்களை அரசே ஏற்றுக்கொண்டு, இதனை நீண்ட நாள் குறைந்த வட்டிக்கடனாக நெசவாளர்களுக்கு மாற்றிக் கொடுத்து உதவ முன்வர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒரே ரக கைத்தறி ஜவுளிகளை நெய்வதற்கு மற்றும் இது சம்பந்தமான இதர வேலைகளுக்கு இடத்திற்கு இடம் கூலி வித்தியாசப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்காக மாநிலம் தழுவிய ஒரு ஏற்பாட்டினை அரசு செய்து கொடுத்து, நிர்ணயிக்கப்படும் கூலிகளை குறைந்தபட்சக் கூலிக்கான சட்டத்தில் இடம் பெறச் செய்யவேண்டுமென்ற ஒரு முக்கியமான கோரிக்கையை நான் வைத்து, இங்கே பேசுவதற்கு வாய்ப்பைக் கொடுத்ததற்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.

நன்றி வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி-கதர் கிராமத் தொழில் மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்தத் துறை பெரிதும் உதவ முடியும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் ஈடுபட்டுள்ளது இந்த கைத்தறித் துறையாகும். எனவே அரசு கைத்தறித் துறையில் அதிக கவனம் செலுத்தி ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டைப் பொறுத்தமட்டில், பொருளாதாரம், ஜனத்தொகை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில், வருங்கால குழந்தைகூட கடனோடு பிறக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் சிறு மூலதனத்தில் அதிகமான மக்கள் வேலை செய்யக்கூடிய வகையில் உள்ள இந்தத் துறையை அதிகமாகப் பயன்படுத்தி, இந்தத் துறையில் அதிகமாக வேலை செய்யக்கூடிய மக்களுக்கு கடன் உதவி கொடுத்து, நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தால் வருங்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்கூட இந்தத் துறையின் மூலம் போக்க முடியும்

[திரு. சி. வேலாயுதன்] [1997 ஏப்ரல் 9

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பனைத் தொழிலைப் பொறுத்தமட்டில்-ஏற்கெனவே எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். என்னைப் பொறுத்தமட்டில்-ஒரு வேதனை என்னவென்று சொன்னால் இந்தத் தொழிலில் அரசு எந்த அளவுக்கு அதிக கவனம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அதிக கவனம் கொடுக்காமல் இருந்தால் காலப்போக்கில் நம்முடைய சந்ததிகள் 'பதநீர்' என்று சொல்வது பெட்ரோல், டீசல் கிடைப்பது போன்று கிணற்றில் கிடைப்பதா என்று ஐயப்பாடுடன் கேட்கக்கூடிய நிலைமை வந்துவிடும். அந்த அளவுக்கு பனைத் தொழில் அழிந்து கொண்டு வருகிறது. பல பொருட்காட்சியகங்களில், உலக நாடுகளின் பத்திரிகைகளில் பார்க்கும்போது, சில இனங்கள் அழிந்து விட்டன என்று சொல்லி எந்தெந்த நாட்டிலிருந்து எல்லாமோ கொண்டுவந்து இனவிருத்திக்காக முயற்சி செய்கிறார்கள். அந்த அளவிற்கு அந்த இனங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று ஆசைப்படும்போது, வருங்காலத்தில் பனை என்று சொன்னால், நெற்பயிர் போன்று வயலில் உள்ளதா என்று கேட்கக்கூடிய வகையில் போய்விடக்கூடாது. அந்த பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்கள் மிகுந்த வறுமையில் வாடுகிறார்கள். அவர்கள் வாங்கியுள்ள குறைந்த அளவுக் கடனை அரசாங்கம் முடிந்தால் தள்ளுபடி செய்ய வேண்டும்; அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்து சுபிட்சமாக அவர்களை வாழ வைத்து, இந்தத் தொழிலைப் பாதுகாக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டது போன்று, தள்ளுபடி மானியத்தை குறிப்பிட்ட நாள் என்று இல்லாமல் வருடம் முழுவதும் கொடுத்தால் கைத்தறித் தொழில் மேலும் வளா வாய்ப்பாக அமையும். அதேபோன்று ஜனதா வேஷ்டி, ஜனதா சேலைக்கு மட்டும்தான் தள்ளுபடி என்று இல்லாமல் கைத்தறி மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உற்பத்திப் பொருட்களுக்கும், அதாவது துணிகளுக்கும் மானியம் வழங்கி அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மாவட்டங்களில் உச்சவரம்பு மானியங்கள் என்ற அடிப்படையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. எனவே மத்திய மாநில அரசுகளிடமிருந்து கிடைக்கக்கூடிய மானியங்கள், அனைத்து நெசவாளர் கூட்டுறவு வங்கிகளுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, கூட்டுறவு நூற்பாலைகளில் கிடைக்கக்கூடிய நூல்கள் வெளிச் சந்தைகளில் கிடைக்கக்கூடிய நூல்களைவிட விலை கூடுதலாக



1997 ஏப்ரல் 9] [திரு. சி. வேலாயுதன்]

இருக்கிறது. எனவே வெளிச்சந்தையில் கிடைக்கக்கூடிய நூலின் அதே விலைக்கு கூட்டுறவு நூல் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும். இல்லையென்றால் எங்கு வசதியாக நல்ல நூல் கிடைக்கிறதோ, குறைந்த விலையில் அதை வாங்கிக்கொண்டு பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளின் சந்ததிகள் விவசாயம் செய்வதற்கு எப்படி விரும்பவில்லையோ-வருமானம் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தால் —அதேபோன்று நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடைய, சந்ததிகளுக்கும் நாளுக்கு நாள் இத்தொழிலில் ஈடுபடுவதற்கான எண்ணம், எண்ணிக்கை குறைந்து கொண்டே இருக்கிறது. எனவே மற்ற தொழிலில் கிடைக்கக்கூடிய அளவிற்கு வருமானம் கிடைத்து, அவர்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு உண்டான வசதிகளைச் செய்து எந்த வகையிலாவது நிவர்த்தி காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நூல் வரியைக் குறைக்க வேண்டும்: அவர்கள் நூல் வாங்குவதற்கு அல்லது சொந்தமாகக் கடை வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் லோன் வழங்க ஆவன செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சில கூட்டுறவு வங்கிகள் இந்த மானியத்தை கணக்கில் கொண்டு போலியாக உற்பத்தி, வரவு-செலவு என்றெல்லாம் கணக்கை வைத்து, உண்மையிலேயே நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற கூட்டுறவு வங்கிகளுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. இந்த போலிக் கணக்கை வைக்கக்கூடியவர்கள் மானியத்திற்காக வேண்டி ஈடுபடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனத்தில்கொண்டு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், செங்கற்சூளைத் தொழில் குடிசைத் தொழிலாக, இயந்திரம் இல்லாமல், மனித சக்தியை மட்டும் வைத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக பத்மநாபபுரம் தொகுதியில் ஏராளமான மக்கள் செங்கற்சூளை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த செங்கற்சூளையில் கிட்டத்தட்ட 50, 60 பேர்கள் வேலை செய்கிறார்கள்.

*பிற்பகல் 12-40*

ஆகவே. வேலைவாய்ப்புக்களை அதிகமான அளவில் உருவாக்கக்கூடிய இந்தத் துறைக்கு அரசாங்கம் லோன் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய மண்ணை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது.

உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால் பக்கத்தில் உள்ள குளம் மண்ணால் நிரம்பி இருக்கும். அந்தக் குளத்திலிருந்து அவர்கள் மண்ணை எடுத்துப் பயன்படுத்துவதாக இருந்தால், போக்குவரத்துச் செலவு கம்மியாக இருக்கும். உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும் போது. குறைந்த விலையில் செங்கல்லைக் கொடுக்க வாய்ப்பாக இருக்கும். ஆனால் அரசாங்கம் என்ன செய்கிறது என்றால் குளத்திலிருந்து மண்ணை எடுக்க விடுவதில்லை. அவர்களை மண் எடுக்க அனுமதித்தால். 3 வகையில் நன்மை கிடைக்கும் என்று கருதுகிறேன். ஒன்று, பொதுப் பணித்துறையினுடைய செலவைக் குறைக்கின்றது. இன்னொன்று, விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை அந்தக் குளங்களில் தேக்கி வைத்துக்கொள்ள முடியும் என்பதால், அந்தக் குளத்தினுடைய கொள்ளளவும் அதிகப்படுத்தப்படுகின்றது. அடுத்ததாக, செங்கல் சூளைக்கும்கூட லாபமாக அமைகின்றது. இப்படி மூன்று வகைகளில் பயன்தரக்கூடிய அளவில் அமைந்துள்ள இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு - குளத்தை ஆழப்படுத்தக்கூடிய வகையிலும், செங்கற்களை உற்பத்தி செய்யக்கூடிய வகையிலும் அமைந்துள்ளதால் - குளங்களிலிருந்து மண் எடுப்பதற்கு அரசாங்கம் தடை விதிக்கக்கூடாது, அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும். அவர்களுக்கு ஒத்தாசை செய்யமுடியாவிட்டாலும்கூட அனுமதி கொடுத்தாலே போதும். இதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுப் புறச் சூழலைப் பொறுத்தவரையில், புதிதாக தொழில் தொடங்க அனுமதி வழங்கும்போது, சுற்றுப்புறச்சூழலைக் கவனிக்கவேண்டியதுதான். அதே சமயத்தில் எங்களது மாவட்டத்தில் உள்ள பத்மநாபபுரம் தொகுதியில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் ஏராளமான பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சுற்றுப்புறச் சூழலைக் காரணம் காட்டி, யாருக்கும் எந்தவிதமான ஆபத்தோ, பிரச்சினையோ இல்லாத இடங்களில்கூட, சுற்றுப்புறச் சூழலைக் காரணமாகச் சொல்லி, அதிகாரிகளை பின்னால் சந்திக்க வைப்பது, அதன் மூலமாக கையூட்டுப் பெறுவது போன்ற செய்திகளை எல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதை கவனத்தில் கொண்டு, கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையில், என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு, வந்தே மாதரம்' என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. கோபு.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணித் தொழில், சுற்றுப்புறச்சூழல், கதர்-கிராமத் தொழில்கள் மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இறுதியாக பதில் உரையிலே விளக்க வேண்டிதை. இடைநேரத்தில் விளக்க உரையாக, அணைக்கட்டு தொகுதி, அரியூர் நூற்பாலை இன்னும் ஒரு வாரத்திற்குள் இயங்கும் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துள்ளார்கள். அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல துறைகளில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் அளிப்பதைப் போல, நமது நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கவேண்டும். புராணங்களில்கூட படித்திருக்கிறோம். அதாவது காக்கும் கடவுள் கண்ணன் உயர்ந்தவரா, மனிதர்களுடைய மானத்தைக் காக்க நெசவுத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற நெசவாளர்கள் உயர்ந்தவர்களா என்ற வாக்குவாதங்களையும் நாம் படித்திருக்கிறோம். நெசவுத்தொழிலில் ஈடுபட்டு, மனிதர்களுடைய மானத்தைக் காப்பாற்றுகின்ற நெசவாளர்களுக்கு அருள்கூர்ந்து ஓய்வூதியம் அளிக்க வேண்டும் என்று தங்களை மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கதர் கிராமத் தொழில் துறை அமைச்சர் அவர்களிடமும் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். பனை ஏறும் தொழிலாளர்களுக்கு கடன் தந்திருக்கிற அந்தச் சுமையை முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பனை ஏறும் தொழிலாளர்கள் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பனை வாரியத்தில் உள்ள மாநில மற்றும் மாவட்ட சம்மேளனத்தில் ஊழியர்களாக பணியாற்றுகின்ற சுமார் 200 பேர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளைப் போல் இவர்களுக்கும் அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. கோபு]

பிற்பகல் 12-45 [1997 ஏப்ரல் 9

கதர் கிராமத் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியர்கள் எனப்படுபவர்கள் காலணி உற்பத்தி செய்பவர்களாக கருதப்படுகிறார்கள். எங்களது வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் அணைக்கட்டு தொகுதியில் இருக்கின்ற அருந்ததியர்கள் கூடை முடையும் தொழிலை பிரதான தொழிலாக மேற்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள், அணைக்கட்டு ஒன்றியத்தில் அணைக்கட்டிலே கூடை முடைவோர் சங்கம் என்று ஒரு சங்கத்தை நிறுவி இருக்கிறார்கள். அவர்களுக்காக ஏற்கெனவே நான் சட்டமன்றத்தில் வினா எழுப்பினேன். அவர்களுக்குத் தேவையான மூலப்பொருளான மூங்கிலை அரசே முன்னின்று அளிக்கவேண்டுமென்று இங்கே கேட்டிருந்தேன். அதேபோல் குலாளர்கள், மட்பாண்டம் செய்கின்ற மக்கள் அணைக்கட்டு தொகுதியில், குறிப்பாக மூங்கில்பட்டு கிராமத்திலே நிறைய பேர் வசிக்கிறார்கள். அவர்கள் மண் எடுக்கவேண்டுமென்றால், ஏரிகளுக்குச் செல்லவேண்டும். ஏரிகளிலே சமூகக் காடுகள் வளர்க்கப் பட்டிருக்கின்றன. அங்கே சமூகக் காடுகளைப் பாதுக்காக்கின்ற அதிகாரிகள் மண் எடுக்க அனுமதி மறுக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு அதாவது ஹைவேஸ் சாலைகளைக்கூட நாம் செப்பனிடுகின்றபோது சில ஏரிகளை குவாரிகளாக நாம் அறிவித்திருக்கிறோம். அதேபோல் இவர்கள் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்க சில ஏரிகளையாவது நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்த குறுகிய நேரத்தில் பயனுள்ள கருத்துக்களைச் சொல்ல என்னை அனுமதித்த அன்புக்குரிய நமது பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி, அமைகின்றேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல், கதர் கிராமத் தொழில்கள், சுற்றுப்புறச் சூழல் மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது எங்களுடைய கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறோம்.



1997 ஏப்ரல் 9] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

முதலாவதாக இந்தச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி காலையிலேகூட தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்திலே கடலூர் பகுதியிலே அமைந்த சிப்காட் பகுதியிலேயுள்ள குடிதண்ணீரானது அங்குள்ள ரசாயனத் தொழிற்சாலைகளினாலே எந்த அளவிற்கு மிகப் படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. என்பதற்காக அந்தத் தண்ணீரை நான் மாதிரியாகக் கொண்டுவந்து பேரவைத் தலைவருடைய கவனத்திற்கே கொண்டு வந்து, அறையிலே காட்டியிருக்கிறேன். கடந்த 10 ஆண்டுகாலமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் குடிப்பதற்குக் கூட நீரின்றி ஏறத்தாழ பல்வேறு கிராம மக்கள், 50-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் - குடிக்காடு, ஈச்சங்காடு, சங்கிலிக்குப்பம், காரைக்காடு, செம்மங்குப்பம், பூண்டியாங்குப்பம், பச்சாங்குப்பம், போன்ற கிராமங்களிலே-குடிதண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த சிப்காட் வளாகத்திலே உள்ள குடிதண்ணீர் மாசுபடுவதைக் கண்டித்து எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் பசுமைத் தாயகம் என்று அவர் வைத்திருக்கின்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் மூலமாக பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் இவையெல்லாம் செவிடன் காதிலே ஊதிய சங்கொலி போல, இன்றைக்கு அந்தப் பகுதிகளிலே உள்ள தொழிற்சாலைகள், அந்தப் பகுதியினுடைய குடிதண்ணீரை மிக மோசமாக பாதிக்கக்கூடிய அளவிற்கு கழிவுநீரையும் சுத்திகரிக்காமல் கடலிலே எடுத்துச் செல்லப்படுகிற அந்தக் குழாய்கள்கூட பழுதடையப்பட்டு, பல நேரங்களிலே உயிரிழப்புகள் எல்லாம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கு நிலவிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

1992-ல் ரியோவிலே நடைபெற்ற பூமி மாநாட்டிலே வலியுறுத்தப்பட்ட கருத்திலே இந்தியாவைத் தவிர, மற்ற 105 நாடுகள் எல்லாம் கையொப்பமிட்டன. அதிலே ஒதுக்கப்பட்ட, தடை செய்யப்பட்ட ரசாயனப் பொருட்களை வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்து அந்த மாநாட்டிலே தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. ஆனால் நம்முடைய நாட்டிலே எந்தெந்த ரசாயனப் பொருட்கள் எல்லாம் தடை செய்யப்பட்டனவோ அவையெல்லாம்தான் இன்றைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது அல்லது உற்பத்தி செய்யப்படுகிறது. அதனாலே பல இடங்களிலே பாதிப்புகள் ஏற்பட்டு இன்றைக்கு விஸ்கோஸ் தொழிற்சாலை மூலமாக பவானி ஆறும், தோல் தொழிற்சாலைகளின் மூலமாக பாலாறும் இப்படி

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 ஏப்ரல் 9

பல்வேறு விதங்களிலே நாம் சுற்றுப்புறச் சூழலால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இவற்றையெல்லாம் அரசு கண்காணித்து, கவனித்து குடிநீரும், காற்றும், மண்ணும் பாதிக்கப்படாத அளவிற்கு உரிய நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக எடுத்திடல் வேண்டும். ஒரு சடங்காகத்தான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இயங்குகிறது என்று எங்களைப் போன்றவர்கள் கருத வேண்டியிருக்கிறது. எனவே, அவற்றை முறையாகக் கண்காணித்து - ஒரு Accountability - இருக்க வேண்டும்—லைசென்ஸ் வழங்குகிறார்கள் என்று சொன்னால், அதிலே பாதிப்பு ஏற்படுகிற தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கிற அந்த அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிற்கு அரசினுடைய சட்டங்கள் திருத்தப்பட்டால்தான் முறைகேடாக இயங்கக்கூடிய அந்த ஆலைகளுக்கு அனுமதி அளிக்கக்கூடிய அதிகாரிகள் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல இன்னொரு பேராபத்து. இன்றைக்கு நம்முடைய பாரதப்பிரதமர் ரஷ்யாவிற்குச் சென்று ஒப்பந்தம் போட்டுவிட்டு வந்திருக்கின்ற கூடங்குளம் அணு மின்நிலையம். இது ஒரு பெரிய ஆபத்து என்பதை ஒரு பொறுப்புள்ள இந்தியக் குடிமகன் என்ற முறையிலே நான் இந்த அவையின் மூலமாக எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த நாட்டிலிருந்து நாம் தொழில் நுட்பம் பெற்றிருக்கிறோமோ, எந்த நாட்டின் உதவியோடு இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்தை நாம் இன்றைக்குத் தொடங்கவிருக்கிறோமோ, அந்த நாட்டிலேயே செர்நோபில் என்ற இடத்திலே நடைபெற்ற அணு உலை வெடிப்பானது, அந்த விபத்தானது ஏறத்தாழ 160 கிலோமீட்டர் சுற்றளவுப் பகுதிகளைப் பாதித்ததோடு மட்டும் அல்லாமல், பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களைப் பாதித்திருக்கிறது. ஆகவே, ஆபத்தான தொழில்நுட்பம் நிறைந்த அந்த மாதிரியான ஒரு அணு மின் நிலையத்தை தமிழகத்திலே, தென் மாவட்டத்திலே, கூடங்குளம் பகுதியில் கொண்டு வருவது ஒரு மிகப் பெரிய அணுகுண்டு நிலையத்தையே நாம் அங்கு அமைப்பதாகும், அமைப்பது போல் ஆகும், ஆகிவிடும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், அதிலே பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அணுக் கழிவுகளைப் பாதுகாப்பாக ரஷ்யாவே வாங்கிக்கொள்ளும் என்றுகூட பாரதப் பிரதமர் திரு. தௌடா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்று சொன்னால், அதை எப்படிப்



1997 ஏப்ரல் 9] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

பாதுகாப்பாக எடுத்துச் செல்ல முடியும் என்பதை அரசும், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கவிருக்கின்றவர்களும் விளக்கியாக வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இந்தத் தொழில்நுட்பத்திலே தலைசிறந்து விளங்கக்கூடிய நாடுகளிலே ஒன்றான பிரான்ஸ், தன்னுடைய அணுக் கழிவுகளை ஜப்பானுக்கு அனுப்புவதற்கு அனுமதி பெற்று அதைக் கடல் வழியாக அனுப்ப முயற்சி செய்தபோது அர்ஜன்டைனா, பனாமா, மத்திய தரைக்கடல் நாடுகள், சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகள் எல்லாம் எங்கள் பகுதி வழியாக அந்த அணுக் கழிவுகளை எடுத்துச் செல்லக்கூடாது என்று சொல்லி, கடுமையாகக் கண்டனம் தெரிவித்து, அவை அப்படியே தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஜெர்மனியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மக்கள் போராட்டமானது, இந்த அணுக் கழிவுகளை எப்படி இவர்கள் அப்புறப்படுத்தப்போகிறார்கள், எப்படி இவர்கள் பாதுகாக்கப் போகிறார்கள் என்று சொல்லி, ஒரு வார காலமாக ஜெர்மனியிலே இன்றைக்கு மக்கள் போராட்டமானது வெடித்து, அங்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. எதற்காக நான் இதை முன்னெச்சரிக்கையாக குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த அணுக் கழிவினுடைய கதிர்களானது *1,44,000* ஆண்டுகள் அழியாமல் அப்படியே இருக்கக்கூடிய ஆற்றல் படைத்தவை. அதுமட்டுமல்ல, இன்றைக்கு அமெரிக்கா தன்னுடைய அணுக் கழிவுகளை, அணு உலைகளைப் பராமரிக்க முடியாமல் *1979*லே இருந்து அந்த அணுக் கழிவுகளை எல்லாம், அணு உலைகளையெல்லாம் அடியோடு நிறுத்திவிட்டது. அப்படி இருக்கிறபோது, இன்றைக்கு நாம் கூடங்குளம் அணு மின்நிலையத்தைத் திறந்து கொண்டு இருக்கிறோம், திறக்கவிருக்கிறோம். ஆகவே, இந்த நேரத்திலே தமிழக அரசு மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு இதை எடுத்துச்சென்று இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்பாக்கத்திலே ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னாலே 'ரேடியேஷன் ராட்'- என்பது காணாமல், அதைக் கொண்டுபோய் கூவம் ஆற்றிலே போட்டபோது, அந்தப் பகுதியிலே இருந்த மக்கள் எல்லாம் பீதியாலே அலறித் துடித்தார்கள். எப்படி ஒரு சாதாரண 'ராடே' அப்படி ஒரு மோசமான ஆபத்தை விளைவிக்கக் கூடும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டு, மக்களிடையே பீதி ஏற்பட்டு, அவை அச்சமாகக் கருதப்பட்டதையும் நாம் மறந்துவிடக் கூடாது, அதேபோல், இன்றைக்கு இப்படிப்பட்ட

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 ஏப்ரல் 9

ஆலைகளின் மூலமாக ஏதாவது ஆபத்து வந்தால் அதைத் தடுக்கக்கூடிய தற்காப்பு நடவடிக்கைகளாவது நம்மிடம் இருக்கிறதா என்றால், இல்லை.

அமெரிக்காவிலே 1,000 ரேடியேஷன் பெட் தான் உள்ளது. இவ்வளவு பெரிய வசதி படைத்த, தொழில்நுட்பம் நிறைந்த அமெரிக்காவிலேயே ஆயிரம் பெட் வசதிகள்தான் உள்ளது. செர்நோபில் ஆலை வெடித்தபோது, அந்த அணு உலை வெடித்தபோது, ரஷ்யாவினாலே சிகிச்சை தரப்பட முடியாமல், அமெரிக்காவிற்குக் கொண்டுபோய் சிகிச்சை கொடுத்தார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளிலே ஆயிரம் ரேடியேஷன் பெட்களை மட்டுமே உருவாக்க முடியும் என்று சொன்னால், கூடங்குளத்தில் அணுமின் நிலையம் வருகிறபோது, இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளாலே அப்படியொரு பாதுகாப்பு வசதிகளைச் செய்து தர முடியுமா என்பதையும் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, கல்பாக்கம் அணு மின் நிலையமானது நாட்டிற்கு மின்சார உற்பத்தியைச் செய்து தருவதற்கு பதிலாக, அது நம்முடைய மின்சாரத்தை இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கெல்லாம் மின் சப்ளை துண்டிக்கப்பட்டிருக்கிறது அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறது. சரிவர மின்சாரம் கொடுக்கப்படவில்லை என்ற மனக்குறை இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, இந்த கல்பாக்கம் அணு மின் நிலையத்தை பாதுகாப்பதற்கு நாம் ஏராளமான மின்சாரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னது, 2,000த்திற்குள்ளாக 10,000 கிலோவாட் மின்சாரத்தை இதன் மூலமாக உற்பத்தி செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், அதில் 20 சதவிகிதம் இலக்கைக்கூட எட்ட முடியவில்லை. ஆகவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது நம்முடைய தமிழக அரசானது மத்திய அரசை வலியுறுத்தி 17,000 கோடி ரூபாயை அந்தக் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு போடுவதற்குப் பதிலாக கடல் நீரிலிருந்து அல்லது சூரிய சக்தியிலேயிருந்தாவது அல்லது காற்றாலைகளின் மூலமாகவாவது மின் உற்பத்தி செய்யும் மாற்று வழிகளைக் கண்டுபிடித்து மின் உற்பத்தியைப் பெருக்குவதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள், 'சோலார் எனர்ஜி', 'விண்ட் எனர்ஜி' ஆகியவற்றிலே உலகத்திலே தலைசிறந்ததாக



1997 ஏப்ரல் 9] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இருக்கின்றன. ஆகவே, இதை மனதிலே கொண்டு மாற்றுவழிகளை ஏற்பாடு செய்ய வேண்டும், கூடங்குளம் அணு மின்நிலையம் தமிழகத்திலே வருவதை நாம் தவிர்த்தாக வேண்டும். தமிழக அரசு, அதற்கு ஆவன செய்ய வேண்டும். அப்படி கூடங்குளம் அணுமின் நிலையம் கொண்டுவர அனுமதிக்கப்படுமேயானால், தென் இந்தியாவே அழியக்கூடிய ஆபத்தானது இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எச்சரிக்கையாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்தவரையிலே கூவம் நதியானது தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்தக் குறிப்பிலே இருக்கிறது. ஆக கூவம் நதியானது செம்மைப்படுத்தப்பட வேண்டும். 1980-க்கு முன்னாலே லண்டனிலே ஓடுகின்ற தேம்ஸ் நதியில். மீன்கள்கூட வளர்க்கப்பட முடியாத அளவிற்கு கேடுபாடாகத்தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு மிகச் சிறப்பான வகையிலே அதிலே படகுகள் செல்கின்றன. மீன்கள் வளர்க்கப்படுகின்றன, மிகச் சுத்தமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்த தேம்ஸ் நதிக்கு அடியிலேகூட இரயில்கள் விடப்படுகின்றன. அந்த அளவுக்கு அவர்களுடைய தொழில் நுட்பம் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கடல் நீரை கூவம் ஆற்றுக்குள்ளாக விட்டு அதைத் தூய்மைப்படுத்தி அதன் நாற்றத்தையாவது குறைந்தபட்சம் அரசு போக்க முன்வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். எனவே தேம்ஸ் நதியை எப்படிச் சீரமைத்தார்கள் என்பதை நம்முடைய வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களையும் அல்லது அவருடைய மாநகராட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவை அனுப்பிகூட அதற்கானத் திட்டத்தை அறிந்துவருவது நலமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

சென்னைக் கடற்கரையானது மிகவும் தூய்மைக்கெட்டு வருகிறது. அதிலே எல்லாம் பலூன்களை விற்பனை செய்து கொண்டு போடுகிறார்கள். இந்த பலூன்கள் போன்ற பிளாஸ்டிக் பொருள்கள் மண்ணிலே–மக்க வேண்டுமென்று சொன்னால்–500 ஆண்டுக்காலம் ஆனாலும் அவை மக்காது. அப்படிப்பட்ட மோசமான பலூன்களை எல்லாம் அங்கே விற்பனை செய்கிறவர்கள் வெடித்து போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். இவற்றைத் தூய்மைப்படுத்தி நாம் அப்புறப்படுத்தவில்லை என்று சொன்னால் இதனாலே கடற்கரை

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 ஏப்ரல் 9

மணல்வெளி மட்டும் பாதிக்கப்படாது; அவற்றின் மூலமாக மீன்கள்கூட பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே இவற்றையெல்லாம் கண்காணித்து கடற்கரையைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளை, நலிந்து வருகின்ற இந்த கைத்தறித் துணிகளை, நாம் உடனடியாகச் செழுமைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் பல உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதைப் போல 20% தள்ளுபடியானது ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டும் என்று நான் இன்றைக்கு வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க 11 ரகங்களை மட்டுமே கைத்தறித்துறை துணிக்கு இன்றைக்கு ஒதுக்கி இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால் ஏற்கெனவே 22 ரகங்கள் இருந்தன. விசைத்தறியாளர்களுடைய முறையீட்டின் காரணமாக இது 11 ரகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 11 ரகங்கள்கூட முறையாக, சரியாக இவர்களுக்கு பயனளிக்கிறதா என்று அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கைத்தறி நெசவாளர்களுக்கு மானிய விலையிலே பல நேரங்களிலே நூலானது தட்டுப்பாடாக இருக்கின்ற காரணத்தினாலே கிடைப்பதில்லை என்ற குறைகளும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அரசு கண்காணித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்டிருக்கின்ற மில்களிலே மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லானது ஏறத்தாழ பல ஆண்டுக்காலமாக மூடியிருக்கிறது. 3500 தொழிலாளர்கள் வெளியேறியேவிட்டார்கள். ஆகவே அரசு 6 கோடி ரூபாயை அதற்காக முதலீடு செய்தால் அது திறக்கப்படலாம் என்ற ஒரு கோரிக்கையானது தொழிலாளர்கள் மத்தியிலே இருந்தது. பாட்டாளி மக்கள் கட்சியும் மற்ற கட்சிகளும் இணைந்து திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிகளும் இணைந்து மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லைத் திறப்பதற்காக பலமுறை போராடி இருக்கின்றன. ஆனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெளியேறினார்களே தவிர அந்த மில் இன்னும் திறக்கப்படவில்லை. அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 9] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

அடுத்து பெண்ணாகரத்திலே ஒரு கூட்டுறவு நூற்பாலை திறக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களுடைய கோரிக்கை. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கதர் கிராம வாரியத்தினைப் பொறுத்தளவில் என்னுடைய தொகுதியான ஆண்டிமடம் தொகுதியிலே முந்திரி அதிகமாக விளைகின்ற காரணத்தினாலே கதர் கிராம வாரியத்தின் மூலமாக முந்திரிக்கொட்டை உடைக்கின்ற கருவிகளை அந்தப்பகுதி விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுத்தால் நிச்சயமாக முந்திரி உற்பத்தியானது சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே அந்தக் கருவிகளை வாங்கித்தர வேண்டும் என்று கதர் கிராமத் தொழில் அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் உற்ற துணைவனாக இருப்பது தேனீ வளர்க்கின்ற தொழில். முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே தேனீ வளர்ப்பாளர்கள் என்று ஒரு பொறுப்பிலே இருந்தவர்கள் இருந்தார்கள். ஆனால் இப்போது அப்படிப்பட்டவர்கள் யாரும் இருப்பதில்லை. எனவே இந்த விவசாயத் தொழில் மேம்பட வேண்டும் என்று சொன்னால் மகரந்தச் சேர்க்கைக்கு மிக உதவியாக இருப்பது தேனீக்கள் என்ற காரணத்தினாலே அந்தத் தேனீக்களை வளர்ப்பதற்கு மீண்டும் இந்த அரசானது ஒன்றிய அலுவலகம் தோறும் இதற்கான சிறப்பு அதிகாரிகளைப் போட்டு விவசாயிகள் தேனீக்களை வளர்ப்பதற்கான ஊக்குவிப்புத் திட்டங்களை மேம்படுத்திச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையிலே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு அதனுடைய இயக்குநராக இருக்கிறவருக்கும் தொழிலாளர்களுக்கும் ஒரு இணக்கம் இல்லாத முரண்பாடான சூழ்நிலை நிலவுகிறது. எதற்கெடுத்தாலும் அவர் 17ஏ, 17-பி-யிலே நடவடிக்கை எடுப்பதாகத் தொழிலாளர்களுக்கு ஒரு மனக்குறை இருக்கிறது. ஆகவே அரசு இதனைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரையிலே 30-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசு இதிலே தலையிட்டு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்க அவர்களுடைய பாதிப்புகளை நீக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அரசினுடைய மொத்தப் பணிகளிலே 60% மட்டுமே இப்போது இவர்களாலே நிறைவு செய்யப்படுகிறது. 40% தனியாரிடம் விடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிர்வாகக் குறைபாடுகளுக்கு-முன்பு இருந்ததைவிட இப்போது அதிகாரிகளுடைய எண்ணிக்கை அதிகம்; ஆனாலும்கூட தொழிலாளர்கள் மீது பழிபோட்டு அதிகாரிகள் தப்பித்துக்கொள்ளக் கூடாது என்ற காரணத்தினாலே அரசு இதிலே கவனமாக தலையிட்டு அதனை நவீனப்படுத்துகின்றபோது—10 கோடி ரூபாயில் அந்தத் துறை நவீனப்படுத்தவேண்டுமென்று ஒரு கோரிக்கை இருக்கிறது. முதலாவதாக அதில் இருக்கக்கூடிய உழைக்கின்ற தொழிலாளர்களுடைய கோரிக்கையான அரசினர் அச்சகத்தில் உள்ள வரவு-செலவுப் பிரிவு, அதி ரகசியப் பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறப்பு ஊதியமான 30 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்தி வழங்கவேண்டும் என்றும் இதை வரவு-செலவு நவீன மயமாக்கும் பிரிவு உயர்நீதிமன்றக் கிளைக்கும் உயர்த்தி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொருந்தக்கூடிய 12-8-1996 நாளிட்ட அரசாணை எண் 488-ன் பலன்களை அச்சகத்துறை தொழிலாளர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அச்சுத் துறையில் நச்சுத் தன்மையான பொருட்களை கையாளுகின்ற தொழிலாளர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் 200 ரூபாய் வழங்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் சம்பந்தமாகப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகளைக் கொண்டு சுமார் 4 லட்சத்து 70 ஆயிரம் கதிர்களைக் கொண்டு ஆலைகளை நாம் நிர்வகித்துக்கொண்டு வருகிறோம். கடந்த நிதியாண்டினுடைய நிலைமைகளைப் பார்க்கின்றபோது அதனுடைய மொத்த விற்பனையினுடைய அளவு சுமார் 227 கோடி ரூபாய் என்பதை நாம் பார்க்கிறோம். அதற்கு முந்தைய ஆண்டுகளிலே பார்க்கின்றபோது கிட்டத்தட்ட 242 கோடி முதல் 245 கோடி ரூபாய் வரை அதனுடைய





டர்ன் ஓவர் இருந்தது. கடந்த நிதி ஆண்டில் 227 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. கடந்த ஆண்டு மொத்த உற்பத்தித் திறன் என்ன? சாதாரணமாக கடந்த ஆண்டுகளைப் பொறுத்தவரையில் 18 கூட்டுறவு நூற்பாலைகளுடைய மொத்த நஷ்டம் கேரி பார்வர்டு லாஸ் 200 கோடி ரூபாய் என்று கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. ஆனால் சாதாரணமாக எந்த ஒரு டெக்ஸ்டைல் மில்லை எடுத்துக்கொண்டாலும் இதிலே ஒருசில ஆலைகள் ஒருசில காரணங்களினால் மூடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அவைகளைத் திறப்பதற்கு நாம் முயற்சி செய்வதற்கு முன்னால் அந்த ஆலையினுடைய இயந்திரங்களுடைய திறமைகள் என்ன? ஆலைகளை நவீனப்படுத்துவதற்குண்டான வசதிகளை நாம் செய்து இருக்கிறோமா; அதிகமான தொழிலாளர்களை வைத்து இருப்பதன் காரணமாகத் தான் லாபம் குறைந்து வருகிறது என்ற வாதத்தினை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஏன் என்று சொன்னால் எந்த ஒரு நிர்வாகத்திலும் எந்த ஒரு தொழிற்சாலையிலும் அதனுடைய உற்பத்தித் திறன் என்ன என்பதை நாம் முதலில் கவனிக்கவேண்டும். இதிலே குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் 227 கோடி ரூபாய் டர்ன் ஓவர் என்று சொன்னால் அது மிகவும் குறைவு. கிட்டத்தட்ட 4 லட்சத்து 70 ஆயிரம் கதிர்களைக் கொண்டிருக்கக்கூடிய ஆலைகளில் 400 கோடி ரூபாய் அளவுக்காவது அதனுடைய டர்ன் ஓவர் இருந்தாக வேண்டும். ஆனால் 227 கோடி ரூபாய்தான் இருக்கிறது. இதிலே யார்ன் ரியலைசேஷன் என்ன? அது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. உற்பத்தித் திறனைப் பொறுத்தவரையில் யார்ன் ரியலைசேஷன் என்ன என்பதை கொள்கைக் குறிப்பில் அரசு தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

டோட்டல் ஸ்பின்டில் யுடிலைசேஷன் என்ன? ஸ்பின்டில் யுடிலைசேஷன் சீரான முறையில் இல்லையென்று சொன்னால், கிட்டத்தட்ட 90 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரை ஸ்பின்டில் யுடிலைசேஷன் அதிலே இல்லையென்று சொன்னால் கண்டிப்பாக லாபம் வராது. ஆகவே, இப்போது பார்த்தால் இதனுடைய ஸ்பின்டில் யுடிலைசேஷன் கிட்டத்தட்ட 60 சதவீதம்தான் வரும் என்று நான் நினைக்கிறேன். ஆகவேதான் இதனுடைய விலை குறைந்து டர்ன் ஓவர் 227 கோடி ரூபாயில் இருக்கிறது.

[திரு. என். ஆர். அழகராஜா] [1997 ஏப்ரல் 9

அடுத்தபடியாக பஞ்சுக் கொள்முதலில் பல ஆண்டுகளாக பஞ்சு சப்ளை செய்தவர்களுக்கு கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் அளவுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த அளவில் பல வியாபாரிகள் பல விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து நூற்பாலைகளுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு கொள்முதலைச் செய்கின்ற போதும் அதிலே 10 சதவீதம் பழைய பாக்கிகளைக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக 227 கோடி ரூபாய் டர்ன் ஓவர் வரும் என்று சொன்னால் கிட்டத்தட்ட 55 முதல் 60 சதவீதம் வரை ரா மெட்டீரியல் பர்சேஸ் இருக்க வேண்டும். ரா மெட்டீரியல் பர்சேஸ் கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய்க்கு வரும். 227 கோடி ரூபாய் டர்ன் ஓவர் என்று சொன்னால் கிட்டத்தட்ட ரா மெட்டீரியல் பர்சேஸ் 60 சதவீதம் என்று எடுத்துக் கொண்டால்கூட கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் ஆண்டுக்கு ரா மெட்டீரியல்ஸ் பர்சேஸ் என்று சொன்னால் மாதத்திற்கு சராசரியாக கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் வருகிறது. 12 கோடி என்று சொன்னால் 10 சதவீதம் அவர்களுக்குக் கொடுப்பதாக இருந்தால் 1 கோடியே 20 இலட்சம்; 1 கோடியே 20 இலட்சம் என்று சொன்னால் அந்த 9 கோடி கொடுப்பதற்குக் கிட்டத்தட்ட 9 மாதங்கள் ஆகும். ஏற்கனவே பல மாதங்களாக, பல ஆண்டுகளாகக் கொடுக்கப்படாத பாக்கியிருக்கின்றபொழுது இன்னும் 9 மாதங்கள் வரை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பணம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது அவர்களை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான, விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய சாதாரண விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களும், அரசும் இதிலே தனிக் கவனம் செலுத்தி, 9 கோடி ரூபாயை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

கடந்த ஆண்டுகளிலே தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால், கொடுக்கப்பட வேண்டியது உண்மை என்பதை நாம் அறிந்த பிறகு, அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதுதான் நியாயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போக, இனிமேல் பஞ்சு கொள்முதல் செய்வதாக இருந்தாலும், அல்லது நூலை விற்பனை செய்வதாக இருந்தாலும்கூட, இந்த ஆண்டு



1997 ஏப்ரல் 9] [திரு. என்.ஆர். அழகராஜா]

நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்பர்மேஷன் டு ரைட்-அதாவது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை நாம் இந்தச் சட்டமன்றத்திலே இயற்றுவதாக இருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையில் எந்த நூற்பாலைகளிலே என்ன கவுண்ட், என்ன கவுண்ட்டுக்கு அவர்கள் பஞ்சு வாங்கியிருக்கிறார்கள், யாரிடம் வாங்கியிருக்கிறார்கள், என்ன விலைக்கு வாங்கியிருக்கிறார்கள், அந்தப் பஞ்சினுடைய தரம் என்ன என்பது தெளிவாகத் தெரிகின்ற வகையிலே அவர்கள் அனைவருக்கும் தெரியக்கூடிய வகையிலே இவைகளைச் செய்தால் ஓரளவு அதிலே நடைபெறுகின்ற தவறுகள் குறையலாம்; நல்ல முறையிலே பஞ்சுகளும் வாங்கலாம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோக, சாதாரணமாக கடந்த 1958-ஆம் ஆண்டிலேயிருந்து 1985-ஆம் ஆண்டு வரை, பல கூட்டுறவு நூற்பாலைகளை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். இதுவரைக்கும் எத்தனை ஸ்பின்னிங் மில்களிலே நாம் மாடர்னைசேஷன் செய்திருக்கிறோம்? சென்ற ஆண்டிலேகூட மாண்புமிகு முதல்வரவர்கள் 15 கோடி ரூபாய் அளவிற்கு இதற்கு கடனாகக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த 15 கோடி ரூபாயை எந்த வகையிலே நாம் செலவு செய்திருக்கிறோம்? நிர்வாகச் செலவுகளுக்கா அல்லது நவீனப்படுத்துவதற்கா அல்லது கொள்முதலுக்கா என்பது தெளிவாக அதிலே குறிப்பிடவில்லை. ஆகவே, அது தெளிவாக இருப்பதோடு மட்டுமல்லாமல், போதிய நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால்—வரக்கூடிய ஆண்டுகளிலே 15 கோடி ரூபாய் கடனாகப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் போதிய நிதி ஆதாரம்-கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய், 40 கோடி ரூபாய் அரசு அதிலே செலுத்தினால் இந்த 200 கோடி ரூபாய் நஷ்டத்தையும் குறைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மேலும் இலாபத்தை ஈட்டுவதற்கும் வாய்ப்பு உண்டு என்பதால் அரசு அதிலே கவனம் செலுத்தி, கிட்டத்தட்ட 30, 40 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நூற்பாலைகளுக்கு அளித்து அவைகளை நவீனப்படுத்துவதற்குண்டான முயற்சிகளைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவேரி பேசின். காவேரியாற்றின் கரைகளிலே இருக்கக்கூடிய பல்வேறு நகரங்களிலேயும், பலயிடங்களிலேயும் அதைத் தூய்மைப்படுத்துகின்ற வகையிலே, கழிவு நீர் அதிலே சேராத வகையிலே செய்வதற்காக கிட்டத்தட்ட 38 கோடி ரூபாயில், 4 ஆண்டுகளிலே—செய்வதாக கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நான் மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம், வைகை தீரன் அழகுமுத்து மாவட்டத்தில் பெரியார் ஆறு ஓடுகிறது. கிட்டத்தட்ட 80 கிலோமீட்டர்தான்-அது வைகை அணையிலேயிருந்து சேர்கின்ற அளவிற்கு 80 கிலோமீட்டர் அளவிற்குத்தான்—அந்த ஆற்றினுடைய நீளமே இருக்கிறது. பல நகரங்களும், பல கிராமங்களும் அதனுடைய ஓரங்களிலே இருந்துகொண்டு இருக்கின்றன. அதனுடைய கழிவுநீர் அத்தனையும் அந்த ஆற்றிலேதான் சேரக்கூடிய ஒரு நிலையிருக்கிறது.

அந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அனைத்து நகரங்களும், பெரியகுளம், போடி நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும், பல்வேறு கிராமங்களும், போரூராட்சிகளும், அதிலேயிருந்துதான் குடிதண்ணீரை எடுக்கக்கூடிய நிலைமை. ஆகவே, அந்த ஆற்றிலேயும், கழிவு நீர் எல்லாம் அதிலே வந்து சேராமல் அதைத் தூய்மைப்படுத்துகின்ற திட்டத்தையும் அந்தப் பகுதியிலே நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கொடைக்கானலிலேகூட கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய அரசு நிதியுதவியோடு புரஃபசர் சதாசிவம் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டியை அமைத்து, அந்த ஆற்றினுடைய கழிவுப் பொருள் என்ன? எவ்வளவு தேறுகிறது என்பதை ஆராய்ந்து ஒரு அறிக்கை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆகவே, அந்த அறிக்கையைத் தமிழக அரசு பெற்று அதற்கேற்றவாறு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டிலே 21,000 வாகனங்களைச் சோதனையிட்டு புகையினுடைய தன்மை என்னவென்பதை அறிந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் இன்னும் பல வாகனங்களிலே பார்க்கின்றபொழுது புகை ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றது. வாகனங்கள் என்று சொன்னால், லாரி, பஸ், கார்கள் மட்டுமல்ல, ஆட்டோ, ஸ்கூட்டர், டூ வீலர்ஸ் போன்ற வாகனங்கள், சென்னையிலே பார்க்கின்றபோது, பல்வேறு வகையான வாகனங்களிலிருந்து வரக்கூடிய புகையை நீங்கள் தாராளமாகப் பார்க்கக்கூடிய நிலைமையிருக்கிறது. 21 ஆயிரம் வாகனங்களைச் சோதனையிட்டு நாம் பார்த்திருக்கிறோமே தவிர, எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன; அவற்றை சரி



செய்வதற்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை நாம் இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகவே, மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அவற்றைச் சரியான முறையிலே ஆராய்ந்து கட்டுப்படுத்துவதற்கு, அதிகமான புகை வருகின்ற வாகனங்கள் மீது வழக்கு போடுவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

பட்டு நூலைப் பொறுத்தளவில், பட்டு உற்பத்தி தமிழகத்திலே மிகவும் குறைவு. ஆகவே, நம் நாட்டைப் பொறுத்தளவிலே பல சமயங்களில் வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக, சைனாவிலிருந்து நாம் இறக்குமதி செய்யக்கூடிய நிலைமை உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தளவில் பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திலேயிருந்து பட்டுநூல் வரக்கூடிய நிலைமை உள்ளது. இந்தப் பட்டு நூலைப் பொறுத்தளவிலே தமிழகத்திலே ஏன் அதிகமாக அது விளையவில்லையென்று ஆராய்ந்தபோது இங்கே பட்டுக்கூட்டை விவசாயிகள் உற்பத்தி செய்து அதை மார்க்கெட்டிங் கமிட்டியிலே கொண்டுவந்து விற்கிறபோது, கிட்டத்தட்ட கிலோவிற்கு பட்டுக் கூடுக்கு... (மணியடிக்கப்பெற்றது) ஐந்து நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடமா? ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** ஒரே ஒரு பாயின்ட்... 75 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரைதான் பட்டுக் கூட்டை விற்பனை செய்யமுடிகிறது. விவசாயிகளுக்கு 75 ரூபாய்தான் கிடைக்கிறது. ஆனால், அதே பட்டு, நூலாக வருகின்றபோது, அந்தப் பட்டு நூலுக்கு 1,400 ரூபாய் விலை. 1,400 ரூபாய் விலைக்கு வாங்கிச் செல்கின்ற பட்டு நூலானது, பட்டுச் சேலையாக, பட்டு வேஷ்டியாக தயார் செய்யப்படுமென்று சொன்னால், கிராம் ஒன்றுக்கு 2.80 பைசா விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படியானால் கிலோவிற்கு 2,800 ரூபாய். ஆனால், விவசாயிகளுக்கு ஒரு கிலோ பட்டுக் கூடுக்கு கிடைப்பது 100 ரூபாய். ஆகவே, அந்த 100 ரூபாய் என்பதை அதிகப்படுத்துவீர்கள் என்று சொன்னால், அதிகமாக பட்டு உற்பத்தி செய்வதற்கு இங்கே வாய்ப்புகள் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தை எடுத்துக்கொள்வோம், என்று சொன்னால், அங்கேயிருக்கக்கூடிய கூட்டுறவு பட்டு விற்பனை நிலையங்களிலே

[திரு. என்.ஆர். அழகராஜா] [1997 ஏப்ரல் 9

இருக்கக்கூடிய பல தொழிலாளர்கள், விற்பனையாளர்கள், அங்கேயிருக்கக்கூடிய கேசியர், அக்கவுண்டன்ட் போன்றவர்களுக்கு கடந்த 7 ஆண்டுகளாக எந்தவிதமான சம்பள உயர்வும் கொடுக்கப்படவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. இதிலும் அரசு கவனம் செலுத்தி, 1,500 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற அந்த கூட்டுறவு நிலையங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய வாழ்வை உயர்த்துவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுச் சரிகை உற்பத்தி நிலையம் காஞ்சிபுரத்திலே இருக்கிறது. ஆனால், இங்கே வெளி மாநிலங்களிலிருந்து வெள்ளி முலாம் பூசப்பட்ட நூலை வாங்கி, அதிலே தங்க முலாம் போட்டு விற்பனை செய்கின்றார்கள். அந்த வெள்ளி முலாமை இங்கேயே பூசக்கூடிய அளவுக்கு அந்தக் கூட்டுறவு மையத்திலே ஏற்பாடு செய்வீர்கள் என்று சொன்னால், இங்கேயே அதிக லாபம் கிடைக்கும். ஏனென்றால் 20% டிவிடென்ட் கொடுத்திருக்கின்றது அந்தச் சங்கம். 20% நல்ல amount தான், 21 இலட்சம் ரூபாய் நீங்கள் எக்ஸ்பேன்ஷனுக்குக் கொடுக்கிறீர்கள். அதை அதிகப்படுத்தி, வெள்ளி முலாம் இங்கேயே போடக்கூடிய அளவுக்கு அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கடைசியாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I have given you too much time. You must finish.

**திரு. என். ஆர். அழகராஜா:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் அச்சுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர் பேசியிருக்கின்றார்கள். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள், திரு. சுந்தரம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள், திரு. வேலாயுதன் அவர்கள் மற்றும் பெருந்துறை திரு. பெரியசாமி அவர்கள், திரு. கோபு அவர்கள், இந்தக் கைத்தறித் துறை சம்பந்தமாகவும், பனை வாரியம் சம்பந்தமாகவும், அச்சுத் துறை சம்பந்தமாகவும் பேசியிருக்கின்றார்கள். பனை வாரியத்தைப் பொறுத்தவரையில், இந்தத் தொழிலில் பனை வாரியத்தை நம்பி 30



1997 ஏப்ரல் 9] [திரு. அந்தியூர். ப. செல்வராசு]

இலட்சம் தொழிலாளர்கள் இன்றைக்கு வாழ்கின்றார்கள். நான் முதன் முதலாக இந்த வாரியத்தின் பொறுப்பினையேற்ற பிறகு, பனைத் தொழிலை அதிமாகச் செய்கின்ற தென் மாவட்டங்களிலே சுற்றுப் பயணம் செய்து, அந்தந்தப் பகுதியிலேயிருக்கின்ற மாவட்டச் சம்மேளனங்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அந்தப் பகுதிகளிலேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் அழைத்து அந்தக் கருத்தரங்குகளை நடத்தினேன். அங்கே தங்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தற்போது நாங்கள் அரசாங்கத்தின் மூலம் வழங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், பனைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கைகளையெல்லாம் வைத்தார்கள்.

*பிற்பகல் 1-15*

கடந்த நிதியாண்டில் பனைத் தொழிலாளர்கள் 2,000 பேருக்கு இலவசமாகக் கருவிகள் வழங்கப்பட்டன. அதேபோல் பதநீர் மூலம் சர்க்கரை தயார் செய்கின்ற ஆலைகள் 17 ஆண்டுக்காலம் கோவை மாவட்டம் களிக்கநாயக்கன் பாளையத்தில் மூடப்பட்டிருந்தன. இந்த ஆண்டு அந்த ஆலைகள் திறக்கப்பட்டு, அவைகளிலே 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் அவை துவங்கப்படவிருக்கின்றன. அதேபோல், தர்மபுரி மாவட்டம் மத்தூர், கடப்பாக்கம், மாதவரம் ஆகிய இடங்களிலும் 1993 ஆம் ஆண்டு முதல் அந்த ஆலைகள் மூடப்பட்டிருந்தன. அந்த ஆலைகளும் திறக்கப்பட்டு, ஒவ்வொரு ஆலையிலும் 500 பேருக்கு வேலைவ்ாய்ப்பு கொடுக்கவிருக்கின்றோம்.

அதேபோல், பனைத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் பேசியிருக்கிறார்கள். பனைத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்திற்காக திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, ஒரு வீட்டினுடைய மதிப்பு ரூ. 30,000 என்று கணக்கெடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அவை சமர்ப்பிக்கப்பட்டிருக் கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கருத்திற்கு இணங்க அடுத்த நிதியாண்டில் கண்டிப்பாக பனைத் தொழிலாளர்கள் 500 பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், பனைத் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்குச் சிரமம் இருக்கிறது

என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்கிறது. அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசும்போது, குமரி மாவட்டத்து பனைத் தொழிலாளர்கள் சமூகத்திற்குச் சம்பளமே கொடுக்கப்படவில்லை என்றார்கள். நான் விசாரித்த வகையில் இரண்டு மாத காலத்திற்குத்தான் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அரசு அதிகாரிகள் தெரிவித் திருக்கிறார்கள். கூடிய விரைவில் அந்தச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள் பேசும்போது மட்பாண்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் விசாரணை செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் பேசும்போது செங்கற் சூளைகள் சம்பந்தப்பட்ட தொழில்களை எல்லாம் செய்வதற்கு அரசு கதர் வாரியம் மூலம் கடனுதவி வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்காக இந்த நிதியாண்டில் மத்திய அரசும், கதர் வாரியமும் மும்பை கதர் கமிஷனும் சேர்ந்து ஒரு உன்னதமான திட்டத்தை நடைமுறைப்படுத்தவிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சாதாரண குடியில் பிறந்த என்னை இன்றைக்கு இந்தத் துறைக்கு அமைச்சராக ஆக்கி, இரண்டு முறை டெல்லிக்கு அனுப்பினார்கள். நான் டெல்லிக்குச் சென்று அகில இந்திய அளவிலே நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்டேன். மும்பை கதர் கமிஷன் மூலம் வழங்கப்படுகின்ற அந்த மார்ஜின் மணி திட்டம், 25 விழுக்காடு மானியத்துடன் வழங்கப்படுகின்ற அந்தத் திட்டம், தமிழகத்திற்கு வரவேண்டும் என்று இரண்டு முறை டெல்லிக்கு என்னை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுப்பினார்கள். அதே மாதிரி மும்பை கதர் கமிஷனும், மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கருத்தரங்குகளிலே கலந்துகொண்டார்கள், தமிழகத்தினுடைய நிதி நிலைமைகளையெல்லாம் எடுத்து நான் கூறியபோது, மானியத் தொகையாக மட்டும் 9½ கோடி ரூபாயை நம்முடைய கதர் வாரியத்திற்கு அளித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே அதை தமிழகத்திலே இருக்கின்ற ஐந்து மாவட்டங்களில், ஐந்து ஒன்றியங்களில் அறிவிக்க இருக்கின்றோம்.



அதேபோல கிராமப்புறங்களிலே படித்துவிட்டு வேலையில்லா திருக்கும் பட்டதாரிகள் இத்திட்டத்தின் மூலமாக சுயமாகத்தொழில் செய்வதற்கு ஏதுவாகிறது. கதர் கிராமத் தொழிலைப் பொறுத்தவரையில்—எத்தனையோ வாலிபர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள்—இந்தத் துறையின் மூலமாகத்தான் ஆங்காங்கே உற்பத்தியாகின்ற மூலப் பொருட்களை வைத்து அவர்கள் தொழில் செய்கின்ற ஒரு உன்னதமான திட்டம் இருக்கின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதை மனதிலே வைத்துத்தான் மார்ஜின் மணி திட்டம், ஐந்து மாவட்டங்களில் ஐந்து ஒன்றியங்களில் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதுபோன்று, கதர்த்துறையின் மூலமாக எட்டு கதிர் நூற்பாலைகளை ஐந்து மாவட்டங்களில் துவங்கவிருக்கின்றோம். அதிலே, கோவை, பெரியார், கரூர்-தீரன் சின்னமலை, திண்டுக்கல்-மன்னர் திருமலை மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

இந்த நிதியாண்டில், இந்தத் துறையில் சோப்பு செய்வது ஒரு பிரதான தொழிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சோப்புக்கு வெளி மாநிலங்களிலே கிராக்கி மிக அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, கேரள மாநிலத்திலே இந்த சோப்பு மிகவும் அதிகமாக விற்பனையாகிறது. இந்த சோப்புத் தயாரிப்பை நவீனப்படுத்தும் வகையில் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விடாகத்தில் இருக்கின்ற அந்த சோப்பு தயாரிப்பு யூனிட்டுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 10 இலட்சம் ரூபாய் நிதி அளித்திருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-20*

அதேமாதிரி, கதர்துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சூளூரில் இருக்கின்ற பஞ்சுடைக்கும் இயந்திரம் வாங்குவதற்காக அந்த அலகுக்கு என்று 25 இலட்சம் ரூபாயை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். பவானிசாகரில் இருக்கின்ற பாலியஸ்டர் இரகங்களை பிராசஸிங் செய்கின்ற அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20 இலட்சம் ரூபாயை தற்போது அளித்திருக்கிறார்கள். மும்பை கதர் கமிஷன் மூலம் 60 இலட்சம் ரூபாய் பெற்று அந்தத் திட்டம் இன்னும் ஒரு மாதத்தில் செயல்பட இருக்கிறது.

[திரு. அந்தியூர். ப. செல்வராசு] [1997 ஏப்ரல் 9

அதேபோன்று, கதர்த்துறையில் கடந்த காலங்களில் மோட்டா இரகங்களை உற்பத்தி செய்ததன் காரணமாக, கதர்த்துணி அதன் தரத்தை இழந்துவிட்டது. இப்போது 21 கோடி ரூபாய்ச் செலவில் செம்மையான இரகங்களைத் தயார் செய்வதற்கு இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று கதர்ப்பட்டு இரகங்கள் இந்த ஆண்டு 25 கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. அதுபோலவே, கதர் பாலியஸ்டர் 50 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது.

அடுத்து, பனை வாரியத்தின் மூலமாக கோவை, பெரியார் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் உபயோகத்திற்காக பதநீர் புட்டிகளை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கும் பொருட்டு குளிர்சாதனப் பெட்டி இந்த ஆண்டு வாங்குவதற்காக 1.5 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, குன்னத்தூரில் பாம் கோலா அலகினை நிறுவுவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் 10.00 இலட்சமும் தூரிகை அலகினை நிறுவுவதற்கு 2.45 இலட்ச ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று, பனைத் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, இன்றைக்கு பல திட்டங்களை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். கடந்த காலங்களில் ஒரு நாளைக்கு 5 ஆயிரம் லிட்டர் பதநீர்தான் எடுக்கப்பட்டது. ஆனால் இப்போது, கடந்த ஆறு வருடங்களாக பயன்படாமல் இருந்த மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான 6 ஆயிரம் பனை மரங்களை சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் பேசி, அந்தப் பனை மரங்களை குத்தகைக்கு எடுத்து இன்றைக்கு நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பதநீர் எடுக்கக்கூடிய நிலையிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கதர்த்துறையில் தோல் வளர்ச்சி மிக உன்னதமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற மாதம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, காவல்துறையில் உள்ள சிறப்புக் காவல் படைக்கு மூன்றே நாளில் 200 ஜோடி பூட்சுகள் தயார் செய்து சிறந்த முறையில் சப்ளை செய்தோம் என்பதை இந்த நேரத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று கடந்த மாதத்தில் கிட்டத்தட்ட 204 இலட்ச ரூபாய்க்கு ஆர்டர் பெறப்பட்டு, மூன்றே மாதத்தில் ஏறக்குறைய 156.65 இலட்சத்திற்கு பூட்சுகள் சப்ளை செய்யவிருக்கிறோம். எனவே, கதர்த்துறையில் இந்தத் தோல் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 9] [திரு. அந்தியூர். ப. செல்வராசு]

கடந்த காலங்களில் கதர்த்துறையில், வெளி மாநிலங்களில் கொள்முதல் செய்த வகையிலும், விற்பனை ஆகாத பொருட்களை உற்பத்தி செய்த வகையிலும் ஏறத்தாழ 38.36 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதையெல்லாம் வருங்காலங்களில் சரிசெய்வது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசி தள்ளுபடி செய்து விற்பதன் மூலம் ஓரளவுக்கு நிதிநிலையைச் சரிக்கட்ட முடியும் என்பதை இம்மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கதர் வாரியத்தின் மூலம் தஞ்சை மாவட்டம், நாஞ்சிக்கோட்டையில் குளியல் சோப்பு அலகு நிறுவுவதற்கு இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். ஆங்காங்கே கதர் வாரியத்தால் நடத்தப்படும் அலகுகளைப் பழுதுபார்ப்பதற்கு ஒரு நடமாடும் இயந்திரம் வாங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 இலட்சம் ரூபாய் நிதியை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சுத்துறையைப் பொறுத்த அளவில் பேசிய அத்தனை உறுப்பினர்களும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அதிலுள்ள தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பெருந்துறை திரு. பெரியசாமி அவர்களும், திரு. வேலாயுதன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் ஒரு கோரிக்கையைக்கூட வைத்திருக்கிறார்கள். எனவே, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கழக அரசு என்றைக்குமே அவர்கள் பக்கம்தான் இருக்கும். இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசி எந்த அளவுக்கு அதைச்செய்யமுடியுமோ அந்த அளவுக்கு அதைச் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அச்சுத் துறையில் இரண்டு சக்கர வாகனம் வாங்கவேண்டுமென்று சொல்லி முன் பணம் பெற்று, பிறகு அந்த வாகனத்தை உரிய காலத்தில் வாங்காத காரணத்தால், 12 பேர் இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களில் 7 பேர்கள் பணத்தைத் திருப்பிச் செலுத்திவிட்டார்கள் மூன்று பேர் வாகனம் வாங்கி விட்டனர். இன்னும் இரண்டு பேர்கள் பணத்தைத் திருப்பிச் செலுத்தவில்லை. மேலும் வருகைப் பதிவேட்டில் சில திருத்தங்களைச் செய்ததற்கும் சம்பளம் பட்டியலில் சரியான முறையில் உரிமம் செய்யப்படாமைக்காகவும் இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்பட்ட நான்கு பேர்கள் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதைப்பற்றி இப்போது பேச முடியாத சூழ்நிலை இருக்கிறது.

[திரு. அந்தியூர். ப. செல்வராசு] [1997 ஏப்ரல் 9

பிற்பகல் 1-25

அச்சகத் துறையைப் பொறுத்தமட்டில், மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு தானியங்கி தாள் வெட்டும் இயந்திரம் வாங்குவதற்கு 4.5 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். சேலம் கிளை அச்சகத்திற்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.51.85 இலட்சம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதியாண்டில் வழங்கியிருக்கிறார்கள். பளுதூக்கும் கம்பிக் கயிறு இழுவை வாங்குவதற்கு 1 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழக அரசு ரூ.49.61 இலட்சத்தை இந்த நிதியாண்டில் ஒதுக்கியிருக்கிறது.

அதைப்போன்று மத்திய அரசின் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.65 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், அச்சகத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் நலன் கருதி, தண்டையார்பேட்டையில் கட்டப்பட்டுள்ள 300 குடியிருப்புகளைப் பழுதுபார்க்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைகள் பெற்று ரூ.8.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் அந்தக் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை வெளியேற்ற ரூ.2.66 இலட்சம் மாண்புமிகு முதல்வரின் ஆணை பெற்று ஒதுக்கீடு செய்யப்படும்.

சேலம் அரசு கிளை அச்சகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் நலன் கருதி, அங்கே பணியாற்றுகின்ற இடத்தில் உள்காற்று வெளியிலே செல்லாமல் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது என்ற நிலையைப் போக்க காற்றை வெளியே போக்குவதற்கு மின் கருவி, 1.5 லட்ச ரூபாய் செலவில் வாங்கி வைக்கப்படும். இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர்கள் அமர்ந்து சாப்பிட, தங்களுடைய வாகனங்களை நிறுத்த, ரூ.1.5 லட்சம் செலவில் ஒரு கூடம் அமைக்கப்படும்.

நான் சார்ந்திருக்கிற துறைகளோடு சேர்ந்தது பூமி தானம். நாடு முழுவதிலும் உள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் சர்வோதயச் சங்கத் தலைவர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தென் தமிழகத்திலே பாத யாத்திரை செய்ய ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் வருகை தந்தபோது, நிலச்சுவான்தாரர்கள் மனமுவந்து, தங்களுடைய நிலங்களையெல்லாம் வாரி வழங்கினார்கள். இன்றைக்கு அந்த நிலங்களிலெல்லாம் ஏழை



1997 ஏப்ரல் 9] [திரு. அந்தியூர். ப. செல்வராசு]

விவசாயிகளும், பிற்படுத்தப்பட்ட மக்களும் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மகான் தென் மாவட்டங்களில் பாத யாத்திரை சென்ற, ஏதேனும் ஒரு இடத்தில் அவருடைய நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் இதை எடுத்துச்சொல்லி, அடுத்த நிதியாண்டில் அந்த மகான் பாத யாத்திரை சென்ற இடங்களில், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தை தேர்வு செய்து நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் கிராமதானம் என்ற அமைப்பு இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, மதுரை, வத்தலகுண்டு போன்ற இடங்களில் கிராமதானம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கிராம மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை என்னவென்றால், தங்களுடைய நிலங்களைக் கொண்டு சுயமாகத் தொழில் செய்வதற்கும், முறையாக அரசு வங்கிகளின் மூலமாக கடன் பெறுவதற்கும் முடியாத நிலையிருக்கிறது. அது நீக்கப்பட வேண்டுமென்று 30, 40 ஆண்டுகளாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்கின்ற நேரத்தில், இதை அடுத்த நிதி ஆண்டில் கண்டிப்பாக எடுத்துக்கொண்டு, அந்த மக்களுக்கு தானத்தை ரத்து செய்து கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற நலத்திட்டங்கள் கழக அரசால், அதுவும் குறிப்பாக கதர் கிராமத் தொழில் வாரியம், பனைப்பொருட்கள் வாரியம் மற்றும் அச்சகத் துறைகளில் கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கதர்த் துறையை எடுத்துக்கொண்டால் 1748 பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. வாரியத்தின் சொந்தத் தொழிற் பிரிவுகள் 1,395 இருக்கின்றன. 88,116 கைவினைஞர்கள் இதன்மூலம் பயன்பெறுகிறார்கள். இந்த அளவுக்கு இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் சென்ற கூட்டத் தொடரில் நான் அறிவித்தேன், 116 போலிச் சங்கங்களைக் கண்டுபிடித்து கலைத்துவிட்டோம் என்று சொல்லியிருந்தேன். அதைப்போன்ற பல்வேறு போலிச் சங்கங்கள் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தச் சங்கங்களுக்கு தலைவர்களாக இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் ஒரு நியாயமான கோரிக்கையை

வைத்திருக்கிறார்கள். அரசு ஆணை 708 போடப்பட்டதன் விளைவாக, கூட்டுறவுச் சங்கங்கள் வேலைவாய்ப்பில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றன என்றும், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, அரசு சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் உள்ள வேலையை இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தருவதற்கு, இந்த அரசு ஆணை எண் 708-ஐ பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்தக் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கதர் கிராமத் தொழில்கள் மற்றும் எழுதுபொருள்-அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் கீழ் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, அரசுக்குக் கோரிய தொகையினை வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது தடவையாக கைத்தறி மற்றும் துணித் தொழில், அதோடு இணைந்த சுற்றுச் சூழல் பற்றிய மானியக் கோரிக்கைகளை இந்த அவையிலே வைத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களையொட்டியும், தெரிவித்த கருத்துக்களையொட்டியும் சுருக்கமாக ஒருசில வார்த்தைகளைச் சொல்லி, விரைவிலே முடிக்கவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை, மானியக் கோரிக்கையின் விவாதத்திலே பல நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 15 கோடி ரூபாயை கடனாகப் பெற்று, இந்த ஆலைகளையெல்லாம் சிறப்பாக ஓட்ட முடியும் என்ற அளவிலே, அதற்கான உறுதிமொழியினை நான் அன்று அளித்தேன். கடந்த மே மாதத்திலே ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து, ஆகஸ்ட் 16-ஆம் தேதி மானியக் கோரிக்கையிலே வேண்டியனவற்றைப் பெற்று, அதன்பின்பு இடையிலே நடைபெற்ற சில நிகழச்சிகளை இந்த அவையிலே சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமானதொன்றாகும் என்று நான் கருதுகின்றேன். இங்கே பேசிய 15 பேர்களும், அதிலும் குறிப்பாக, திரு. தீரன் அவர்களும், திரு. அழகர்ராஜா அவர்களும், நான்



என்னென்ன நினைத்திருந்தேனோ, அதையே கேள்வியாகப் போட்டு, அவர்களே அதற்கு விடையும் சொல்லியிருக்கிறார்கள். அந்த விடையே உண்மை என்கின்ற அளவிற்குத்தான், நானும் இங்கே ஒத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறேன் என்பதையும் நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த 17 ஆலைகளையும் துவக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்ட நேரத்தில் இருந்த நிலை வேறு. அன்று பெற்ற 15 கோடி ரூபாய் கடன் என்னவாயிற்று என்ற கேள்விக்கு நான் விடை வைத்திருக்கிறேன். ஆனால், அந்த 15 கோடி ரூபாயில், இதுவரையில் முழுவதும் செலவு செய்யாமல், அதிலிருந்து ஓரளவிற்குத்தான் எடுத்துச் செலவு செய்கின்ற அளவிற்கு, என்னையும் அறியாமல் ஒரு அச்சம் என்னிடத்தில் ஏற்பட்டது. அதற்குக் காரணம், இந்த ஆலைகளினுடைய உண்மையான நிலையை நாம் பார்க்கின்றபோது, கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட பஞ்சிற்கான பாக்கித் தொகை, மிகப் பெரிய பிரச்சினையாக, பூதாகரமாக உருவெடுத்தது. ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, அந்த மூன்று மாதகால அளவிலே தெரியாதிருந்த நிலை, மானியக் கோரிக்கைக்குப் பின்பு ஏற்பட்ட பல நிகழ்வுகள், அதாவது, 9 கோடியாக அல்லாமல், ஏறத்தாழ 90 கோடி ரூபாய் அளவிலே அந்தப் பழைய பாக்கி இருந்தது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே, காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, மகாராஷ்டிரா, குஜராத், ஓரிசா பெடரேஷன்கள், கர்நாடக, ஆந்திர வாரியங்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்ற பெடரேஷன் ஆகியவற்றிற்கு மட்டும் ரூ.60 கோடி கொடுக்க வேண்டிய ஒரு கணக்கும், அது தவிர, தனியாரிடமிருந்து பெற்ற வகையிலே கொடுக்க வேண்டிய தொகை ரூ.30 கோடி என்ற கணக்கும், ஆக மொத்தம் ரூ.90 கோடி பஞ்சுக் கடன் பழைய பாக்கி இருந்தது என்ற நிலையை நாம் அறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த பஞ்சுக் கடனெல்லாம் முறையான கடனா, ஏற்றுக் கொள்ளக்கூடிய கடனா என்பதையெல்லாம் ஒருபக்கம் நாம் கணக்கிடுகின்றபோது, தலைவர் அவர்கள் கொடுத்த பணத்தை எடுத்து இதிலே போட்டாலும், நிச்சயம் அந்தப் பணமும் முழுகிவிடும் என்றதொரு அபிப்பிராயத்திலே, நடப்பது நடக்கட்டும் என்று, பஞ்சு வியாபாரிகளுடைய ஒத்துழைப்போடுதான், எந்தவிதமான முதலீடும் போடாமல் அந்த ஆலைகள் இதுவரை இயங்கி வருகின்றன. மேலும் இதிலே ஏற்பட்ட ஒரு விளைவு, செல்வி ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே, திரு. அழகராஜா அவர்கள் சொன்னது போல உற்பத்திச் செலவிலே பஞ்சினுடைய விலை 80 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாகக் குறைந்தது என்பதும், ஏந்தவிதக்

கொள்முதலும் போடாமலேயே, நேர்மையான நிர்வாகத்தை நடத்திய காரணத்தினால், இன்று அது 63 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்ற உண்மையையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன.

*பிற்பகல் 1-35*

அதோடு மட்டுமல்ல. அன்று இங்கே குவிக்கப்பட்ட 'அக்யூமுலேட்டட் லாஸ்' என்று சொல்லப்படுகிற கணக்கு, இப்போது 200 கோடி ரூபாய் அளவுக்கு வந்திருக்கிறது என்பதை திரு. அழக ராஜா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கடந்த 1995-96-ஆம் ஆண்டு மட்டும் 45 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால், 1996-97-ஆம் ஆண்டு — நான் இலாபம் என்று சொல்லமாட்டேன் அந்த 45 கோடி ரூபாயிலே, 30 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு, 15 கோடி ரூபாய்தான் அந்த ஆண்டு நட்டம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், பஞ்சு பாக்கி என்பது, வாங்கியது, வாங்கியதுதானே; அதைக் கட்டித்தானே ஆக வேண்டும் என்ற ஒரு கோரிக்கை, நியாயமான கோரிக்கை. நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், எனக்கு ஏற்பட்ட அச்சத்திற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் இங்கே சொல்லிக் காட்டுவது என்னுடைய கடமையாகும். ஏனென்றால், இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவிலே, இந்தப் பஞ்சு உற்பத்தி, பஞ்சு விற்பனை செய்து வருகிற நிறுவனம், 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா' ஆகும். இந்த 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா'–விலே, 1991-92-ஆம் ஆண்டிலிருந்து பஞ்சு வாங்கிய வகையிலே, 53 கோடியே 69 இலட்சம் ரூபாய், ஆலைகள், அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டி வந்தது. அந்த ஆலைகள் 46 கோடியே, 14 இலட்சம் ரூபாயைச் செலுத்தி, 7 கோடியே 55 இலட்சம் ரூபாய்தான் பாக்கி வைத்திருந்தன. இந்த இடத்திலேதான் ஒரு தவறு; மிகப் பெரிய தவறு; ஒப்பந்தத்திலே ஏற்பட்ட ஒரு தவறு. அவர்களாகவே, பெரிய அளவில் ஒப்பந்தத்தைப் போட்டு, தேவைக்குமேல் பல மடங்கு பஞ்சு வாங்குவதற்காக, அந்த ஒப்பந்தத்தைத் தயார் செய்து, 'கேரியிங் ஓவர் சார்ஜ்' என்ற அடிப்படையிலே மட்டும், டிசம்பர் வரை, தவறான அணுகுமுறையால் போடப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக, நமக்கு நாம் கட்ட வேண்டிய பாக்கி, 7 கோடியே 55 இலட்சம் ரூபாய். அந்த 'கேரியிங் ஓவர் சார்ஜ்' என்ற சட்ட அடிப்படையின்படி, கட்டப்பட்ட தொகை 6 கோடியே 54 இலட்சம் ரூபாய். அதற்குப் பின்பு, டிசம்பர் 1994 வரை, 50 இலட்சம் ரூபாய். ஆக, 7 கோடியே 4 இலட்சம்



ரூபாய், ஒப்பந்தத்திலே ஏற்பட்ட தவறின் காரணமாகவும், பேராசையின் காரணமாகவும், பெரிய அளவிலே வியாபாரம் செய்தால், 'கமிஷன்' பெறமுடியும் என்ற காரணத்திற்காகவும் ஏற்பட்ட விளைவின் காரணமாக, 7 கோடியே 55 இலட்சம் ரூபாய் பாக்கிக்காக, 'கேரியிங்ஓவர் சார்ஜி'லே மட்டும், 7 கோடியே 4 இலட்சம் ரூபாய் கட்டப்பட்டு, மீதி நாம் கட்ட வேண்டிய தொகையைக் கணக்குப் பார்த்தால், வெறும் 51 இலட்சம் ரூபாய்தான். ஆனால், இன்று 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா' தன்னுடைய பாக்கிக் கணக்கை நமக்குக் கொடுத்திருப்பதைப் பார்த்தால், பஞ்சு பாக்கி 7 கோடியே 55 இலட்சம் ரூபாய். அந்த 'கேரி ஓவர் சார்ஜ்'லே பாக்கி 5 கோடியே 58 இலட்சம். இவைகளுக்கு வட்டி, 9 கோடியே 38 இலட்சம் ரூபாய். ஆக, வெறும் 51 இலட்சம் கட்ட வேண்டிய பாக்கிக்காக, 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா', 22 கோடியே 52 இலட்சம் ரூபாயை நாம் கட்ட வேண்டுமென்ற மரபை வைத்திருக்கிறது.

இதையெல்லாம் சேர்த்துத்தான் 60 கோடி. இப்படி, குஜராத்திலே, ஓரிசாவிலே, கர்நாடகத்திலே, ஆந்திராவிலே, இப்படிப் பல இடங்களிலே, நம்முடைய கடன் தொகைகள் தவறான அணுகுமுறையால், 'என்ஹேன்ஸ்' செய்யப்பட்டு, தேவையற்ற முறையிலே நாம் பெரும் சுமையாக சுமக்கப்பட வேண்டிய ஒரு கட்டாயம் இருப்பதை உணர்ந்த பின்புதான், ஒரு அமைச்சராலோ, அல்லது தனியான ஒரு அதிகாரியாலோ அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டுகிற பணியில் ஈடுபட முடியாது என்று முடிவெடுக்கப்பட்டு, அதேநேரத்தில், இடர் உதவிச் சட்டம்' 'ரிலீஃப் அண்டர்டேக்கிங் மெஷர்ஸ்'—என்ற அடிப்படையிலே, உண்மையிலேயே ஒருசில அப்பாவிகள் ஏமாந்து, பஞ்சு கொடுத்து ஏமாந்தவர்கள், தங்கள் தொழிலையே விடக்கூடிய அளவுக்கு அவர்களுடைய குடும்ப நிலையெல்லாம் மோசமாகிச் சென்றதையெல்லாம் நானும் அறிந்திருந்தாலும், 'ரிலீஃப் அண்டர்டேக்கிங் மெஷர்ஸ்' என்ற அடிப்படையிலே செய்யப்பட்ட சில சட்ட விதிமுறைகளின்படி, அவர்களுக்கும் சேர்த்து நாம் தொகையைக் கொடுக்க இயலாது என்ற நிலை அதிலே ஏற்பட்டுவிட்டது. இப்படித்தான், 51 இலட்சம், என்பது 22 கோடியாகிவிட்டது.

*பிற்பகல் 1-40*

சரி; அடுத்த கட்டத்தைப் பார்க்கலாமா என்று பார்க்கிறபோதுதான், இந்த 15 கோடி ரூபாயையும் செலவு செய்யக் கூடாது என்ற முடிவையே நான் எடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

அதற்குக் காரணம், 'மாடர்னைசேஷன்' என்ற அடிப்படையிலே, இந்த ஆலைகளை—இங்கே சொன்னார்கள், திரு. அழகராஜா அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் கேட்டார்கள் இந்த 3¼ கோடி ரூபாய் என்பது என்ன கணக்கு என்று கேட்டார்கள்—13-6-1991-லே நவீனப்படுத்துவதற்கும், ஓர்க்கிங் கேப்பிட்டல் என்ற அடிப்படையிலும் 7 கோடி ரூபாயை அரசிடமிருந்து பெற்றும், 29-3-1993-லே நவீனப்படுத்துவதற்கும், ஓர்க்கிங் கேப்பிட்டல் என்ற அடிப்படையிலும் 7 கோடியே 25 இலட்ச ரூபாய் பெற்றும், 1-3-1994-லே நவீனப்படுத்துவதற்கும், ஓர்க்கிங் கேப்பிட்டல் என்ற அடிப்படையிலே 3 கோடியே 79 இலட்ச ரூபாய் பெற்றும், இதுபோக டிசம்பர் 1994-ல் பஞ்சு வாங்குவதற்கு என்று 25 கோடி ரூபாய் பெற்றும் ஆக மொத்தம் 43 கோடியே 4 இலட்ச ரூபாய் இந்த ஆலைகளுக்குள்ளே போடப்பட்டு தவறான வழிமுறைகளிலே வெளியே எடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆலைகளுக்குள்ளே யோக்கியமான ஆலை எது என்று ஒரு கணக்கை அவர்களாகவே போட்டு, இருக்கிற ஆலைகளில் யோக்கியமான ஆலை சேலம் ஆலைதான், எனவே சேலம் ஆலையிலே பணத்தைப் போட்டால் பத்திரமாக இருக்கும்; வேண்டிய ஆலைகளுக்கு அதை மாற்றிக்கொடுக்கிற பணிகளிலே நாம் ஈடுபடுக்கொள்ளலாம் என்ற அடிப்படையிலே இந்தப் பணம் எல்லாம் சேலம் ஆலையிலே டெபாசிட் செய்யப்பட்டது. இங்கே தலைமையிலே இருப்பவர்களுக்கு வேண்டியவர்களை சேலம் ஆலைக்கு எம்.டி.-யாகப் போட்டு, சுருக்கமாக சொல்லப்போனால் மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்களுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆலையை நவீனப்படுத்துவதற்கும், பஞ்சு வாங்குவதற்கும் 85 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது என்றால் அதை அந்த அரியூர் ஆலையின் பெயரிலே எடுக்க வேண்டும் என்ற எண்ணம் தலைமையிலே இருப்பவர்களுக்கு ஏற்பட்டால் உடனடியாக சேலம் எம்.டி.-யை அரியூருக்கு அடிஷனல் சார்ஜ் என்று போட்டு செக்கை வாங்கி பணத்தை வெளியே எடுக்கிற அளவுக்கு ஒரு நிலை ஏற்பட்டு அதனால் மட்டும் 49 கோடி ரூபாய் மீண்டும் இழப்பு இதிலே ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இழப்பு எல்லாம் ஏற்பட்ட காரணத்தை வைத்துத்தான் நாங்கள் இந்த 15 கோடி ரூபாயை மீண்டும் பிரித்துக்கொடுத்தால் அதனுடைய நிலையும் அதுதான் என்பதால் முழுமையாகத் தெரியாமல் இந்த 15 கோடி ரூபாயை எடுப்பதில்லை என்று இந்த பிப்ரவரி மாதம்வரை அதைத்





தொடவில்லை. ஆனால் இடையிலே ஏற்பட்ட ஒரு நிலை என்னவென்றால் இந்த 17 ஆலைகளும்-பஞ்சு வியாபாரிகளோடு நாங்கள் காலதாமதம் ஆனாலும் வரிசைக்கிரமமாக பணத்தைப் பட்டுவாடா செய்து வந்த காரணத்தால் அந்த 17 ஆலைகளும் முறையாகச் செயல்பட்டு வந்தன. இங்கே சொல்லியதுபோல 220 கோடி ரூபாய்க்குத்தானே உங்களுடைய டிரான்ஸாக்ஷன் நடந்திருக்கிறது என்றால் அந்த அளவுக்குத்தான் நடந்திருக்கிறது, அதில் மாற்றம் ஒன்றும் இல்லை. இந்த 220 கோடி ரூபாய் அளவுக்கு பஞ்சை வாங்கி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில்தான் போனஸ் பேச்சுவார்த்தை வந்தது. போனஸ் பேச்சுவார்த்தையிலே இலாபத்தைக் கணக்கிட்டோ, மற்றவைகளைக் கணக்கிட்டோ பேச இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. குறைந்தபட்சம் 8.33 சதவிகிதமும் அதற்கு மேலே எக்ஸ்கிரேஷியா 8.17 சதவிகிதம் என்ற இரண்டையும் சேர்த்துத் தரவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள்.

நாங்கள் நம்மிடம் பணம் இல்லை என்று சொல்லி, வேண்டுமானால் 8.33 சதவிகிதத்தை இப்போது வாங்கிக்கொள்ளுங்கள், சித்திரை வருடப் பிறப்பு அன்று 8.17 சதவிகிதம் எக்ஸ்கிரேஷியாவை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற அடிப்படையிலே ஒரு ஒப்பந்தத்தைப் போட்டோம். ஆனால் அந்த ஒப்பந்தம் நான் நினைத்தபடி நிறைவேறாமல் போய்விட்டது. திட்டமிட்டு ஒவ்வொரு ஆலையிலும் புதிதாக வாக்குறுதி பெற்று பஞ்சுக்காரர்களிடமிருந்து வாங்கிய பஞ்சின் பணத்தை எடுத்து தவறான முறையிலே 3 கோடி ரூபாயை ஒரே தொகையாக ஒரே முறையிலே கொடுத்தது, 6 ஆலைகள் இப்போது நிறுத்தப்பட்டதற்கு ஒரு காரணம் ஆகும்.

ஆக, வேறு வழியின்றி 6 ஆலைகளும் நின்ற பின்புதான் நீங்கள் சொன்னதைப்போல, அதாவது திரு. அழகராஜா அவர்கள் சொன்னதைப்போல, வருடம் பூராவும் 10 சதவிகிதம் சேர்த்துக் கொடுத்தால் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய்தானே வருகிறது என்றால் அந்தக் கணக்கு உண்மைதான். ஆனால் ஏதோ ஒரு பிடிமானம் வேண்டும். இனிமேல் எதிர்காலத்திலே 'அப்-கன்ட்ரி'யிலே சென்று பஞ்சு வாங்குகிற அத்தனை இடங்களிலும் கடன் இருக்கிறது. பணம் கொடுக்காமல் எங்கிருந்தும் நாம் பஞ்சு வாங்க முடியாது. ஆகவே பஞ்சைப் பணம் கொடுத்து வாங்குகிற அளவுக்கு இந்த 15 கோடி ரூபாயைப் பயன்படுத்தி - ஆனால் அதே நேரத்திலே நூலை

விற்கிறபோது அதிலே வருகிற பணம் இந்தப் பஞ்சுக்காவது பயன்பட வேண்டுமே என்ற ஆதங்கத்தின் காரணமாகத்தான் தொழிலாளர்களைத் தவிர, இந்த அரசைத் தவிர வேறு யாரும் நமக்குக் கடன் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே இல்லை என்ற அடிப்படையிலே, ஆனால் இந்த ஆலைகளை நிச்சயம் 365 நாளும் ஓட்ட வேண்டும் என்ற ஒரே ஒரு கட்டாயத்தின் காரணமாக சற்று நிதானமாகவும், சற்று பொறுமையாகவும் எப்படியும் மீண்டும் திறந்து ஆலைகளை மூடக்கூடாது என்ற அடிப்படையில் செயல்பட்டோம்.

*பிற்பகல் 1-45*

காஞ்சிபுரம், கரூர், மிசேரியர் ஆலைகளினுடைய தொழிலாளர்களோடு தலைமைச் சங்கத்தினுடைய தலைவர்களோடு ஏற்பட்ட பேச்சுவார்த்தை ஒப்பந்தப்படி அந்த ஆலைகள் எல்லாம் துவக்கப்பட்டுவிட்டன. அரியூர் ஆலை குறித்தும், மதுரை மாவட்ட மேலூர் ஆலை குறித்தும் பேச்சு வார்த்தைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. சாரம் ஆலையும், அதனோடு இணைந்து இருக்கின்ற புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆலையும் செயல்படுவதில் சட்டப்பூர்வமான பிரச்சினைகளின் காரணமாக சற்று காலதாமதம் ஆகலாம். அவற்றையும் திறப்பது என்ற முடிவிலேதான் இந்த அரசாங்கம் உள்ளது. இந்த அளவிலேதான் நம்முடைய 18 ஆலைகளின் நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நிச்சயமாக 30 கோடி ரூபாய் அளவிலே இருந்த நஷ்டத்தைக் குறைத்து 15 கோடி ரூபாய் அளவுக்கு அதைக் கொண்டுவந்திருக்கிற பெருமை நமக்கு உண்டு. அதேபோல் 75 சதவீதமாக இருந்த பஞ்சின் விலையை கடன் வாங்கிய பஞ்சிலேயும்-63 சதவீதமாகக் குறைத்த பெருமையும் எங்களுடைய அதிகாரிகளுக்கும், எங்களுடைய துறைக்கும் உண்டு என்பதை நீங்கள் இந்த நேரத்திலே ஒத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இங்கே சொல்லப்பட்ட மிகப்பெரிய கருத்து, தள்ளுபடியைப் பற்றியதாகும். தள்ளுபடி மானியத்தைப் பற்றி நான் விளக்கமாக இங்கே சொல்லவேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது, ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலை என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சற்று கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 100 நாட்கள் என்பதை 150 நாட்களாக ஆக்கிவைத்தாலும் சரி, 150 நாட்கள் என்பதைக் குறைத்து வெறும் 30 நாட்கள் என்று வைத்தாலும்



சரி, அல்லது 3 நாட்கள் மட்டும்தான் ரிபேட் என்று வைத்தாலும் சரி, இந்த 41 கோடி ரூபாய்க்கும் பில் போடுகின்ற நிலைதான் இந்த நாட்டிலே இருக்கிற உண்மை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த 41 கோடி ரூபாய் என்பது எப்படி முடிவு செய்யப்பட்டது என்றால், இது கடந்த ஆட்சியிலே எடுக்கப்பட்ட முடிவாக இருந்தாலும், அந்த முடிவு எப்படிப்பட்ட முடிவு என்பதைச் சொல்வது என்னுடைய கடமையாகும். 1985-86-ஆம் ஆண்டிலே கோ-ஆப்டெக்சுக்குக் கொடுக்கப்பட்ட ரிபேட் 18 கோடியே 92 லட்சம். அதேபோல் பிரைமரி வீவர்ஸ் சங்கங்கள், இண்டஸ்ட்ரியல் வீவர்ஸ் சங்கங்கள் என்று சொல்லப்படுகிற அந்த இரண்டு சங்கங்களுக்கும் 1987-88-ஆம் ஆண்டில் கொடுக்கப்படாமல் பாக்கியாக இருந்த தொகை 7 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய். 1990-91-ஆம் ஆண்டிலே கொடுக்கப்படாமல் இருந்த தொகை ரூபாய் 3 கோடியே 78 லட்சத்து 48 ஆயிரம். 1991-92-லே கொடுக்கப்பட வேண்டியது 24 கோடியே 48 இலட்சம்.

இவையெல்லாம் சேர்த்து, கொடுக்கப்பட வேண்டிய பழைய பாக்கிகளை எல்லாம் சேர்த்து, கணக்கிட்டுப் போட்ட ஒட்டுமொத்தத் தொகைதான் இந்த 40 கோடியே 85 லட்சமாகும். இதிலே மத்திய அரசு கொடுக்கின்ற தொகை 13 கோடியாகும். அதற்குமேல் அவர்கள் கொடுக்க இயலாது என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால் அதற்குப் பின்பு நாம் ஏறத்தாழ 28 கோடி ரூபாயை சேர்த்துத்தான் 41 கோடி ரூபாய் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இதற்கிடையில் தேர்தல் வாக்குறுதிப்படி 1,439 சங்கங்களிலே 1,333 சங்கங்களுக்கு தேர்தல் நடத்திவிட்டோம். ஆனால் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பொறுப்புகளிலே, இயக்குநராக, தலைவர்களாக அவர்கள் வருவதற்கு முன்பாகவே சீலிங் வைத்தோமே இந்த 41 கோடி ரூபாயும் பில்லாகப் போடப்பட்டு ரிபேட்டாகக் கணக்கிலே கொண்டுவரப்பட்டு தலைவர்கள் போய் உட்காருகின்ற நேரத்திலே அங்கே அவர்கள் ரிபேட் இல்லை என்ற செய்தியைத் தவிர வேறு சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலை உருவாகியது உண்மைதான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்கு ஒரு வழிமுறையைக் கண்டுபிடித்தாகவேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஒப்புதலோடு 10 சதவீதம் நெசவாளர் சங்கங்களிலே, இங்கே சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்சன் என்று சொன்னார்களே, அதைப் போடுவது என்ற அடிப்படையிலே 10 சதவீத சங்கங்களிலே திடீரென்று அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிற்பகல் 1-50

அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதினுடைய விளைவாக 'சஸ்பென்ஸ் அக்கவுண்ட்டில்' மட்டும் ரூ.11 கோடியே 5 இலட்சம் ரூபாய் கணக்கில் வந்தது. சஸ்பென்ஸ் அக்கவுண்ட்டிலே வந்த 11 கோடியே 5 இலட்சம் ரூபாயில், இன்று வரை எனக்குத் தெரிந்த வரையில் தோராயமாக 7 கோடி ரூபாய் உள்ளே செலுத்தப்பட்டிருக்கிறதேயொழிய, ரூ. 5 கோடி இன்னமும் செலுத்தப்படவில்லை. இந்த 5 கோடி ரூபாய் எதற்காக விடப்பட்டிருக்குமென்றால், நிச்சயமாக ரிபேட் பெறுவதற்காகத்தான் அந்த 5 கோடி ரூபாய் போடப்படக்கூடிய வாய்ப்பு அதிலே இருக்கிறது. அதேபோல, இதற்கு மட்டும்தானா கொடுக்கிறோம், கோ-ஆப்டெக்சுக்கும் கொடுக்கிறோம் அல்லவா, கோ-ஆப்டெக்சுக்குச் சென்று இதனை ஆராய்ச்சி செய்து பார்ப்பதிலே என்ன தவறு இருக்கிறது என்று கண்டறிய அங்கும் 'டீம்' அனுப்பப்பட்டது. திருமதி வாசுகி அவர்கள் ஈரோட்டினை மட்டும் கவனிக்கிறீர்களே, கரூரை கவனிக்க முடியவில்லையே என்று சொன்னார்கள். எனது ஊரிலேதான் அது நடந்தது. எனது ஊரிலே இருக்கின்ற 'பவளம்' ரூ.35 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ததாக பில் போடப்பட்டிருக்கிறது. நான்கு பில்லில் 35 இலட்சம் ரூபாய்க்கு 'பில்' போடப்பட்டுவிட்டது. ஆனால் பெயரும் ஊரும் இருக்கின்ற பள்ளிப்பாளையத்திலே அப்படிப்பட்டவர்கள் இல்லை.

ஆனால் ரூ.35 இலட்சத்திற்கு சரக்கினை அவர்களே வைத்துக் கொண்டு ரூ. 7 இலட்சத்திற்கு ரிபேட் பெறுவதற்காக—ஏன் சரக்கு தங்களிடம் பத்திரமாக இருக்கின்ற காரணத்தினால் கடன் கணக்கிலே வரவு வைத்து, ரிபேட்டிலே மட்டும் அதை விற்பனையாகக் காண்பித்து ரூ.7 இலட்சத்திற்கு எழுதிக்கொண்டிருக்கிற அளவிற்கு, அதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் இன்னொரு பக்கம் ஏற்பட்டது. அதற்குப் பின்பு இப்போது ஒரு தனி மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தினைத் தேர்ந்தெடுத்து, முழுமையாக ஆய்வு செய்யலாம் என்ற அடிப்படையிலே அனுப்பினோம். அங்கும் பல தவறுகள் நடந்திருக்கின்ற செய்தி எனக்கு வராவிட்டாலும், இடையிலே லாரி ஸ்டிரைக் போன்ற மற்ற காரணங்களினால், முழுமையாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் செயல்படுத்த முடியவில்லையென்ற காரணத்தினால்தான், இந்த 41 கோடி ரூபாய்க்கு மேல் இரண்டு கோடி ரூபாய் தலைவர் அவர்கள் அளித்தும்-நாங்கள்



உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வது, அது எவ்வளவு தொகையாக இருந்தாலும், இங்கே சொன்னதைப் போல பரமக்குடி, எமனேஸ்வரம், சத்திரப்பட்டி போன்ற இடங்களில் இதேபோன்ற நிலைமைகள் எல்லாம் இருப்பது எங்களுக்குத் தெரிந்தும் அதற்கு செய்யக்கூடிய வாய்ப்புகளை நாங்கள் உருவாக்கியிருந்தாலும், ரூ. 41 கோடிக்கு மேல் உண்மையிலே தேவைப்பட்டால் வாங்குவதற்கு யாருக்கும் ஆட்சேபணையில்லை; முதலமைச்சர் அவர்கள் அதைக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இதை யாருக்குக் கொடுப்பது என்பதிலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையை நீக்குவதற்கு ஒரு முறையான வழிமுறை வேண்டும். ஆனால் ஒரு தவறான செய்தி என்னவென்றால், இந்த ஆட்சியிலே ரிபேட் இல்லை என்பது. ஆனால் இந்த ஆட்சியிலேதான் 41 கோடி ரூபாய் ரிபேட் உண்டு, அதற்கு மேலும் 2 கோடி ரூபாய் உண்டு, அடுத்த ஆண்டிற்கும் இந்த 41 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்காவிட்டாலும் உண்டு, இவையெல்லாம் உண்மையென்பது தெரிந்தும் ஒரு சில பேர் திட்டமிட்டு, இந்த ஆட்சியினைப் பற்றி தவறான ஒரு கருத்தினைச் சொல்லி வருவதை நான் மெத்த வருத்தத்தோடு இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்த 41 கோடி ரூபாயை, அதற்கு மேலும் தேவைப்படுகின்ற நலிவுற்ற சங்கங்களுக்கு கொடுக்கின்ற தொகையை எப்படிக் கொடுப்பது என்று இந்த அவையிலே ஒரு முடிவினை நாளை நீங்கள் எடுப்பீர்கள் என்று சொன்னால், அதனை அப்படியே அமல்படுத்தி அதை முறைப்படுத்துவதுதான் எதிர்காலத்திலே இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கும் நெசவாளர் சங்கங்களுக்கும் ஒரு முழுமையான பணியாக அது அமையும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, ஏறத்தாழ 13 மாவட்டங்களிலே கொடுக்கப்பட்ட வேட்டி சேலை, தரமான வேட்டி சேலை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கின்றபோது முறைகேடு நடந்த குறிப்பிட்ட சில கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முறைகேடுகளின் மீது மாநில அரசு நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை. ஆனால், அவர்கள் குறிப்பிட்ட ஒரு சில சொசைட்டிகளில் முறைகேடுகள் நடந்தன என்பதற்காக தள்ளுபடி மானியத்திற்கு உச்ச

[திரு. கே. சுப்பராயன்] [1997 ஏப்ரல் 9

வரம்பு கட்டி ஒட்டுமொத்தமாக கைத்தறித்துறையையே தண்டிப்பது நல்லதல்ல என்பதுதான் எதிர்த்தரப்பிலிருந்து சொல்லப்பட்ட வாதமாகும்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்குமேல் முறையாக அதைப் பயன்படுத்துவது என்ற நம்பிக்கை இந்த அவைக்கு ஏற்பட்டுவிடுமே யானால், இதற்கு உச்ச வரம்பே தேவையில்லையென்பதுதான் என்னுடைய உண்மையான நிலை. இதை முறைகேடாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால்தான், நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்ச உணர்வின் காரணமாகத்தான் அல்லது நீங்கள் வேறு அணுகுமுறைகளிலே, இதிலே ஆலோசனைகளைத் தெரிவித்தால் நிச்சயமாக இந்த ஆண்டு கொடுக்கின்ற அந்த ரிபேட்டினை எந்த முறையிலே கொடுப்பது என்ற முடிவினை எடுப்பதற்கு ஒரு குழுவின் மூலமாகக்கூட நாம் முடிவு செய்துகொள்ளலாம் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

அதேபோல, இலவச வேட்டி, சேலை. அவை நல்லமுறையிலே இருந்ததாக, தரமுள்ளவைகளாக இருந்ததாக 13 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவை முறையாக எல்லோருக்கும் சென்றடைந்தன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களிலே கூட, துண்டும் வழங்கப்பட வேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் வருவாய்த்துறை செய்கின்ற பணி. உற்பத்தி செய்கின்ற பணியைத்தான் கைத்தறித் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் துறை இலவச வேட்டி, சேலைகளை மட்டுமல்ல, எட்டுமாத காலத்திலே என்னென்ன சீருடைகள் எந்தெந்தத் துறைக்கு வேண்டுமோ அவை அத்தனையையும், வேறு இடங்களிலிருந்து பெறாமல், இந்தத் துறையே உற்பத்தி செய்து கொடுத்தது என்பதுதான் உண்மை. ஒரு மீட்டர் அளவுக்குக்கூட வெளியிலிருந்து துணியை வாங்கவில்லை; ஒரு நூல் பந்துகூட வெளியிலே இருந்து வாங்கவில்லை; கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தான் அவற்றைப் பெற்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஆலைகளிலே உள்ள நூலினுடைய தரத்தைப்பற்றிச் சொல்லுகின்றபோது, தரம் குறைவு, விலை அதிகம் என்று சொல்லக்கூடிய நிலை உள்ளது. கடனுக்கு வாங்கிய பஞ்சிலே தரம்



1997 ஏப்ரல் 9] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

குறைவாகத்தான் இருக்கும். ஆனால், இன்று அதனுடைய நிலையை மாற்றி, தரமில்லாத பஞ்சாக இருந்தால் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று நானே சொல்லிவிடும் அளவுக்கு அந்த பேரம் இருக்கிறதேயொழிய, தரமில்லாவிட்டால் அது பின்னியாக இருந்தாலும் சரி, வேறு எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி, அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற நிலை இருக்கிறது. எனவே, தரமுள்ளவற்றைத்தான் நாங்கள் தருகிறோம் என்ற உறுதியை அத்தனை நிறுவனங்களும் தருவதற்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோ-ஆப்டெக்ஸிலே ஏற்பட்ட சில தவறுகளைக் கடந்த முறை நான் சுட்டிக்காட்டினேன். கடந்த ஆட்சியிலே 7½ கோடி ரூபாய் அளவுக்கு நட்டக் கணக்கைக் காட்டினார்கள். இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூபாய் 15 லட்சம் அல்லது 16 லட்சம் இலாபம் வருகின்ற அளவுக்குத்தான் அதனுடைய நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோ-ஆப்டெக்ஸைப் பொறுத்தவரையில் எதிர்காலத்திலே ஏற்றுமதித் துறையிலே சிறப்பாகச் செயலாற்ற 100 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதுவும் கைத்தறித் துறை மூலமாகவே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற அளவுக்கு, அதற்கான பணியினை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஈரோடில் உள்ள பிராசஸிங் யூனிட். அந்த இடமே பல கோடி ரூபாய்க்கு விலை போகும். அந்த இடத்தை விற்க வேண்டும் என்பதற்காகவே, அதைச் சரிக்கட்ட வேண்டும் என்பதற்காகவே அதை இழுத்து மூடினார்கள். அப்படி இழுத்து மூடிய அந்த யூனிட்டைத் திறந்து, நாளொன்றுக்கு 35 ஆயிரம் மீட்டர்தான் பிராசஸிங் என்றிருந்த நிலையை மாற்றி 45 ஆயிரம் மீட்டர் பிராசஸிங் செய்து கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் போட்டு, 20 சதவிகிதம் கூலி உயர்வையும் கொடுத்து, இன்று அந்த ஆலை மாதம் ஒன்றுக்கு 6½ இலட்சம் ரூபாய் இலாபத்திலே நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பக்கம் கூலி உயர்வு கொடுத்து பிராசஸிங் யூனிட் இலாபத்திலே ஓடுகின்ற நிலை; ஒரு பக்கத்திலே தொழிலாளர்கள் சற்று தியாகம் செய்யவேண்டிய கட்டாயத்திலே, அனைத்து ஆலைகளும் ஓடக்கூடிய சூழ்நிலை. இப்படிப் பல்வேறு சூழ்நிலைகளிலே பின்னிப்பிணைந்து கூட்டுறவுச் சங்கங்கள்,

நூற்பாலைகள் அதோடு இணைந்திருக்கிற கோ-ஆப்டெக்ஸ், ஆகியவற்றில் பல்வேறு சிக்கல்கள் ஒருசேர சேர்கின்றபோது, எவ்விதமான முதலீடும், எவ்விதமான மானியத்தையும் இதுவரை அரசிலிருந்து பெறாமல்தான் இந்தத் துறை இந்த அளவுக்கு இதைச் செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது பஞ்சு வாங்குவதிலே டிரான்ஸ்பரன்ஸி; நூல் விற்பதிலும் டிரான்ஸ்பரன்ஸி. இதிலே இடைத்தரகர்கள் இருக்கக்கூடாது என்ற அடிப்படையைச் சொன்னார்கள். Purchasing cotton, Selling yarn இந்த இரண்டிலும் எதிர்காலத்திலே டிரான்ஸ்பரன்சியைக் கடைப்பிடிப்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு நான் இப்போது கூறிய கருத்துக்கள் போதும் என்று கருதுகிறேன்.

அடுத்து கடந்த ஆட்சியிலே போடப்பட்ட 'ஸ்டாப் ப்ரக்யூர்மென்ட்' உத்தரவு. உற்பத்தியை செய்யச் சொல்லிவிட்டு, வேறு இடங்களிலே வாங்குவதற்காக 'ஸ்டாப் ப்ரக்யூர்மென்ட்' என்று போட்டதுதான் நெசவாளர்கள் சங்கங்களிலே 100,120 கோடி ரூபாய்க்குமேல் தேக்கம் இருப்பதற்குக் காரணமே தவிர, வேறு காரணம் எதுவும் இல்லை. உற்பத்தி செய்யச்சொல்லிவிட்டு அதை வாங்காமல் வேறு பக்கம் வாங்கும்போது, அதை மாற்றுகின்ற சூழ்நிலைகளிலே, பல ஏற்பாடுகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒத்துழைப்போடு நான் செய்ய இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சுற்றுப்புறச் சூழலைப் பற்றி அதிக நேரம் சொல்வதற்கு வாய்ப்பில்லை. நான்கே வரியில் சொல்லி முடித்து விடுகிறேன். தோல் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஏற்பட்ட மிகப் பெரிய அபாயம் என்று சொல்லி, உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, அதனால் இன்று அந்தத் தோல் தொழிற்சாலைகள் சிறப்பாக நடைபெறுகிற அளவுக்கு அங்கே கழிவுநீர் சுத்திகரிப்புப் பணியிலே அவர்கள் ஈடுபடுகின்ற நிலை ஒரு பக்கம் ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கம், 66 இலட்சம் மக்கள் குடிக்கின்ற நீர்; 3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நடைபெறுகின்ற விவசாயம், இப்படி மூன்று மாவட்டங்களுக்குச் சொந்தமான பவானி ஆற்றில், சௌத் இந்தியா விஸ்கோஸ் ஆலையினுடைய கழிவு நீர் கலக்கிறது. கலைஞர் அவர்கள்





ஆட்சிக்கு வந்த பிறகு, வழக்கெல்லாம் வேண்டாம், பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று, அவர்களை நேரிலே அழைத்துப் பேசினோம். அவர்கள் ஒத்துக்கொள்ள மறுத்து, நீதிமன்றத் தீர்ப்புப்படி நடந்து கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகுதான், அந்த ஆலை நிறுத்தப்பட்டதேயொழிய, நம்மால் அந்த ஆலை நிறுத்தப்படவில்லை. இதுதான் உண்மையான நிலை. ஆனால் இன்று தமிழகத்திலே எங்கு பார்த்தாலும், உயர்நீதிமன்றத்திற்குச் சென்று பெறுகின்ற நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் ஏதோ மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினால் ஏற்பட்ட தீர்ப்பு என்று நினைக்கின்ற மாயை மாற்றிக்கொள்ளப்பட வேண்டும்.

*பிற்பகல் 2-00*

நாங்கள் என்னென்ன திட்டங்கள் எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கூறுகிறோமோ, அந்த அறிவுரைகளை அவர்கள் கேட்காமல் இருக்கின்றபோது, உங்களுடைய ஆலையை ஏன் மூடக்கூடாது என்று கேட்கும் நோட்டீசை அனுப்புகிறோம். அவர்கள் உடனடியாக நீதிமன்றத்திற்குச் சென்று, தவறான வாக்குறுதிகளை, உண்மைக்குப் புறம்பான வாக்குறுதிகளைச் சொல்லி, காலதாமதப்படுத்தி, இரண்டு ஆண்டுகள், சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனம் போல, கோர்ட்டிலே கதையை ஓட்டி, அதன் காரணமாக நீதிபதியே எரிச்சலுற்று, இவர்கள் செய்யும் தவறைப் பார்த்துவிட்டு, இதுபோல இன்னும் எத்தனை ஆலைகள் இருக்கின்றன என்று நீதிபதியே கேள்வியைக் கேட்டு, அதற்குரிய பதிலை வாங்கி, அந்த ஆலைகளை மூடுகின்ற நிலைதான் இந்த நாட்டிலே ஏற்பட்டதேயொழிய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் ஏற்படவில்லை.

அதுபோல, ஸ்டெர்லைட் ஆலையைப் பற்றி பலபேர், ஏதோ இந்த ஆட்சி கோடிக்கணக்கில் லஞ்சம் பெற்றுவிட்டதாகச் சொன்னார்கள். அதிலே வருகின்ற விஷ வாயு, உமிழப்படும் விஷப் புகை எல்லோரையும் சாப்பிட்டுவிடும் என்ற அர்த்தத்தில் பெரிய அளவில் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலை 1000 கோடி ரூபாய் மூலதனத்திலே போடப்பட்ட ஆலை. 200 கோடி ரூபாய் அளவில், கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கு அந்த ஆலைக்கு பல உபகரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்திலே, அந்த ஆலையினுடைய உற்பத்தித்திறன் 1 இலட்சம் டன். கடந்த ஆட்சியில் அந்த ஆலை, அதனுடைய கழிவு நீரைக் கடலில் கொண்டு போய் விட்டுவிடலாம் என்ற அடிப்படையில் நடத்தப்பட்டது. ஆனால் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்த பின்னர், அந்த ஆலைக்கு

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

உரிமம் கொடுக்கின்றபோது, சில தெளிவான முடிவுகள் எடுக்கப்பட்டன. டாக்டர் சாந்தப்பாவைப் போன்ற பற்பல விஞ்ஞானிகளுடைய ஆலோசனைகளைக் கேட்ட பிறகு, அதிலேயிருந்து வெளியே வருகின்ற எஸ்.ஓ.2 சல்பர்-டை ஆக்சைடு எந்த அளவிற்கு வெளியேறுகிறதோ, எந்த அளவிற்கு சல்பர்-டை ஆக்சைடை, சல்பூரிக் ஆக்சைடாக பாஸ்பரிக் ஆக்சைடாக மாற்ற முடிகிறதோ அந்த அளவிற்குத்தான், உங்களுடைய ஆலையில் திறன் இருக்க வேண்டும்; உற்பத்தித் திறன் இருக்க வேண்டும். தினந்தோறும் எடுக்கின்ற 6 இலட்சம் லிட்டர் தண்ணீரைத் தொடர்ந்து எடுக்காமல், அந்த 6 இலட்சம் தண்ணீரையே மீண்டும் மீண்டும் பயன்படுத்திக்கொள்கின்ற அளவிலேதான் உங்களுடைய உற்பத்தி இருக்க வேண்டும். இப்படி கணக்கிடப்பட்டுத்தான், 1000 கோடி; 1 இலட்சம் டன் தண்ணீரைக்கடலில் கொண்டுபோய் விட்டுவிடுவதெல்லாம் மாற்றப்பட்டு வரும் ஒன்றாகும் 40,000 டன்னுக்கு மேல் உற்பத்தி செய்ய இயலாத நிலையும், அதற்கேற்ற அளவிற்குதான் அங்கே எஃப்ளுவன்ட் ட்ரீட்மென்ட் பிளான்ட் அமைக்கப்பட்டிருக்கிற நிலையும் இருக்கின்ற காரணத்தால், தெளிவாக, உறுதியாக இந்த அவைக்கு நான் சொல்லிக்கொள்வது, அதிலே எங்கே சிறு தவறு நடந்தாலும் அடுத்த நிமிடமே அந்த ஆலையை மூடுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்பதே. அதனுடைய கன்ட்ரோல் சிஸ்டம், முழு கன்ட்ரோல் சிஸ்டம், அதாவது சல்பர்-டை ஆக்சைடு அளவுக்கு மீறி சென்றால், உடனடியாக பர்னேசிலே தானாகவே டிரிப்பாகக்கூடிய அளவிற்கு அதிலே கண்காணிப்புப் பொறி, மற்றவைகள் எல்லாம் வைக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை எல்லாம், பொது மக்களுக்கு உண்மையான நிலவரங்கள் என்ன என்று வெளியே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதற்காக என்னை மன்னிக்க வேண்டுமென்று தெரிவித்து, சில அறிவிப்புகளைச்சொல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தால்.... (குறுக்கீடு) திருசூலம் ஆலையைப் பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டே உறுப்பினர்கள் கேள்வி கேட்கக் கூடாது. அது சரியான முறை அல்ல.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருசூலம் ஆலையைப் பொறுத்த வரையில், அவர்களாகவே நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களாகவே எடுத்துக்



1997 ஏப்ரல் 9] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

கொண்ட வம்பினால் ஏற்பட்ட விளைவே தவிர, அரசாலோ, அல்லது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலோ அது ஏற்படவில்லை. வேறு இடம் ஒதுக்கித் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அது நிச்சயம் நடைபெறக்கூடிய வாய்ப்புண்டு என்பதை நான் இந்த. நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2-05*

அதேபோல நமக்குச் சுற்றுப்புற சூழல் குறித்த ஒரு மேப்பை இந்த நாட்டிலே எந்தெந்தப் பகுதியிலே என்னென்ன தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று முதல் கட்டத்திலே அவர்களுக்கு என்று அறிவுரைகளும், இந்தப் பகுதியிலேதான் அவைகளைச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலும் ஒரு என்வைரான்மென்டல் கைடை— இந்தியாவிலே யாரும் இதுவரை செய்யாத ஒன்றை முதலிலேயே செய்ததற்குக் காரணம், இதை முதலிலேயே முளையிலேயே கிள்ளிவிட்டால் பிரச்சினை வராது என்பதற்காக ஒரு என்வைரன்மென்டல் கைடை—நாம் உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

அதேபோல காவிரியைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தில் 38 கோடி ரூபாயிலே பவானி, பள்ளிப்பாளையம், குமாரபாளையம், ஈரோடு, திருச்சி பகுதிகளிலே பல மயானங்களிலே சூவேஜ்-சாக்கடைகளை சுத்தப்படுத்துகின்ற பணியை, சூவேஜ் புரோகிராம் போன்ற பணிகளை 4 ஆண்டுக்கால திட்டத்திலே நடத்த இருக்கிறோம். அதேபோல பக்கிங்காம் கால்வாய், கூவம் - கேப்பிட்டல் ரிவர், இப்படி சொல்லப் படுகின்ற இந்தப் பகுதியை எப்படிச் சுத்தப்படுத்துவது என்பதை அறிவதற்கும், ஆய்வதற்கும், இதிலே வந்து கலக்கின்ற சூவேஜ் - சாக்கடைகளைத் தனித்தனியாகச் சுத்தம் செய்வதற்கும், அதற்குப் பின்பு இந்த ஆற்றை சுத்தம் செய்வதற்கும், இதற்குள் தண்ணீரை உள்நோக்கி வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் 700 கோடி ரூபாய் திட்டத்திலே அகில உலக அளவிலே ஒரு டெண்டர்-இப்போது நடைமுறையை எப்படி நடத்துவது என்பதற்காகவே ஒரு ஏற்பாடு இப்போது நடைபெற்று வருகிறது என்பதும், இவைகளுக்கெல்லாம் மேலாக நம்முடைய இயற்கை அளித்த நீரை, மண்ணை, காற்றை யாரும் அசுத்தப்படுத்துவதை இந்த அரசு முற்றிலும் அனுமதிப்பது இல்லை என்பதோடு, இந்த ஆதாரங்களை, நீர் ஆதாரங்களைக் கெடுக்கின்ற எப்படிப்பட்ட தொழிலாக இருந்தாலும், அந்தத் தொழிலை நாம் ஏற்றுக்கொள்ளாமல், இன்று இருக்கின்ற

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

புதிய டெக்னாலஜி என்று சொல்லப்படுகின்ற அணுகுமுறைகளை அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் எல்லாம் உருவாக்கிய காலத்தில் அப்படிப்பட்ட டெக்னாலஜி இல்லை. அதை வைத்துக் கொண்டே இன்றும் அவர்கள் அதைச் செய்யாமல் இருப்பது மனித சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற காரியம் ஆகும். ஆகவே, அப்படிப்பட்ட பெரிய தொழில் அதிபர்கள்—நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—தங்களுடைய புதிய புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது தங்களுடைய ஒட்டுமொத்த மூலதனத்திலே 20 சதவீதத்தை இப்படிப்பட்ட சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், கழிவுநீரைச் சுத்தப்படுத்தவும் அவர்களாகவே முன்வந்து அனைத்து பெரிய தொழில் அதிபர்களும், கார்ப்பரேட்டைச் சார்ந்தவர்களும் துணை புரிய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இலவச சீருடை மட்டுமல்லாமல், அரசுத் தரப்பிலே இருக்கின்ற அத்துணை துறைகளும் இந்த கைத்தறித் துறைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் ஏற்கெனவே தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே டெக்ஸ்டைல் பாலிஸியில் ஒரு புது அறிவிப்பை, எதிர்காலத்திலே எப்படி நாம் இந்த கைத்தறியையும், துணிநூலையும் முறைப்படுத்துவது என்று டெக்ஸ்டைல் பாலிஸியை அறிவிக்க இருக்கிறார்கள். நான் இதை அறிவிப்பாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து இந்தியாவிலேயே முதல் முறையாக 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரம் படைத்துள்ளார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே சந்தேகம் இருக்கலாம். இந்த 150 ரூபாயை வேறு ஏதாவது பிடித்து கொடுத்துவிடுவார்கள்; ஏதாவது வேறு கணக்கு இருக்கும் என்ற கணக்கெல்லாம் நீங்கள் போட வேண்டிய அவசியம் இல்லை. சேமிப்பு நிதி என்று ஒரு நிதி அவர்களுக்கு இருக்கிறது. 8 பைசா நெசவாளி கொடுத்தால் மத்திய அரசு 4 பைசா, மாநில அரசு 4 பைசா கொடுக்கிறது. அதை அப்படியே சேமிப்பு நிதியாக அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம்.



1997 ஏப்ரல் 9] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

அதுபோக 25 ஆயிரம் ரூபாய் இன்சூரன்ஸிலே - காப்புறுதியிலே-நாம் பெறுகிறோம். அது போக இன்று இருக்கின்ற சூழ்நிலையில் பல இடங்களிலே சென்று பார்க்கின்றபோது, நெசவாளர்கள் கடைசி காலத்திலே மிக்க கஷ்டத்திலே இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் நான் இரண்டு மூன்று சுற்றுப் பயணங்களிலே பார்த்த பின்பு, முதல்வர் அவர்களிடம் வேண்டிய வேண்டுகோளை ஏற்று—60 வயதுக்கு மேல், 70 வயது ஸ்பேன் வைத்துப் பார்த்தாலும், ஓர்க்-அவுட் ஆகின்ற அளவுக்கு—மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது என்ற அறிவிப்பை முதல்வர் அவர்கள் அறிவிக்கச் சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-10

அடுத்து வரும் ஆண்டுகளிலும் இலவச வேட்டி சேலைத் திட்டம் இன்னும் சிறப்பாக உங்கள் ஒத்துழைப்போடு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், இயக்குநர்கள் எல்லாம்.............(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் அவசரம் இல்லை. நமது நல்வாழ்வுத்துறை அமைச்சர் ரொம்ப அவசரப்படுகிறார். அவர் சீக்கிரம் போய்ச் சாப்பிடவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயதுக்கு மேல் 70 வயதுக்குட்பட்ட நெசவுத் தொழிலாளர்களுக்கு 150 ரூபாய் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் சொல்கிறாரே, அதற்கு ஏதாவது நிபந்தனைகள் உண்டா? குழந்தைகள் இருந்தால் வழங்க மாட்டோம், ' குழந்தைகள் இல்லாவிட்டால் வழங்கப்படும் என்று ஏதாவது வரைமுறையை வைத்திருக்கிறார்களா? அல்லது ஒட்டுமொத்தமாகவே ஓய்வுபெறும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** தலைவர் அவர்களே, நல்ல கேள்விதான். அனைத்து நெசவாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் சொன்னேன். யார் யார் சேமிப்பு நிதியில் தங்களுடைய கணக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் இந்த நிதி வழங்கப்படும் என்ற அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனுங்க, கரெக்ட்தானுங்களே? (சிரிப்பு).

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள், தலைவர்கள், நிர்வாகிகள் இவர்களுக்கெல்லாம், அமர்வுக் கட்டணம், டிராவலிங் அலவன்ஸ் போன்றவைகள் எல்லாம் மிகவும் குறைந்த அளவில்தான் கடந்த காலத்தில் இருந்தது. உயர்மட்ட அதிகாரிகள் எந்த அளவுக்கு இந்த அமர்வுக் கட்டணம், டி.ஏ. போன்றவைகளைப் பெறுகின்றார்களோ அந்த அளவுக்கு இவர்களுக்கும் - அதாவது போக்குவரத்துக்கும் - அமர்வுக் கட்டணமும் கொடுக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதை விவரமாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லை.

நெசவாளர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க இருக்கிறோம். இதற்காக மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய ஒரு கோடியே 40 லட்சம் ரூபாயைப் பெற்றுவிட்டோம். மத்திய அரசின் ஒத்துழைப்போடு, நெசவாளர்களுக்கு இந்த ஆண்டு 1000 வீடுகள், ஒவ்வொன்றும் ரூ. 45,000 மதிப்புள்ள வீடுகளை கட்டிக் கொடுக்க இருக்கிறோம் என்பதையும், அதிலே ரூ. 15,000 மானியம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போல, நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளையொட்டி, எங்கெங்கு அவர்களுக்கு சைசிங் யூனிட் தேவையோ அங்கே அமைக்கப்படுகிறது. இப்போது பரமக்குடியில் இருப்பவர்கள் கும்பகோணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அதைப்போல கும்பகோணத்தில் இருப்பவர்கள் திருச்செங்கோட்டுக்குச் செல்கிற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை மாற்றி, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த சைசிங் யூனிட்டை உடனடியாக அமைக்க, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. உதாரணமாக பரமக்குடியில் ஒரே வாரத்திலே அமைத்திருக்கிறோம். இதைப்போல அனைத்துப் பகுதியிலும் சைசிங் யூனிட்டுகள் அமைக்கப்படும். அதற்கு வேண்டிய நிதி தாராளமாக இந்த அரசிடம் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாகர்கோயில் பகுதியிலும், பரமக்குடி பகுதியிலும், ராஜாஜி மாவட்டம், திருச்செங்கோட்டிலும் இப்போதே சைசிங் யூனிட்டினுடைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. தேவைப்பட்டால் மற்ற இடங்களிலும் உடனடியாக இதைச் செய்வதற்கு காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க ஒரு குழு அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல்



1997 ஏப்ரல் 9] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

அளித்திருக்கிறார்கள். 12(3) ஒப்பந்தம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அதில் எங்களுக்கு வருத்தம் ஏதும் இல்லை. ஆனால் சங்கத்தின் நிதி எவ்வளவு இருக்க வேண்டுமென்பதை அனுசரித்து இந்த 12(3) ஒப்பந்தம் இருக்க வேண்டுமேயொழிய, அவர்களுக்குள்ளாகவே பேசி வைத்துக்கொண்டு எந்த ஒப்பந்தத்தைப் போடுவதையும் அதனால் அந்தச் சங்கம் நலிவடைவதையும் நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, சங்கத்தின் நிதி ஆதாரம் இவ்வளவு இருந்தால், அவர்கள் 12(3) ஒப்பந்தம் இந்த அளவுக்குப் போட்டுக் கொள்ளலாம் என்ற அளவிலேதான் நாங்கள் அதை வரைமுறைப்படுத்திட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 12(3) ஒப்பந்தம் போட்டுக் கொள்ளலாம்; ஆனால் சங்கத்தின் viability-யைக் கணக்கிட்டுத்தான் அந்த ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்பதற்காகச் சில கட்டு திட்டங்கள் வைத்திருக்கிறோம் என்பதையும் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களுக்கு வருகின்ற 1-4-1997-லிருந்து அகவிலைப்படி உயர்வு மட்டும் 10 சதவீதம் அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் அடிப்படைக் கூலியையும் பஞ்சப்படியையும் மாற்றி அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அது எவ்வளவு என்பதை அடுத்த கட்டத்தில் நான் அறிவிக்க இருக்கிறேன். அதேபோல் கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பல சேதங்களுக்கு நிவாரணம் அளிக்க, கதர்த்துறை மூலமாக மட்டும் 1,02,000 ரூபாய் நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலே இருக்கின்ற இந்திய கைத்தறி வளர்ச்சி நிறுவனத்திலே நல்லமுறையிலே பரிசு பெறுகின்ற மாணவர்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்திலே 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. 1997-98 ஆம் ஆண்டிலே இது 10,000 ரூபாயாகக் கொடுக்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்கள் இறக்கும்போது கருணைத் தொகையாக 3,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது, இனி 5,000 ரூபாய் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 9

பிற்பகல் 2-15

இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக அறுவைச் சிகிச்சை, காச நோய், புற்று நோய் போன்ற சிகிச்சைகள் செய்துகொள்ள ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இவைகளெல்லாம் முறையாக 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்தின் வழியாக நாங்கள் செயல்படுத்த இருக்கிறோம்.

அதேபோல, நெசவாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் இந்தத் தொழில் ஏதோ நசிந்த தொழில் என்பதில்லாமல், இந்தத் தொழில்தான் எதிர்காலத்தில் ஒரு நல்ல தொழில் என்பதைப்போல அவர்களை மாற்றி அமைப்பதற்கு என்னென்ன உபகரணங்கள் தேவையோ, என்னென்ன ஜாக்கார்ட் அட்டைகள் போன்றவைகள் தேவையோ, இல்லை தறிகள் தேவையாக இருந்தாலும் அத்தனையையும் இலவசமாக அளிக்கக்கூடிய அளவிற்கு மத்திய மாநில அரசுகளினுடைய திட்டங்களிலே பணம் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதும், ஆகவே நெசவாளர்கள் தங்கள் தகுதியை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான பஞ்சு கொள்முதல் செய்வதிலும், ஆலைகளில் உற்பத்தியான நூலை விற்பனை செய்வதிலும் எவ்வித ஒளிவு மறைவும் இன்றிச் செயல்படும் வகையில் திட்டம் அதாவது, இடைத் தரகர்கள் ஒரு பெர்சன்ட், இரண்டு பெர்சன்ட், மூன்று பெர்சன்ட் கமிஷன் என்றில்லாமல் Transparency in Business என்ற அடிப்படையிலே செயலாற்றினால் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா சொன்னதைப்போல, இந்த ஆலைகள் தரமான நூலைக் குறைந்த விலைக்குச் சங்கங்களுக்குக் கொடுக்க முடியும் என்ற அடிப்படையிலே இந்த ஆட்சி செயல்படும். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி உறுதியாக இதை நிறைவேற்றிடும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு, கேள்விகளுக்கு ஓரளவிற்கு எனது உரையும், கொள்கை விளக்கக் குறிப்புகளும் நிறைவாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நீங்கள் உங்களுடைய பூரண ஒத்துழைப்பை எனக்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.



1997 ஏப்ரல் 9]

## கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 138,26,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச் சூழல் பற்றிய 52-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 11,99,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் படுகிறது.

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 12,99,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

*பிற்பகல் 2-20*

## (ஈ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் - அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் அச்சுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,38,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

143. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

116. மானியக் கோரிக்கை எண் 52 - சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

117. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1996-97.

118. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை, 1996-97.

## இணைப்பு-I

*(60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# கைத்தறி மற்றும் துணிநூல்

## 1997-98 ஆம் ஆண்டிற்கான கொள்கைகளும் திட்டங்களும்

### முன்னுரை

*1.01.* கைத்தறி மற்றும் துணிநூல் துறை *1956* ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கட்டுப்பாட்டில் *14* சரக அலுவலகங்கள் உள்ளன. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். ஒரு இணை இயக்குநர் கைத்தறி சம்பந்தமான இனங்களையும், ஒருவர் துணிநூல் சம்பந்தமாகவும், இதர ஒரு இணை இயக்குநர் சிறுடை சம்பந்தப்பட்ட இனங்களையும் கவனித்துக் கொள்ளுகின்றனர். இத்துறை, மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டம் சார்ந்த மற்றும் திட்டம் சாராத பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவை, வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளவர்களுக்கு இலவச வேட்டி மற்றும் சேலை வழங்குதல்; தள்ளுபடி மானியத் திட்டம், நெசவாளர்களுக்கு வீட்டுவசதி, நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நலனுக்கான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் முதலியன. தலைமையிடத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், துறையின் திட்டங்கள் முழுவதையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளை கவனித்து வருகின்ற நிலையில், கீழ்மட்ட அளவில், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை சரக உதவி இயக்குநர்கள் கவனித்துக் கொள்ளுகின்றனர்.

*1.02.* கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கை எண் *25* இன் கீழ் *1997-98* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கீழ்க்காணும் விவரப்படி ரூ. *138.26* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 9

| கோரிக்கை எண். | திட்டம் சாராதது. | திட்டம் சார்ந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநில திட்டம். | மைய அரசு திட்டம். | மைய அரசு உதவி. | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 25 கைத்தறி மற்றும் துணிநூல் | 98.97 | 0.07 | 2.30 | 36.87 | 39.24 |

| திட்டம் மற்றும் திட்டம் சாராதது மொத்தம். | திரும்ப வசூலிப்பதை கூட்டுக. | பெரு மொத்தம். |
|---|---|---|
| (7) | (8) | (9) |
| 138.21 | 0.05 | 138.26 |

கூட்டுறவு நிறுவனங்களுக்கு பங்கு மூலதன உதவித் தொகைக்காக ரூ. 0.50 கோடி மூலதன தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1997-98 ஆம் ஆண்டின் புதிய திட்டங்களுக்கான (பகுதி-2 திட்டங்கள்) ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:**

| வரிசை எண். | திட்டப் பணிகள் விவரம். | 1997-98 ஆம் ஆண்டிற்கு மொத்த செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1. | காஞ்சிபுரத்திலுள்ள சரிகை ஆலையினை விரிவுபடுத்துதல் (திட்டம்) | 21.20 |
| 2. | கூடுதல் இயக்குநர் பதவியை உருவாக்குதல் (திட்டம் சாராதது) | 0.19 |
| 3. | திருச்செங்கோட்டில் கஞ்சி தோய்த்தல் மற்றும் பாவு ஓடுதல் ஆலை அமைத்தல் (திட்டம்) | 7.00 |
| 4. | மதுரை மற்றும் திருநெல்வேலி சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர்கள் அலுவலகங்களுக்கு தலா ஒரு ஈப்பு வழங்குதல் (திட்டம்) | 6.00 |
| | மொத்தம் | **34.39** |



1997 ஏப்ரல் 9]

1.03. கைத்தறி தொழில் மனித நாகரிகத்துடன் ஒட்டி வளர்ந்து வருகின்றது. இது சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு விளைவிக்காததுடன், மிகக் குறைந்த மூலதனத்துடன், பெருமளவு கிராமப்புற மக்களுக்கு வாழ்வளித்து வருகின்றது. தலைமுறை தலைமுறையாக நடைபெற்று வருகின்ற நெசவுத் தொழில், நம்முடைய நாகரீகப் பரிமாணத்தை வெளிப்படுத்தும் ஒரு கலையாகவும் அமைகிறது. விசைத்தறி மற்றும் ஆலைத் தொழில்களோடு ஒப்பு நோக்கும்போது, கைத்தறித் துணிகளின் நுண்ணிய வேலைப்பாடுகளும், கலைநயமும் தெள்ளென விளங்கும்.

1.04. தேசத் தந்தை காந்தியடிகளுக்குக் கதர்த்துணி எவ்வளவு விருப்பமானதாக இருந்ததோ அந்த அளவிற்குப் பேரறிஞர் அண்ணாவிற்கு கைத்தறித் துணி விருப்பமானதாக இருந்தது. மத்திய அரசின் பல்வேறுபட்ட நெசவாளர் நல்வாழ்வு மற்றும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு, நாட்டிற்கே ஒரு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் இருந்து வந்திருக்கிறது.

1.05. கூட்டுறவு நூற்பாலைகளில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வந்தாலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல் எப்பொழுதும் தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், நூற்பாலைகளில் ஆட்குறைப்பு செய்யப்படாமல் இருப்பதற்காகவும் அவைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1.06. நாட்டின் மிகப் பழமையான இந்தத் துணிநூல் தொழிலுக்கு, பஞ்சுவிலை ஏற்றத்தினாலும், நூல் தட்டுப்பாட்டினாலும் பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளன. பற்பல இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி காரணமாக, கூட்டுறவு நெசவாளர்களின் நூல் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

1.07. மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. தாராளமாக்கப்பட்ட உரிம முறைகளினால் விசைத்தறித் தொழில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

1.08. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், சங்கங்களின் சொந்தக் கிளைகள் மற்றும் விற்பனை முகவர்கள் வாயிலாகவும் விற்பனை செய்வதற்கு பல

நடவடிக்கைகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், இந்தியாவின் முக்கிய நகரங்களிலும், சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் கைத்தறிக் கண்காட்சிகளை நடத்தி, கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரித்து வருவதால் நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

1.09. கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர்கள் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் நல்வாழ்வு செறிவுத் திட்டம், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு ஆதாயத் தொகை வழங்கும் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.

1.10. தமிழ்நாட்டில் 717 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும், 600 சிறிய நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. தமிழகம் மகாராஷ்டிரா மற்றும் இதர மாநிலங்களிலுள்ள பின்னலாடைத் தொழில் மற்றும் விசைத்தறிகளுக்குத் தேவையான நூலையும் கைத்தறிகளுக்குத் தேவையான சிட்ட நூலையும் இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

## கைத்தறிகள்

## 2. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் சுமார் 4.00 இலட்சம் தறிகளுடன், 1439 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கைத்தறி நெசவாளர்கள் நிறைந்துள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இக்கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை ஆண்டிற்குச் சுமார் 1200 இலட்சம் மீட்டர் அளவிற்குப் பல்வேறு வகையான துணிகளை உற்பத்தி செய்கின்றன. இவைகளின் ஆண்டு விற்பனை மதிப்பு சுமார் ரூ. 450.00 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டுச் செயல்திறன்படி, 67.8 விழுக்காடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்துடன் இயங்குகின்றன. கைத்தறிகளின் வளர்ச்சி மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வு ஆகியவற்றிற்கென தமிழக அரசினால் திட்டப்படும் அனைத்துத் திட்டங்களும் இச்சங்கங்களின் வாயிலாக நெசவாளர்களைச் சென்றடைகின்றன.



## 3. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

3.01. நெசவாளர்கள் பலருக்குச் சொந்தமாக தறியில்லாத காரணத்தால் கூலிக்காக வேலை செய்கிறார்கள். இவர்களுடைய இந்த நிலையை மாற்ற அரசு தொழிற்கூட அமைப்பில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கியது. இத்தகைய சங்கங்களில் தறி மற்றும் நெய்வதற்கு நூல் ஆகியவை நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு துவங்கப்பட்ட 190 சங்கங்களில் 165 சங்கங்கள் 12,600 தறிகளுடன் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் துணி உற்பத்தி 80.50 இலட்சம் மீட்டர் மற்றும் விற்பனை 78.00 இலட்சம் மீட்டர் ஆகும். இந்த 165 சங்கங்களில் 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர்களுக்காகவும், 10 சங்கங்கள் மகளிர்களுக்காகவும் துவக்கப்பட்டவையாகும்.

3.02. கிராமப்புறங்களிலுள்ள மகளிருக்குப் பெருமளவு வேலை வாய்ப்பு அளிக்க 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் "நொராட்" நிதியுதவியுடன் நிறுவப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10 இலட்சம் மானியமாகப் பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. ஆலை (மில் கேட்) விலையில் நூல் வழங்கும் திட்டம்

4.01. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் சிறப்பு திட்டம் ஒன்று மைய அரசால் உருவாக்கப்பட்டு, தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கென தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் சிறப்பு தொடர்பாளராக நியமிக்கப்பட்டு, ஆலைவாயில் நூல் விலையில் போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கென இரண்டு விழுக்காடு தொகையை குறைத்து சலுகை விலையில் நியமிக்கப்பட்ட மாநில கைத்தறி முகவர்களுக்கு நூல் வழங்கி வருகிறது.

4.02. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் சிறப்புத் தொடர்பாளராகச் செயல்பட்டு வருகிற நிலையில், கூட்டுறவு நூற்பாலைகள், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலைவாயில் விலையில் நூல் வழங்கி வருகின்றன.

4.03. தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம், ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சத்திற்கும் மேல் விற்பனை செய்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கைத்தறி வளர்ச்சி மையங்களுக்கும் இத்திட்டத்தினை 1996-97 ஆம் ஆண்டு முதல் விரிவாக்கம் செய்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டுக்கான இத்திட்டத்தின் கீழ் 28-02-97 வரை ரூ. 8,33,89,749.00 மதிப்புள்ள 8,30,236 கிலோ பருத்தி சிட்ட நூல் கைத்தறி வளர்ச்சிக் கழகத்தால் கோ-ஆப்டெக்ஸுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 5. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் வழங்குதல்

5.01. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சலுகை அடிப்படையிலான வட்டி விகிதத்தில், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. அதற்கான வட்டி, வங்கி விகிதத்திலிருந்து 2.5 விழுக்காடு குறைவாக கணக்கிடப்படுகிறது. 'நபார்டு' மறுநிதி உதவி திட்டத்தின்கீழ் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குவதற்காக அரசு 3 விழுக்காடு வட்டி மானியமாக வழங்குகிறது. இது மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்டக் கூட்டுறவு வங்கி இடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை மூலதனம் வழங்குவதற்காக அரசு ஒரு விழுக்காடு வட்டி மானியத்தை மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கி வருகிறது. 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 400 இலட்சம் வட்டி மானியத்திற்கு ஒதுக்கப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியால், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நடைமுறை மூலதனம் ரூ. 350.93 கோடியாகும். 1996-97-இல் இச்சங்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட நடைமுறை மூலதனம் ரூ. 432.29 கோடியாகும். இந்தியா முழுமைக்கும் நபார்டு வழங்கும் மொத்த நிதியில் இது 53 விழுக்காடுகளாகும்.

5.02. தற்போது, தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியால் அனுமதிக்கப்பட்ட தறி ஒன்றுக்கான காசுக் கடன் விவரம்



கீழ்க்காணுமாறு:

| | நிதி அளவு |
|---|---|
| 1. பருத்தி ரகம் | ரூ. 12500 |
| 2. பருத்தி சிறப்பு ரகம் | ரூ. 20000 |
| 3. பட்டு ரகம் | ரூ. 28000 |
| 4. பாலியஸ்டர் ரகம் | ரூ. 22000 |
| 5. பருத்தி ரகம் (விசைத்தறி) | ரூ. 30000 |
| 6. பட்டு (விசைத்தறி) | ரூ. 24000 |
| 7. பாலியஸ்டர் (விசைத்தறி) | ரூ. 26000 |

கைத்தறித் துணிக்கான உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதை பரிசீலித்து தறி ஒன்றுக்கான காசுக் கடன் விகிதத்தை உயர்த்தி அமைக்க தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியை துறை கேட்டுக் கொண்டுள்ளது.

## 6. 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்படும்போது அவற்றிடமிருந்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு சேரவேண்டிய தொகையை வசூலிக்க வாய்ப்பில்லா நிலையால் ஏற்படும் இழப்பில், 90 விழுக்காடு அரசினால் ஈடுசெய்யப்படுகிறது.

## 7. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம்/தள்ளுபடித் திட்டம்

7.01. கைத்தறித் துறைக்கே உரித்தான அதிக செலவினங்களால் ஏற்படும் குறைகளை ஈடுசெய்யும் வகையில், கைத்தறித் துணிக்கு விற்பனை வாய்ப்பை வழங்கும் வகையிலும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலும், கைத்தறி துணி விற்பனைக்கு தள்ளுபடி மானிய திட்டத்தை நெடுங்காலமாக மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு 1-4-1989 முதல், தள்ளுபடி மானியத் திட்டத்திற்குப் பதிலாக விற்பனை மேம்பாட்டு உதவி திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினத்தில் 75 விழுக்காடு தள்ளுபடி

[1997 ஏப்ரல் 9

மானியத்திற்கும். எஞ்சிய 25 விழுக்காட்டினை பலதரப்பட்ட கைத்தறி மேம்பாட்டு உதவித் திட்டங்களுக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வழிமுறையினை வகுத்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டுக்கு மொத்த விற்பனை மேம்பாட்டு உதவித் தொகை ரூ. 4053.94 இலட்சம் ஆகும்.

7.02. மாநில அரசு, கைத்தறித் துணிகளுக்கு ஆண்டொன்றுக்கு 100 நாட்களுக்கு 20 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்குவதை தனது பொதுவான கொள்கையாகக் கொண்டு, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையை ஊக்குவிக்க உதவும் வகையில், இக்கொள்கையை அரசு மறு ஆய்வு செய்து வருகிறது. மாநில அரசு கீழ்க்கண்ட தொகையினை தள்ளுபடி மானியமாக கடந்த 5 ஆண்டுகளில் வழங்கியுள்ளது.

| வருடம் | மாநில அரசு வழங்கிய தொகை | | |
|---|---|---|---|
| | தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு | மொத்தம் |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1992-93 | 2799.97 | 1286.26 | 4086.23 |
| 1993-94 | 3790.08 | 1627.47 | 5417.55 |
| 1994-95 | 2709.02 | 1376.53 | 4085.55 |
| 1995-96 | 2706.73 | 1392.82 | 4099.55 |
| 1996-97 | 2628.81 | 1456.74 | 4085.55 |

## 8. கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள்.

8.01. தறி முதலாளிகளிடம் பணி செய்து வந்த, பின் தங்கியுள்ள நெசவாளர்களை, தறி முதலாளிகளின் பிடியில் இருந்து விடுவித்து அவர்களுக்குத் தொடர்ந்து தொழில் வழங்கும் நோக்குடன் ஆறு



1997 ஏப்ரல் 9]

கூட்டுறவுக் கைத்தறித் திட்டங்கள் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்கள் 15,699 கைத்தறி நெசவாளர்களுக்குத் தொழில் வழங்குவதுடன், மைய அரசால் அறிவிக்கப்படும் திட்டங்களை நெசவாளர் நலனுக்கெனச் செயல்படுத்தியும் வருகின்றன.

8.02. கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடியில் உள்ள இரு திட்டங்களும் ஏற்றுமதி ரக உற்பத்தித் திட்டங்களாகும். எனவே, அவை "ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள நான்கு திட்டங்களும் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களாகும்.

## 9. இலவச வேட்டிகளையும், சேலைகளையும் வழங்கும் திட்டம்

9.01. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

9.02. 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 88.49 கோடி மொத்த மதிப்பில் பொங்கல் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு 1997 ஆகிய இரு கட்டங்களில் 72.75 இலட்சம் சேலைகளும் 68 இலட்சம் வேட்டிகளும் வழங்கி. திட்டத்தினை செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. பொங்கல் திருநாளுக்கு முதற்கட்டமாக 13 மாவட்டங்களுக்கு 27,03,000 சேலைகளும், 25,19,000 வேட்டிகளும் விநியோகிக்கப் பெற்றன. இவற்றின் உயர்ந்த தரம் பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இரண்டாவது கட்டமாக, 16 மாவட்டங்களுக்கு 45.72 இலட்சம் சேலைகளும் 42.81 இலட்சம் வேட்டிகளும் 1997 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் விநியோகம் ஆரம்பித்து 15-7-97-க்குள் முடிவடையும்.

## 10. பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

சத்துணவுத் திட்டத்தின்கீழ், முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கும் திட்டம் 1985-86 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 1996-97 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத்துறையிடமும், சீருடைகளை வழங்கும் பணியினை கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. துணிகள்

வழங்கும் பொறுப்பு மற்றும் அதற்கான தொகையினை வழங்கும் தொடர்பு அமைப்பாக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகம் செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1996-97 ஆம் ஆண்டிற்கு ரூ. 31.11 கோடி மதிப்பிற்கு 105.44 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதில், இதுவரை ரூ. 7.69 கோடி மதிப்பிற்கு 29.68 இலட்சம் மீட்டர் துணி விநியோகிக்கப்பட்டுள்ளது.

## 11. ஜனதா துணித் திட்டம்

எளிய மக்களுக்குத் தேவையான துணி வகைகளை அவர்களால் வாங்கக்கூடிய விலையில் வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலையும், ஊதியமும் வழங்குதல் என்ற இரு நோக்கங்களுடன் 1976-இல் ஜனதா துணித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் துணிக்கு சதுரமீட்டருக்கு ரூ. 3.40 மானியமாக மத்திய அரசு வழங்குகிறது. 1996-97 ஆம் ஆண்டிற்கு 22.91 மில்லியன் சதுர மீட்டர் குறியீடு கைத்தறி வளர்ச்சி ஆணையர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கான மொத்த மானியம் ரூ. 5.51 கோடி ஆகும். 1996-97 ஆம் ஆண்டில் கைத்தறி வளர்ச்சி ஆணையர் அனுமதித்திருந்த ரூபாய் 1114.78 இலட்சத்தினை மாநில அரசு வழங்கியுள்ளது. ஜனதா துணி வகைகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

## 12. கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயந்தோய்ப்பு அலகுகள்

12.01. 1993-94 ஆம் ஆண்டு முதல் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயந்தோய்ப்பு அலகுகள் நிறுவுவதற்கான செயல்முறை திட்டத்தினை மைய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது கைத்தறித் தொழிலில் இருந்து வரும் மிகக் குறைவான மூலதனத்தினால் ஏற்படக்கூடிய ஆதாரக் குறைவுகளைச் சரிக்கட்டும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் கைத்தறித் தொழிலை உற்பத்தி மற்றும் பதனிடுதலில் சுயசார்புடையதாகச் செய்யும்.

12.02. இத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 3,000 கைத்தறி வளர்ச்சி மையங்களையும் 500 தரமான சாயந்தோய்ப்பு அலகுகளையும் நிறுவுவதற்கு, மத்திய அரசு உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள



குறியீட்டில் 303 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 58 தரமான சாயந்தோய்ப்பு அலகுகளும் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இம்மையங்கள் கைத்தறி நெசவாளர்கள் மிகுந்து காணப்படும் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

12.03. ஒரு கைத்தறி வளர்ச்சி மையத்திற்கு ரூ. 27.00 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு, அதில் ரூ. 10.00 இலட்சம் மத்திய அரசின் மானியமாகவும், எஞ்சிய தொகையான ரூ. 17.00 இலட்சம் தேசிய விவசாய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறுநிதி வசதித் திட்டத்தின்கீழ் கடனாகவும் வழங்கப்படுகிறது. தரமான சாயந்தோய்ப்பு அலகு ஒன்றினை நிறுவ ரூ. 7.83 இலட்சம் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டு, மத்திய அரசின் மானியத்துடன் தேசிய விவசாய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறுநிதி வசதித் திட்டத்தின்கீழ் கடனும் வழங்கப்படுகிறது.

12.04. கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயந்தோய்ப்பு அலகுகள் நிறுவுவதற்கான நிதியுதவி விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | மையங்களின் எண்ணிக்கை | மானியம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | கைத்தறி வளர்ச்சி மையங்கள் 303 | 3030.00 | 5151.00 | 8181.00 |
| 2. | தரமான சாயந்தோய்ப்பு அலகுகள் 58 | 247.37 | 206.77 | 454.14 |

12.05. 1996-97 ஆம் ஆண்டிற்கு 38 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 4 தரமான சாயந்தோய்ப்பு அலகுகள் நிறுவுவதற்காக ரூபாய் 114.20 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 13. செறிவுத் திட்டம்

13.01. கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு, தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு, மத்திய அரசின் செறிவுத் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

[1997 ஏப்ரல் 9

13.02. மத்திய அரசின் வழிமுறைகளின்படி செறிவுத் திட்டமானது, வணிகம் மற்றும் வணிகம் சாராதது என இரு இனங்களைக் கொண்டதாகும். வணிகம் சாராத இனத்தின்கீழ், ஆதாயத் தொகை, தொழிற் கூடங்களுக்கு மின்வசதியளித்தல், தறி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல் போன்ற திட்டங்கள் அடங்கும். வணிகம் என்ற இனத்தின்கீழ், புதிய தறிகள் வழங்குதல், கிடங்கு நிறுவுதல், விற்பனை மையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் அடங்கும். வணிகத் திட்டங்களுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. வணிகம் சாரா இனங்களுக்கென மானியமாக வழங்கப்படும் நிதி உதவியை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற அடிப்படையில் வழங்குகின்றன. எனினும், ஆதாயத் தொகை வழங்குதல் மற்றும் தொழிற்கூடம் கட்டுதல் போன்றவற்றிற்கு 100 விழுக்காடு நிதியும் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

13.03. செறிவுத் திட்டத்தின்கீழ் 1996-97 ஆம் ஆண்டு ரூ. 167.16 இலட்சம் அளவிற்கு நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் நிறைவேற்ற மத்திய அரசு அனுமதி அளித்து, ரூ. 41.40 இலட்சம் வழங்கியுள்ளது.

## 14. கைத்தறித் துணி ஏற்றுமதிக்கான செறிவுத் திட்டம்

கைத்தறி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு மைய அரசு, கைத்தறி ஏற்றுமதி செறிவுத் திட்டத்தின்கீழ், கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையுடன் நடைமுறை மூலதனக் கடன், தறிகளை நவீனப்படுத்துதல், வடிவமைப்புகள் அபிவிருத்தி, உற்பத்தி மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு, விற்பனை ஆதரவு மற்றும் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றின் மூலம் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கென சென்னிமலை, மதுரை மற்றும் கரூர் பகுதிகளில் மூன்று ஏற்றுமதி திட்டங்களை செயலாக்க ஒப்புதல் அளித்துள்ளது.

14.02. இத்திட்டத்தை செயல்படுத்த மைய அரசு, திட்டம் ஒன்றுக்கு ரூ. 40/- இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 120/- இலட்சம் ஒப்பளிப்பு செய்வதென அறிவித்துள்ளது. இத்தொகையில் ரூ. 45 இலட்சம் மானியமாகவும், ரூ. 75 இலட்சம் கடனுதவியாகவும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து அளிக்கப்படும். இதில் மானியத் தொகையான ரூ. 45 இலட்சம் (மைய அரசு மற்றும் மாநில அரசின் பங்குகள்) ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டு பயன்பெறும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடனுதவித் தொகையில் மைய அரசு தனது பங்கில் 50 விழுக்காடான ரூ. 18.75 இலட்சத்தை ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்தத் தொகையுடன் மாநில அரசின் பங்கான ரூ. 18.75 இலட்சம், ஆக மொத்தம் 37.50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.



1997 ஏப்ரல் 9]

## 15. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

15.01. கிராம அடிப்படையிலான பரந்த அணுகு முறையாக கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டத்தினை மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் போதிய அடிப்படை வசதிகளும், சாலை வசதிகளுமில்லாத கைத்தறியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் கிராமங்களைத் தத்தெடுத்து அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு மைய அரசு வழங்கிய ரூ. 148.17 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 13 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

15.02. அண்ணா மாவட்டத்தில் உள்ள விளாகம் கிராமத்தில் தொலைக்காட்சி மற்றும் நூலக அறை அமைத்தல், குடிநீர் வசதிக்கென ஆழ்துளைக் கிணறு அமைத்தல், நெசவாளர்களுக்குத் தறிகள் வழங்குதல், சாலை வசதிகள் செய்து தருதல், கழிவுநீர் தொட்டி அமைத்தல், நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தருதல் ஆகியவை செயலாற்றப்பட்டதுடன் அலுவலகக் கட்டிட கட்டுமானப் பணியும் செயலாற்றப்பட்டு வருகிறது.

15.03. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை கிராமத்தில், கிட்டங்கியுடன் கூடிய அலுவலகக் கட்டிட கட்டுமானப்பணி செயலாற்றப்பட்டு வருகிறது. இதர கிராமங்களுக்குக் குடிநீர் வசதி, தொலைக்காட்சிப் பெட்டியுடன் கூடிய நூலக கட்டிட வசதி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டிடம், காட்சியறை மற்றும் சாயந்தோய்ப்பு அலகு ஆகிய வசதிகள் மத்திய அரசு, மாநில அரசு, மாவட்ட வளர்ச்சி முகமை, நேரு வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவிகளோடு செயலாக்கப்படும்.

[1997 ஏப்ரல் 9

## 16. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

16.01. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி ஆதாரத்தினை வலுப்படுத்தும் பொருட்டு பங்குத் தொகை, ஆதாயத் தொகை, சாயந்தோய்ப்பு அலகு, கிடங்கு மற்றும் காட்சியறை, பாவு ஓடும் ஆலைக்கூடம், அலுவலகம் மற்றும் கிட்டங்கி கட்டுதல் ஆகியவற்றிற்கென மாநில அரசின் மூலமாக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி (கடன்) பெறப்படுகிறது.

16.02. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 முடிய 5 ஆண்டுகளுக்கு 72 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குத் தொகையாக ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1995-96 ஆம் ஆண்டிற்கு 9 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 15 இலட்சமும், 1996-97 ஆம் ஆண்டிற்கு 15 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 25 இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

16.03. 1995-96 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்திற்கு கைத்தறி துறைக்கு ரூ. 34.73 இலட்சம் கீழ்க்காணும் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூபாய் 10.65 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | சங்கங்களின் எண்ணிக்கை | அனுமதித்த தொகை | விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | சாயந்தோய்ப்பு கூடத்துடன் கூடிய பதனிடும் கூடம் அமைத்தல் | 1 | 2.20 | 2.20 |
| 2. | பாவுக்கூடம் அமைத்தல் | 2 | 5.50 | 2.75 (ஒரு சங்கம்) |
| 3. | கிட்டங்கியுடன் கூடிய அலுவலகம் கட்டுதல் | 4 | 14.80 | 3.70 (2 சங்கங்கள்) |
| 4. | காட்சியறை கட்டுதல் | 1 | 1.23 | .. |
| 5. | ஆதாயத் தொகை | 1 | 11.00 | 2.00 |
| | மொத்தம் | | **34.73** | **10.65** |



1997 ஏப்ரல் 9]

16.04. இத்திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ரூ. 87.70 இலட்சம் கீழ்க்காணும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலையில் விற்பனை வளாகம் அமைத்தல் | 7.70 |
| 2. | பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதாயத் தொகை | 50.00 |
| 3. | பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதாயத் தொகை | 30.00 |
| | மொத்தம் | **87.70** |

ஆதாயத் தொகை ரூ. 80.00 இலட்சத்தில், 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 2.50 இலட்சமும், 5 பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 10.00 இலட்சமும் 1996-97 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 17. கைத்தறி நெசவாளர்களுக்கான ஊரக நல்வாழ்வுத் திட்டங்கள்

17.01. கிராமப் புறத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் ஆதார வருமானத்தை உயர்த்தும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும், மத்திய அரசின் ஊரக அமைச்சகம், கீழ்க்கண்ட நான்கு திட்டங்களை அறிவித்துள்ளது;

1. கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிகளும், அதற்கான உபகரணங்களும் ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்குதல்.
2. ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புறத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்களுக்கு இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடு கட்டித் தருதல்.
4. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்குப் பொது வசதி மையங்கள் கட்டித் தருதல்.

17.02. மேற்படி திட்டத்தினை மாநில அரசு, கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் வகையில், ஊரக வளர்ச்சித் துறையும் கைத்தறித் துறையும் இணைந்து செயல்படுத்திட ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்கள், ஊரக வளர்ச்சி முகமை அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் உதவியுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

## 18. ஆதரவற்ற நெசவாளர்களுக்கான ஆதாயத் தொகை வழங்குதல்

18.01. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

அ. நெசவாளர் கூட்டுறவுச் சங்க ஆதரவற்ற உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை உயர்த்துதல்.

ஆ. மேற்காண் உதவியை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவன பின்னணியாக வைத்து திட்டத்தை செயல்படுத்துதல்.

இ. நெசவுத் தொழில் உற்பத்தித் திறனை மேம்படுத்தி குறைந்த வருவாய் ஈட்டக்கூடிய ரகங்களிலிருந்து அதிக வருவாய் ஈட்டக்கூடிய ரகங்களை உற்பத்தி செய்தல்.

18.02. தமிழ்நாட்டில், இத்திட்டம் மைய அரசின் முழு மானிய நிதி உதவியுடன் 1992-93 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஆதரவற்ற நெசவாளர் ஒருவருக்கு ரூ. 2,000/- வீதம் ஒரு சங்கத்திற்கு அதிகபட்சத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது.

18.03. 1996-97 ஆம் ஆண்டில் 29 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 13.45 இலட்சத்தை மாநில அரசு இத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

## 19. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

19.01. கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பெறும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 காசு வீதம் தமது பங்காகச் செலுத்துகின்றனர். அவர் பெறும் கூலியின்மீது, மாநில அரசு ஒரு ரூபாய்க்கு 4 காசு வீதம் தனது பங்காக வழங்கி வருகிறது.



19.02 உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் தொகை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் அரசு கருவூலத்தில் அடுத்த திங்களுக்குள் செலுத்தப்படுகிறது. இதற்கு அரசு 7 விழுக்காடு வட்டி வழங்கி வருகிறது.

19.03. இத்திட்டத்தில் 31-03-97 முடிய 1,02,801 உறுப்பினர்கள் உள்ளனர். இத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெறும் நெசவாளர்களின் வயது வரம்பை 58-இல் இருந்து 60 ஆக 1-9-96 முதல் மாநில அரசு உயர்த்தியுள்ளது.

19.04. 1996-97 ஆம் ஆண்டில் தனது பங்காக மாநில அரசு ரூ.230.61 இலட்சமும், வட்டித் தொகையாக ரூ.397.30 இலட்சமும் வழங்கியுள்ளது.

## 20. கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

20.01. குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களின் ஆயுள், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டு, முனைமைத்தொகையில் மாநில அரசு 2/3 பங்கும் மத்திய அரசு 1/3 பங்கும் செலுத்துகின்றன.

20.02. 18-9-96 முதல், காப்பீட்டுத் தொகை ரூ.15,000-லிருந்து ரூ.25,000 ஆகவும், நெசவாளர் ஓய்வு பெறும் வயது 58-லிருந்து 60 ஆகவும் உயர்த்தப்பட்டது. நெசவாளர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால் அவருடைய வாரிசுதாரர் ரூ.25,000 பெறுவார்.

20.03. இத்திட்டத்தின்கீழ் 1996-97 ஆம் ஆண்டிற்கு 1,00,334 நெசவாளர்கள் பயனடையும் வகையில் ரூ.84,66,179 முனைமைத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 21. மைய சிக்கன நிதித் திட்டம்

இத்திட்டம் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக மைய அரசினால் 1985-86 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் தனது பங்காக தாம் பெறும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 காசு வீதம் செலுத்துவதுடன் மைய அரசும் 4 காசு தனது பங்காகச் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1996-97 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட ரூ.1.00 கோடியை மாநில அரசு வழங்கியுள்ளது. மேலும், மைய அரசு ரூ.40.05 இலட்சம் கூடுதலாக வழங்கியுள்ளது.

[1997 ஏப்ரல் 9

## 22. நெசவாளர் வீட்டுவசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம்

22.01. கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் நலனைக் கருதி, அவர்களுக்கு வீடு மற்றும் தொழிற்கூடம் கட்டும் திட்டம் 1979-80-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் தொகையும், மாநில அரசின் மானியத் தொகையும் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசும் இத்திட்டத்தில் பங்கேற்று மானியம் வழங்கி வருகின்றது. இத்திட்டம் 1995-96-ம் ஆண்டு முதல் பின்வரும் நிதியுதவியின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது :—

| | | ரூபாய் |
|---|---|---|
| ஹட்கோ கடன் | : | 23,000 |
| மாநில அரசு மானியம் | : | 5,000 |
| மத்திய அரசு மானியம் | : | 14,000 |
| பயனீட்டாளர் பங்கு | : | 3,000 |
| | | **45,000** |

22.02. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரம் கிடைப்பதுடன் அதிக வருவாய் கிடைக்கின்றது. 1996-97-ஆம் ஆண்டிற்கு 1000 வீடுகள் கட்ட அரசால் ரூ.190.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மைய அரசு மானியம் ரூ. 140.00 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம் ரூ. 50.00 இலட்சம்.

## 23. கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு செறிவுத் திட்டம்

23.01. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் 100 விழுக்காடு மானியத்துடன் கைத்தறி நெசவாளர்களுக்கென நல்வாழ்வு செறிவுத் திட்டம் என்ற புதிய திட்டம் 1992-93 முதல் கீழ்க்கண்ட இனங்களுக்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது :-

1. மருத்துவச் செலவினங்களைத் திரும்ப வழங்குதல்
2. கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்.



1997 ஏப்ரல் 9]

3. குடிநீர் வழங்குதல்
4. மகப்பேறு உதவி
5. குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஈட்டுத் தொகை
6. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள்.

23.02 1995-96-ஆம் ஆண்டிற்கு பின்வரும் நோக்கங்களுக்காக ரூ.79,84,000 வழங்கப்பட்டுள்ளது :—

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. குடிநீர் வழங்குதல் | : | 37,45,000.00 |
| 2. மருத்துவச் செலவினங்களைத் திரும்பப் பெறுதல் | : | 23,61,093.00 |
| 3. கண்சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்பப் பெறுதல் | : | 2,67,000.00 |
| 4. மகப்பேறு உதவி | : | 1,09,500.00 |
| 5. குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (ரூ.100/- வீதம் 15 உறுப்பினர்களுக்கு) | : | 1,500.00 |
| 6. ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் (ஒரு சுகாதார மையத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 15 சுகாதார நிலையங்கள்.) | : | 15,00,000.00 |
| | | **ரூ. 79,84,093.00** |

23.03. 1996-97-ஆம் ஆண்டிற்கு ரூ.3.50 இலட்சத்தை மைய அரசு விடுவித்துள்ளது.

## 24. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

24.01. கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, 'தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தினைச் செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டம் 1-1-92 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 5 வருடங்கள் முடிவடைந்த எந்த நெசவாளியும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு

[1997 ஏப்ரல் 9

குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75 விழுக்காடு சராசரி உற்பத்தி செய்திருப்பின் அவர் இத்திட்டத்தில் சேரத் தகுதி உடையவராகிறார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 58 வயதுக்கு முன் இறக்க நேரிட்டால் அவர் மரணமடைந்த நாளிலிருந்து, மனைவி/கணவன்/வயதுவராத மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள்/விதவை மருமகள்/தாயார்/தகப்பனார் போன்ற அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாருக்காவது பிரதி மாதம் ரூ.250- வீதம் 10 வருடங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

24.02. 1996-97 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தில் 31,822 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 259 உறுப்பினர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றன.

## 25. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் பொருட் காட்சிகளை நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு, விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியுதவியுடன், ஆண்டுதோறும் சில முக்கிய நகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. நெசவாளர் சேவை மையத்தின் உதவியுடன், புதிய வடிவமைப்புடன் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி ரகத் துணிகள் பொருட்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன. 1993-94-ஆம் ஆண்டில் 8 முக்கிய நகரங்களிலும், 1994-95-ஆம் ஆண்டில் 3 முக்கிய நகரங்களிலும் 1995-96-ஆம் ஆண்டில் 2 இடங்களிலும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. 1996-97-ஆம் ஆண்டில் சென்னையில் மட்டும் பொருட்காட்சி நடத்தப்பட்டது.

## 26. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறைகளை நவீனப் படுத்தும் திட்டம்

26.01. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த, தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறையைப் புதிப்பித்து அழகுபடுத்தி, குளிர்சாதன வசதி அளிக்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 9]

26.02. இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு 92 தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயனடைந்துள்ளன. 1996-97-ஆம் ஆண்டிற்கு, 21 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறைகளை நவீனப்படுத்த ரூபாய் 50.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 27. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

27.01. கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை 1975-ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தி வருகிறது.

27.02. சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு விருதுகள் மற்றும் வெற்றிச் சின்னங்கள் வழங்கும் திட்டத்திற்காக அரசு ஆண்டு தோறும் ரூ.22,500 வழங்குகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 53 ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து 1995-96-ஆம் ஆண்டில் துணிவகைகள், ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட கைத்தறி ரகங்களுக்கான ஏற்றுமதி மதிப்பு ரூ. 6,500.27 கோடி என அறியப்பட்டுள்ளது.

## 28. கைத்தறி ரக (உற்பத்தி ஒதுக்கீடு) சட்டம், 1985

28.01. மத்திய அரசு கைத்தறி உற்பத்திக்கென 22 ரகங்களை ஒதுக்கீடு செய்து 5-8-86 அன்று உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் பல முறையீடுகள் செய்யப்பட்டு மேற்படி ஆணை செல்லுபடியாகும் என 5-2-93 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. பல விசைத்தறி உரிமையாளர்கள், சம்மேளனங்கள் ஆகியவற்றின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மத்திய அரசு 26-7-96 அன்று மேற்படி ஒதுக்கீடு சட்டத்தை சற்று திருத்தி, கைத்தறி உற்பத்திக்கு 11 ரகங்களை ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளது. இப்பொழுது இச்சட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் உள்ள வளர்ச்சி மற்றும் நல்வாழ்வு திட்டப்பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ் 1995-96 மற்றும் 1996-97 ஆய்வு செய்யப்பட வேண்டிய குறியீடு மற்றும் எய்தப்பட்ட குறியீடு ஆகியவை பின்வருமாறு:—

| வருடம் | குறியீடு | ஆய்வு மேற்கொண்டவை | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 1995-96 | 5,000 | 7,689 | 1 |
| 1996-97 | 5,500 | 3,922 | 1 |

28.02. இச்சட்டத்தினை தீவிரமாக செயற்படுத்தும் பொருட்டு தமிழக அரசு ஒருங்கிணைப்புக்குழு மற்றும் செயலாண்மைக் குழு ஆகியவற்றினை ஏற்படுத்தியுள்ளது. அதற்கேற்ப, 28-11-95 அன்று ஒருங்கிணைப்பு குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் தீர்மானத்திற்கேற்ப இச்சட்டம் குறித்தும் அதன் நன்மை குறித்தும் மக்களுக்கிடையே 'பிரபலபடுத்த விழிப்புணர்ச்சி முகாம்கள் பரமக்குடி, சேலம், திருநெல்வேலி, திருச்செங்கோடு மற்றும் கன்னியாகுமரி போன்ற இடங்களில் நடத்தப்பட்டன. இது போன்று கைத்தறி உற்பத்திக்கென 22 ரகங்களுக்கு பதில் 11 ரகங்களாகத் திருத்தப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன் இதுகுறித்து மக்கள் மத்தியில் பரவலாக விழிப்புணர்வு ஏற்படுத்த ஈரோடு, திருச்செங்கோடு, கோயமுத்தூர், சேலம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

## 29. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்

29.01. அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற கொள்கையின்படி, தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த திட்டம் ஒன்றினை அரசு அறிவித்தது. அதனடிப்படையில், தமிழ்நாட்டில் 1,438 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த திட்டம் தீட்டி, அவற்றில் 1332 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செப்டம்பர்'96-ல் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

29.02. மீதமுள்ள 106 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நீதிமன்ற தடை உத்தரவு காரணமாகவும், வேட்பு மனு தாக்கல் செய்யாமையினாலும் மற்றும் இதர காரணங்களினாலும், செப்டம்பரில் தேர்தல் நடத்தப்படவில்லை. சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படியும், அரசு அறிவுரைகளின்படியும் இப்போது இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### விசைத்தறிகள்

## 30. துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணை, 1993

30.01. துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணை 1993 பிறப்பித்ததைத் தொடர்ந்து விசைத்தறி பதிவுச் சான்றிதழ் வழங்கும் முறை ரத்து செய்யப்பட்டு, சான்றிதழ் புதுப்பிக்கப்படும் முறை நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக, தகவல் குறிப்பு (Information Memorandum) வழங்கும் முறை கொண்டு வரப்பட்டது. ஒரு தகவல் குறிப்புக்கு ரூ. 1,000/- கட்டணம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு, தறியின் எண்ணிக்கை கணக்கு கிடையாது. ஒவ்வொரு தகவல் குறிப்புக்கும் ரூ. 1,000/- கட்டணம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டும்.

30.02. தற்போது, தமிழ்நாட்டில் 2.43 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகளும் ஒரு இலட்சம் பதிவு செய்யப்படாத விசைத்தறிகளும் உள்ளன. மேலும், 71 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 51 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 14 சங்கங்கள் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும்.

## 31. விசைத்தறிப் பதிவு நிதி

31.01. 1994-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் "விசைத்தறிப் பதிவு நிதி" ஒன்றை உருவாக்க தமிழக அரசு ஆணையிட்டது. அதன் நிர்வாகக் குழு கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. விசைத்தறி பதிவு மற்றும் புதுப்பித்தலுக்கு திரட்டப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை முழுவதும் இந்த நிதிக்கு மாற்றப்படும் என்றும், இனிமேல் பெறப்படும் தொகையும் இந்த நிதியிலேயே செலுத்தப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டது.

31.02 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை அளித்தல், விசைத்தறி பணி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளுக்கான வடிவமைப்பு மையங்களை அமைத்தல், நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பதனிடும் அமைப்புகளை நிறுவுதல், கிடங்குகளை கட்டுதல், விசைத்தறித் துணி விற்பனைக்கு காட்சியறை நிறுவுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளை நவீனமாக்க உதவுதல் போன்ற பணிகளுக்கு விசைத்தறிப் பதிவு நிதி செலவிடப்படும்.

## 32. விசைத்தறி காப்பீட்டுத் திட்டம்

[1997 ஏப்ரல் 9

*32.01.* விசைத்தறி தொழிலாளர்களுக்கென ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து, ஈட்டுறுதியுடன் கூடிய காப்பீட்டுத் திட்டத்தினை, மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 18 வயதிலிருந்து 60 வயதுக்கு உட்பட்டுள்ள ஆண்டு முழுவதும் தொடர்ந்து பணிபுரிந்துள்ள, விசைத்தறித்தொழிலாளி, உறுப்பினராகச் சேருவதற்குத் தகுதியுடையவராவார். இவ்வுறுப்பினர், மற்ற தகுதிகளுடன், பிரதி மாதம் சராசரி ரூ.700/- வருவாய் ஈட்டுபவராக இருத்தல் வேண்டும். மேலும் அவரது குடும்பத்தில் உள்ள மேற்சொன்ன தகுதிகள் உடைய எந்த நபரும் இத்திட்டத்தில் சேருவதற்குத் தகுதி உடையவர்.

*32.02.* இத்திட்டமானது, 60 வயதுக்குள் உறுப்பினர் இறக்க நேரிட்டால் வாரிசுதாரருக்கு ரூபாய் 10,000/- காப்பீட்டுத் தொகையும், விபத்தினால் இறக்க நேரிட்டால் ரூ.20,000/- காப்பீட்டுத் தொகையும் வழங்க வகை செய்கிறது. இதற்கான ஆண்டு முனைமத் தொகை ரூ.120/-ஐ மைய அரசு, மாநில அரசு மற்றும் பயன்பெறும் தொழிலாளி ஆகிய மூவரும் சமமாகச் செலுத்த வேண்டும்.

### நூற்பாலைகள்

## 33. தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகள்

தொழில் வளர்ச்சியிலும் பெருமளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. பருத்தி நூற்பும், பருத்தி நூல் சார்ந்த தொழிலும் தமிழ்நாட்டில் துணிநூல் தொழிலின் தனித்தன்மையாகும். தமிழ்நாட்டில் 717 நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகளும், சுமார் 600 சிறிய அளவிலான நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. இதில் 18 கூட்டுறவு நூற்பாலைகளும், தேசிய துணிநூல் கழகத்தை சேர்ந்த 13 ஆலைகளும், 25 நூல் மற்றும் துணி உற்பத்தி ஆலைகளும் அடங்கும். நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகள் 87 இலட்சம் கதிர்களுடன் சுமார் 2.29 இலட்சம் தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. நூற்பாலைகள் தனியார் துறையில் இருந்த போதிலும், தமிழ்நாட்டின் தொழில் துறை, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வணிக நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தொழிலின் மூலம் வருவாய் ஈட்டுவதுடன்



1997 ஏப்ரல் 9]

ஏற்றுமதி வாயிலாக அன்னியச் செலர்வணியை ஈட்டவும் இத்தொழில் உறுதுணையாக உள்ளது.

## 34. மூடப்பட்ட நூற்பாலைகளை மீண்டும் திறந்து நடத்துதல்

*34.01.* மூடப்பட்ட நூற்பாலைகளுக்கு விற்பனை வரி செலுத்துவதைத் தள்ளி வைத்தல், மின்வெட்டிலிருந்து விலக்கு அளித்தல், 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு இடருதவி நிறுவனங்கள் (சிறப்பு வழிகள்) சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறும் நிறுவனமாக அறிவித்தல் போன்ற பல்வேறு சலுகைகளை அளித்து, இவ்வாலைகளைத் திறந்து நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இருப்பினும், சில நூற்பாலைகள், தொழிலாளர் பிரச்சினைகள், நிதி நெருக்கடி, நிர்வாகக் குறைபாடு போன்ற பல்வேறு காரணங்களாலும் மூடப்பட்டு இயங்காமல் உள்ளன.

*34.02.* திண்டுக்கல்லில் உள்ள திருச்செந்தூர் முருகன் நூற்பாலை மற்றும் மதுரையிலுள்ள மகாலட்சுமி நூற்பாலை ஆகியவை நிவாரணம் பெறும் நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## 35. கூட்டுறவு நூற்பாலைகள்

*35.01.* தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. அவைகள் பின்வருமாறு :

1. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம்.
2. வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர்.
3. தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, சாரம்
4. திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, கரூர்.
5. தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.
6. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி.
7. சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சேலம்.
8. பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, தாராபுரம்.
9. தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, ஊத்தங்கரை.
10. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர்.

11. மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை, மதுரை.

12. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிபட்டி.

13. தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை.

14. திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிப்புத்தூர்.

15. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரேத்.

16. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்.

17. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம்.

18. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய்மொழி.

35.02. மேற்குறிப்பிட்டுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை கடந்த 1994 ஏப்ரல் முதல் மூடப்பட்டுள்ளது. இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

35.03. இக்கூட்டுறவு நூற்பாலைகளில் சுமார் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாலைகள் மூலம் அவற்றின் மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் கைத்தறி தொழிலுக்குத் தேவையான சிட்ட நூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1996-97-ஆம் ஆண்டு (40 ஆம் எண்ணுக்கு மாற்றப்பட்டதில்) 205.24 இலட்சம் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 36. கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் புத்துயிர் அளித்தல்

36.01. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் 4.69 இலட்சம் கதிர்களைக் கொண்ட பதினெட்டு கூட்டுறவு நூற்பாலைகளை கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான நூலை நியாயமான விலையில் தங்கு தடையின்றி வழங்கும் நோக்குடன் அமைத்தது. இந்த கூட்டுறவு நூற்பாலைகள் 1958-ஆம் வருடத்திலிருந்து 1985-ஆம் வருடத்திற்குள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் மொத்த சிட்டநூல் தேவையான 54 மில்லியன் கிலோ கிராமில் 16 மில்லியன் கிலோ கிராம் சிட்ட நூலை கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்கின்றன.



36.02. துணிநூல் தொழிலில் ஏற்பட்ட தொய்வு, மூலப்பொருட்களின் விலை ஏற்றம், மேலும் வியாபாரத்தில் எதிரான நிலை, நடைமுறை மூலதனக் குறைவு, போதுமான அளவு இருப்பு வைத்தலில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள், அதிகப்படியான தொழிலாளர்கள், உற்பத்தி விலை மற்றும் சந்தை விலையைவிட குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டநூல் விற்பனை செய்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து கூட்டுறவு நூற்பாலைகள் நட்டத்திற்குள்ளாயின. அவற்றின் ஒட்டுமொத்த நட்டம் தற்போது ரூ. 200 கோடிக்கும் அதிகமாகும்.

36.03. ஆதாரக்குறைவு காரணமாக கூட்டுறவு நூற்பாலைகள் காசுக்கடனில் வரவு செலவு செய்யாத நிலை ஏற்பட்டது. ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன் தொகைகள் பாக்கி உள்ளதாலும் அவற்றின் கட்டமைப்பு (Networth) எதிர்மறையாக உள்ளதாலும் நிதி நிறுவனங்கள் மேற்கொண்டு எந்த உதவியும் வழங்க மறுத்துவிட்டன. தனியார் வியாபார நிறுவனங்கள் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு வழங்கிய வகையில் ஆலைகளால் செலுத்தப்பட வேண்டிய பழைய பாக்கியை வசூல் செய்வதற்காக ஆலைகளுக்கு எதிராக வழக்கு தொடுத்தன.

36.04. கூட்டுறவு நூற்பாலைகளின் கடுமையான நிதி பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு அரசு கூட்டுறவு நூற்பாலைகளை கடன் கொடுத்தோர் நெருக்குதலிலிருந்து இடை ஓய்வு அளிக்கும் பொருட்டு இடருதவி நிறுவனங்களாக அறிவித்தது. தொடர்ந்து ஆதாரக்குறைவு காரணமாகவும் பணம் பெறும் திறனின் எதிர்மறையான போக்கினாலும் கூட்டுறவு நூற்பாலைகள் போதிய நடைமுறை மூலதனம் பெற இயலாத நிலை ஏற்பட்டது.

36.05. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிரூட்டும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு முதல் கட்டமாக வழிவகைக் கடனாக ரூ.15.00 கோடி வழங்கப்படும் என அறிவித்தார். மேற்படி தொகை ஜனவரி'97-ல் பெறப்பட்டது. இதனிடையில், ஒவ்வொரு ஆலை குறித்தும் விரிவான ஆய்வு நடத்த அரசு முடிவு செய்தது. இதற்கென "இட்காட்" நிறுவனம் நியமிக்கப்பட்டு, முதல் நூற்பாலை குறித்த நடத்தப்பட்ட ஆய்வின் மீதான வரைவு அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 9

## துறையைச் சார்ந்த இதர நிறுவனங்கள்

### 37. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) :

*37.01.* "கோ-ஆப்டெக்ஸ்" என்று அனைவராலும் அறியப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே மிகப்பெரிய கைத்தறி நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் 60 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக வெற்றிகரமாகச் செயலாற்றி வருகின்ற மாநில அமைப்பாகும்.

*37.02.* விற்பனை : கோ-ஆப்டெக்ஸ் கடந்த 1995-96—ஆம் ஆண்டில் ரூ. 257 கோடிக்கு விற்பனை செய்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக விற்பனை வருமாறு:-

| | |
|---|---|
| 1994-95 | ரூ. 227.54 கோடி |
| 1995-96 | ரூ. 257.55 கோடி |
| 1996-97 | ரூ. 260.00 கோடி [உத்தேசமாக] |

இந்த ரூ.260.00 கோடி விற்பனை ஒரு சாதனை அளவாகும்.

*37.03.* கொள்முதல்: தமிழ்நாட்டில் உள்ள தொடக்க கைத்தறி நெசவாளர் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணி ரகங்களை கொள்முதல் செய்யும் அளவை உயர்த்த அனைத்து நடவடிக்கைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டுவருகிறது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் செய்யப்பட்ட கைத்தறித் துணி கொள்முதல் விவரம் வருமாறு :-

| | |
|---|---|
| 1994-95 | ரூ. 145.49 கோடி |
| 1995.96 | ரூ. 120.91 கோடி |
| 1996-97 | ரூ. 146.56 கோடி [உத்தேசமாக] |

இந்த ரூ.146.56 கோடி கைத்தறித் துணி கொள்முதல், எப்போதும் இல்லாத சாதனையாகும்.

*37.04.* ஏற்றுமதி : கைத்தறித் துணி ஏற்றுமதியில் கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதிப் பிரிவு சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றது. பல ஐரோப்பிய நாடுகள், கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றிலும் கோ-ஆப்டெக்ஸ் தனது ஏற்றுமதி வியாபாரத்தைப்



1997 ஏப்ரல் 9]

பெருக்கியுள்ளது. வீட்டு உபயோக ரகங்கள் உட்பட ஏராளமான ரகங்களை உற்பத்தி. செய்து ஏற்றுமதி செய்துவருவதால் கடந்த 1995-96 ஆம் ஆண்டில் ரூ.174 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்ததோடு 1996-97 இல் ரூ.375 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்த விற்பனை ஒரு சாதனையாகும். 1996 ஜூன் மாதம் முதல் எடுத்துக்கொண்ட சிறப்பு முயற்சிகளின் பலனாக இந்த சாதனையை அடையமுடிந்தது.

*37.05.* எதிர்கால திட்டங்கள் : வேகமாக மாறிவரும் காலத்திற்கேற்ப கைத்தறித் துறையின் கோ-ஆப்டெக்ஸ், தனது பாரம்பரியத்தைத் தக்க வைத்துக்கொள்ள நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது. இதற்காக கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய செயல்முறை மற்றும் நடைமுறை போன்றவற்றை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான (1997-98 முதல் 2001-2002 முடிய) எதிர்காலத் திட்டத்தின் நிமித்தம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் ஆயிரம் கோடி அளவுக்கு மகத்தானதொரு, விற்பனைக் குறியீடு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, தொழில் ரீதியான வல்லுநர்களின் உதவியுடன் விரிவானதொரு செயல்முறையைத் தயார் செய்து நடைமுறைப்படுத்தி அதன்மூலம் இந்த விற்பனை குறியீட்டை எட்டுவதற்கு வழிவகை காணப்பட்டு வருகிறது.

*37.06.* கோ-ஆப்டெக்ஸ் கீழ்க்கண்ட செயல்முறைகளில் கவனம் செலுத்தி வருகிறது :-

(அ) 2001-2002-ஆம் ஆண்டில் ஏற்றுமதி விற்பனைக் குறியீடு ரூ.100 கோடியை அடைவதற்கு புதிய அணுகுமுறை வகுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வெளி மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களில் பெரிய அளவிலான விற்பனை நிலையங்கள் [Mega Showroom] திறக்கப்படவுள்ளன.

(இ) இப்பொழுது நடைமுறையில் உள்ள கணிப்பொறி செயல்முறைத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, பெருவாரியாக விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

(ஈ) தமிழ்நாட்டிலுள்ள முக்கிய உற்பத்தி மையங்களில் தரப்பரிசோதனை மையம் நிறுவப்படவுள்ளது.

(உ) விசைத்தறியில் இப்பொழுதுள்ள தொழில் நுட்பங்களை மேலும் உயர்த்தி அதன் நிமித்தம் ஆலைகளில் தயாரிக்கப்படும்

[1997 ஏப்ரல் 9

துணிகளுக்கு இணையாக விசைத்தறியிலும் நல்ல தரமான ரகங்கள் தயார் செய்யப்படவுள்ளன.

(ஊ) அமோகமான விற்பனைப் பெருக்கத்தை எய்துவதற்கு பல்வேறு விதமான ரகங்களிலும் புதிய வடிவமைப்பு சேகரிப்புகளை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## 38. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :

*38.01.* தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலின் பொதுவான முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் இக்கழகம் 1964-ல் நிறுவப்பட்டது. இக்கழகம் கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாள அங்கத்தினர்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கி வருகிறது. தற்சமயம்

*38.02.* தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் இப்போதைய அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.1000 இலட்சம் ஆகும். இதில் 31-3-97 வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.423.56 இலட்சம் ஆகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ.267.00 இலட்சம் ஆகும். மீதி மூலதனம் ரூ.156.56 இலட்சம் நெசவாள அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். தற்சமயம் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் 11,450 உறுப்பினர்கள் உள்ளனர்.

*38.03.* நெசவாளர்களுக்கு நடைமுதல் கடன் வழங்குவதை முக்கிய செயலாகக் கொண்டுள்ள இக்கழகம் 1996-97-இல் 1800 மனுக்கள் மீது ரூ.400.43 இலட்சம் கடன் வழங்கியது. இதில், கைத்தறிக்கு 1688 மனுக்களின்மீது ரூ.364.70 இலட்சமும், விசைத்தறிக்கு 112 மனுக்களின் மீது ரூ.35.73 இலட்சமும் கடனாக அனுமதிக்கப்பட்டன. அனுமதிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் ரூ.123.19 இலட்சம் புதிய நெசவாள உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களாகும். மீதம் ரூ.277.24 இலட்சம் மறுகடன்களாகும். மொத்தம் அனுமதிக்கப்பட்ட கடன்களில் புதிய கடன்கள் 31 விழுக்காடுகளாகும். இக்காலத்தில் ரூ.367.00 இலட்சம் அசலிலும் ரூ.146.50 இலட்சம் வட்டியிலும் வசூல் செய்யப்பட்டுள்ளது. 1997 மார்ச் மாத இறுதியில் கழகத்தின் தவணை கடந்த பாக்கி 32 விழுக்காடுகளாக இருந்தது.

*38.04.* 1996-97-ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின்



1997 ஏப்ரல் 9]

நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் விசைத்தறி வாங்க மற்றும் தொழில் நடத்துவதற்காக அளிக்கப்பட்ட குறைந்த வட்டிவிகித கடனுக்கான புதிய திட்டம் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்1996-97 ஆம் நிதியாண்டில் 33 கடன்களுக்கு ரூ.25.54 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

*38.05.* மேலும், தவணை கடந்த நிலுவை கடன்களை வசூல் செய்ய அரசு நிறுவனங்கள் வருவாய் வரி சட்டத்தின் 52 (அ) பிரிவினை பயன்படுத்துவது செல்லும் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி மேற்படி சட்டப்பிரிவின் உதவியுடன் அதிகமாக தவணை கடந்த பாக்கியுள்ள கழகத்தின் இரு கிளைகளில் துணை வட்ட ஆட்சியர்களை நியமித்தும் ஏனைய இடங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும் வசூலினை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 39. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம் :

*39.01* தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிப்பதற்காக தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரத்தில் பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு சரிகை ஆலை தமிழ்நாட்டிலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையினைப் பெருமளவில் நிறைவு செய்து வருகிறது.

*39.02.* கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு பங்கு மூலதனத்தின் மீது தமிழ்நாடு சரிகை ஆலை செலுத்திய ஈவுத் தொகை பின்வருமாறு :-

| வ.எண். | ஆண்டு. | அரசுப் பங்கு. (ரூபாய் இலட்சத்தில்) | அறிவிக்கப்பட்ட ஈவுத்தொகை. | ஈவுத்தொகை செலுத்தியது. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1993-94 | 13.20 | 20% | 2.64 |
| 2. | 1994-95 | 13.20 | 20% | 2.64 |
| 3. | 1995-96 | 13.20 | 20% | 2.64 |

[1997 ஏப்ரல் 9

## 40. தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு :

40.01. 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை ஈரோட்டில் நிறுவப்பட்டது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும். இந்த ஆலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர்கள், தனியார் நெசவாளர்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு துணிநூல் கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களுக்கு துணிநூல் பதனிடுதல் மற்றும் நூல் சாயமிடல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது.

40.02. இவ்வாலை பருத்தி மற்றும் செயற்கை இழை துணிகளை வெளுத்தல், சாயமிடுதல், அச்சிடுதல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நூல் மற்றும் துணிகளின் சாயத்தரத்தை அறிந்து கொள்ள ஒரு சோதனைச் சாலையும் இவ்வாலையில் செயல்படுகிறது.

40.03. ஆலையிலுள்ள இயந்திரங்கள், ஆலை துவக்கப்பட்ட காலத்திலேயே நிறுவப்பட்டவையாகும். பழைய இயந்திரங்களின் உற்பத்திக் குறைவினால் இந்த பதனிடும் ஆலையை இலாபகரமாக நிர்வகிக்க இயலவில்லை. எனவே. பதனிடும் இயந்திரங்களை நவீனப்படுத்துதல் அவசியமாகும். பழைய இயந்திரங்களை புதுப்பிக்க, விற்பனை மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து 25% தள்ளுபடி மானியம் அல்லாத தொகையிலிருந்து ரூ.50.00 இலட்சம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

## 41. தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம், கோயம்புத்தூர் :

நலிவடைந்த நூற்பாலைகளை நிர்வகித்தல், விசைத்தறிக் கூடங்களை அமைத்தல், அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தொழில் நுட்பச்சேவை அளித்தல், நலிவடைந்த நூற்பாலைகளை ஏற்று நடத்துதல், விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணிகளை விற்பனை செய்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 1969-ஆம் ஆண்டில் தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகம் அருப்புக்கோட்டை, சிவகிரி மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் மூன்று விசைத்தறிக் கூடங்களை நிர்வகித்து வருகிறது. மேற்கண்ட விசைத்தறிக் கூடங்கள் 1996-97-ஆம் ஆண்டில் 27.60 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்து



1997 ஏப்ரல் 9]

ரூ.1607.35 இலட்சம் மதிப்புள்ள 53.84 இலட்சம் மீட்டர் துணிகளை விற்பனை செய்துள்ளது.

## 42. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை (டான்ஸ்பின்) :

பிற மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் பதிவு பெற்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்தும் பஞ்சு கொள் முதல் செய்து உறுப்பினர் கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சினை, தரமாகவும், நியாயமான விலையிலும் விநியோகம் செய்ய வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன், 1994-ம் ஆண்டு "தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம்" 'டான்ஸ்பின்' தலைமை நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்தும் இவ்விணையத்தின் உறுப்பினர்களாகும். 1996-97-ஆம் நிதியாண்டில், ரூ. 8.82 கோடி மதிப்புள்ள சுமார் 9802 பேல்கள் நல்ல தரமான பஞ்சினை, நியாயமான விலையில் இவ்விணையம் கொள்முதல் செய்துள்ளது. இவ்விணையம் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட குறைந்த பட்ச பங்கு மூலதனத்தின் மூலம், உறுப்பினர் கூட்டுறவு நூற்பு ஆலைகள் தொடர்ந்து இயங்கவும், கதிர் உற்பத்தியின் மூலம் 7 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடு வரை உற்பத்தியை உயர்த்தவும் உதவுகிறது. 1996-97-ஆம் ஆண்டில் இவ்விணையம் உத்தேசமாக ரூ.20.00 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 43. தேசிய அலங்காரத் தொழில்நுட்ப நிலையம், சென்னை :

தேசிய அலங்காரத் தொழில்நுட்ப நிலையக் கிளை சென்னையில் 21-7-95 அன்று துவக்கப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் நிர்வாகச் செலவினங்களில் பற்றாக்குறை நிதிச் செலவினங்களை முதல் 5 வருடங்களுக்கு அதிகபட்சமாக ரூ.132.50 இலட்சம் அளவிற்கு ஏற்றுக்கொள்ளவும் இந்நிலையத்தினை அமைத்திடத் தேவைப்படும் நிலத்தினை இலவசமாக வழங்கவும் மாநில அரசு இசைவு தெரிவித்துள்ளது. தரமணியிலுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் 5 ஏக்கர் நிலம் வழங்க மாநில அரசு ஒப்புக்கொண்டு வருவாய்த் துறை மற்றும் நில அளவைத் துறை அலுவலர்களால் நிலத்தைக் கண்டறிந்து இந்நிலையத்திற்கு மாற்றம் செய்வதற்கான முதல் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1997 ஏப்ரல் 9

## 44. திருப்பூர் பின்னலாடைத் தொழில் :

44.01 கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழிலில் புகழ் பெற்று விளங்குகிறது. இப்பின்னலாடைத் தொழில் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதி மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 2,200 கோடிக்கு மேல் நமது நாட்டிற்கு அன்னியச் செலாவணியாக ஈட்டி வருகிறது. இத்தொழிலின் தீவிர வளர்ச்சிக்குப் போதுமான தண்ணீர் வழங்கல், மேம்படுத்தப்பட்ட வடிகால் வசதி வழங்கல், சாலை பராமரித்தல், தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் ஒட்டுமொத்த நகர்ப்புற முன்னேற்றத்திற்காகவும் அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றது.

44.02 இந்தத் தொழில் வாயிலாக சுமார் 2 இலட்சம் பேர் நேரடியாகவும் சுமார் ஒரு இலட்சம் பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

44.03 இந்தத் தொழில் சிறப்புற நடைபெற்று வருவதால் அட்டைப்பெட்டிகள் தயாரித்தல், வில்லைகள் அச்சடித்தல், பைகள் தயாரித்தல் போன்ற இணைத் தொழில்கள் பெருகி சிறப்புற்று வருகின்றன. ஒட்டுமொத்த வளர்ச்சி அடைந்துள்ளதன் காரணமாக இந்த நகரைச் சுற்றியுள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது.

### இணைப்பு

### கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம் பற்றிய அறிக்கை

### 1. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

| வரிசை எண். (1) | விவரம். (2) | 1994-95 (3) | 1995-96 (4) | 1996-97 (5) |
|---|---|---|---|---|
| 1. | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 1476 | 1439 | 1439 |
| 2. | தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.22 | 4.15 | 3.45 |



1997 ஏப்ரல் 9]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. | உற்பத்தி :- | | | |
| | அ. மீட்டர் (இலட்சத்தில்) | 1146.89 | 1233.86 | 1055.36 |
| | ஆ. மதிப்பு (ரூபாய் கோடியில்) | 347.39 | 435.76 | 405.29 |
| 4. | விற்பனை மதிப்பு (ரூபாய் கோடியில்) | 400.71 | 455.66 | 422.56 |
| 5. | நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 179.07 | 221.93 | 268.29 |

### 2. கோ-ஆப்டெக்ஸ்

| வரிசை எண். | விவரம். (1) | 1994-95 (ரூ. கோடியில்) (2) | 1995-96 (3) | 1996-97 (4)(5) |
|---|---|---|---|---|
| 1. | கைத்தறித் துணி கொள்முதல் | 145.49 | 120.91 | 146.56 |
| 2. | கைத்தறித் துணி விற்பனை | 227.54 | 257.55 | 260.00 |
| 3. | நடைமுறை மூலதனம் | 109.00 | 129.00 | 164.00 |

### 3. கூட்டுறவு நூற்பாலைகள்

| வரிசை எண் (1) | விவரம் (2) | 1994-95 (3) | 1995-96 (4) | 1996-97 (5) |
|---|---|---|---|---|
| 1. | கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.69 | 4.69 | 4.69 |
| 2. | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) | 24323.00 | 24277.00 | 22718.74 |
| 3. | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 23565.00 | 23123.00 | 22695.60 |
| 4. | நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 3535.50 | 3565.50 | 3685.50 |

[1997 ஏப்ரல் 9

**4. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு**

| வரிசை எண் | விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | நூல் வெளுத்தலும் சாயமிடுதலும் [இலட்சம் கிலோ கிராமில்] | 8.15 | 5.04 | 10.54 |

**5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை**

| வரிசை எண் | விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கடன்களின் எண்ணிக்கை | 1995 | 1834 | 1800 |
| 2. | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை [ரூபாய் இலட்சத்தில்] | 349.98 | 366.49 | 400.43 |

**6. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்**

| வரிசை எண் | விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சரிகை உற்பத்தி [மார்க்குகளில்] | 26486 | 33613 | 40161 |
| 2. | விற்பனை மதிப்பு [ரூபாய் இலட்சத்தில்] | 665.78 | 885.83 | 1036.11 |



1997 ஏப்ரல் 9]

## இணைப்பு II

(60-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## சுற்றுச்சூழல் - வனத்துறை

### சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

**1. முகவுரை :**

தொழில் பெருக்கமும், நகர்ப்பெருக்கமும் இணைந்து நீர், காற்று மற்றும் நிலம் போன்ற அடிப்படை ஆதாரங்கள் குறைவுபட காரணமாயுள்ளன. அதன் காரணமாக சுற்றுப்புறத்தின் தன்மை, அதன் ஏற்புத் திறனை விட அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மனித நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள காற்று, நீர் மற்றும் நில மாசின் காரணமாக நோய், ஏழ்மை, வறட்சி முதலியன ஏற்படலாயின. மக்களின் நலனை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற்சாலைகளின் வளர்ச்சி அமைய வேண்டும். அதாவது சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுமானால் நாட்டின் சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு உகந்தவாறு அமையும். எனவே நமது கொள்கைகள் சுற்றுச் சூழலோடு இணைந்து செயல்படுமாறு உருவாக்கப்பட வேண்டும்.

**1.1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அமைப்பு :**

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் பிரிவு-4-ன்படி 1982-ம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு, சென்னை, மதுரை, வேலூர், கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஐந்து மண்டல அலுவலகங்களுடனும் சென்னை, தாம்பரம், அம்பத்தூர், வேலூர், கடலூர், ஒசூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஈரோடு, கோயமுத்தூர், திண்டுக்கல், மதுரை, வாணியம்பாடி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் பதினெட்டு மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப்பொறியாளர்கள் அலுவலகங்களுடனும், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவிலில் இரண்டு உதவி சுற்றுப்புறச்சூழல் நலப் பொறியாளர் அலுவலகங்களுடனும் இயங்கி வருகிறது.

வாரியப் பணிகளில் சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல்

[1997 ஏப்ரல் 9

ஆய்வகமும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய 6 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகமும், மணலி, திண்டுக்கல் மற்றும் ஒசூர் ஆகிய 3 இடங்களில் நடமாடும் ஆய்வகங்களும் உதவுகின்றன.

**1.2 தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தும் சட்டங்கள்/ விதிகள் :**

1. 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1978 மற்றும் 1988-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
2. 1977-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரிச் சட்டம் (1991-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
3. 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1987-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
4. 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.
5. 1989-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.
6. 1989-ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களைத் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

*1.3* வாரியம் மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக, நகர் மற்றும் ஊரகத் திட்ட இயக்குனரகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொதுப்பணித்துறை (நிலத்தடி நீர் மற்றும் பாசனம்), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தடய விஞ்ஞான அறிவியல் துறை, போக்குவரத்துத் துறை, இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை, மீன்வளத்துறை, சென்னை மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம், நாகபுரியில் உள்ள தேசிய சுற்றுச் சூழல் நல பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் கலந்தாலோசிக்கிறது.

## 2. இசைவாணை வழங்கும் நடைமுறை :

*2.1* வாரியம், தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழ், இரண்டு விதமாக, இசைவாணை வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் துவக்குவதற்கு



1997 ஏப்ரல் 9]

முன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் காற்று மாசுத் தடுப்பு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலையை இயக்குவதற்கு, வாரியம் இசைவாணையை வழங்குகிறது.

இசைவாணை வழங்கும்போது, நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழ் தொழிற்சாலை செயல்படுத்த வேண்டிய வரையறைகளைக் குறிப்பிடுகிறது. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வரையறுத்துள்ள தர அளவுகளை விடக் கடுமையான தர அளவுகளை இவ்வாரியம் நிர்ணயிக்கலாம். தொழிற்சாலை இயங்குவதற்கான இசைவாணை, ஓர் ஆண்டுக்கு அந்த நிதியாண்டின் மார்ச் மாத இறுதி முடிய செல்லத்தக்கது. வாரியம், 28-2-1997 முடிய, 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 13821 இசைவாணைகளும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 11126 இசைவாணைகளும் வழங்கியுள்ளது.

**2.2 புகார் மற்றும் சட்ட நடவடிக்கை :**

மாவட்ட அளவில், முழுமையான திறனுடன் கூடிய நிர்வாக அமைப்பின் மூலமாக, வாரியத்தால் பெறப்பட்ட தொழிற்சாலை சம்பந்தமான புகாரை, புகார் கிடைக்கப் பெற்ற இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் விசாரணை செய்ய முடிகிறது.

மாசு கட்டுப்பாடு சட்டங்களை மீறியதன் காரணமாக 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் பிப்ரவரி 1982 முதல் சனவரி 1997 முடிய 320 வழக்குகளும், 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 134 வழக்குகளும் தொழிற்சாலைகளின் மேல் தொடுக்கப்பட்டுள்ளன. டிசம்பர் 1992 முதல் சனவரி 1997 முடிய வாரியத்தின் நிபந்தனைகளை மேற்கொள்ளாத 3037 தொழிற்சாலைக்கு விளக்கம் கேட்டு நோட்டீசும், 424 தொழிற்சாலைகளுக்கு மூடும் ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

## 3. சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணித்தல் :

**3.1 தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணித்தல் :**

அதிகமான தொழிலாக்கத்தின் விளைவாக, சுற்றுப்புறக் காற்றின் தன்மையைப் பாதுகாப்பது அவசியமாகிறது. தேசிய சுற்றுப்புறக் காற்றின்

தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின் கீழ், சென்னை, கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய பெரிய நகரங்களில் 3 இடங்களில் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை, வாரியம் கண்காணிக்கிறது.

1996-97 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடியில் அமைந்துள்ள பெரிய தொழிற்பேட்டை மற்றும் கடலூரில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டை ஆகிய இடங்களில் காற்று மாசு தடுப்பு சாதனங்களின் செயல்முறையின் மதிப்பீடு செய்வதற்காகவும் மற்றும் காற்றில் நிர்ணயித்த தரத்தினைவிட மாசு அதிகமாகும் சமயங்களில் அச்சாதனங்களை மேம்படுத்த தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தவும், ரூபாய் 80 இலட்சம் செலவில், தொடர் காற்று தர கண்காணிப்பு பொறிகளை வாரியம் அமைத்து வருகிறது.

மேலும், சென்னை மாநகரத்தில் உள்ள குடியிருப்பு பகுதி, வணிகப் பகுதி மற்றும் நுட்பப் பகுதி ஆகியவற்றில் உள்ள சுற்றுப்புற வெளிக் காற்றின் தன்மையை ஆய்வு செய்வதற்காக சென்னை சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிக்கும் திட்டத்தை நிறுவ உள்ளது.

## 4. நீரின் தன்மையைக் கண்காணித்தல்

***4.1*** தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீராலும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் வடிகால் கழிவுநீராலும் நாட்டின் பெரிய நதிகள் மாசுபடுகின்றன. பெரும்பாலான உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிப் பற்றாக்குறையினால் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில்லை. பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டுத் தொழிற்சாலைகள், கழிவுநீரைத் திறம்பட சுத்திகரிக்கத் தாமே சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டியுள்ளன. சிறிய முதலீட்டுப் பிரிவுகள், குறிப்பாகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்காக இவ்வாரியத்தின் வழிகாட்டுதலுடன் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

***4.2*** தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் வெளியேற்றும் வடிகால் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரால் சென்னை நகர நீர் வழிகள் மாசுபடுவதை வாரியம் கட்டுப்படுத்தி நீர்வழிகளின் நீரின் தன்மையைக் கண்காணிக்கிறது. இதன் தொடர்பாக, வாரியம் ஒரு விரிவான ஆய்வு நடத்தி நகர நீர்வழிகளில் 766 கழிவுநீர் விழும்



இடங்களை மார்ச், 1994 வரை தெரிவு செய்தது. அவற்றில் சமீபத்தில் 26-12-96 அன்று ஆய்வு செய்தபொழுது சில வெளிப்பாடுகள் அடைக்கப்பட்டு/குறைக்கப்பட்டு, 713 கழிவுநீர் விழும் இடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. மற்றும் தொழிற்சாலையிலிருந்து கழிவுநீர் விழும் இடங்கள் 65-லிருந்து 34 ஆகக் குறைந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட இடைவெளிகளில் வாரியம் ஆற்று நீரின் மாதிரிகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்கிறது. இம்மாதிரிகள் 1991-ஆம் ஆண்டில் செப்டம்பரிலிருந்து குறிப்பிட்ட காலங்களில் முறையாகச் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

## 5. தொழிற்சாலை மாசினைக் கண்காணித்தல்

### 5.1 17 வகையான தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக, வாரியம் சென்னைத் தலைமை அலுவலகத்தில், சிறப்பு கண்காணிப்புப் பிரிவினை ஒரு கூடுதல் தலைமை சூழல் நலப் பொறியாளரின் தலைமையில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின் கீழ் 142 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 5.2 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

தொழிற்சாலைகளுக்குப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டுத் தொழிற்சாலைகளுக்கு பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் தீவிரமான திட்டத்தில், வாரியம் முக்கியமான பங்கினை வகிக்கிறது.

| | |
|---|---|
| தோல் பதனிடும் தொழிற்சாலைகள் (723) | - 28 திட்டங்கள் |
| சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் (1611) | - 23 திட்டங்கள் |
| சவ்வரிசி (76 தொழிற்சாலைகள்) | - 1 திட்டம் |
| உணவகம் மற்றும் தங்கும் விடுதிகள் (90) | - 1 திட்டம் |
| மருத்துவ மனைகள் (64) | - 1 திட்டம் |

[1997 ஏப்ரல் 9

பொதுவான கழிவுகளைக் கடல் நீரில் வெளியேற்றுதல் - 1 திட்டம்

பம்மல், சிட்கோ - ராணிப்பேட்டை, வாணியம்பாடி, உதயேந்திரம், ராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப்பட்டு), பேராணாம்பேட்டை (பக்கலபள்ளி), திண்டுக்கல், மாதவரம், மேல்விஷாரம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கப்பட்டுவிட்டன.

அய்யம்பேட்டை - முத்தியால்பேட்டை, கரூரில் 4 திட்டங்கள், திருப்பூரில் 8 திட்டங்கள், திருச்சியில் 2 திட்டங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கு ஒரு பொது எரிப்பான் சேலத்தில் இயக்கப்பட்டுள்ளது.

அரசிடமிருந்து உதவித் தொகை பெற்ற பிறகு, இத்தொகையினை ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் அவற்றின் முன்னேற்றத்தைப் பொருத்தும், அதனுடைய செயல்பாட்டினை மதிப்பீடு செய்த பின்னும், வாரியம் வழங்குகிறது. இதுவரை, 1996-97-ம் ஆண்டில் தமிழக அரசிடமிருந்து 10 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.468.50-ஐப் பெற்று ரூ.338.22 லட்சத்தை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வாரியம் வழங்கியுள்ளது.

## 5.3 அபாயகரமான கழிவுகளை நிர்வகித்தல் :

1984-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகளின் கீழ், 18 வகையான அபாயகரமான கழிவுகளின் சேமிப்பு, போக்குவரத்து, பெறுதல், சுத்திகரித்தல் மற்றும் வகை செய்தல் ஆகியவற்றை வாரியம் திறம்படக் கண்காணிக்கிறது. இதுவரை 800 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அபாயகரமான கழிவுகளை முடிவு செய்வதற்கு 9 இடங்களை வாரியம் தெரிவு செய்திருக்கிறது. அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். மாவட்டங்களில், இடத்தினைத் தேர்ந்தெடுக்க, சுற்றுப்புறச்சூழல் தாக்கம் மற்றும் அபாய மதிப்பீடு ஆய்வுப்பணி முடிவடைந்துள்ளது. எம்.ஜி.ஆர். மாவட்டம், சிறுசேரி கிராமத்தில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்படுவதற்காக மாநில அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூபாய் 10.00 லட்சத்தை முன் பணமாக அரசுக்கு செலுத்தி விட்டு தேர்வு செய்யப்பட்ட இடத்தில் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 1986-ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்



1997 ஏப்ரல் 9]

கீழ் இந்திய அரசு அறிவிப்பின்படி, இம்மாநிலத்தில் 22 தனிப்படுத்தப்பட்ட இடங்களை அபாயகரமான இரசாயனங்களைச் சேகரிக்கும் கிடங்குகளாகத் தெரிவு செய்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தொடர் கண்காணிப்பால் 1991-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் 72 தொழிற்சாலைகள், அபாயக் காப்பீடு திட்டத்தில் சேர்ந்துள்ளன.

## 6. சென்னை மாநகர நீர்வழிகள் சுத்திகரிப்பு திட்டம் :

நகர நீர்வழிகளை தூய்மைப்படுத்துவதற்கு ஒரு நிரந்தர தீர்வு முறையாக அரசு ஆணை எண்.248 (சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை), நாள்: 12-10-96-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பின் கீழ் ஒரு உயர்மட்ட குழுவினை அமைத்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு தனது முதல் கூட்டத்தினை 21-10-96-ம் தேதி அன்று முதலமைச்சரின் தலைமையில் நடத்தியது. இக்கூட்டத்தில் இந்நீர்வழிகளை தூய்மைப்படுத்துவது, ஆழப்படுத்துவது, அழகுபடுத்துவது மற்றும் கடல்நீரைக் கொண்டு கூவம் ஆற்றில் ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடும்படி செய்வது குறித்தும், இதற்காக நிதி உதவிகளை பெறுவது மற்றும் இது குறித்து ஒருங்கிணைந்த விரிவான ஒரு திட்டத்தை ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தயாரித்து கொடுப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களின் ஆலோசனையை பெற முடிவெடுக்கப்பட்டது. சென்னை மாநகர நீர்வழிகளை மேம்படுத்துவதற்காக பெருந்திட்டம், அதனை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை மற்றும் அதற்குரிய நிதியுதவியினை பெறுவதற்காக ஓர் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதே சமயத்தில் இத்திட்டத்திற்கான விபரமான சாத்தியக்கூறு அறிக்கை ரூ. 722/- கோடி செலவிற்கு தயாரிக்கப்பட்டு, ஐரோப்பிய நிதியுதவிக் குழுமத்திற்கு தொழில்நுட்ப நிதியுதவி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 7. கடற்கரைப் பகுதிகளின் சுற்றுச்சூழலை நிருவகித்தல் :

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீ. தொலைவிற்கு கடற்கரையைக் கொண்டுள்ளது. இது எளிதில் மாசுபடக்கூடிய தன்மை வாய்ந்தது. மேலும் இக்கடற்கரைப் பகுதிகளின் மக்கள் தொடர்ந்து தூய்மைக்கேடு விளைவிக்கின்றனர். உயிரின வாழ்க்கைச் சூழலில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பகுதிகளில்

[1997 ஏப்ரல் 9

மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தி இப்பகுதிகளில் மிக அதிக அளவிற்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு இக்கடற்கரையோரப் பகுதிகள் முறைப்படுத்தப்பட்ட கடற்கரை மண்டலம் I, II, மற்றும் III என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் 32 இடங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டு, கடற்கரைப் பகுதி நீரின் கடலோரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

## 8. உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம் :

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, காவிரிப்படுகையில் அமைந்துள்ள மேட்டூர், பள்ளிப்பாளையம், முசிரி ஆகிய இடங்களில் நீரின் தன்மையையும், முசிரியில் நிலத்தடி நீரின் தன்மையையும் வாரியம் கண்காணிக்கிறது. அதே போன்று இந்திய தேசிய நீர் ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் காவிரி, தாமிரபரணி மற்றும் பாலாறு ஆகிய நதிகள் முறையே 16, 8 மற்றும் 1 நிலையங்களில் கண்காணிக்கப்படுகிறது.

## 9. வாகன வாயு வெளிப்பாடுகள் :

நகர்ப் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக சென்னையில் வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் வாய்வு கழிவுகளும் அதிகரித்துள்ளது. சென்னையில் 3 வாகனப் புகை கண்காணிக்கும் நிலையங்கள் அமைந்துள்ளன.

1-5-92-முதல் வாரியம் வாகனப்புகை கண்காணிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. 1995-96-ஆம் ஆண்டில் 20,085 சரக்கு கொண்டு செல்லும் வாகனங்களும் 1996-97-ல் 31-12-96 முடிய 21,574 சரக்கு கொண்டு செல்லும் வாகனங்களும், வாயு கழிவுகள் தர அளவு சோதனை செய்யப்பட்டுள்ளன.

## 10. வாரியத்தின் இதர பணிகள் :

### 10.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடையே பரப்புதல் :

அரசு சார்பற்ற ஓர் அமைப்பான சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கை அமைத்ததன் மூலமாகவும் சுற்றுச்சூழல் பிரச்சனை குறித்து ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றை



1997 ஏப்ரல் 9]

நடத்துவதன் மூலமாகவும், வீடியோ மற்றும் திரைப்படக் காட்சிகளைத் திரையிடுவதன் மூலமாகவும் இவ்வாரியம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடையே பரப்பி வருகிறது. வாரியத் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு சாரா நிறுவனப்பிரிவு, அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து, பிற மாநில வாரியங்கள் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய ஆலோசனைகளுடன் சுற்றுப்புறச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

### 10.2 ஓசோன் கண்காணிப்பு பிரிவு :

ஓசோனைக் குறைக்கும் பொருட்களை உபயோகப்படுத்துபவர்களைத் தெரிவு செய்து அதன் மூலம் தற்போதைய தேவையையும், வருங்காலத் தேவையையும் மதிப்பீடு செய்ய வசதியாக, வாரியம் ஒரு விரிவான ஆய்வினை ஓசோன் கண்காணிப்புப் பிரிவின் மூலம் நடத்தி வருகிறது. இந்த ஆய்வின் முடிவுகள், சுற்றுச் சூழலுக்குப் பாதகம் ஏற்படுத்தாத பொருட்கள் மற்றும் ஓசோனைக் குறைக்கும் பொருட்கள் ஆகியவை பற்றி ஒரு ஒழுங்கான நடவடிக்கை மேற்கொள்ள அடிப்படையாக அமையும்.

### 10.3 நடைமுறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு :

சென்னையிலுள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் நடைமுறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்றினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளது. இப்பிரிவு மாசு ஏற்படுத்துவதைக் குறைக்கும் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதில் ஈடுபடுத்தப்படும். சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்தாலோசித்து ஒரு ஆய்வு கருத்துருவை "நுண்ணுயிரினால் தோல் தொழிற்சாலைக் கழிவு நீரை உயிர் வேதியியல் சுத்திகரிப்பு செய்து தோல் தொழிற்சாலைக் கழிவு நீரின் அங்கக மற்றும் அங்ககமற்ற பொருட்கள் மற்றும் தோல் கழிவுகளில் சிதைவு" என்ற திட்டத்தைத் தயாரித்துள்ளது. குறிப்பிட்ட சிலதோல் தொழிற்சாலைகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 10.4 சுற்றுச்சூழல் பயிற்சி மையம் :

டென்மார்க் நாட்டிலிருந்து நிதி உதவியாக ரூபாய் 4 கோடி பெற்று, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை அமைத்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் வாரிய பணியாளர்களுக்கும், தொழிற்சாலை பணியாளர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவன பணியாளர்களுக்கும், தொழிற்சாலை மாசினைத்

[1997 ஏப்ரல் 9

தடுக்கவும், தேவைக்கேற்ப மாசு தடுப்பு தொழில் நுட்பங்களை மேற்கொள்ள தொழிற்சாலைகளை கண்காணிக்கவும், அறிவுறுத்தவும், அவர்களை திறமையுள்ளவர்களாக ஆக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

**10.5 அவசர நிலை உடனடி செயல் மையம் :**

தொழிற்சாலை விபத்து காலத்தில் உடனடியாக நிவாரணமளிக்க தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வாரியத்தில் அவசர நிலை உடனடி செயல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய கட்டுப்பாட்டு அறை வாரிய தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மணலி பகுதியில் ஒரு கட்டுப்பாடு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

**11. உலகவங்கி நிதி உதவி :**

உலக வங்கி சுற்றுப்புற சூழல் விஷயங்களில் முக்கியமாக அபாயகரமான கழிவுகளை நிர்வகித்தல் தொடர்பான திட்டங்களுக்கு உதவவிருக்கிறது. ஆதாரமான நவீன அபாயகரமான கழிவுகளை நிர்ணயிக்கும் முறைகளை நாட்டில் உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் நிறுவனம் நிறுவவும், தொழில் நுட்ப உதவியாகவும் மற்றும் முதலீடாகவும் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. இத்திட்ட உதவியாக தமிழ்நாட்டிற்கு ஆறு மில்லியன் அமெரிக்க டாலர்கள் கிடைக்கவிருக்கிறது.

**12. சுற்றுப்புற சூழல் துறை :**

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையை செயல்படுத்தும் பொருட்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.* 335, நாள், 13-10-95-ல் சுற்றுப்புற சூழல் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை, பெரிய திட்டங்களான காவிரி ஆறு, தமிழ்நாட்டின் நகர்புற ஏரிகள் மற்றும் சென்னை நகரின் நீர் வழிகளில் மாசு தடுப்புப் பணிகளை செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றை தவிர, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச் சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது. இத்துறை 22-3-96 முதல் ஒரு இயக்குநர் மற்றும் பணியாளர்களுடன் சென்னையில் இயங்கி வருகிறது.

**12.1 தேசிய ஆறு செயல் திட்டம் :**

இத்துறை மத்திய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் ஓடும் காவிரி ஆற்றில் மிகவும் மாசுபட்டுள்ள ஐந்து இடங்களில் நான்கு ஆண்டு



1997 ஏப்ரல் 9]

திட்டமாக ரூ.3820 இலட்சம் செலவில் 1996-97 முதல் செயல்படுத்தி வருகிறது. 1996-97-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டில் மாசு தடுப்புப் பணிகளான குறைந்த செலவில் சுகாதார வசதி, ஆற்றங்கரையோரப் பகுதிகளின் அபிவிருத்தி, விறகினால் எரிக்கும் மயானம் அமைத்தல், மற்றும் தொழு உரக் கிடங்கு அமைத்தல ஆகியவற்றிற்காக ரூ.243.683 இலட்சங்கள் அங்கீகரிக்கப்பட்டு, இப்பணிகள், கொமரப்பாளையம், பவானி, ஈரோடு ஆகிய நகராட்சிகளிலும், பள்ளிப்பாளையம் பேரூராட்சியிலும், திருச்சி மாநகராட்சியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நவீன கழிப்பிட வசதி, நதிக்கரையோர மண் அரிமான தடுப்புச் சுவர், படித்துறைகள் மற்றும் விறகினால் எரிக்கும் மயானம் அமைத்தல் ஆகிய கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கழிவுநீரை ஆற்றில் கலக்காதபடி தடுத்து மாற்றுவழிப்படுத்துதல், மற்றும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்தல் ஆகிய பெரும் பணிகளுக்காக ரூ.2389.6 இலட்சத்திற்கு 13 விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை எட்டு திட்ட அறிக்கைகள் ரூ.12.45 இலட்சத்திற்கு மத்திய அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கண்ட ஐந்து இடங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

**12.2 தேசிய ஏரிகள் பாதுகாப்பு திட்டம் :**

உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் உயிரின வாழ்க்கைச் சூழல் கெடாத வண்ணம் பாதுகாக்கும் பொருட்டு ரூ.66.06 கோடி செலவிலான சாத்தியக்கூறு திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறும் பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஒப்புதல் பெறப்பட்டவுடன் விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து அனுப்பப்படும்.

## 13. 1997-98 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1997-98-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் துறை மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் கீழ் வருமாறு:

1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் சென்னை மேல்நிலை ஆய்வகத்தில் ரூபாய் 9.41 இலட்சம் செலவில், அபாயகரமான கழிவுகளில்

மாதிரிகளை ஆய்வு செய்யும் தரத்தினை மேம்படுத்தவும் கழிவுகளின் அளவுகளை ஆய்வு செய்து சான்றளிக்கவும் அபாயகரமானக் கழிவு ஆய்வகப் பிரிவு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

2. வாரிய தலைமை அலுவலகத்தில் இயங்கி வரும் அபாயகரமான கழிவுகள் மேலாண்மைப்பிரிவு ரூபாய் 12.6 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்பட உள்ளது.

3. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம், 7 அதிமுக்கியமான கடற்கரையோர பகுதிகளில் ரூபாய் 14.36 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. இராணிப்பேட்டை தொழிற்சாலை வளாகத்தில் ரூபாய் 45 இலட்சம் செலவில் வெளிக்காற்று மண்டலத்தின் தரத்தை ஆய்வு செய்ய தொடர் சுற்றுப்புற காற்றுத்தன்மை கண்காணிப்புத் திட்டம் அமைக்கப்பட உள்ளது.

5. திருச்சியில் வெளிக்காற்றின் மண்டலத்தை ஆய்வு செய்வதற்கு சுற்றுப்புற காற்றின் தன்மை கண்காணிக்கும் நிலையங்கள் ரூபாய் 8.95 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது.

6. காவிரி ஆற்றில் மாசு தடுப்புப் பணிகள் 1997-98 ஆண்டில் ரூ. 10 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1997-98-ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.42.60 இலட்சம் செலவில் இத்துறையை வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பிற்காக மத்திய அரசுக்கு அமைக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கை ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் மேற்கண்ட இரு ஏரிகளின் நீர் பிடிப்புப் பகுதிகளிலும் பாதுகாப்புப் பணிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், தோட்டக்கலை, பொதுப்பணி, வனம், நகராட்சிகள் ஆகிய துறைகளால் சுற்றுப்புற சூழல் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

ஒருங்கிணைந்த சென்னை மாநகர நீர்வழிகள் மாசு கட்டுப்பாடு திட்ட செயலாக்கத்திலும், தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகள் மேலாண்மை திட்ட தயாரிப்பிலும், இத்திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகளுடன் இணைந்து சுற்றுச்சூழல் துறை செயல்படும்.



## இணைப்பு-III

*(65-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கொள்கையும் திட்டங்களும் 1997-98

1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் (வாரியம்) 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 1959-ஆம் ஆண்டைய தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின்படி நிறுவப்பட்டது. கதர் மற்றும் கிராமத் தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மற்றத் துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் நோக்கமாகும்.

### வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

(i) கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலை அளித்தல் மூலம் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்.

(ii) உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருள்கள் மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுத்தல்.

(iii) கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை நிலையினை அடைந்திட உதவுதல்.

### 2. வாரியம், தற்போது கதர் மற்றும் 59 கிராமத் தொழில்களை பின்வரும் மூன்று வகைகளில் செயல்படுத்துகிறது:

| | எண் |
|---|---|
| 1. வாரியத்தின் சொந்தத் தொழிற் பிரிவுகள் | 1,395 |
| 2. வாரியம் பதிவு செய்த தொழிற் கூட்டுறவு அமைப்புகள் [பனைவெல்லம் உட்பட] | 1,748 |
| 3. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள் | 88,116 |

[1997 ஏப்ரல் 9

3. மேலும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு மைய நிதியுதவித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

4. உணவு எண்ணெய், பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரம்பு மற்றும் மூங்கில் ஆகிய திட்டங்களைத் தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மூலமாகவும் கதர் திட்டங்கள், ஏனைய உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு தயாரிக்கும் திட்டங்கள், ஆகியவை வாரியத்தின் சொந்த தொழிற் பிரிவுகள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. மற்ற அனைத்து கிராமப்புற தொழிற் திட்டங்களும் வாரியத்தின் அலகுகள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனிநபர்கள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

## கதர் :

5. வாரியத்தின் கீழ் 751 கிராமிய நூற்பு நிலையங்களும் 87 கதர் உற்பத்தி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இதன் மூலமாக 48,430 கிராமியக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவர்களில் 35,760 பேர் பெண்களாவர். இதுவரையில் பருத்தி மற்றும் பாலியஸ்டர் நூல், 6 கதிர் மற்றும் 12 கதிர் இராட்டைகளைக் கொண்டு நூற்கப்பட்டு வந்தது. வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, முதல் முறையாக கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் 8 கதிர் இராட்டைகளை வாரியம் அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது:

1. பெரியார்
2. கோயம்புத்தூர்
3. திண்டுக்கல்-மன்னர்திருமலை
4. சிதம்பரனார்
5. கரூர் தீரன் சின்னமலை

பல்வேறு அரசுத்துறைகள், மற்றும் அரசால் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான துணிகளை வாரியத்திடமிருந்து பெற்றுக்கொள்கின்றன. 1996-97 ஆம் ஆண்டில் வாரியம் சமூகநலத்துறையின் இலவச பள்ளி சீருடை திட்டத்தின் கீழ் 3.00 இலட்சம் மீட்டர் தாவணித்துணியினை உற்பத்தி செய்துள்ளது. கடந்த



1997 ஏப்ரல் 9]

கால அனுபவத்தை ஆய்வு செய்து தற்போதைய வாரியக் கொள்கையின்படி அதிக அளவு கதர் ரகங்களை உற்பத்தி செய்வதைவிட நல்ல தரமுள்ள விற்பனையாகக் கூடிய கதர் ரகங்களை மட்டுமே உற்பத்தி செய்ய வலியுறுத்தி வருகிறது. இந்தக் கொள்கைப்படி வாரியம் 1997-98 ஆம் ஆண்டில் அதிகப்படியாக விற்கக்கூடிய கதர் மற்றும் பாலியஸ்டர் ரகங்களை ரூ. 21.00 கோடி அளவிற்கு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

## கதர்ப்பட்டு :

6. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1996-97 ஆம் ஆண்டில் 28.02.97 வரை ரூ. 18.64 கோடி மதிப்புள்ள பட்டுத்துணிகள், புடவைகள், வேட்டிகள் மற்றும் பாவாடைகள் உற்பத்தி செய்துள்ளது. இந்தப் பட்டு ரகங்கள் வாரியத்தின் கீழ் இயங்கி வரும் 32 பட்டு உற்பத்தி நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் ஆறு பட்டு முறுக்காலைகளும் வாரியத்தின் கீழ் செயல்படுகின்றன. பட்டு ரகங்களின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் தனியார் நிறுவனங்களுக்கு ஈடாக வாரிய உற்பத்தியினைப் பெருக்கும் நோக்கத்துடன் வாரியம் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடி மதிப்பிற்குப் பட்டு உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. நாள்தோறும் மாறி வரும் நுகர்வோர் விருப்பத்திற்கிணங்க, நவீன வடிவங்களுடன் கூடிய பட்டு ரகங்களை உற்பத்தி செய்யும் பொருட்டும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் இத்தகைய ரகங்களை வாங்கும் வாடிக்கையாளர்களை வாரியத்தின் வசம் ஈர்க்கும் பொருட்டும் கணிப்பொறியின் மூலம் புதிய வடிவங்களை உருவாக்க வாரியம் திட்டமிட்டுள்ளது.

## நடமாடும் பழுதுபார்க்கும் அலகு :

7. ஏற்கனவே குறிப்பிட்டவாறு வாரியத்தில் 751 கிராமிய நூற்பு நிலையங்கள் மாநிலமெங்கும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இராட்டைகள் மூலம் நூற்கப்படும் நூல் 87 காதி உற்பத்தி நிலையங்களில் கதர்த்துணியாக வடிவம் பெறுகிறது. கிராமப்புறங்களில் செயல்படும் இராட்டைகளைச் செவ்வனே பழுதுபார்க்கவும், பராமரிப்பு மேற்கொள்ளவும் அரசு 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் நடமாடும் பழுதுபார்க்கும் அலகு ஒன்றினைச் செயல்படுத்த ரூ. 10.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இதனால் மேலும், தடையின்றி

[1997 ஏப்ரல் 9

நூல் உற்பத்தி செய்யவும் அதன் மூலம் நூற்போர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கூடுதல் கூலி உயர்வு பெறவும் இது வழிகோலும்.

**பஞ்சுடைக்கும் அலகு நவீனப்படுத்துதல்:**

8. சூலூரில் இயங்கி வரும் பஞ்சுடைக்கும் அலகினை நவீனப்படுத்தும் பொருட்டு இரண்டு சிம்ப்ளக்ஸ் இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய அரசு ரூ.25.00 இலட்சம் அனுமதித்துள்ளது. தரமுள்ள பஞ்சுப்பட்டைகளை உற்பத்தி செய்ய உதவுவதன் மூலம் கிராமிய நூற்பு நிலையங்களில் தரமான நூல் உற்பத்தி செய்வதுடன், நூற்பாளர்களின் கூலி உயர்வுக்கும் இது வழி வகுக்கும்.

**சாயச் சலவை அச்சு மற்றும் பாலியஸ்டர் பதப்படுத்தும் அலகுகள்:**

9. தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் ஆறு சாயச் சலவை அச்சு அலகுகள் பவானிசாகர், தாராபுரம், திருப்பூர், புதுப்பை, ஜலகண்டபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வலகுகளில் ஆண்டு ஒன்றிற்கு 60.00 இலட்சம் மீட்டர் அளவிற்கான கதர்த்துணிகள் பதப்படுத்தப்படுகின்றன. பவானிசாகரிலுள்ள சாயச்சலவை அச்சு அலகில், பாலியஸ்டர் துணி வகைகளைப் பதனிடத் தேவைப்படும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய அரசு ரூ. 20.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இயந்திரங்கள் வாங்க தேவைப்படும் மீதித் தொகை ரூ. 60.00 இலட்சத்தினை கதர் ஆணைக்குழுவிடமிருந்து பெறும்பொருட்டு வாரியம், கோவையிலுள்ள தென்னிந்திய நூற்பாலை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து (SITRA) பெறப்பட்ட திட்ட அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டங்கள்:**

10. வாரியம் நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக சேமநலநிதித் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி நூற்போர் மற்றும் நெசவாளர்களின் ஊதியத்திலிருந்து 10 விழுக்காட்டுத் தொகையினைப் பிடித்தம் செய்து அதற்கு ஈடாக வாரியமும் 10 விழுக்காட்டுத் தொகையை நலநிதியாக வழங்கி வருகிறது. இத்துடன் நெசவாளர்களின் ஊதியத்தில் 10 விழுக்காட்டுத் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாகவும் வாரியம் வழங்கி வருகிறது.



1997 ஏப்ரல் 9]

11. தறிகளை நவீனப்படுத்தும் பொருட்டு 500 கதர் நெசவாளர்களுக்குத் தேவைப்படும் கருவிகளைக் கொள்முதல் செய்ய தலா ரூ. 1500 வீதம் ரூ. 7.50 இலட்சம் மானியமாக அரசு வழங்கியுள்ளது. தறிகளை நவீனப்படுத்தி மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க இது உதவும். மேலும் 600 பட்டு நெசவாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு 2 ஜக்கார்டு பெட்டிகள் வழங்க ரூ.7.20 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இது தவிர 1000 கதர்ப்பட்டு நெசவாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.400 மதிப்புள்ள மூன்று அடுக்கு [set] டிசைன் அட்டைகள்/ஜ-ங்குகள் வழங்கிட ரூ.3.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி ரூ. 100 கதர்ப்பட்டு நெசவாளரின் பங்காகப் பெற்று மீதித் தொகை ரூ. 300 அரசு மானியமாக வழங்கப்படும்.

12. 1996-97 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது வாரிய நூற்பாளர்/நெசவாளர் இறந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வாரியத்திலிருந்து ரூ.10,000 கருணைத் தொகை வழங்க அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தினை வாரியம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

**கதர் மற்றும் பட்டு ரக விற்பனைக்கான தள்ளுபடி:**

13. விழாக் காலங்களில் ஓர் ஆண்டிற்கு 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி கதர் மற்றும் பட்டு ரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும், கதர் பாலியஸ்டர் துணி விற்பனைக்கு 60 நாட்களுக்கும் அரசு அனுமதிக்கிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, பருத்தி, கதர், கம்பளி மற்றும் பாப்டா ரகங்களின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 10 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடியும் விழாக்காலங்களில் கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 90 நாட்களுக்கு 10 விழுக்காடு சிறப்பு விற்பனை தள்ளுபடியும் அனுமதிக்கிறது. வாரியம் 1997-98 -ஆம் ஆண்டில் கதர், பாலிவஸ்திர மற்றும் பட்டு ரகங்களை ரூ.50.00 கோடிக்கு விற்பனை செய்திட குறியீடு நிர்ணயித்துள்ளது.

**கிராமத் தொழில்கள்:**

14. கிராமக் கைவினைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளித்திட, பல்வேறு கிராமத் தொழில் திட்டங்கள் கதர் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் வாரியத்தினால் செயல்படுத்தப்படுகின்றன.

[1997 ஏப்ரல் 9

15. வாரியத்தில் 243 வாரிய அலகுகளும் 1748 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. இது தவிர 88,116 கைவினைஞர்கள் சுய தொழில் அலகுகள் தொடங்கிட தேவையான நிதியுதவியும் வாரியம் வழங்கியுள்ளது. 1996-97-ஆம் ஆண்டில் கிராமத் தொழில் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 312.55 கோடி மற்றும் ரூ. 339.60 கோடி ஆகும். வாரியம் 1997-98-ஆம் ஆண்டிற்கு உற்பத்தி மற்றும் விற்பனை இலக்கு முறையே ரூ. 410.00 கோடி மற்றும் ரூ. 430.00 கோடி என நிர்ணயித்துள்ளது.

### தோல் தொழில்:

16. கிராமத் தொழில் திட்டங்களில் தோல் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது. தோல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கிராம கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்திடும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் 27 காலணி உற்பத்தி நிலையங்களை வாரியம் நடத்தி வருகிறது. அரசுத் துறைகளிடமிருந்து தேவை நமூனாக்கள் [Indents] பெறப்பட்டு காலணிகள், ஷூக்கள் மற்றும் இதர தோலினால் ஆன பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1996-97-ஆம் ஆண்டில், காவல்துறைக்கு 40,222 ஜோடி ஷூக்கள் மற்றும் பூட்ஸ்களை வாரியம் உற்பத்தி செய்துள்ளது. காலணிப் பணிக்கூடங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் இலவசமாக அளித்திடும் திட்டத்தின் கீழ் இதுவரை 11,735 பணிக்கூடங்கள் அருந்ததியர் கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### உணவு சாரா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்:

17. கிராமத் தொழில் பொருட்களில் சோப்பு மிகவும் முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின் முதன்மைத் தயாரிப்பான கோபுரம் சலவை சோப்புடன் தற்போது டிடெர்ஜன்ட் பவுடர் (இரு வகைகளில்) மற்றும் டிடெர்ஜன்ட் கட்டி தயாரிக்கப்படுகின்றன. இதனுடன் குளியல் சோப்பு (குறிஞ்சி மற்றும் கோபுரம் கார்பாலிக்) வகைகளுக்கும் பொது மக்களிடமிருந்து நல்ல வரவேற்புள்ளது. குறிஞ்சி சோப்பு, வேம்பு, எலுமிச்சை, மல்லிகை மற்றும் சந்தனம் ஆகிய நான்கு வகையான நறுமணங்களில் தயாரிக்கப்படுகிறது. மேலும் வாரியம் தனது சோப்பு அலகுகளின் தேவைக்கும் மற்றும் வெளிச்சந்தைக்குமாக இரண்டு அமிலக் கலவை உற்பத்தி அலகுகளை நடத்தி வருகிறது. இந்த அமிலக் கலவை அலகுகளில், திரவ டிடெர்ஜெண்டும் (திரவ சோப்பு) தயாரிக்கப்படுகிறது. இதற்கு பால்பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும்



1997 ஏப்ரல் 9]

போக்குவரத்துக் கழகங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. தரம் வாய்ந்த சலவை சோப்பு உற்பத்திக்கு நடப்பில் உள்ள கூட்டு உற்பத்தி பொருட்களை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வாரியம் சமீபத்தில் மேற்கொண்டுள்ளது.

### குளியல் சோப்பு அலகுகளை நவீனப்படுத்துதல் :

18. தஞ்சாவூர் மாவட்டம் நாஞ்சிக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் காந்தலூரிலுள்ள குளியல் சோப்பு அலகுகளை ரூ.20.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 1997-98-ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் ஒரு குளியல் சோப்பு அலகினை பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### மண்பாண்டம் :

19. கதர் ஆணைக் குழுவின் அட்டவணையில் உள்ள மண்பாண்டத் தொழில் கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பாரம்பரியத் தொழிலாகும். இதில் ஈடுபடும் கைவினைஞர்களுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டத் திட்டத்தின் கீழ், இதுவரை 14,947 கைவினைஞர்களுக்கு வாரியம் நிதி உதவி அளித்துள்ளது. வாரியம் இதற்கென எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள செவ்வாப் பேட்டை, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள விருத்தாச்சலம் மற்றும் வீரப்பெருமாநல்லூர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள காருகுறிச்சி ஆகிய நான்கு அலகுகளை வாரியம் நடத்தி வருகிறது. மண்பாண்டப் பொருட்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

### கைமுறைக் காகிதத் தொழில்:

20. "கழிவிலிருந்து செல்வம்" என்பதன் அடிப்படையில், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் கிராமத் தொழில் அட்டவணையில் கைமுறைக் காகித தொழில் சேர்க்கப்பட்டுள்ளது. கைமுறைக் காகித உற்பத்திக்கு அரசுத்துறை அலுவலகங்களிலும், மருத்துவமனைகளிலிருந்தும் அகற்றப்பட்ட கழிவுக்காகிதம் மற்றும் பழைய துணி கழிவுகள், பின்னலாடை மற்றும் தையல் துண்டுப் பொருட்களே முக்கிய மூலப் பொருட்களாகும். வாரியத்தின் கீழ் 20 கைமுறைக் காகித அலகுகள் இயங்கி வருகின்றன. இவ்வலகுகளில்

[1997 ஏப்ரல் 9

தயாரிக்கப்படும் காகித வகைகள் எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரகம், நீதிமன்றங்கள் மற்றும் அரசுத் துறைகளின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது. மக்கள் விரும்பும் பொருட்களை உற்பத்தி செய்திட ஏதுவாக கைமுறைக்காகித அலகுகளை நவீனப்படுத்த வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### சிலிண்டர் மோல்டு வாட் முறைப்படி கைமுறைக் காகித அலகினை நவீனப்படுத்துதல்:

*21. 1997-98-ஆம் ஆண்டில் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் பிடாகத்திலுள்ள கைமுறைக் காகித அலகினை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சிலிண்டர் மோல்டு வாட் முறைப்படி நவீனப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விலை மதிப்புள்ள உயர்ந்த ரக கைமுறைக் காகிதம் மற்றும் அட்டை வகைகளை உருவாக்கிட இயலும்.*

### தேன் பதப்படுத்தும் அலகு நிறுவும் திட்டம்:

*22. தற்போது கையாளப்படும் பழமையான முறையினை மாற்றி விஞ்ஞான முறைப்படி தேன்பதப்படுத்துவதற்காக ரூ.17.00 இலட்சம் ஒட்டு மொத்தச் செலவில் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் ஒரு தேன் பதப்படுத்தும் அலகு நிறுவப்படும். இதன்மூலம் தேனின் ஈரப்பதம் வெகுவாகக் குறைக்கப்பட்டு தேனை நீண்ட நாட்கள் உபயோகத்திற்கு வைத்திட இயலும், 1997-98-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான செலவு ரூ.5.00 இலட்சம் ஆகும்.*

### வாரிய மைய அலுவலகத்திற்குப் புதிய நகலெடுக்கும் இயந்திரம் வழங்குவது:

*23. வாரியத்தின் மைய அலுவலகத்திற்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய நகலெடுக்கும் இயந்திரம் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

### கிராமத் தொழில்கள் மூலம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

*24. 1997-98-ஆம் ஆண்டில் பழங்குடியினர் திட்டப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு ரூ.49.61 இலட்சம் மதிப்பீட்டில் தைலம் வடிகட்டும்*



1997 ஏப்ரல் 9]

கருவிகள், தேனீப் பெட்டிகள் வழங்குவது மற்றும் தொழிற் பயிற்சியளிப்பது போன்றவற்றில் உதவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஊரக வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்-விளிம்புத் தொகைத் திட்டம்:

*25. மும்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, வங்கி நிதி உதவியுடன் கிராமத் தொழில்கள் மூலம் ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்கிடும் திட்டத்தினை சில குறிப்பிட்ட மாவட்டங்கள் மற்றும் ஒன்றியங்களில் செயல்படுத்தும் பொருட்டு வாரியத்தினை மையமாக நியமித்து ரூ.475.00 இலட்சத்தினை விளிம்புத் தொகையாக [Margin money] வழங்கியுள்ளது. கிராமங்களில் தொழில் தொடங்கிட விரும்பும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் கடன் உதவி வழங்கிய உடன் திட்ட மதிப்பிட்டில் ரூ.4.00 லட்சம் உச்சவரம்பிற்கு உட்பட்டு 25 விழுக்காடு விளிம்புத் தொகையாக பெறத்தகுதி பெறுவர். இத்திட்டத்தின் செயல்பாடு முதலில் கடன்வழங்க வேண்டிய வங்கிகளின் ஒத்துழைப்பைப் பொறுத்தே ஆகும்.*

### மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்:

#### மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்:

*26. மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 3,717 கைவினைஞர்கள் ரூ.69,343 இலட்சம் மதிப்பீட்டில் தைலம் வடிகட்டும் கருவிகள், தேனீப்பெட்டிகள் மற்றும் அதன் உபகரணங்கள் வழங்கியதன் மூலம் பயன் பெற்றுள்ளார்கள்.*

#### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

*27. 1975-76-ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் வாரியம் ஈடுபட்டுள்ளது. வாரியம் 1997-98-ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.65 இலட்சம் மதிப்பீட்டில் தைலம் வடிகட்டும் கருவிகள், தேனீப் பெட்டிகள் மற்றும் அதன் உபகரணங்கள் வழங்கிடும் பணிகளைத் தொடர்ந்திட கருதியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 163.95 இலட்சம் மதிப்பீட்டில் 5686 பேர் பயனடைந்துள்ளனர்.*

[1997 ஏப்ரல் 9

**வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி உதவித் திட்டம்:**

28. வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள், திட்டப் பகுதிகளான சேலம், தருமபுரி, விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள கிராமங்களின் மகளிர் தற்சார்பு [self-help] குழுக்களை ஒருங்கிணைத்து சமூக மேம்பாட்டிற்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் வாரியப் பணியாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். 1996-97-ஆம் ஆண்டு கிராமத் தொழில் பகுதியின் கீழ் 3,613 மகளிர் பயனடைந்துள்ளனர்.

**சிறப்பு மைய நிதியுதவி:**

29. ஆதிதிராவிட கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தோல், தேனீ வளர்ப்பு, பிரம்பு மற்றும் மூங்கில், தச்சு மற்றும் கருமார் போன்ற பல்வேறு திட்டங்கள் தீட்டப்பெற்று சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடவும், அவர்களின் பொருளாதார தரத்தினை உயர்த்திடவும், அரசால் தேர்வு செய்யப்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 37,317 ஆதிதிராவிட கைவினைஞர்கள் ரூ.27.07 கோடி சிறப்பு மைய நிதியுதவியின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**வாரியத்தின் நிதிநிலை:**

30. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வரவு-செலவுத் திட்டம் கீழ்க்கண்ட இரு வகைகளில் தயாரிக்கப்படுகிறது.—

1. கதர் நிதி
2. கிராமத் தொழில் நிதி

31. மைய அரசின் ஒப்புதல்படி பல்வேறு கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவியினை மும்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்குகிறது.



1997 ஏப்ரல் 9]

32. 1996-97-ஆம் ஆண்டுக்கான ஒப்புக்கொள்ளப்பட்டத் திட்டப்படி மும்பாய் கதர் ஆணைக் குழு வாரியத்திற்கு கீழ்க்கண்ட நிதியுதவியினை ஒதுக்கியுள்ளது:

| திட்டத்தின் பெயர் | கதர் ஆணைக் குழுவின் நிதி மான்யம் | கதர் ஆணைக் குழுவின் நிதி கடன் | விளிம்புத் தொகை | வங்கி நிதி மூதலீட்டு கடன் | மூலதனக் கடன் | கூட்டு வங்கி கடன் | வாரியத்தின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | | | | | | | |
| கதர் | - | - | - | 152.46 | 1520.25 | 112.95 | - | 1785.660 |
| கிராமத் தொழில்கள் | 3.768 | 20.00 | 326.45 | - | 354.50 | 924.60 | 116.83 | 1746.148 |
| மொத்தம் | **3.768** | **20.00** | **326.45** | **152.46** | **1874.75** | **1037.55** | **116.83** | **3531.808** |

33. 1996-97-ஆம் ஆண்டிற்கான கதர் மற்றும் பாலிவஸ்திரா திட்டங்களுக்கு மானியத்துடன் இணைந்த குறைந்த வட்டித் தொகை திட்டத்தின்கீழ் வங்கி நிதி பெற்றுக் கொள்ள கதர் ஆணைக் குழு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே கதர் மற்றும் பாலிவஸ்திரா திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்து வங்கியினை அணுகும் பொருட்டு, சென்னையிலுள்ள மாநில கதர் ஆணைக் குழுவின் இயக்குநரை, மானியத்துடன் இணைந்த குறைந்த வட்டித் தொகை திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதிக்காக சான்றிதழ் வேண்டி வாரியம் அணுகியுள்ளது.

34. அத்துடன் மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம் நிதியுதவி பெற்று வருகிறது. அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியுதவி பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| | திருத்திய மதிப்பீடு 1996-97 | திட்ட மதிப்பீடு 1997-98 |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| அ. நிகர செலவு மான்யம் | 577.50 | 606.38 |
| ஆ. தணிக்கைக் கட்டணம் | 75.00 | 75.00 |
| இ. கதர் விற்பனைத் தள்ளுபடி | 500.00 | 500.00 |
| ஈ. சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக (பனைவாரியம் உட்பட) | 168.26 | 118.60 |
| மொத்தம் | **1320.76** | **1299.98** |

[1997 ஏப்ரல் 9

## தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம்

35. தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் 6-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. நலிவுற்ற ஏழை பனைத் தொழிலாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்து அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும். மாநில மற்றும் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனங்கள் மூலம் பனைத் தொழிலாளர்களுக்கு சுயதொழில் துவங்க நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்கள் முன்னேற்றம் அடைய பகுதி-2 திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பனைத் தொழிலில் நவீன தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி, பொருட்கள் உற்பத்தி செய்ய பனைத் தொழிலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பனைப் பொருட்கள் மாநில மற்றும் 7 மாவட்ட சம்மேளனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள பனைப் பொருள் விற்பனை அங்காடிகளின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது.

36. தமிழக பனைத் தொழிலில் பல்வேறு பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, மற்றும் பனஞ்சர்க்கரை கொண்டு தயாரிக்கப்படும் பான வகைகள், இனிப்பு சாக்லெட் வகைகள், பனைஓலை பொருட்கள், பனை நார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், பல்வேறு வகையான ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசின் பொதுப் பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு விதைப்பிற்காக பனை விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

### உற்பத்தி:

37. 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 10,000.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்கள் உற்பத்தி செய்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### விற்பனை:

38. பனைப் பொருட்களை உரிய காலத்தில் விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும்



1997 ஏப்ரல் 9]

1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.12,000.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்கள் விற்பனை செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்பு:

39. பனைத் தொழிலில், தமிழகம் முதன்மை வகித்து வருகிறது. 1997-98-ஆம் ஆண்டில் ஆறு இலட்சம் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலில் வேலை வாய்ப்பு அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### பனந்தும்பு ஏற்றுமதி:

40. மாநில இணையத்தின் தூத்துக்குடியிலுள்ள தும்பு ஏற்றுமதி கிளையின் மூலம் வெளிநாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 1995-96-ஆம் ஆண்டில் ரூ. 84.16 இலட்சம் மதிப்புள்ள தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 1996-97-ஆம் ஆண்டில் தும்பு ஏற்றுமதி செய்வதற்கான குறியீடாக ரூ.220.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு, அதில் இதுவரை ரூ. 112.15 இலட்சம் மதிப்புள்ள தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 1997-98-ஆம் ஆண்டில் ரூ.200.00 இலட்சம் அளவு மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### வளர்ச்சிப் பணிகள்:

41. 1997-98-ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு:-

### தற்போதுள்ள சிப்பம் செய்யும் நடைமுறைக்காக புட்டிகளை பாதுகாக்க குளிர்சாதனம் வாங்குதல்:

41.01. ரூ. 1.50 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் உபயோகத்திற்காக பதநீர் புட்டிகளை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு குளிர் சாதனப் பெட்டி வாங்கப்படவுள்ளது.

[1997 ஏப்ரல் 9

## குன்னத்தூரில் பாம் கோலா உற்பத்திப் பிரிவையும் பதநீர் பதப்படுத்தும் பிரிவையும் தொடங்குதல்:

41.02. ரூ.10.00 இலட்சம் செலவில் பெரியார் மாவட்டம் குன்னத்தூரில் புதிதாக பாம்கோலா உற்பத்திப் பிரிவும் பதநீர் பக்குவப்படுத்தும் பிரிவும் தொடங்கப்படவுள்ளது. இந்நிலையம் துவங்குவதால் அப்பகுதியில் வாழும் 1000 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு புதியதாக வேலை வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

## குன்னத்தூரில் தூரிகைத் தயாரிப்பு பிரிவு தொடங்குதல்:

41.03 பெரியார் மாவட்டம். குன்னத்தூரில் ரூ.2.48 இலட்சம் செலவில் புதிதாக ஒரு தூரிகைத் தயாரிக்கும் பிரிவு தொடங்கப்பட உள்ளது. இந்நிலையம் துவக்குவதன் மூலம் புதிதாக 200 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

## இராமநாதபுரம் பதநீர் பக்குவப்படுத்தும் பிரிவு தொடங்குதல்:

42. இராமநாதபுரம் மாவட்டத்தில் புதியதாக பதநீர் பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்று ரூ.2.55 இலட்சம் செலவில் தொடங்கப்பட உள்ளது இப்புதிய நிலையம் துவக்குவதால், பதநீர் உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் புதியதாக 200 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

## மாதவரத்தில் உள்ள பனஞ்சர்க்கரை ஆலையை பழுது பார்த்தல்:

43. மாதவரத்தில் இயங்கும் பனஞ்சர்க்கரை ஆலையில் உள்ள இயந்திரத்தினை ரூ.2.94 இலட்சம் செலவில் பழுதுபார்த்து செயல்படுத்தப்பட உள்ளது. இயந்திரத்தில் உள்ள பழுதுகள் நீக்கி செயல்பட்டால் அப்பகுதியில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்கள் 170 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க இயலும்.

## பனைத் தொழில் பயிற்சிகள்:

44. பனைத் தொழிலைப் புதிய சமுதாயத்தினர் பயின்று ஆர்வத்துடன் பனைத் தொழில் செய்திட முன்வர ஏதுவாக, ஊரக வளர்ச்சித் துறையில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராம இளைஞர்களுக்கு புதிய தொழில் நுணுக்கங்களுடன் கூடிய பல்வேறு



1997 ஏப்ரல் 9]

வகையான பனைத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கடலூரில் தென்மண்டல பனைத் தொழில் பயிற்சி மையமொன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி மையத்தில் தமிழக மாவட்டங்களிலிருந்து வருகின்ற கிராமப்புற தொழிலாளர்களுக்கும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் வருடந்தோறும் 110 நபர்களுக்கு மாதம் ரூ.350/- உதவித் தொகையுடன் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

45. கிராமப்புறத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு சாத்தியக்கூறுகள் ஏற்படுத்தி கொடுப்பதுதான் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியத்தின் திட்டமாகும். சிறிய அளவில் மூலதனத்துடன், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, தினந்தோறும் மக்கள் வாங்கி பயன்படுத்தும் மற்றும் எளிதாக விற்பனையாகும் பொருட்களை உற்பத்தி செய்து, கிராமப் புற கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவி செய்வதே இத்திட்டங்களின் நோக்கமாகும்.

1997 ஏப்ரல் 9]

## இணைப்பு-IV

*(65-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

# எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை

## மானியக் கோரிக்கை எண் 43

## கொள்கை விளக்க குறிப்பு

## 1997-98

தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை *1831*-ஆம் ஆண்டு *10* தொழிலாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. *166* ஆண்டுகளை சீரிய முறையில் நிறைவு செய்துள்ள இத்துறை, சென்னை மாநகரத்திலும் பிற மாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் *7* அச்சகங்களைக் கொண்டுள்ளது. இத்துறையின் கீழ் சென்னை மாநகரத்தில் ஒரு எழுது பொருள் அலுவலகமும் மற்றும் ஒரு வெளியீடுகள் விற்பனை நிலையமும் இயங்கி வருகிறது.

*2.* பணியாளர் நிர்வாகம், தொழில் உறவுகள், பொது நிர்வாகம், பொருட்கள் மைய நிர்வாக அமைப்பு, இயந்திரங்கள் வாங்குதல், அச்சுப் பிரிவுகளுக்கு அத்தியாவசியமான பொருட்களை கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் இந்த இயக்ககத்தில் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசின் கீழ் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான எழுது பொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டு பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் எழுது பொருள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் கழகங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகளும், வரவு செலவுத் திட்ட ஆவணங்கள், அரசிதழ் வெளியீடு, கமுக்க தன்மை வாய்ந்த சிறப்பு அறிக்கைகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், மிக்க மறைபொருள் வாய்ந்த பணிகளான வாக்குச்சீட்டுகள், அரசுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் மற்றும் பரிசுச் சீட்டுகள் ஆகியவற்றை அச்சிடல் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட, நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடல் ஆகிய பணிகள் எழுது பொருள் அச்சுத் துறையின் கீழ் இயங்கும் அச்சகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

[1997 ஏப்ரல் 9

**3.** எழுது பொருள் அச்சுத் துறை இயக்ககம், ஏழு அச்சகங்கள், ஒரு எழுது பொருள் கிடங்கு மற்றும் ஒரு அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் ஆகியவற்றின் பணியைக் கண்காணிக்கும் தலைமை அமைப்பாகும். இதன் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை **238** ஆகும்.

சென்ற ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது, இத்துறையின் மேம்பாட்டுக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும், கீழ்க்கண்ட திட்டங்கள் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

| வ. எண். | அறிவிப்புகள் |
|---|---|
| 1. | அரசு அச்சகப் பெண் பணியாளர்களுக்கு பேறுகால மருத்துவ விடுப்பு **21-7-1983** முதல் முன் மேவு பலனிட்டு வழங்குவது. |
| 2. | ரூ. **6.5** இலட்சம் செலவில் ஆர்.ஏ. 1 அளவுடைய ஒரு ட்வின் எக்ஸ்போசர் மற்றும் ஒரு பிளேட் பிராசசர் (ஆர்.ஏ. 1 அளவு) இயந்திரங்களை வாங்குதல். |
| 3. | அரசு எழுது பொருள் கிடங்கு அலுவலகத்தில் பணிபுரியும் **168** பணியாளர்களுக்கு பாலியஸ்டர் சீருடை வழங்க ஒப்பளிப்பு. |
| 4. | அச்சகத் தொழில் நுட்ப மகளிர் பணியாளர்களுக்கு பிரதி மாதம் மூன்று வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு அனுமதி அளித்தல். |
| 5. | அன்றாடம் பெறப்படும் வழக்குப் பட்டியல்களை அன்றைய தினமே அச்சிட்டு வழங்க ஏதுவாக உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்தும் வகையில் இக்கிளை அச்சகத்திற்கு ரூ. **87.10** இலட்சத்தில் ஒரு வெப் ஆப்செட் இயந்திரம் கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு. |
| 6. | (அ) அரசு அச்சகப் பணியாளர்களுக்கு ரொட்டி மற்றும் தேநீர்படி ரூ. **30/-**லிருந்து ரூ. **40/-** ஆக உயர்வு அளித்தல். |
| | (ஆ) அரசு அச்சகப் பணியாளர்களுக்கு இரவு நேரப்படி ரூ. **3.50/-**லிருந்து ரூ. **5/-** ஆக உயர்வு அளித்தல். |



1997 ஏப்ரல் 9]

மேலும், இத்துறை கடந்த மே **1996**-ல் நடைபெற்ற பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கான **8.56** கோடி வாக்குச்சீட்டுகள் மற்றும் அக்டோபரில் நடந்த மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான **9.79** கோடி வாக்குச் சீட்டுகள் ஆகியவற்றை குறுகிய காலத்தில் செவ்வனே அச்சிட்டு வழங்கியுள்ளது.

## பரிசுச் சீட்டுகள் :

தற்போது ஒவ்வொரு மாதமும் **6** வகையான **154** இலட்சம் பரிசுச் சீட்டுகள் சீரிய முறையில் பல வண்ணங்களில் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

## தட்டச்சுப் பொறிகள் :

ஆட்சி மொழி தமிழை அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்த ஏதுவாக **468** தமிழ் தட்டச்சுப் பொறிகள் கொள்முதல் செய்யப்பட்டு தலைமைச் செயலகத் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## நவீனமயமாக்கும் திட்டம் :

இத்துறை பல்வேறு துறைகட்கு அன்றாட பணிகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்களை அச்சிட்டு வருகிறது. பரிசுச் சீட்டு மற்றும் அரசிதழ் அச்சிடல் போன்ற பணிகள் (ஆர்.ஏ. 2 அளவில்) **54** கோடி அழுத்தங்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது.

இத்துறையில் இயங்கி வரும் இயந்திரங்கள் மிகவும் பழமையானவை. லெட்டர் பிரஸ் இயந்திரங்கள் தேய்மானமடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளன. இதனால் **54** கோடி அழுத்தங்கள் தேவைப்படும் நிலையில் **30** முதல் **32** கோடி அழுத்தங்கள் அளவில் மட்டுமே உற்பத்தித் திறன் பெற முடிகின்றது. இதனால் ஆண்டொன்றுக்கு ஆர்.ஏ. 2 அளவில் **22** கோடி அழுத்தங்கள் அளவில் பணி தேக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே பல துறைத் தலைவர்களிடமிருந்து அவரவர் துறைகட்குத் தேவைப்படும் பணிகளை தற்போதைய இயந்திரங்களைக் கொண்டு அச்சிட்டு வழங்குவது கடினமாக உள்ளது. அவசரத் தேவையினைக் கருதி, பணிகளை இத்துறையில் இயங்கி வரும் அச்சு இயந்திரங்களைக் கொண்டு அச்சிட்டு

வழங்க இயலாத நிலையில், தனியார் அச்சகங்களில் அச்சிட்டுக் கொள்ளும் வகையில் ``தடையின்மைச் சான்றிதழ்`` அளிக்கப்பட்டு வருகிறது.

அச்சுத் தொழிலில் பல்வகையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருப்பதை அரசு உணர்ந்துள்ளது. அச்சுத் துறை தொழில் நுட்பத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், கால விரையத்தைத் தவிர்க்கும் வகையிலும் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் உள்ள அச்சு இயந்திரங்களை நவீனமயமாக்க வேண்டுமென அரசு திட்டமிட்டுள்ளது.

## ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் :

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கொள்கை விளக்க கருத்துருக்களை நெறிப்படுத்தும் விதத்தில் ஒரு துணைக் குழு அமைக்க மாநில திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. ***59.15*** இலட்சம் மற்றும் அதன் உள்ளபடியான செலவினம் ரூ. ***51.85*** இலட்சம் ஆகும்.

# I. அச்சகப் பிரிவுகள்

## 1. அரசு மைய அச்சகம், சென்னை-600 079

அரசு மைய அச்சகம், பணி மேலாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட மொத்தம் ***4,173*** பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அச்சிடும் இயந்திரங்கள், புத்தகம்கட்டும் இயந்திரங்கள், அச்சுக் கோர்ப்பு இயந்திரங்கள் நிழற்பட கோப்பு இயந்திரம், பிளாக் தயாரிக்கும் பிரிவு, இரப்பர் முத்திரைப் பிரிவு மற்றும் அண்மைக்கால தொழில்நுட்பத் திறனுடன் கூடிய "டெஸ்க் டாப் பப்ளிஷர்" போன்ற அனைத்து இயந்திரங்களும் செயல்பாட்டில் உள்ளன.



## செயலாக்கம் :

அரசு மைய அச்சகம் ஏப்ரல் ***1996*** முதல் ஜனவரி ***1997*** வரையிலான காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ. 2 அளவிலான ***12.67*** கோடி அழுத்தங்களுக்கெதிராக ***15.66*** கோடி அச்சு அழுத்தங்கள் செய்து முடித்து ***123.5*** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது. மைய அச்சகம் மேலும் ***16.25*** கோடி பரிசுச் சீட்டுகள், சட்டமன்ற, பாராளுமன்ற தொகுதிகளுக்கான ***10.10*** கோடி வாக்குச் சீட்டுகள் அச்சிட்டதுடன் ஊராட்சித் தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுகளையும் அச்சிட்டு முடித்துள்ளது. தவிரவும், மைய அச்சகம் அரசுத் தேர்வுகளுக்கான ***2*** கோடி விடைத்தாள்கள், ***1997***-ஆம் ஆண்டிற்கான ***5*** வண்ணங்களில் அச்சிடப்பட்ட ***1,15,000*** மாதாந்திர நாட்காட்டிகள், ***14,500*** சிறப்பு நாட்குறிப்பேடுகள் மற்றும் ***84,500*** சாதாரண நாட்குறிப்பேடுகள் அச்சிட்டுள்ளது. சட்டமன்ற விவாதக் குறிப்புப் புத்தகங்கள், வாராந்திர அரசிதழ்கள் மற்றும் வரவு-செலவு ஆவணங்களையும் நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகளை வாலாயமாக அச்சிடும் பணியையும் மைய அச்சகம் மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-104.

***1923***-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றக் கட்டிட வளாகத்தில் துவங்கப்பட்ட இவ்வச்சகம் ஒரு துணைப் பணி மேலாளரின் நிர்வாகத்தில் ஒப்பளிக்கப்பட்ட ***281*** பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. உயர்நீதிமன்றத்திற்குரிய தினசரி மற்றும் மாதாந்திர வழக்குப் பட்டியல்களை அச்சிடுவது இவ்வச்சகத்தின் முக்கியப் பணியாகும்.

*2.* இது தவிர கீழ்க்காணும் பணிகளும் இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

*(1)* மாதத்திற்கு இருமுறை வெளியிடப்படும் இந்திய சட்ட அறிக்கைகள் அச்சிடல்.

*(2)* கல்வி, மோட்டார் வாகனங்கள், வணிகவரி மற்றும் நலவாழ்வுத் துறைகள் சம்பந்தப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடல்.

[1997 ஏப்ரல் 9

*3.* அரசு வெளியீடுகளை விற்பதற்கான ஒரு துணை விற்பனை நிலையம் இக்கிளை அச்சகத்தில் இயங்கி வருகிறது.

## செயலாக்கம் :

உயர்நீதிமன்ற அரசு கிளை அச்சகம் ஏப்ரல் ***1996*** முதல் ஜனவரி ***1997*** வரையிலான காலத்தில், நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ. 2 அளவிலான ***1.7*** கோடி அச்சு அழுத்தங்களுக்கெதிராக ***1.83*** கோடி அச்சு அழுத்தங்களை செய்து முடித்து ***107.7*** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது. இக்கிளை அச்சகம் மேலும் அரசுத் தேர்வுகளுக்கான ***30*** இலட்சம் எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள், ***13.5*** இலட்சம் தமிழ்நாடு பொது விற்பனை வரி படிவங்கள், ***8.25*** இலட்சம் அளவில் மருத்துவப் படிவங்கள் ஐ-***215***, ***13.9*** இலட்சம் அளவில் மருத்துவப் படிவங்கள் (மெடிகல் ஐ-45) மற்றும் இந்திய சட்ட அறிக்கை, சிறைத் துறை, நீதித் துறை படிவங்களையும் அச்சிட்டுள்ளது. இவை தவிர ஆர்.ஏ. 2 அளவிலான ***76,000*** அழுத்தங்கள் கொண்ட ஏ4 அளவுள்ள சுமார் ***160*** பக்கங்கள் கொண்ட வழக்கு பட்டியல்கள் இங்கு தினசரி அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

## 3. அரசு கிளை அச்சகம், மதுரை.

இக்கிளை அச்சகம், ***1976***-ஆம் ஆண்டு முதல் தனது சொந்தக் கட்டிடத்தில், ஒப்பளிக்கப்பட்ட ***363*** தொழிலாளர்களைக் கொண்டு ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையில் இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. தொழில்நுட்பப் பிரிவில் இரண்டு உதவிப் பணி மேலாளர்களும், ஒரு உதவி செயற்பொறியாளரும், நிர்வாகப் பிரிவில் ஒரு உதவி இயக்குநரும் துணைப் பணி மேலாளருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றனர்.

இக்கிளையில் கீழ்க்காணும் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:—

1. வருவாய்த் துறை
2. கருவூலம் மற்றும் கணக்குத் துறை
3. காவல் துறை
4. பதிவுத் துறை



1997 ஏப்ரல் 9]

5. தமிழ்நாடு பொதுத் தேர்வாணையம்
6. வணிகவரி மற்றும்
7. மருத்துவத் துறை

மேலும் கீழ்க்காணும் நிலைப்படுத்தப்படாத படிவங்களும் இங்கு அச்சிடப்படுகின்றன:—

1. பொதுப் பணித் துறை விலைப்பட்டியல்
2. வேளாண்மைத் துறையின் நீல அட்டைகள்
3. தலைமைச் செயலகத்தின் பல்வேறுத் துறைகளிலும் வெளியிடப்படும் அரசாணைகளுக்கான அட்டவணை
4. பொதுத் தேர்தலுக்கான சிற்றேடுகள்
5. பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள்
6. ஊராட்சித் தேர்தலுக்கான படிவங்கள் மற்றும் சிற்றேடுகள்
7. ஊராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள்

தொழிலாளர்கள் நலனுக்கான ஒரு கூட்டுறவுச் சங்கமும், ஒரு மனமகிழ் மன்றமும் இக்கிளையில் இயங்கி வருகின்றன. தொழிலாளர் நலத்துறையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தொழிலாளர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். தொழிலாளர் கல்வித் திட்டம் இங்கு செயல்பட்டு வருகிறது.

## செயலாக்கம் :

மதுரை அரசு கிளை அச்சகம் ஏப்ரல் ***1996*** முதல் சனவரி ***1997*** வரையிலான காலத்தில், நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ. 2 அளவிலான ***5.18*** கோடி அச்சழுத்தங்களுக்கெதிராக ***3.81*** கோடி அச்சு அழுத்தங்கள் செய்து முடித்து ***73.6*** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது.

இவ்வச்சகம் ***8*** கோடி அச்சு அழுத்தங்கள் செய்ய வேண்டிய நிலையில், பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான ***2.98*** கோடி வாக்குச் சீட்டுகள், ***2.1*** லட்சம் காவல்துறை நாட்குறிப்புகள் (காவல் பி.60), ***2.3*** லட்சம் பொது நாட்குறிப்புகள் (காவல் பி.62),

[1997 ஏப்ரல் 9

**2** லட்சம் தமிழ்நாடு பொது விற்பனை வரி படிவங்கள் (படிவம் XX), **55** லட்சம் பதிவுத் துறை நகல் படிவங்கள் (2சி), **25.3** லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான கணக்கெடுப்பு படிவங்கள் மற்றும் **25.3** லட்சம் மாதாந்திர வருமானச் சான்றிதழ் படிவங்களையும் அச்சிட்டுள்ளது.

## 4. அரசு கிளை அச்சகம், சேலம்.

இக்கிளை அச்சகம் **1966**-ல் துவங்கப்பட்டது. இது தற்போது தனது சொந்தக் கட்டிடத்தில் ஒப்பளிக்கப்பட்ட **206** பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு உதவிப் பணி மேலாளர் உள்ளார்.

இங்கு தமிழ்நாட்டின் பல்வேறு அரசு அலுவலகங்கட்கு அச்சிட்டு வழங்கப்படும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் விவரம் வருமாறு:-

1. ட்டி.என்.ட்டி.சி. படிவங்கள்
2. மருத்துவப் பிரிவு படிவங்கள்
3. உயர்நீதிமன்றப் படிவங்கள்
4. எஸ்.எஸ்.எல்.சி. விடைப் புத்தகங்கள்

இதுதவிர இவ்வச்சகத்தில் நிலைபடுத்தப்பட்ட மற்றும் நிலைபடுத்தப்படாத பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

கீழ்க்காணும் மாவட்டங்களுக்கான மாதாந்திர மாவட்ட அரசிதழ்கள் மற்றும் சிறப்பு வெளியீடுகளும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன:—

1. கோயம்புத்தூர்
2. பெரியார்
3. சேலம்
4. ராஜாஜி

இக்கிளை அச்சகத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி, கூட்டுறவுச் சங்கம், மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.



1997 ஏப்ரல் 9]

### செயலாக்கம் :

இக்கிளை அச்சகம் ஏப்ரல் **1996** முதல் சனவரி **1997** வரையிலான காலத்தில், நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ. 2 அளவிலான **3.12** கோடி அச்சழுத்தங்களுக்கெதிராக, **2.94** கோடி அச்சு அழுத்தங்கள் செய்து முடித்து, **94.4** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது. இவ்வச்சகம் **5** கோடி அழுத்தங்கள் செய்ய வேண்டிய நிலையில், பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான **1.95** கோடி வாக்குச் சீட்டுகள், **10** லட்சம் தமிழ்நாடு கருவூல விதி படிவங்கள் (எண் 47), **8.5** லட்சம் தமிழ்நாடு கருவூல குறியீட்டு எண் படிவங்கள் (எண் 47சி), **5.51** லட்சம் பிரயாணப்படி படிவங்கள் (52-ஏ), புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான **17.25** லட்சம் கணக்கு எடுப்பு படிவங்கள், **63.02** லட்சம் மாதாந்திர வருமான சான்றிதழ் படிவங்கள் மற்றும் கோவை, பெரியார், சேலம் மற்றும் ராஜாஜி மாவட்டங்களுக்கான அரசிதழ்களையும் அச்சிட்டு முடித்துள்ளது.

## 5. அரசு கிளை அச்சகம், திருச்சி.

இக்கிளை அச்சகம் 1965-ஆம் ஆண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் முதல் மண்டல அச்சகமாக அரியமங்கலத்தில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் துவங்கப்பட்டது. தற்போது இது திருச்சியிலுள்ள துவாக்குடியில் தனது சொந்தக் கட்டிடத்தில் நவம்பர் **1990** முதல் இயங்கி வருகிறது. இந்த அச்சகம் ஒப்பளிக்கப்பட்ட **176** பணியாளர்களுடன் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. கிளை மேலாளருக்கு உதவியாக ஒரு உதவிப் பணி மேலாளர் செயல்பட்டு வருகிறார்.

மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான பொதுப்படிவங்கள், பதிவேடுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன..

இவற்றுடன் காவல் துறைக்கான படிவங்களும், உயர்நீதிமன்றத்திற்கான படிவங்களும், சிறைத் துறை படிவங்களும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன. பொது மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடல் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. கூடுதல் விடைத்தாள்கள் ஆகியவற்றின் அச்சுப்பணியும் இக்கிளை அச்சகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. உப்புக் கழகம், கோழி வளர்ப்பு வளர்ச்சிக்

[1997 ஏப்ரல் 9

கழகம், காவலர் குடியிருப்புக் கழகம் மற்றும் கைத்தறி வளர்ச்சிக் கழகம் போன்ற கழகங்களுக்கும், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், குடிசை மாற்று வாரியம், சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டு வாரியம், மாநில வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் வாரியம் போன்ற வாரியங்களுக்குத் தேவையான பொதுப்படிவங்கள், தன் பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் அளவைப் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. அதற்கான தொகை சம்பந்தபட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படுகிறது. தவிரவும் கீழ்வரும் ஐந்து மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன:.

1. திருச்சிராப்பள்ளி - பெரும்பிடுகு முத்தரையர்
2. மதுரை
3. வைகை - வீரன் அழகுமுத்து
4. கரூர்-தீரன் சின்னமலை மற்றும்
5. பெரம்பலூர் - திருவள்ளுவர்

தொழிலாளர் நலனுக்கென ஒரு கூட்டுறவு சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கம் இக்கிளையில் இயங்கி வருகிறது.

### செயலாக்கம் :

மேற்படி கிளை அச்சகம் ஏப்ரல் ***1996*** முதல் சனவரி ***1997*** வரையிலான காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ. 2 அளவிலான ***2.15*** கோடி அச்சு அழுத்தங்களுக்கெதிராக ***1.62*** கோடி அச்சு அழுத்தங்கள் செய்து முடித்து ***75*** விழுக்காடு செயலாக்கத்தினை எய்தியுள்ளது. இக்கிளை அச்சகம் ***4*** கோடி அழுத்தங்கள் செய்ய வேண்டிய நிலையில், பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான ***1.12*** கோடி வாக்குச் சீட்டுகளை அச்சிட்டுள்ளது. மேலும் ***6*** லட்சம் பொதுப்படிவங்கள் (சி.எப். 81), ***2*** லட்சம் நீதித் துறை படிவங்கள் (எஸ்.சி.ப்பி.எண். 11), ***5*** லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான கணக்கெடுப்பு படிவங்கள், ***5*** லட்சம் மாதாந்திர வருவாய் சான்றிதழ் படிவங்கள் மற்றும் ***5*** மாவட்டங்களுக்கான அரசிதழ்கள் அச்சிடும் பணியையும் செய்து முடித்துள்ளது.



1997 ஏப்ரல் 9]

## 6. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

இக்கிளை அச்சகம் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் ஒப்பளிக்கப்பட்ட ***256*** பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்று பணிகளில் இயங்கி வருகிறது. கிளை மேலாளருக்கு உதவியாக ஒரு உதவிப் பணி மேலாளர் செயல்பட்டு வருகிறார். கீழ்க்காணும் அரசுத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன:—

1. ஆதிதிராவிடர் நலத் துறை
2. பிற்பட்டோர் நலத் துறை
3. பதிவுத் துறை
4. மருத்துவத் துறை

ஓய்வூதியப் படிவங்கள், உயர்நீதிமன்றத்திற்குத் தேவையான படிவங்கள் விதித் தொகுப்பு மற்றும் நடைமுறை நூல்கள் முதலியன அச்சிடும் பணிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கு கீழ்க்கண்ட ***17*** மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் மற்றும் முக்கிய சிறப்புச் செய்தி அறிவிப்பு வெளியீடுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

(1) இராமநாதபுரம்
(2) கன்னியாகுமரி
(3) சென்னை
(4) காமராசர்
(5) அண்ணா
(6) எம்.ஜி.ஆர்.
(7) தஞ்சாவூர்
(8) தர்மபுரி

[1997 ஏப்ரல் 9

(9) திருவண்ணாமலை-சம்புவராயர்

(10) திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம்

(11) திண்டுக்கல்-மன்னர் திருமலை

(12) திருநெல்வேலி கட்டபொம்மன்

(13) நாகை-காயிதே மில்லத்

(14) நீலகிரி

(15) பசும்பொன்-முத்துராமலிங்கம்

(16) புதுக்கோட்டை

(17) சிதம்பரனார்.

அச்சகத் தொழிலாளர் நலனுக்கென இக்கிளையில் ஒரு கூட்டுறவு சேமிப்புச் சங்கமும், மனமகிழ் மன்றமும் இயங்கி வருகின்றன. பணியாளர்களின் வசதிக்காக ஓய்வு அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

## செயலாக்கம் :

இக்கிளை அச்சகம் ஏப்ரல் 1996 முதல் சனவரி 199 வரையிலான காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ 2 அளவிலான **1.96** கோடி அச்சழுத்தங்களுக்கெதிராக, **1.94** கோடி அச்சழுத்தங்கள் செய்து முடித்து **98.9** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது.

இவ்வச்சகம் **4** கோடி அழுத்தங்கள் அளவிலான பணி செய்ய வேண்டிய நிலையில், பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சி தேர்தலுக்கான **1.16** கோடி வாக்குச்சீட்டுகளை அச்சிட்டுள்ளது. மேலும் **13.7** இலட்சம் முதல்நிலை மருத்துவப் பதிவேடுகள், (மருத்துவம்-45ஏ) **15.15** இலட்சம் மாதாந்திர திட்ட உணவுத்தாள்கள் (மருத்துவம்-88), **9.5** இலட்சம் முன்னேற்ற பதிவுருக்கள் (மருத்துவம்-45பி), **16** இலட்சம் எஸ்.எஸ்.எல்.சி.-3 விடைத்தாள்கள், **20.9** இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான கணக்கெடுப்பு படிவங்கள் மற்றும் **20.9** இலட்சம் மாதாந்திர வருகையச் சான்றிதழ் படிவங்களை அச்சிட்டுள்ளது. மேலும் **17** மாவட்டங்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில அரசிதழ்கள் அச்சிடும் பணியையும் செய்துள்ளது.



1997 ஏப்ரல் 9]

## 7. அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலம்.

1966-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் இக்கிளை அச்சகம் தனது சொந்தக் கட்டிடத்தில் ஒப்பளிக்கப்பட்ட 217 பணியாளர்களைக் கொண்டு ஒரு துணைப் பணி மேலாளரின் பொறுப்பில் இரண்டு முறைமாற்று பணிகளில் இயங்கி வருகிறது. துணைப் பணி மேலாளருக்கு உதவியாக இரண்டு உதவிப் பணிமேலாளர்கள் இங்கு பணிபுரிந்து வருகிறார்கள்.

பின்வரும் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன:-

1. நீதிமன்றம்
2. வேளாண்மை
3. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு
4. பொதுப்பணிகள்
5. கால்நடைப் பராமரிப்பு
6. மருத்துவம்
7. காவல்
8. தீயணைப்புப் பணி
9. தொழில் மற்றும் வர்த்தகம்
10. தேசிய மாணவர் படை
11. கூட்டுறவு
12. வனத்துறை மற்றும்
13. புள்ளியியல்

1996-97-க்கான காலத்தில் கீழ்க்குறித்துள்ள மாவட்ட அரசிதழ்கள் அச்சிடல் மற்றும் சிறப்புப் பணிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன.

1. வடஆற்காடு — அம்பேத்கர் மாவட்ட அரசிதழ்

[1997 ஏப்ரல் 9

2. தென்னாற்காடு - வள்ளலார் மாவட்ட அரசிதழ்

3. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட அரசிதழ்

4. தீர்வை `ஏ` பதிவேடுகள்

5. 1996-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள்.

6. ஊராட்சித் தேர்தல் சம்பந்தப்பட்ட சட்டமுறைப் படிவங்கள் மற்றும் சட்டம்சாரா படிவங்கள் அச்சிட்டு வழங்கல்.

தொழிலாளர்களின் ஓய்வுநேரப்பொழுதுபோக்கிற்காக ஒரு மனமகிழ் மன்றம் இங்கு செயல்பட்டு வருவதுடன், முதலுதவி மற்றும் குடிநீர் வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் ஒரு கூட்டுறவு சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கமும் செயல்பட்டு வருகிறது.

## செயலாக்கம் :

மேற்படி கிளை அச்சகம் ஏப்ரல் 1996 முதல் சனவரி 1997 வரையிலான காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆர்.ஏ 2 அளவிலான **1.83** கோடி அச்சு அழுத்தங்களுக்கெதிராக **1.03** கோடி அச்சு அழுத்தங்கள் செய்து முடித்து **55** விழுக்காடு செயலாக்கத்தை எய்தியுள்ளது. இவ்வச்சகம் **4** கோடி அழுத்தங்கள் அளவிலான பணி செய்ய வேண்டிய நிலையில் பொதுத் தேர்தல் மற்றும் ஊராட்சித் தேர்தலுக்கான **87** இலட்சம் வாக்குச் சீட்டுகள், **6.6** இலட்சம் நோய் கண்டறிதல் குறிப்புப் படிவம் (மருத்துவம்-45-இ), **8.2** இலட்சம் மருத்துவ தொடர் நடவடிக்கை குறிப்புப் படிவம் (மருத்துவம்-45-எச்), **15.5** இலட்சம் தொடர் படிவங்கள், சந்தனக்கட்டை எடுத்துச் செல்வதற்கான **3** இலட்சம் அனுமதிச் சீட்டுகள், (வனங்கள் II-2-ஏ), **5.3** இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான கணக்கெடுப்புப் படிவங்கள், **9.96** இலட்சம் மாதாந்திர வருவாய்ச் சான்றிதழ் படிவங்கள் மற்றும் **3** மாவட்டங்களுக்கான அரசிதழ்கள் அச்சிடும் பணியை செய்து முடித்துள்ளது.



1997 ஏப்ரல் 9]

# II. எழுதுபொருள் பிரிவு

## 8. அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை - 1.

எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகத் தயாரிப்புப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநிலம் முழுவதிலும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு வழங்கும் மைய முகவர் அமைப்பாக இயங்குகிறது. தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பிற பொருட்கள் அனைத்து மாநில அரசு அலுவலகங்கட்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எனினும் மத்திய அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களுக்கும் அவ்விதம் நிதி உதவி பெற்று அவை தொடர்பான திட்டங்களை அமலாக்கம் செய்யும் அரசு நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. ஒரு துணை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட **323** பணியாளர்களைக் கொண்டு இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. நிர்வாகப் பணிகளில் துணை இயக்குநருக்கு உதவியாக ஒரு உதவி இயக்குநர் செயல்பட்டு வருகிறார்.

காகிதம், அட்டை, தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள், அச்சகத் தயாரிப்புப் பொருட்கள் ஆகியவை நீங்கலாக அனைத்து எழுதுபொருட்களும் ஆண்டுதோறும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வெளி அங்காடியில் இருந்து வாங்கப்படுகின்றன.

புதுடில்லியில் உள்ள வழங்கல் மற்றும் தீர்வை தலைமை இயக்குநர் (டி.ஜி.எஸ்.டி.) செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் காகிதம் மற்றும் அட்டைகள் ஆகியவை தமிழ்நாடு காகித நிறுவனம் (ட்டி.என்.பி.எல்.) மற்றும் பல்வேறு காகித ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் முதலியன மேற்சொன்ன இயக்குநரிடம் இருந்து விலை வீத ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

பணியாளர்களுக்குத் தேவையான முதல் உதவி வசதிகள் இங்கு செய்து தரப்பட்டுள்ளன. இவர்களுக்கு உணவு அறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 9

**செயலாக்கம் :**

1996-97 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களுக்கு அச்சடிப்புப் பணிக்காகவும், கேட்பு அலுவலர்களுக்கு வழங்கும் பொருட்டும் கீழ்க்குறித்துள்ள இனங்களை சென்னையிலுள்ள எழுதுபொருள் கிடங்கு கொள்முதல் செய்துள்ளது :

| வ.எண். (1) | பொருளின் பெயர் (2) | அளவு (3) |
|---|---|---|
| 1. | எழுதுதல் மற்றும் அச்சிடலுக்கான வெள்ளைத் தாள்கள் | **3,000** மெட்ரிக் டன். |
| 2. | பழுப்பு நிற கெட்டித்தாள் (அட்டையிடும் காகிதம்) அரசு அச்சகம் மற்றும் கேட்பு அலுவலர்களுக்கு வழங்குவதற்காக | **485** மெட்ரிக் டன். |
| 3. | கேட்பு அலுவலர்களுக்கான பழுப்புத் தாள்கள். | **423** மெட்ரிக் டன். |
| 4. | தலைமைச் செயலகத் துறைகளின் பயன்பாட்டிற்கு மட்டும் தமிழ் தட்டச்சுப் பொறிகள். | **468** எண்ணிக்கை. |
| 5. | நீதிமன்றங்கள் மற்றும் இதர கேட்பு துறைத் தலைவர்களுக்கான தமிழ் தட்டச்சுப் பொறிகள். | **642** எண்ணிக்கை. |
| 6. | நீதிமன்றங்கள் மற்றும் இதர கேட்பு துறைத் தலைவர்களுக்கான ஆங்கில தட்டச்சுப் பொறிகள். | **636** எண்ணிக்கை. |
| 7. | மின் படிப்பெருக்கிகள் | **475** எண்ணிக்கை. |
| 8. | கையினால் இயக்கும் படிப்பெருக்கிகள். | **150** எண்ணிக்கை. |



1997 ஏப்ரல் 9]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. | டெஸ்க்டாப் 12 எண்கள் கணக்கீட்டு பொறிகள் | **40** எண்ணிக்கை. |
| 10. | படியெடுதாள் | **6,000** ரீம்கள். |
| 11. | மின்படிப் பெருக்கிகளுக்கான மைக்குழல்கள் | **30,000** எண்ணிக்கை |
| 12. | கையினால் இயக்கும் படிப் பெருக்கிகளுக்கான மைக்குழல்கள். | **24,000** எண்ணிக்கை. |
| 13. | பென்சில் மைபடிதாள்கள் 29.7 X 21 செ.மீ. | **5,000** ரீம்கள். |
| | பென்சில் மைபடிதாள்கள் 29.7 X 42 செ.மீ. | **1,500** ரீம்கள். |
| 14. | தட்டச்சு மைபடிதாள்கள் ஊதா நிறம் 29.7 X 21 செ.மீ. | **4,500** ரீம்கள். |
| | தட்டச்சு மைபடிதாள்கள் ஊதா நிறம் 29.7 X 42 செ.மீ. | **3,200** ரீம்கள். |
| | தட்டச்சு மைபடிதாள்கள் கறுப்பு 29.7 X 21 செ.மீ. | **3,000** ரீம்கள். |
| | தட்டச்சு மைபடிதாள்கள் கறுப்பு 29.7 X 42 செ.மீ. | **1,000** ரீம்கள். |

[1997 ஏப்ரல் 9

## III வெளியீடுகள் பிரிவு

### 9. அரசு வெளியீடுகள் பிரிவு, சென்னை - 600 002.

சென்னை அண்ணாசாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையமும், சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் ஆகியவற்றை விற்பனை செய்கின்றன. இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இது இயங்குகிறது. அரசு வெளியீடுகள், அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. இப்பிரிவு ஒரு உதவி இயக்குநரின் தலைமையில் ஒப்பளிக்கப்பட்ட 56 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

### செயலாக்கம் :

ஏப்ரல் 1996 முதல் பிப்ரவரி 1997 வரையிலான காலத்தில் ரூ. 10.72 இலட்சம் மதிப்புள்ள அரசு வெளியீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### பிற்சேர்க்கை 1.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் ஒப்பளிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை விவரங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 4,173 |
| 2. | அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1 | 323 |
| 3. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-104 | 281 |
| 4. | அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2 | 56 |
| 5. | இயக்ககம், சென்னை-2 | 238 |
| 6. | அரசு கிளை அச்சகம், மதுரை | 363 |
| 7. | அரசு கிளை அச்சகம், சேலம் | 206 |
| 8. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 176 |
| 9. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 256 |
| 10. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 217 |
| | மொத்தம் .. | 6,289 |



1997 ஏப்ரல் 9]

### பிற்சேர்க்கை 2 (அ)

1996-97-ஆம் ஆண்டிற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பகுதி—2 திட்டத்தின் கீழ் இயந்திரங்களை வாங்குவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை விவரம்.

| அச்சகத்தின் பெயர் மற்றும் கொள்முதல் செய்யப்பட இருக்கும் இயந்திரங்களின் விவரம். | அளவு | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. அரசு கிளை அச்சகம், திருச்சி | | |
| அ) தானியங்கி வெட்டு இயந்திரம் 42" | 1 | 2.00 |
| ஆ) டிஸ்க் ரூலிங் இயந்திரம் | 1 | 1.10 |
| 2. அரசு கிளை அச்சகம், சேலம் | | |
| அ) தானியங்கி வெட்டு இயந்திரம் 42" | 1 | 2.00 |
| ஆ) டிஸ்க் ரூலிங் இயந்திரம் | 1 | 1.10 |
| 3. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | | |
| டிஸ்க் ரூலிங் இயந்திரம் | 1 | 1.10 |
| மொத்தம் | .. | 7.30 |

[1997 ஏப்ரல் 9

## பிற்சேர்க்கை 2(ஆ)

### 1997-98- க்கு நிலை நிதிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பகுதி—2-திட்டம்.

| அச்சகத்தின் பெயர் மற்றும் கொள்முதல் செய்யப்பட இருக்கும் இயந்திரங்களின் விவரம். | அளவு. | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அரசு கிளை அச்சகம், மதுரை | | |
| அ. தானியங்கி தாள் வெட்டும் இயந்திரம் 52" | 1 | 4.50 |
| ஆ. ஆர்.ஏ.1 அளவு ஆப்செட் அச்சு இயந்திரத்திற்கு நீருருளை சுத்தம் செய்யும் இயந்திரம் | 1 | 1.00 |
| 2. அரசு கிளை அச்சகம், சேலம் | | |
| இரு அச்சுப் பகுதிகள் மற்றும் மடிக்கும் பகுதி கொண்ட ஒரு ஆர்.ஏ. 2 அளவிலான சுழல் எதிரீட்டு அச்சியந்திரம் மற்றும் துணைக் கருவிகள் | 1 | 51.85 |
| 3. அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1 | | |
| பளுதூக்கும் கம்பிக்கயிறு இழுவை | 1 | 1.00 |
| மொத்தம் .. | | 58.35 |



1997 ஏப்ரல் 9]

## பிற்சேர்க்கை - 3

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணியாளர்களுக்கான வசதிகள்

### 1. குடியிருப்புகள் :

சென்னை தண்டையார்பேட்டையில் மின்விசிறிகள், பாதுகாப்பு கம்பி வலை, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளுடன் பணியாளர்களுக்கென 300 குடியிருப்புகள் உள்ளன. 'ஏ' மற்றும் 'பி' பிரிவு குடியிருப்புகளைச் சுற்றி 1993-ஆம் ஆண்டில் புதிய சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. 1994-ல் 'சி' பிரிவு குடியிருப்புகளுக்கு வெள்ளையடிக்கப்பட்டு அவை பழுதுபார்க்கப்பட்டன.

### 2. தொழிலாளர் நலம் :

தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார மேற்பார்வையாளரும் குடியிருப்பவர்களின் நலனைக் கண்காணிக்கும் வகையில் குடியிருப்புகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிடுகின்றனர். தொழிலாளர் நல அலுவலர் இத்துறையைச் சார்ந்த அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூர் அலகுகளுக்கு நேரில் சென்று தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார். அதேபோல் சுகாதார மேற்பார்வையாளரும் சென்னையில் உள்ள அலகுகளில் தங்கும் அறை, உணவறை மற்றும் மிதிவண்டி நிறுத்தம் ஆகிய இடங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து வருகிறார். ஒதுக்கப்பட்டுள்ள அறைகளில் நடத்தப்பெறும் பிரிவு நிலை வகுப்புகளால் தொழிலாளர்கள் தொடர்ந்து பயன்பெற்று வருகிறார்கள்.

### 3. மருத்துவ வசதி :

அரசு மைய அச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரில் உள்ள இயக்ககம் மற்றும் எழுதுபொருள் கிடங்கு உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று அங்குள்ள பணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை அளித்து வருகிறார். மேலும் அரசு மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 9

மாவட்ட தலைமையகங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இருந்து மருத்துவ அலுவலர்கள் வெளியூர் அரசு அலகு அச்சகங்களுக்கு காலமுறைதோறும் சென்று அங்குள்ள பணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுகின்றனர்.

## 4. இலவச ரொட்டி, தேநீர் மற்றும் பால் வழங்கல் :

அரசு மைய அச்சகம். எழுதுபொருள் அலுவலகம் உள்ளிட்ட அனைத்துக் கிளை அச்சகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு இலவச தேநீர் மற்றும் ரொட்டி வழங்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரதி மாதம் ரூ. 40/- ரொக்கப்படியாக வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 250 மி.லி. பாலுக்குப் பதிலாக ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூ. 2/-ம் வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

## 5. தொழிலாளர் நல நிதி :

தொழிலாளர்களின் நலப் பணிகளுக்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும், தொழிலாளர் நல நிதியில் இருந்து நிதி ஒப்பளிக்கப்படுகிறது. சுதந்திர தினம் மற்றும் ஆயுதபூஜை போன்ற விழாக்களைக் கொண்டாடுவதற்கும் தொழிலாளர்களுக்கு நிதி வழங்கப்படுகிறது.

## 6. நலத் திட்டங்கள் :

மகளிர் நலத் திட்டத்தின் கீழ் அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் வகையில் சென்னை மாநகரில் உள்ள சென்னைப் பெருநகர காவலர் குடும்ப நலக் குழுக்கள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு மையங்கள் ஆகிய சமூக நல அமைப்புகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு நூல் கட்டுதல், உறைகள் செய்தல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன.

## 7. குளிர் குடிநீர் சாதனம் :

புதுக்கோட்டை, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள கிளை அச்சகங்களிலும், சென்னை நகரில் இயக்ககம் மற்றும்



1997 ஏப்ரல் 9]

மைய அச்சகத்திலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

## 8. குழந்தைகள் காப்பகம் :

மகளிர் தொழிலாளர்களின் வசதியைக் கருதி மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தை காப்பகப் பணியாளர், குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசுச் செலவில் பால், பிஸ்கட் முதலியனவும் விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

## 9. சீருடைகள் :

இத்துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு இரு வருடங்களுக்கு ஒருமுறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## 10. தொழிலாளர் கல்வித் திட்டம் :

சென்னை வட்டாரத் தொழிலாளர் இயக்ககத்தில் தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக தொழிலாளர்களை முகமையில் அனுப்புவதன் மூலம் தொழிலாளர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொழிலாளர்—ஆசிரியர்களுக்கும், தொழிலாளர்-பயிற்சியாளர்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரு தொகை வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுடைய பயிற்சிக் காலம் பணிக்காலமாகக் கருதப்படுகிறது.

## 11. உடல்நலம் மற்றும் சுகாதாரம்:

சென்னை மாநகரத்தில் உள்ள இத்துறையின் அனைத்து அலகுகளிலும் உடல் நலக் கோட்பாட்டிற்கேற்ப துப்புரவுப் பணிகள் சுகாதார மேற்பார்வையாளரது கண்காணிப்பின் கீழ் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

## 12. சிற்றுண்டிச்சாலை :

மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்திலும், சென்னை அரசு மைய அச்சகத்திலும், தொழிலாளர்களுக்கென சிற்றுண்டிச் சாலைகள் தனிப்பட்ட ஒப்பந்ததாரர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 9

## 13. நல நிதி :

தொழிலாளர்கள் இறக்கும் சமயங்களில் அவர்களது இறுதி சடங்கு செலவிற்காக அவர்களது குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ. 100/- இந்த நிதியில் இருந்து வழங்கப்படுகிறது. இத்துடன் இறந்தவரின் வாரிசுதாரருக்கு, தொழிலாளர் நல வாரியத்திலிருந்து ரூ. 200/-ம் பெற்று அளிக்கப்படுகிறது.

## 14. தமிழ்நாடு அரசு அச்சக மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் :

5-5 1923-ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கம், துணை விதியின் கீழ் 18 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு இயக்குநர் குழுமத்தின் மேலாண்மையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவுச் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அதிகபட்சமாக ரூ.30,000 மட்டும் கடனாகப் பெறலாம். கடன் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 19 விழுக்காடு வட்டியுடன் 36 மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படுகிறது. இது தவிர பண்டிகைக் காலங்களிலும், குழந்தைகள் கல்விக்கெனவும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூ. 200/- சிறப்புக் கடனுதவி அளிககப்படுகிறது. இத்தொகை 10 மாத சமதவணைகளில் பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் ரூ. 10,000 அல்லது பணியாளரது மொத்த சம்பளத்தின் 4 மடங்கு தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நுகர்வோர் கடனாக அளிக்கப்படுகிறது.

## 15. சருணையடிப்படையில் வேலைவாய்ப்பு :

பணியில் இருக்கும்போது இறந்துபோகும் அரசு ஊழியர்களின் குடும்பத்தைச் சார்ந்த தகுதிவாய்ந்த நபருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி பணியில் இருக்கும்போது இறந்துவிட்ட இத்துறையைச் சார்ந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களில் இருந்து தகுதிவாய்ந்த 5 நபர்களுக்கு இந்த ஆண்டு இத்துறையில் எடுபிடியாளர்களாகவும், பெருக்குபவர்களாகவும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

V2:11,3 N97
N97.2:1
216653.